

## வைகறையே வந்துவிடு ...



# 1

வைகறையின் பூக்களிலே..
வைகைக்கரை மணக்குதடி...
வந்துவிடு செண்பகமே...
உன்நினைப்பில் மனம்துடிக்குதடி...

வைகை ஆற்றில் வெள்ளம் கரை புரண்டோடிக் கொண்டிருந்தது. ஆற்றோரமாக அடர்ந்து செழித்திருந்த பூஞ்செடிகளிலிருந்து புறப்பட்டு வந்த மணம்.. நாசியை வருடியது. காற்றில் அந்த பூ வாசனை கலந்து..

கரையோரமாய் பரவ.. அந்த பூங்காற்றின் சுவாசத்தை ஆழ இழுத்து.

"ம்... ஹா..." என்று ரசித்துச் சுவாசித்தாள் ஐஸ்வர்யா.

"என்னடி.. இப்படி வாசம் புடிக்கிற..?" கூடவந்த சுந்தரி வினவினாள்.

"இந்தக் காத்தோட வாசத்தைப் பாரேன்.." மீண்டும் ஆழ மூச்சை இழுத்து அந்தப் பூமணத்தை நுகர்ந்தாள் ஐஸ்வர்யா..

"ஏய்... இவளைப் பாருங்கடி.... காத்தைப் பார்க்கச் சொல்கிறா.. ஏண்டி பூங்கொடி நீ காத்தைப் பார்த்திருக்கிறாயா..? நீ சொல்லுடி ராஜாத்தி... நீ காத்தைப் பார்த்திருக்கிறாயா..?" கேலி செய்து சிரித்தாள் சுந்தரி.

கூடச் சேர்ந்து சிரித்த மற்ற பெண்களின் நையாண்டியை சட்டை செய்யாமல்.. ஆற்றங்கரையோரத்தின் அழகான அந்தச் சூழலை ரசனையுடன் பார்த்தாள் ஐஸ்வர்யா...

இருகரைகளையும் தொட்டு விளையாடியபடி சென்று கொண்டிருந்த ஆற்று நீரின் அலைகள்... கரையைத் தழுவி.. விடைபெற்றுக் கொண்டிருந்தன...

பூஞ்செடிகளின் இடையில் தலை நீட்டிக் கொண்டிருந்த நாணல்கள்.. தண்ணீரில் தலை சாய்த்து சொந்தம் கொண்டாடிக் கொண்



ஆற்றங்கரையோரமாக.. அடர்ந்திருந்த தென்னந்தோப்புகளில்.. கூடுக்கட்டியிருந்த குயில்கள் இனிமையாக கூவிக் கொண்டிருந்தன.

'புலர்ந்தும் புலராத இந்த வைகறைப் பொழுதில்... வைகைக் கரையில் நடப்பது பரம சுகமான ஒன்று...' என்று நினைத்துக் கொண்டாள் ஐஸ்வர்யா..

நதியோரம் நடக்கக் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.. இந்த சுகத்தை அனுபவிப்பதற்காகவே.. கடல் போல பரந்திருந்த வீட்டில்... குளியலறையில்.. குளிப்பதை தவிர்த்து விட்டு.. தோழிகளுடன் ஆற்றில் குளிக்க வந்து விடுவாள் ஐஸ்வர்யா..

"ஆனைமேல அம்பாரியில் போனா மெச்சிக்கலாம்.. இப்படி ஆத்திலதான் குளிப்பேன்னு அடம் பிடிச்சா மெச்சிக்கவா முடியும்..?" அங்கலாய்ப்பாள் பாரிஜாதம்

"போ... பாட்டி.... உனக்கு.. நான் எதைச் செஞ்சாலும் தப்புத்தான்.. ஊரோரமா ஆறு ஓடுது... அதில முங்கிக் குளிக்காம.. ரெண்டு சொம்புத் தண்ணியில.. குளியல் போடச் சொல்றியே.. உனக்கே இது நியாயமாய் இருக்கா..?" நியாயம் கேட்பாள் ஐஸ்வர்யா...

"கிடக்கிறதெல்லாம் விட்டு விட்டு... கிழவியைத் தூக்கி மனையில் வைன்னு சொன்னானாம் ஒரு கேத்தரவாடு.. அந்தக் கதையாயில்ல நீ நாயம் பேசுற கதையும் இருக்கு..? ஏண்டி கண்ணு.. உங்கப்பன்

அரண்மனையாட்டம் வீட்டைக் கட்டிப் போட்டிருக்கி றானே... யாருக்காக...?"

"அதையும் நீயே சொல்லு.."

"உனக்குத்தான்டி.. என் தங்கமே..."

"நீயொன்னும் என்னைக் கொஞ்ச வேணாம்.. எனக்காக மட்டும்.. அப்பா... இந்த வீட்டைக் கட்டலை... உனக்காக.. தாத்தாவுக்காக... அம்மாவுக்காக.. அண்ணன் களுக்காகன்னு.. எல்லோருக்குமா சேர்த்துத்தான் கட்டியிருக்கிறாரு..."

"அதுக்கென்னடி ராஜாத்தி... இந்த வீட்டில ஆயிரம் ஜனம் இருந்தாலும்.. நீயிருக்கிற மாதிரி இருக்குமாடி செல்லம்..."

"முதல்ல நீ நேரத்துக்கு ஒரு பேரைச் சொல்லி என்னைக் கொஞ்சுறதை நிறுத்து.. இப்ப நீ என்னாங்கிற..? நான் அப்படித்தான் ஆத்துக்கு குளிக்கப் போவேன்.. உன்னால் ஆனதை நீ பார்த்துக்க..."

சவடாலாய் பேசி விட்டு.. வெளிநடப்பு செய்தாள் ஐஸ்வர்யா..

அவளுக்குத் தெரியும்.. பாரிஜாதத்தால் ஆனது என்னவென்று..

பேத்தி குளித்து விட்டு வரும் வரை.. வாசல் திண்ணையில் அமர்ந்து.. போவோர்.. வருவோரை வம்பிழுத்த வண்ணம்.. வழிமேல் விழி வைத்து



அவள் காத்திருப்பாள் என்பதை அறிந்தவள்தான் ஐஸ்வர்யா..

பாரிஜாதத்திற்கு பேத்தியென்றால் உயிர்.. ஐஸ்வர்யா என்னதான் நொடிப்பாகப் பேசி னாலும்.. பாரிஜாதம்.. பேத்தியைத்தான் சுற்றிச்சுற்றி வருவாள்..

"அவ இன்னொரு வீட்டுக்கு வாழப் போகிறவ அத்தை.. அதிகமா செல்லம் கொடுக்காதீங்க..." சாவித்திரி சொல்லிப் பார்த்துவிட்டாள்.

ஆனால் பாரிஜாதம் கேட்பதாக இல்லை.

"இன்னொரு வீட்டுக்கு அவ போகிறப்போ பார்த்துக்கலாம்... நம்ம வீட்டில இருக்கிற வரைக்கும்.. அவதான் ராணி.. அவளை செல்லம் கொஞ்சாம.. வேற யாரைச் செல்லம் கொஞ்சச் சொல்கிற..? உன் புருசனையா..?" என்று கேட்டு வைத்தாள்

இப்படிக் கேட்கும் மாமியாரிடம் என்னத்தைப் பேசுவது என்று பாரிஜாதம் வாய் மூடிக் கொள்ள.. அவளது பெரிய மகன் அன்பழகன் வாய்திறந்தான்.

"ஏன் பாட்டி.. என்னைப் பார்த்தா உனக்கு ஒரு ஆளாத் தெரியலையா..,"

"எதுக்குடா சாமி.. இப்படிக் கேட்கிற..?"

"என்னைச் செல்லம் கொஞ்சேன்... நானும் உன் பேரன்தானே..."

"நீதானே.. ஏழு கழுதை வயசாகிற.. தடிமாட்டுத் தாண்டவராயன் நீ.. ஒரு ஆளாத் தெரியாம.. நாலு ஆளாத் தெரியறதைப் போல உடம்பை வளர்த்து வச்சுக்கிட்டு.. உன்னைத் தூக்கி இடுப்பில் வைச்சுக் கொஞ்சச் சொல்கிறயே.. உனக்கென்ன நேத்துத்தான் பொறந்ததைப் போல நினைப்பாடா...?"

வயிற்றுக்கு வஞ்சனை செய்யாமல் உண்டு பெருத்திருக்கும் அன்பழகன் பல்லைக் கடித்துக் கொண்டு வாய் மூடிக் கொள்ள.. அடுத்தவனான ஆனந்தன் வாய் திறந்து வைத்தான்.

"அது சரி கிழவி..."

"யாரைப் பார்த்து கிழவியின்ன..?"

"ஏன்..? உன்னைப் பார்த்துத்தான் கிழவியின்னு சொன்னேன்... நீ கிழவியில்லாம.. குமரியா..?"

"பல்லைக் கழட்டி விடுவேன்டா..."

"நீ மட்டும் என் அண்ணனை தடிமாட்டு தாண்டவராயன்னு சொல்லலாம்.. நான் உன்னைப் பார்த்து கிழவியின்னு சொல்லக் கூடாதாக்கும்...? நீ வெவரமான ஆளுதான் கிழவி..."

"என் விவரத்துக்கு என்னடா குறைச்சல்..?"

"அதைக் குறைச்சல்ன்னு... எந்த மாங்கா மடையனாவது சொல்லுவானா..?"

"அஃது.."



"அடேங்கப்பா.... என்னம்மா சிலுத்துக்கற.. என் அண்ணன்தான்.. ஒன்னுக்கு நாலு ஆளா.. உருவத்தில இருக்கிறான்.. நான் ஒல்லிதானே.. என்னைத் தூக்கி உன் இடுப்பில் வைச்சு செல்லம் கொஞ்சு.. பார்க்கலாம்..."

"போடா.. ஒல்லிப் பிச்சான்..."

"ஏய் கிழவி.. என்ன சொன்ன...? யாரைப் பார்த்து சொன்ன?"

"உன்னைத்தாண்டா சொல்றேன்... என் மகன் பெத்த மகனே.. எனக்கு என் பேத்தி மட்டும்தாண்டா செல்லம்.. நீ உங்கம்மாகிட்ட செல்லம் கொஞ்சு... ஓடிப்போ.."

பாரிஜாதம் விரட்டுவது போல் பாவனை செய்தாள்... கேலி போல பேசிச் சிரித்தாலும்.. அந்த விசயத்தில் அண்ணன்.. தம்பி... இருவருக்குமே.. ஐஸ்வர்யாவின் மேல் பொறாமை வரும்..

'அது என்ன... இந்தப் பாட்டிக்கு.. ஐஸ்வர்யா மட்டும் அவ்வளவு உயர்த்தி...'

உயர்வுதான்.. பாரிஜாதத்திற்கு மட்டுமில்லை.. அவருடைய கணவர் ரங்கநாதனுக்கும் பேத்தியென்றால் உயர்வுதான்.. அவர்கள் பெற்ற மகன் ஜெயப் பிரகாசத்திற்கும்.. மகள் என்றால் உயர்வு தான்..

"இவ.. என் வீட்டு மகாலட்சுமி.." என்பார்..

"பொம்பளப் புள்ளய கொண்டாடாதே பிரகாசம்.." என்று உறவினர் யாராவது சொல்லி விட்டால்.. சொன்னவர்களை.. உண்டு.. இல்லையென்று ஆக்கி விடுவார்..

"யோவ்.. வீடான வீட்டுல.. காலுல.... கொலுசுச் சத்தத்தோட.... பெண்பிள்ளைகள் வலம் வர கொடுத்து வச்சிருக்கனும் உனக்கெல்லாம்.... அந்த அருமை எங்கே தெரியப் போகுது? அதனாலதான்.... உன் கடைசிக் காலத்தில.... கஞ்சி காய்ச்சி ஊத்த ஆளில்லாம அலையற.."

புத்தி சொன்னவர்.. தன் புத்தியை நொந்து கொண்டபடி.. மௌனியாகிப் போய்விடுவார்..

"ஏங்க.. அந்த அண்ணன்.. இப்ப என்னத்தை சொல்லிப் புட்டாருன்னு.. இந்த ஏசு.. ஏசறீங்க...? நாட்டு நடப்பத்தான சொன்னாரு...? நல்லது சொல்ல வந்தவரைப் போயி.. மனசு புண்படப் பேசிப் புட்டிங்களே... இது உங்களுக்கே நல்லாயிருக்கா..?"

சாவித்திரி கணவரைக் கடிந்து கொண்டாலும்.. அவள் மனதில்.. மகளின் மேல் எல்லையில்லா வாத்சல்யம் உண்டு..

"அதைச் சொல்லும்மா.. இந்த தாத்தாவும் பாட்டியும்.. அப்பாவும் கொடுக்கிற பில்ட் அப்புல.. அவ தரையில கால் படாம.. ஆடிக்கிட்டு இருக்கா.... என்னடா ஆனந்தா.. நான் சொல்றது சரிதானே...?"



"நீ தப்பாவா சொல்லப் போறண்ணே..?"

அன்னையிடம் எடுத்துக் கொடுக்கும் மூத்தவனுக்கும் சரி.. அண்ணனுடன் இசைப்பாட்டு படிக்கும்.. இளையவனுக்கும் சரி.. தங்கையின் மேல் அளவற்ற பாசம் உண்டு..

என்ன ஒன்று.. அவர்கள் பிறந்து வளர்ந்தது கிராமம் என்பதால்.. அதை வெளிக்காட்டிக் கொள்ள மாட்டார்கள்..

"இந்தா ஐஸ்வர்யா.... டவுனுப் பக்கம் போனேன்.. இந்தப் பட்டுச்சேலை நல்லாயருந்துச்சு.. உனக்காக எடுத்து வந்தேன்.." என்று புதுப் புடவையை கொடுக்கும் போதே....

"ஆமாம்.. வயசுக்கு வந்த பொண்ணாய் லட்சணமாய் வீட்டுக்குள்ள இருக்காம.. ஆத்துக்கு போயி.. ஏன் கூத்தடிக்கிற...?" என்று அதட்டல் போடுவான் அன்பழகன்...

"நெல்லுப் போடப் போனேன்.. நகைக்கடையில் புது அட்டிகை வந்திருக்குன்னு சொன்னான்.. அந்தப் பணத்துக்கு அப்படியே தங்கச்சிக்கு அட்டிகை வாங்கிட்டு வந்துட்டேன்.. தங்கச்சிகிட்ட கொடும்மா... அப்படியே ஊரைச் சுத்தாம இருக்கச் சொல்லு..." என்பான் ஆனந்தன்..



## 2

வைகறையின் வெளிச்சத்தில்..
துன்ப இருள் விலகுதடி..
வைகை கரையில் காத்திருந்தால்...
என்மனது பொங்குமடி...

அது ஒரு அழகான நந்தவனம்... அந்த நந்த வனத்தின் பூக்களிலே... ஒரு பூதான் ஐஸ்வர்யா..

ஆனால்.. அந்தக் குடும்பத்தின் மற்ற அங்கத் தினர்கள்.. தாங்களும் அந்த நந்தவனத்தின் பூக்கள் தான் என்று எண்ணியதேயில்லை...

அவர்களைப் பொறுத்தவரை.. அந்த நந்த வனத்தில் பூத்த பூ ஐஸ்வர்யா மட்டும்தான்.. மற்ற அனைவருமே அந்தப் பூவைக் காக்கும் பூந்தோட்டக் காவல்காரர்கள்தான்..

“ஐஸீ.. அம்மாடி.. ஐஸீ..” ரங்கநாதன் பேத்தியை அழைக்கும் குரலில் பரிவு பொங்கித் ததும்பும்..

என்னவோ.. பேத்தியின் பெயரை அழுத்தி உச்சரித்தால்.. அந்தப் பெயருக்கு வலித்துவிடும்



என்பதைப் போல... படு மென்மையாக உச்ச ரிச்சிப்பார்..

“என்ன தாத்தா.. ஐஸ் விற்கறீங்களா...” ஆனந்தனின் கேள்வியில் கிண்டல் வழிந்தோடும்..

அப்படிச் சொல்லிவிட்டு.. பாரிஜாதத்தின் கையால்.. மொத்து வாங்குவான்...

“படவா ராஸ்கல்.. உன் நாக்கில சூடு வைக்க னும்டா... என் பேத்தியோட பெயரையா எகத்தாளம் பேசற...?” காளி அவதாரமெடுப்பாள் பாரிஜாதம்..

“நீயும் இங்கேதான் இருக்கியா கிழவி..?”

“ஏன்...? நானிருக்கிறது தெரிஞ்சிருந்தா வாயை மூடியிருப்பியா...?”

“ஊஹீம்.. உன் கைக்கு எம்புடாம.. தள்ளி.. நின்னு பகடி பேசியிருப்பேன்...”

“அவனவன்... அக்கா... தங்கச்சியை.. உள்ளங் கையில் வைச்சுத் தாங்கறானுக.. என் பேத்திக்கும் வந்து வாய்ச்சிருக்குதுகளே.. ரெண்டு அண்ணனுக... ம்ஹீம்...”

“ஏன் கிழவி... இம்புட்டு பெருமூச்சை விடற...? எனக்கும் என் அண்ணனுக்கும் என்னவாம்..?”

“அதை என் வாயால் வேற சொல்லனுமாக்கும்..?”

“உன் வாயால் சொல்லாம... வேற யாரு வாயால சொல்லுவ...?”

"எகத்தாளம் பேசுன... படுவா... முன்னாடி யிருக்கிற பல்லு ரெண்டையும்.. கழட்டி கையில கொடுத்துருவேன்.."

"இது வேறயா...? என் பல்லு.. உன் பல்லைப் போல கிழடு தட்டின பல்லில்ல... இதக் கழட்டி கையில கொடுக்கிற யோசனைக்கு பதிலா... தாத்தாவோட பல்லைக் கழட்ட டிரை பண்ணு.."

"டிரையா...? அப்படின்னா...?"

"உனக்கே இங்கிலீஷ் தெரியாது... அப்புறம் எதுக்கு இம்புட்டு வாயி...?"

"டேய்ய்... வெள்ளைக்காரன் இங்கிலீஷைப் பேசினாத்தான் புத்தியிருக்குன்னு அர்த்தமா...? நான்... தமிழச்சிடா..."

"அதுக்கு.. இப்ப என்னாங்கிற...?"

"புலியை முறத்தால அடிச்சு ஓட்டின பரம்பரை... எங்க பரம்பரை.."

"அதனால.. என்னையும் அடிக்க முறத்தை தேடறியாக்கும்..?"

"ம்ஹீம்.. நினைப்புத்தாண்டா உனக்கு..."

"என் நினைப்புக்கென்ன...?"

"புலியை அடிக்கத்தாண்டா முறத்தை தேடணும்... உன்னப் போல சுண்டெலியை அடிக்க முறமே தேவையில்லடா ராசா... என் கையே போதும்..."



"இரு கிழவி.. என் அண்ணன்கிட்ட இதைப் பத்தவைக்கிறேன்..."

"என்ன சொல்லி பத்த வைப்ப...?"

"உன்னையும்.. என்னயும் சுண்டெலின்னு இந்தக் கிழவி சொல்லுதண்ணேன்னு சொல்லுவேன்..."

"உன்னத்தான் சுண்டெலின்னு சொல்ல முடியும்.. உன் அண்ணன்காரனைச் சொல்ல முடியுமோ..? அவன் பெருச்சாளிடா..."

"உன்னை..! இரு.. ஒருநா... இதுக்கெல்லாம் சேர்த்து வைச்சு... நாங்க ரெண்டு பேருமே ரெண்டு போடு போடறோம்..."

"போடா... டேய்... உங்க ரெண்டு பேரையும் எனக்குத் தெரியாதா...?"

"என்னத்தை கண்டுபுட்ட...?"

"ஊம்... ரெண்டும்.. ரெண்டு அகப்பைக... ரெண்டுமே கழண்ட அகப்பைக..."

அந்த சுற்று வட்டாரத்திலேயே.. பாரிஜாதத்தை பேச்சில் வெல்ல எவராலும் முடிந்ததில்லை..

"அதுக்கு ஒரு மனுசப் பிறப்பு... பிறந்துதான் வரணும்டா..." என்பாள் சாவித்திரி ஆற்றாமையுடன்..

"என்ன நாக்குடா... இந்தம்மா நாக்கு... வாயைத் திறந்தால் இத்தனை அட்டகாசமா...? நானும் உங்கப்பாவுக்கு வாழ்க்கைப்பட்டு வந்த நாள் முதலா..

இந்தம்மாவோட பேச்சுக்கு ஒரு எதிர் பேச்சு.. பேசிப் புடனும்னு பார்க்கிறேன்... நடக்கலையே..."

அப்படிப்பட்ட பாரிஜாதத்தின் பேத்திதான் ஐஸ்வர்யா.. அவள்... அன்பைக் கொட்டும் அண்ணன் மார்களின் செல்லத் தங்கை... பாசத்தைப் பொழியும் பெற்றவர்களின் மகள்... பரிவைக் காட்டும் தாத்தாவுக்கு செல்லப் பேத்தி..

பாரிஜாதத்திற்கோ.. அவள் பொக்கிசம்..

அதிகாலைக் கதிரொளியின் வெளிச்சக் கீற்றுக் கள்.. வைகை ஆற்றின் நீரின் மேல் படிய... ஆற் றுக்குள் இறங்கி.. நனைய ஆரம்பித்தது அந்த இளம் பெண்களின் கூட்டம்...

"என்னடி ஐஸ்வர்யா.. நீயும் ஆத்தில இறங் கிட்ட...?"

"ஏன்..? நான் இறங்கினா என்ன...? நானும் ஆத்தில குளிக்கத்தான் வந்தேன்..?"

"அப்படியா... நான் என்னமோ... நீ காத்தில குளிக்க வந்தியாக்கும்ன்னு நினைச்சேன்..."

சுந்தரி கலகலத்து சிரிக்க.. அவள் மேல் ஆற்று நீரை அள்ளி வீசினாள் ஐஸ்வர்யா...

"யேய்... வேணாம்டி..."

முகம் திருப்பி... கைகளால் அந்த நீர் தாக்குதலை தடுத்தாள் சுந்தரி..



பேச்சும்.. சிரிப்புமாக... அந்த ஆற்றை ஒரு கலக்கு.. கலக்கி விட்டு... ஒருவழியாக கரையேறி னார்கள் அவர்கள்..

மாற்றுடை அணிந்து... ஈரத்துணிகளை தோளில் போட்டுக் கொண்ட... ஐஸ்வர்யா...

"போகலாமா.." என்று கேட்டாள்..

அவளைப் பார்த்த மற்ற பெண்களின் மனதில் பொறாமை எழுந்தது..

'இவளென்ன மோகினியா...?'

அனைவரின் மனதிலும்... ஒருமித்து தோன்றிய எண்ணம் இதுதான்..

ஐஸ்வர்யா.. மோகினியைப் போல்தான் இருந் தாள்... ஆளை மயக்கும் மோகினிதான் அவள்...

சற்று நீர்வடிவமான வட்டமுகத்தைப் பார்த்த வர்கள் அவளது விழிகளின் வசீகரத்தில் கட்டுண்டு தான் போவார்கள்.. அவளது விழிகளின் காந்தத் தன்மை அப்படிப்பட்டது.. மீன் போன்ற விழிகளா...? இல்லை.. மலர் போன்ற விழிகளா? என்று அறுதி யிட்டுச் சொல்ல முடியாத.. மீன் மலர் விழிகள் அவளது விழிகள்..

அளவான.. அழகான.. கூர் நாசி... பூவிதழ்கள் என்று சொன்னால்.. மிகையில்லை என்பதைப் போன்ற இதழ்கள்.. நீண்ட கருங்கூந்தல்.. ஒல்லியான...

உயரமான உடலமைப்பு... பாலையும்.. மஞ்சளையும் சேர்ந்து குழைத்ததைப் போன்ற ஒரு நிறம்..

மொத்தத்தில் பார்ப்பவர்களை அடித்துப் போட்டு விடும் அழகுதான்.. அவள் அழகு..

"காலளவு கருங்கூந்தல்ன்னு ஒரு சினிமாப் பாட்டு கேட்டேண்டி..." சுந்தரி சொல்ல ஆரம்பிக்கும் போதே.

"இவ முடியைப் பார்த்ததும்... உனக்கு அந்தப் பாட்டு நினைப்பில் வந்துருச்சாக்கும்..." ராஜாத்தி வினவினாள்.

"எப்புடி டீ...?" சுந்தரி கண்களை விரிக்க..

"அதுக்கு ஏண்டி... முண்டக் கண்ணி ஈஸ்வரியைப் போல இந்த முழி முழிக்கற..? இதைத்தான் தினமும் சொல்றயே.." என்று தோளைக் குலுக்கினாள் ராஜாத்தி..

"என்னமோ.. போடி... என்னைப் பொண்ணு பார்க்க எவனாச்சும் வந்தா.. நீ மட்டும் வந்து நின்னுடாதே ஐஸ்வர்யா..." பூங்கொடி வேண்டுகோள் விடுத்தாள்..

"என்னடி.. இப்படிச் சொல்ற..? உன் கல்யாணத் துக்கு நான் முன்னால நிற்க வேண்டாமா...?" எல்லையற்ற பிரியத்துடன் ஐஸ்வர்யா கேட்டாள்...

"எதுக்குடிம்மா... கல்யாணத்தை நிறுத்தற துக்கா...?" என்று எதிர் கேள்வி கேட்டாள் பூங்கொடி..



"நான் முன்னாடி நின்னா... உன் கல்யாணம் எதுக்கு நிற்குமாம்..?" மனத்தாங்கலுடன் ஐஸ்வர்யா நின்று விட்டாள்..

"உன்னைப் பார்த்த பின்னால.. வேறொருத்தி கழுத்தில எவனாச்சும்.. தாலியைக் கட்டுவானா.. ஐஸீ...? அதனால.. உனக்கு கோடி புண்ணியமா போகும்.. எங்களுக்கு கல்யாணம் ஆகணுமுன்னா.. எங்களைப் பார்க்க வாரவன் கண்ணுல.. நீ பட்டு வைக்காதே..."

வேடிக்கையாகச் சொன்னாலும்.. அதை உண்மை யாகத்தான் சொன்னாள் பூங்கொடி..

ஒருமுறை அவள் சொன்னதைப்போல நடந்தும் தொலைத்திருந்தது..

பூங்கொடியைப் பெண் பார்க்க வந்த மாப்பிள்ளை வீட்டார்.. யதார்த்தமாக.. ஜெயப்பிரகாசின் வீட்டிற்குப் போய் விட்டார்கள்.. வந்தவர்கள் சாவித்திரியின் வழி உறவினர்கள் என்பதால்.. ஜெயப்பிரகாசும் அவர் களை வரவேற்று உபசரித்து வைத்தார்.. பிறந்த ஊரிலிருந்து தான் வாழ்க்கைப் பட்ட ஊருக்கு பெண் கேட்டு வந்திருக்கிறார்கள் என்பதால் சாவித்திரி யும் பிரியத்துடன் காபி கலந்து கொண்டு வந்து கொடுத்தாள்...

"எப்படிம்மா தங்கச்சி இருக்கிற...? ஊர் திரு விழாவில பார்த்தது.. அதுக்கப்புறம் பார்க்கவே முடியல..."

"நல்லா இருக்கேண்ணே... ஊரு பக்கம் வந்து ஒரு வாரம் தங்கியிருக்கனும்னு ஆசைதான்.... எங்கே...? இந்த வீட்டில் அது முடிய மாட்டேங்குதே..."

பாரிஜாதத்தை ஜாடையாக பார்த்தபடி.... பிறந்த ஊர் ஜனங்கள் இருக்கும் தைரியத்தில் சாவித்திரி பேச.. பாரிஜாதம் உடனடியாக பதில் கொடுத்தாள்..

"வாக்கப்பட்டு வந்துவிட்டா.... வீட்டுச் சாவி உடனே கைக்கு வந்துருமா..? அதுக்கு ஆயுசு பூராவும் காத்திருக்கனும் வெள்ளைச்சாமி.... உன் சின்னம்மாமக அந்த வகையில் புண்ணியமில்ல செஞ்சிருக்கா.... வீட்டுக்குள்ள காலடி வைச்சதும்.. கொத்துச் சாவியை என் இடுப்பில இருந்து கழட்டி.. உன் தங்கச்சி இடுப்பில் சொறுகி விட்டுட்டேனில்ல.. அப்புறம் எப்படி.... அவளால அங்கே.. இங்கே நகர முடியும்..?"

"முடியாதுதான் அத்தை..."

வெள்ளைச்சாமி பவ்யமாக கூறிக் கொண்டிருக்க...

'ம்ஹீம்.. என் புண்ணியத்தை வெளியே சொல்லாட்டாலும்.. விடிஞ்சுரும்..' என்று வாய்க்குள் முணுமுணுத்துக் கொண்டாள் சாவித்திரி..

'நீ என்னத்தை நினைக்கிறேன்னு எனக்குத் தெரியாதா...?' என்று மருமகளை விழிகளால் வெட்டும் பார்வை பார்த்தபடி.. வெள்ளைச்சாமியின் பக்கம் திரும்பினாள் பாரிஜாதம்..



"வராத அண்ணன் வீட்டுப் பக்கம் வந்திருக்கு.. இந்தம்மா என்ன கேள்வி கேட்டு வைக்கப் போகுதோ..' சாவித்திரி திகிலடைய.. பாரிஜாதம் கேள்விக் கணைகளை தொடுக்க ஆரம்பித்தாள்.



## 3

> வைகறையில் விழிக்கையிலே...
> உன் முகத்தை மனம்நினைக்கும்..
> வைகையிலே குளிக்கையிலே...
> உன் நினைப்பில் முகம் சிவக்கும்...

"ஏம்பா வெள்ளைச்சாமி.. நீ சாமானியமா உன் ஊரை விட்டு நகர மாட்டயே.. எங்கே இம்புட்டுத் தூரம்...?"

'ஊம்.. என் வீட்டுல காபித்தண்ணி கிடைக்காதுன்னு உன் வீட்டு காபித்தண்ணியை குடிக்கத்தான்.. வாடகைக் காரை எடுத்துக்கிட்டு.. இம்புட்டுத் தொலைவு வந்திருக்கிறேன்...'

அந்த வெள்ளைச்சாமி மனதிற்குள் பொறும.. பாரிஜாதம் அதற்கும் ஒரு கேள்வியை எடுத்து வீசினாள்..

"என்னப்பு..? பேச்சு.. மூச்சில்லாம உட்கார்ந் திருக்கிற...? மனசுக்குள்ள பேசிக்கிட்டு இருக்கி யாக்கும்..?"

'கிழபோல்டு... கண்டுபிடிச்சுருச்சே...' வெள்ளைச் சாமி சுதாரித்துக் கொண்டார்..

"ஹி.. ஹி.. அதெல்லாம் இல்லத்தை.. உங்க முன்னால நான் வாய் பேசினா நல்லாயிருக்குமா...? இல்லை... வாய் பேசினாத்தான்... அந்தப் பேச்சு நிக்குமா..?"

"எல்லாம் நிக்கும்.. நீ.. வந்த விசயத்தை சட்டு... புட்டுன்னு சொல்லுப்பு.."

விட்டால் பாரிஜாதம் விரட்டி விடுவாள் என்று தோன்ற... அவசரமாக வெள்ளைச்சாமி வந்த விவரத்தைக் கூறினார்..

"அது வேற ஒன்னுமில்ல அத்தை... என் மகனுக்கு இந்த ஊரில பொண்ணு பார்க்க வந்தோம்..."

"அப்படியா சேதி...? பொண்ணு யாரு...?"

"நம்ம துக்கையண்ணன் மகள்தான்.."

"யாரு.. பூங்கொடியா...? நல்லது... நல்லது... அது என் பேத்திக்கு சோட்டுக்கார பொண்ணுதான்..."

அந்தமட்டிலும் மாமியார்.. பெண்ணைப் பற்றி நல்ல விதமாகச் சொன்னாளே என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டாள் சாவித்திரி.. அவளுக்குத்



தெரியும்.. பூங்கொடி ஐஸ்வர்யாவின் தோழி.. என்பதினால்தான் பாரிஜாதம் விட்டு வைத்திருக் கிறாள் என்பது.. இல்லையென்றால் அவள் பேசும் விதமே வேறாக இருந்திருக்கும்..

"யாரு மகளை பார்க்க வந்திருக்கிற...? அந்த வெட்டிப்பய.. துக்கையண்ணனோட மகளையா பார்க்க வந்திருக்கிற...? அடப்பாவமே.. அந்தப் புள்ள பூங்கொடி.. நேரங்காலமில்லாம... காடுகரை... ஆத்து... தோப்புன்னு ஊரைச் சுத்திக்கிட்டு அலையற புள்ளயாச்சே.. அதையா உன் மகனுக்கு பொண்ணு கேட்டு வந்த..?" என்று சொல்லி வைத்திருப்பாள்..

ஐஸ்வர்யாவின் விரோதம் வந்து விடும் என்ற பயத்தால் அவள் 'நல்லது.. நல்லது..' என்று சொல்லி வைத்தாள்..

"அப்படியா பெரியம்மா.. நீங்க சொன்னா அது உண்மையாத்தான் இருக்கும்.." என்று வெள்ளைச் சாமியின் மனைவி மகிழ்ந்து போனாள்..

'ஆமாமாம்.. என் மாமியார் அரிசந்திரனின் வீட்டுக்கு அடுத்த வீட்டுக்காரம்மா.. உண்மையைத் தவிர.. மகராசிக்கு வேற எதையும் பேசத்தெரியாது..'

பல்லைக்கடித்தபடி.. வெள்ளைச்சாமியின் மனைவியை சாவித்திரி லேசாக முறைத்துக் கொண்டிருந்தபோதுதான்.. ஐஸ்வர்யா மாடியிலிருந்து இறங்கி வந்தாள்..

"அம்மா.. என்னோட சங்கிலியை பீரோவில் வைக்கச் சொன்னேனே... வைத்தயா.." என்றபடி சுவாதீனமாக ஹாலுக்குள் வந்த ஐஸ்வர்யா.. உறவினர் கூட்டத்தைக் கண்டு பின் வாங்கினாள்..

அதுவரை ஐஸ்வர்யாவை பார்த்திராத சாவித்திரியின் உறவினர் வட்டாரம் 'ஆ' வென்று வாய் பிளந்து விட்டது..

"யாரும்மா அது...?"

"என் பொண்ணுன்னே... பேரு ஐஸ்வர்யா..."

"ஆஹா... ஆளுக்கேத்த பேரு... இது வரைக்கும் மருமக முகத்தை நீ காட்டினதேயில்லையே தாயி..."

மீண்டும் ஒருமுறை ஐஸ்வர்யாவின் தரிசனம் கிடைத்து விடாதா... என்று ஆவலுடன் மகனின் விழிகள் மாடிப்படி பக்கம் தாவுவதைக் கவனித்தபடி வெள்ளைச்சாமி வினவினார்..

அதற்குள் ஐஸ்வர்யா மின்னலைப் போல.. மாடியேறிசென்றுவிட... பாரிஜாதம் எள்ளும்.. கொள்ளும்.. முகத்தில் வெடிக்க... வெள்ளைச்சாமியை முறைத்தாள்..

"ஏய்யா... கண்ணுல காட்ட.. என் பேத்தி என்ன பொம்மையா? எங்க வீட்டுல... வயசுக்கு வந்த பொண்ணுகள.. வேத்து மனுசங்க கண்ணுல காட்ட மாட்டோம்.."



"நானென்ன வேத்து மனுசனா அத்தை? சொந்த பந்தம்தானே?"

"எங்களுக்கு ஊரெல்லாம் சொந்தபந்தம்தான்... அதுக்காக... வழக்கமில்லாத வழக்கத்தையெல்லாம் செய்ய முடியுமா..?"

"மத்தவங்களும்... நாங்களும் ஒன்னா...? ஏம்மா சாவித்திரி... நீயே இதுக்கு ஒரு நாயத்தைச் சொல்லு..."

மாமியாரின் முன்னால் எந்த நியாமும் எடுபடாது என்பதை இந்த வெள்ளைச்சாமி அண்ணன் இன்னும் புரிந்து கொள்ளவில்லையே என்ற ஆற்றாமையுடன் சாவித்திரி பிறந்த ஊர் மனிதர்களை ஒரு மௌனப் பார்வை பார்த்தாள்..

அதுவரை மருமகளின் முகத்திற்காக... போனால் போகிறதென்று நல்லவிதமாய் ஓரிரு வார்த்தைகள் பேசிக் கொண்டிருந்த பாரிஜாதம்.. முகமூடியை கழற்றி விட்டு.. இயல்பான குணத்திற்கு வந்தாள்...

"இந்த வீட்டில... கொத்து சாவி மட்டும்தான் உன்தங்கச்சி கைக்கு மாறியிருக்குப்பு.. நாயம் சொல்றதெல்லாம்.. பெரிய மனுசங்களும்... ஆம்பளைகளும்தான்.. அதனால... உன் தங்கச்சிகிட்ட நாயம் கேட்காம... நீ வந்த சோலியைப் பார்க்க கிளம்பு..."

வெள்ளைச்சாமியின் முகத்தில் ஈயாடவில்லை.. அவரது மனைவியோ... இப்படிப்பட்ட பாட்டிக்கு... பேத்தியாய் பிறந்தவள்... எப்பேற்பட்ட ரம்பையாக

இருந்தாலும் வேண்டாம்.. என்ற முடிவோடு எழுந்து விட்டாள்...

ஆனால் வெள்ளைச்சாமி பெற்ற குலக்கொழுந்து மட்டும்.. எழுந்திருக்க மாட்டேனென்று அடம்பிடித்துக் கொண்டு மாடிப்படிகளை பார்த்தபடி அமர்ந்து விட்டான்...

"ஏனப்பு... உன்னோட ஆத்தாளும்... அப்பனும்... பொண்ணுபார்க்க கிளம்பறாங்களே... நீ கிளம்ப லையா...?" இடக்காக பாரிஜாதம் வினவினாள்..

"அவங்க போகட்டும் பாட்டி..."

"உனக்குத்தான்ப்பு பொண்ணு பார்க்கப் போகி றாங்க..."

"எனக்கு அந்தப் பொண்ணு வேணாம்..."

அவ்வளவுதான் பாரிஜாதம் பார்த்த அனல் பார்வையில் சாவித்திரி அரண்டு போய்விட்டாள்..

தெரியாத்தனமாக... பிறந்த ஊர் ஜனங்கள் என்று வீட்டுப்படியேற விட்ட கொடுமைக்காக... இந்த வெள்ளைச்சாமியின் மகன்... அவள் பெற்ற மகளைப் பெண் கேட்பான் என்று அவள் கனவா... கண்டாள்...?

"ஆசையிருக்கும் தாசில் பண்ண.. ஆனா... அதிர்ஷ்டம் கழுதை மேய்க்கத்தான் இருக்கும் அப்பு.. யாரு வீட்டுல உட்கார்ந்துக்கிட்டு... யாருவீட்டுப் பொண்ண வேணாம்ன்னு சொல்ற...?"



மொட்டைத்தலைக்கும்.. முழங்காலுக்கும் முடிச்சுப் போட்டு பழமை பேசுவதில் படு கில்லாடியான பாரிஜாதம் கடுமையான குரலில் கேட்டாள்..

"மனசுக்கு பிடிச்ச பொண்ணத்தானே பாட்டி... கல்யாணம் கட்டிக்கத் தோணும்.."

"தோணும்.. தோணும்.. உனக்கு வானத்துல போற வட்ட நிலாவை கையில பிடிக்கத் தோணும்.. அதுக் காக நிலாவ நீ பிடிச்சுர முடியுமாப்பு? வேணும்னா... நிலாவை வேடிக்கை பார்த்துக்கிட்டே நிலாச் சோறு சாப்பிடலாம்... உன்னால ஆனது அம் புட்டுத்தான்...நீ உன் ஆத்தா... அப்பனோட நடயக் கட்டு... துக்கையண்ணன் குடும்பத்து பொண்ண வேணாம்ன்னு சொல்கிறவன் வீட்டு சகவாசம் எங்களுக்கு வேணாம்.."

அந்த துக்கையண்ணனைக் கண்டாலே பாரிஜாதத் திற்கு ஆகாது...

"இவனெல்லாம் ஒரு மனுசனில் சேர்த்தியா.. சொந்தப் புத்தி இல்லாம.. சொல்வார் பேச்சக் கேட்டுக்கிட்டு ஆடுகிற பய.." என்பாள்..

அப்படிப்பட்ட துக்கையண்ணனின் மேல் மாமியாருக்கு திடீர்பாசம் பிய்த்துக் கொண்டு பொங்குவதற்கான காரணத்தை புரிந்து கொள்ளாத வளா சாவித்திரி..?

"தம்பி... நீ கிளம்புப்பா..." என்றாள்..

"இல்லத்தை... நான் என்ன சொல்கிறேன்னா..." அவன் எழுந்து கொள்ளாமல் வழக்கடித்தான்...

"நீ எதையும் சொல்ல வேணாம்.. வீட்டுக்கு போகிற வழியில உன் அப்பாவும்.. அம்மாவும்.. உனக்கு சொல்ல வேண்டியதைச் சொல்லு வாங்க.. அண்ணே... என் மகளுக்கு மெட்ராஸில் பொண்ணு கொடுக்கிறதா பேசி வைச்சிருக்கு.. இது தெரியாம நீங்க யதார்த்தமா எதையும் பேசி வைச்சிராதீங்க..."

"இல்ல தங்கச்சி... மனசில பட்டதைப் பேசித்தான் எங்களுக்கு பழக்கம்.. நாங்க வேற வீட்டில பொண்ணு பார்க்க வந்ததென்னவோ வாஸ்தவந்தான்.. அதுக்காக.. உன் பொண்ணு ரதிபோல இருக்கிறப்போ... ஊரான் வீட்டுல பொண்ணெடுக்க முடியுமா..? நீயே சொல்லு..."

இதற்குப் பதிலை சாவித்திரி சொல்லாமல் மௌனம் காத்தால் பாரிஜாதம் பதில் சொல்கிறே னென்கிற பெயரில் வெள்ளைச்சாமியை கிழித்து தோரணம் கட்டி விடுவாள் என்பதைப் புரிந்து வைத்திருந்தால் சாவித்திரி அவசரமாய்ப் பதில் சொன்னாள்..

"ஒரு இடத்தில பொண்ணு கொடுக்கிறதா பேசி முடிச்ச பின்னால வேற இடத்தில பேச்சு வார்த்தை நடத்தற பழக்கம் நம்ம பரம்பரைக்கே இல்லண்ணே.. இத... நான் சொல்லித்தான் நீங்க தெரிஞ்சுக்கணுமா..?"



வெள்ளைச்சாமியின் முகம் கருத்துவிட்டது.. ஆனாலும்.. மகன் முகத்தில் தெரிந்த ஏக்கம் அவர் கால்களைக் கட்டிப் போட.. தோல்வியை ஒப்புக் கொள்ளாமல் பேச்சு வார்த்தையை தொடர்ந்தார்..

"உனக்கே என் வசதியைப் பத்தி நல்லாத் தெரியும் தங்கச்சி.."

வெள்ளைச்சாமி.. சாவித்திரியின் பிறந்த ஊரில்.. முதன்மையான பணக்காரர்..

"உங்க வசதியை நான் குறைச்சுச் சொல்லலை யேண்ணே.."

"என் மகனும் ஏப்பை.. சாப்பையில்ல.. மூக்கும்.. முழியுமா... பார்க்க ராஜா போல இருக்கான்..."

வெள்ளைச்சாமி சொன்ன அளவுக்கு இல்லா விட்டாலும்.. அவருடைய மகன்... லட்சணமாகத்தான் இருந்து வைத்தான்...

"இதென்ன அண்ணே... என் அண்ணன் மகன் அழகுக்கு என்ன குறைச்சல்..?"

"படிப்பிலயும் இவன் சோடை போகலம்மா... என்ஜினியருக்கு படிச்சிருக்கான்..."

அதை இல்லையென்றா சாவித்திரி சொன்னாள்...? வெள்ளைச்சாமி சொன்னது அனைத்தும் உண்மைதான் என்பதை அறியாதவளா அவள்..?

ஆனாலும் என்ன செய்வது...? வந்தவர்கள்... அவள் வீட்டில் பெண் கேட்டு வரவில்லை.. அவள்

ஊரில் பெண் பார்க்க வந்துவிட்டு அவள் மகளைப் பார்த்தவுடன் வார்த்தை மாறுகிறார்கள்... இது சரியான ஒன்றல்ல..

ஐஸ்வர்யாவை பெண் கேட்பதும் அவ்வளவு எளிதான ஒன்றல்ல.. பெண்ணைப் பிடித்திருந்தால்.. முதலில்.. இடையில் உள்ள சொந்த பந்தங்கள் மூலம்.. வீட்டிலிருக்கும் பெரியவர்களிடமும்.. ஆண்களிடமும் பேச வேண்டும்.. இதுதான் கிராமப்புறத்தில் கடைபிடிக்கப்படும் முறை... அதை விட்டுவிட்டு.. வீட்டுக்குள் விருந்தாளிகளாக வந்தவர்கள்.. பெண்ணைக் கண்டவுடன் சட்டமாக அமர்ந்து பேச்சு வார்த்தையை வீட்டிலுள்ள பெண்களிடம் பேச ஆரம்பிக்கிறார்கள்... இதுவும் சரியல்ல..

இத்தனைக்கும் மேலாக... உண்மையிலேயே ஐஸ்வர்யாவிற்கு திருமணப் பேச்சை.. பேசி முடித்திருந்தார்கள்... சென்னையில் பாரிஜாதத்தின் தங்கை மகள் இருந்தாள்.. அவளுடைய மகனுக்கு ஐஸ்வர்யாவைக் கொடுக்கவேண்டும் என்று பாரிஜாதம் மல்லுக்கட்டி திருமணப் பேச்சுவார்த்தை நடந்து முடிந்திருந்தது..





# 4

வைகறையில் காற்று வாங்க..
வைகைக் கரைப் பக்கம் போனேன்..
உன்கவிதை காற்றில் வர..
உவகையோடு வாங்கி வந்தேன்...

பாரிஜாதத்தை பெற்றவர்களுக்கு இரண்டே பெண்குழந்தைகள்தான்.. மூத்த பெண்குழந்தையான பாரிஜாதம்.. மதுரைக்கு பக்கத்திலிருந்த திருவேடகத்தில் வாழ்க்கைப்பட்டு.. ஜெயப்பிரகாசத்திற்கு மட்டும் அன்னையாக... அவளது தங்கை அம்புஜம்.. திருச்சிக்கு அருகேயிருந்த திருவானைக்காவலில் வாழ்க்கைப்பட்டு.. ஈசுவரனுக்கும்.. வைஷ்ணவிக்கும் அன்னையாகியிருந்தாள்.. ஜெயப்பிரகாசம்... சாவித்திரியைத் திருமணம் செய்து... அன்பழகன்.. ஆனந்தன்.. ஐஸ்வர்யா என்று பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ள... ஈசுவரன்... அகிலாவைத் திருமணம் செய்து விக்னேஸ்வரனைப் பெற்று... ஒற்றை மகனோடு நின்று விட்டார்...

அம்புஜத்தின் மகளான வைஷ்ணவிக்கு அது மிகப் பெரிய குறை..

"ஆயிரம்தான் சொல்லும்மா... அண்ணன் மகளை என் மகனுக்கு கட்டி வைப்பது போல ஆகுமா..?" என்று ஆதங்கப்படுவாள்..

அப்போதுதான் அம்புஜம் அந்த யோசனையை மகளுக்குச் சொன்னாள்...

"ஏங்கண்ணு... நீ உன் கூடப் பிறந்த அண்ணன் மகளைக்கட்ட முடியாட்டி என்ன.. உன் பெரியம்மா மகனுக்குத்தான் ஒரு மகள் இருக்காளில்ல.. அவளை உன் மகனுக்கு கட்டி வைக்க வேண்டியதுதானே...?"

இப்படித்தான் ஐஸ்வர்யாவைப் பெண்கேட்டு.. சென்னையிலிருந்து வைஷ்ணவி வந்தாள்..

அந்த கிராமத்தோடு ஒட்டாத வெளிநாட்டுக் காரில்.. வைர நகைகள் பளபளக்க அவள் தன் கணவரோடு வந்து இறங்கிய போது... ஊரே கூடிநின்று வேடிக்கை பார்த்தது...

சென்னையில் வாழ்க்கைப் பட்டிருக்கும் தங்கை மகள் காரைப் போட்டுக் கொண்டு வீடுதேடி வந்ததில்.. பாரிஜாதத்திற்கு மகா சந்தோசம்..

"வா கண்ணு... இப்பத்தான் உனக்கு இந்த பெரியாத்தா மேல நெனப்பு வந்துச்சா..."

"நானென்ன செய்யட்டும் பெரியம்மா...? இவ ருக்கும்... பிள்ளைகளுக்கும் நான் பக்கத்திலேயே இருந்து ஊழியம் பார்த்தாகனும்... ஒருநாள் இல்லேன் னாலும்... அலறுவாங்க.. வீட்...



பக்கம் வர... தோதுப்படலை பெரியம்மா..." வைஷ்ணவி அலுத்துக் கொண்டாள்...

"ஏன் மாப்பிள்ளை... இவ சொல்றது நிசமா...?" பாரிஜாதம் வைஷ்ணவியின் கணவர்.. மோகனை வினவ...

"பொய் சொல்கிறா அத்தை..." என்று சிரித்தார் அவர்...

"பொய்யா..." கணவரை வைஷ்ணவி முறைக்க..

"அட... விடு ஆத்தா... இந்த ஆம்பளைக புத்தி நமக்குத் தெரியாதா..? உன் பெரியப்பாவும் இப்படித்தான்... உன் பிறந்த வீட்டுக்கு போயிட்டு வர... நானென்ன தடையா சொன்னேன்னு சொல்லுவாரு... ஆனா கிளம்ப முடியாம... சோலிக் கழுதைகளை தலையில கட்டுவாரு... அதப் போலத்தானே மாப் பிள்ளையும் இருப்பாரு..."

தன் மாமியாருக்கு இப்படிக்கூட அனுசரணையாய் பேச வரும் என்பதை அன்றுதான் கண்டாள் சாவித்திரி...

வராத விருந்தாளிகள் வந்ததில்.. விருந்து எட்டூருக்கு மணக்க தயாராகியது.. சாப்பாட்டு முடித்த வர்கள் குட்டித்தூக்கம் போட்டு எழ.. மாலைப் பல காரம் சுடச்சுட காத்திருந்தது.. அதையும் ஒரு கைபார்த்துவிட்டு.. காபியை குடித்து முடித்ததும்... பேச்சு வார்த்தைக்கு தயாரானார்கள் வைஷ்ணவியும்... மோகனும்...

"பெரியவனுக்கு பொண்ணு பார்க்கிறோம் பெரியம்மா.."

"யாருக்கு...? உன் மூத்த மகன் கௌசிக்குக்கா.. பொண்ணு பார்க்கிற...?" அறியாதவளைப் போல கேள்வி கேட்டாள் பாரிஜாதம்..

சென்னையிலிருந்து தங்கை மகள்.. கணவருடன் எதற்கு வந்திருக்கிறாள் என்று அவளுக்கும் தெரியும்... வீட்டில் உள்ளவர்களுக்கும் தெரியும்...

அது அவர்களுக்குத் தெரியுமென்று வந்தவர் களுக்கும் தெரியும்.. ஆனால்.. முறைப்படி எதையும் செய்யும் வழக்கமுடையவர்கள் அறியாதவர்களைப் போல பேச ஆரம்பித்தார்கள்...

பெண் கேட்டு வந்திருப்பது பாரிஜாதத்தின் தங்கை மகள் என்பதால்... அவளைப் பேசவிட்டு... மற்றவர்கள் அமைதிகாத்தனர்..

அதைப் பின்பற்றி... வைஷ்ணவியின் கணவரும் அமைதிகாக்க... பெரியம்மாவும்.. தங்கை மகளும்.. பேச்சு வார்த்தையை ஆரம்பித்தனர்..

"கௌசிக்குத்தான் பெரியம்மா..."

"பாரு.. பாரு... நல்லாப் பாரு.. உன் மகனுக்கும் கல்யாண வயசு.. வந்திருச்சுல்ல.."

"ஆமாம் பெரியம்மா.. கல்யாண வயசு கடக்கப் போகுது.."



"என்னடியம்மா சொல்ற?"

"அவனுக்கு வயசு இருபத்தி ஒன்பது ஆகப் போகுது பெரியம்மா.."

பாரிஜாதம் அவசரமாக மனக்கணக்குப் போட் டாள்... ஐஸ்வர்யாவிற்கு இருபது வயது முடிந்து... இருபத்தியொரு வயது ஆரம்பமாகியிருந்தது..

'ம்ம்... மாப்பிள்ளை... எட்டுவயதுதான் மூத்தவன்.. போகுதுபோ..'

"எதுக்கு தாயி... இம்புட்டு நாளு தள்ளிப் போட்ட..?"

"நானா தள்ளிப் போட்டேன்..? முதல்ல படிப்பை முடிச்சான்... அப்புறமாய் சொந்தமாய் கம்பெனி ஆரம்பிக்கப் போறேன்னான்.. அதுக்கப்புறம்.. வெளி நாட்டில் வியாபாரம் நடக்குதுன்னு சொன்னான்.. நிற்காம.. பிளேனில்... நாடுவிட்டு நாடு பறந்துக் கிட்டு இருக்கிறவன்... பிடிச்சு வைக்க வழிதெரியலை பெரியம்மா..."

'இதென்னடி வம்பாயிருக்கு.. இந்தப் பய... கழுத்தில தாலியக் கட்டி விட்டுட்டு.. ஊர் ஊராச் சுத்தினா.. என் பேத்தியோட எப்படி குடும்பம் நடத்துவான்..?'

பாரிஜாதத்திற்கு யோசனை வந்தது... அவள் மருமகளை ஜாடையாகப் பார்த்தாள்.. அவள் மெது

வாக.. மற்றவர்கள் அறியாமல் நகர்ந்து வந்து.. மாமியாரின் காதில் ஓதினாள்..

"நமக்கெல்லாம்... மெட்ராஸீக்கு போறதே பெரிய விசயம்.. மாப்பிள்ளை அமெரிக்கா வரைக்கும் பிளேனில பறக்கிறாரு.. நம்ம ஐஸ்வர்யா ஜாதகத்துல.. அவள்.. கடல் கடந்து வெளிநாட்டுக்கு போகிற யோகம் இருக்குன்னு ஜோஸியர் சொன்னதை மறந்துட்டிங்களா அத்தை..."

பாரிஜாதத்தை முடுக்கி விட இதுவே போதுமானதாக இருக்க.. அவள் மனதில் வந்த தயக்கம் பறந்துவிட்டது..

"கண்ணுக்கு லட்சணமா ஒரு பெண்டாட்டியை கட்டிவை வைஷ்ணவி.. என் பேரன் அதுக்குப் பின்னால.... தானா வீடு தங்குவான்.. ஆமா... எங்கே பொண்ணு பார்த்திருக்கிற..?"

மோகன் மனைவியை முறைத்தார்.. அவருக்கு இந்த கண்ணாமூச்சி விளையாட்டு பிடிபடவில்லை.. சென்னையில் பிறந்து வளர்ந்தவருக்கு.. எதையும் நேரடியாகப் பேசித்தான் பழக்கம்..

வைஷ்ணவி கணவரின் பார்வையை தவிர்த்து.. பாரிஜாதத்திற்கு பதில் சொன்னாள்..

"ஆயிரம் இடத்தில் பொண்ணு பார்த்தாச்சு பெரியம்மா.. ஒரு இடமும் மனசுக்குப் பிடிக்கல..."



"ஏண்டியம்மா.. இப்படிச் சொல்ற... ஆயிரம் இடத்தில... ஒரு இடம் கூடவா உனக்குத் தோதா அமையல..?"

இந்தக் கேள்வியைக் கேட்டு... அன்பழகன் பல்லைக் கடித்தான்.. ஆனந்தனின் காதைக் கடித்தான்...

"என்னடா ஆனந்து... இந்தப் பாட்டி பேசத் தெரியாம பேசி வைக்குது..."

"அதானே... இந்தக் கிழவிக்கு இருக்கிற லொள்ளைப் பாரேன்.. நீ சொன்னால் சரிதான் பெரியம்மான்னு... ஆயிரம் இடத்தில தோதான ஒரு இடமாப் பார்த்து இவங்க பொண்ணு கட்டிட்டுப் போயிட்டா என்னண்ணே செய்யறது...?"

"என்ன செய்யறதா...? இந்தப் பாட்டியை நாடுகடத்திவிட மாட்டேன்..?"

பேரன்களின் விழிகளில் பறந்த அனலை பாரிஜாதம் கவனித்துக் கொண்டுதான் இருந்தாள்...

'கிடக்கிறானுக... சின்னப்பயலுக.. கிணத்து தண்ணிய ஆத்து வெள்ளமா கொண்டு போகும்...? என் தங்கச்சி மக... என் பேத்தியை விட்டுட்டு.. வேற பக்கம் பொண்ணு கட்டிருவாளா...? நான்தான் கட்ட விட்டிருவேனா...?'

வைஷ்ணவி அடுத்துப் பேசிய பேச்சு.. அண்ணன் தம்பிகளின் கலக்கத்தைப் போக்க.. அவர்கள் நிம்மதியாக நிமிர்ந்து அமர்ந்தார்கள்..

"ஒன்னு இருந்தா.. ஒன்னு இல்லை பெரியம்மா..."

"எல்லாமே சேர்ந்திருக்கிறது போல அமையறது கஷ்டம் தாயி.. முன்ன... பின்ன இருந்தாலும் ஏத்துக் கிட்டு... காலாகாலத்தில உன் மகனுக்கு கல்யாணத்த பண்ணி வைய்யி..."

"அடுத்த இடத்தில ஏன் பெரியம்மா... நான் அட்ஜஸ்ட் பண்ணிக்கிட்டுப் போகனும்...? அதுவே.. என் அண்ணன் மகளாயிருந்தா.. முன்ன.. பின்ன இருந்தாலும் ஏத்துக்கிட்டு என் மகனுக்கு கட்டி வச்சிடப் போறேன்.. என்னாங்க.. நான் சொல்றது சரிதானே..."

ஒருவழியாய் மனைவி விசயத்துக்கு வந்து விட்டாளே என்ற சந்தோசத்துடன்..

"ஆமாமாம்..." என்று தலையாட்டினார் மோகன்..

மற்றவர்கள் முகத்திலும் அதே சந்தோசம் நிலவ... பாரிஜாதம் அதற்கும் வெடி குண்டை வைத்தாள்...

"உன் அண்ணன் ஈசுவரனுக்கு ஒத்த மகன்தானே தாயி... பொம்பளப் புள்ள இல்லயே.." என்று அவள் கேட்டுவைக்க...

"இந்தக் கிழவியைத் தூக்கி வைகையில் போட்டு விட்டு வருகிறேன் அண்ணா.. அப்போத்தான் என் மனசு ஆறும்..." என்று புஜத்தை தட்ட ஆரம்பித்து விட்டான் ஆனந்தன்..



"பொறுடா.. இது.. எதுவரைக்கும் போகு துன்னுதான் பார்ப்போமே.." அன்பழகன் தம்பியை அடக்கினான்...

நல்லவேளையாக வைஷ்ணவி பாரிஜாதத் தின் பேச்சை பெரிதாகவே எடுத்துக் கொள்ள வில்லை..

"இதென்ன பெரியம்மா இப்படிக் கேட்டுட்டிங்க.. எனக்கு என் கூடப்பிறந்த அண்ணன் மட்டும் தான் அண்ணனா..? என் பெரியம்மா மகன் அண்ண னில்லையா..?"

அதைக் கேட்டதும்.. ஜெயப்பிரகாசம் உணர்ச்சி வசப்பட..

"டேய் ஆனந்து... நம்ம அப்பாவைப் பாரேன்... விட்டா... அத்தைக்கு பக்கத்தில நின்னு... மலர்ந்தும்.. மலராத.. பாதி மலர்போலன்னு பாட்டுப் பாடி பாச மலரை வளர்க்க ஆரம்பிச்சிடுவாரு போலத் தெரியு துடா..." அன்பழகன் கிண்டலடித்தான்..

ஒரு நொடி.. ஜெயப்பிரகாசை சிவாஜி கணேச னாகவும், வைஷ்ணவியை சாவித்திரியாகவும் கற்பனை பண்ணிப் பார்த்த ஆனந்தனுக்கு சிரிப்பு வந்து விட்டது... அவன் சிரிப்பை அடக்க பிரம்மப் பிரயத்தைப் பட்டான்..

"டேய்.. சிரிச்சு வைச்சிராதே... இது நம்ம தங்கச்சி கல்யாணம்..." அன்பழகன் எச்சரித்தான்..

"அதை நீயும் கொஞ்சம் நினைப்பில வைச்சுக்கிட்டா தேவலாம் அண்ணே.. இப்படி சிரிப்பை மூட்டாதே..." ஆனந்தன்.. வேண்டுகோள் வைத்தான்...

"அம்மாடி.... என் தங்கச்சி மகளே.. நீ எனக்கும் மகதாண்டிம்மா.. என் மகன்.. உனக்கும் அண்ணன் தான்.. நீ உன் அண்ணன்கிட்ட எதை வேணும்னாலும் கேளுதாயி... அவன் தங்கச்சிக்கு.. அவன் தராம... வேறு யாரு தருவா..? அவன் நீ கேட்டதைத் தருவான்..."

வந்திருப்பவர்களோ கோடிஸ்வரர்கள்.. அவர்களின் தகுதிக்கு அந்த கிராமத்து வீட்டில் பெண் எடுப்பதே மிக... மிகப் பெரிய விசயம்.. சொந்தம் என்ற ஒன்றுக்காக மட்டுமே அந்த வீட்டின் வாசலை அவர்கள் மிதித்திருந்தார்கள்..

அப்படியிருக்கும்போது.. என்னவோ.. அவர்களிடம் இல்லாத ஒன்றை... அவர்கள் கேட்டு வந்ததைப் போல... பாரிஜாதம் பாவனை பண்ணிய விதத்தில் அன்பழகன் மீண்டும் பல்லைக் கடித்தான்...

"டேய்.. இந்த கிழவி பண்ற பில்ட் அப்... தாங்கலைடா..." ஆற்ற மாட்டாதவனாய்.. அவன் பாட்டியென்று சொல்லும் வழக்கத்தை கைவிட்டு... ஆனந்தனைப் பின்பற்றி விட்டான்...





# 5

வைகறையில் நான்வந்தால்...
கேட்டதெல்லாம் தருவேனென்றாய்...
வைகைக் கரையில் காத்திருந்தேன்...
நீ வார்த்தைதனை தவறிவிட்டாய்....

ஆனானப்பட்ட மோகனே... பாரிஜாதம் பண்ணிய அலம்பலைக் கண்டு.. 'ஆ' வென்று வாய் பிளந்து விட்டார்.. பெரியன்னையின் இந்த அலம்பலுக்கெல்லாம் பழக்கப்பட்டவளான வைஷ்ணவி மட்டும் தான் இயல்பாக இருந்தாள்..

"நான் என் அண்ணனிடம் என்னத்தை கேட்டு விடப் போகிறேன் பெரியம்மா? என் அண்ணன் மகளை.. என் மகனுக்கு கொடுங்கன்னு கேட்கப் போகிறேன்..."

"அதுக்கென்ன தாயி.. கொடுத்துட்டாப் போச்சு.. நீ கேட்டு உன் அண்ணன் மாட்டேன்னா சொல்லப் போறான்..?"

'ஹப்பாடி.. ஒருவழியாய் பேச்சுவார்த்தை முடிந்துவிட்டதுடா சாமி...' என்று அன்பழகன் நிம்மதிப் பெருமூச்சு விட்டபடி தம்பியைப் பார்த்தான்..

அவனோ... "அவசரப்படாதேண்ணே..." என்றான்..

"ஏண்டா...?"

"உனக்கு நம்ம வீட்டு கிழவியைப் பத்தி இன்னும் சரியாக தெரியலை..."

"எனக்கா தெரியாது..?"

"சரியாத் தெரியாதுன்னு சொன்னேன்..."

"இப்ப என்னதாண்டா சொல்ல வர்ற..?"

"இதுவே வில்லங்கம் பிடிச்ச கிழவி..."

"அதுக்கென்ன இப்ப..?"

"சாமானியமாய் இந்தக்கிழவி பேச்சுவார்த்தையை முடிக்காது..."

ஆனந்தன் மிகச்சரியாக தன் பாட்டியை எடை போட்டிருந்தான்.. அவனது கணிப்பு தவறவில்லை.. பாரிஜாதம்...

"அதில பாரு தாயி..." என்று ஆரம்பித்தாள்..

"என்ன பெரியம்மா..."

"உங்க ஊருல நீங்க எப்படியோ.. எனக்குத் தெரியாது.. இந்த ஊருக்குள்ள.. நாங்கதான் பெரிய வீட்டாளுக.."

"அதுக்கென்ன பெரியம்மா...?"



"எங்க வீட்டுப் பொண்ண பொத்திப் பொத்தி வளத்திருக்கோம்.. அத ஒரு சொல் சொன்னதில்ல..."

"நாங்களும் சொல்ல மாட்டோம்..."

"உங்க மெட்ராஸீ நாகரிகமெல்லாம் அதுக்குத் தெரியாது.. கணுக்கால் தெரியாம.. பாதத்தை மறைச்சு.. பாவாடை தாவணி போட்டு வளர்ந்த பொண்ணு.. நம்ம ஊரு பண்பாட்டில ஊறிப் போன பொண்ணு..."

"எங்களுக்கு அப்படிப்பட்ட பொண்ணுதான் வேணும்..."

"இப்ப இப்படிச் சொல்லிப்புட்டு.. நாள பின்னே ஒரு பேச்சுக்கு.. பட்டிக்காட்டுப் பொண்ணுன்னு சொன்னீங்கன்னு வைய்யு... என்ன நடக்குமுன்னு எனக்கே தெரியாது... உன் பெரியப்பா சரக்குன்னா மம்பட்டியைத் தூக்கி வீசுகிற ரகம்.. உன் அண்ணன் வெட்டரிவாள் பரம்பரையில வந்தவன்.. உன் அண்ணன் மகன்களோ... ஒரு அடியில பத்துப் பேரை ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைப்பானுக.."

"இப்ப எதுக்கு பெரியம்மா... இதையெல்லாம் பேசறீங்க...?"

"சொல்லி வைக்கிறேன் தாயி... என் பேத்தி பூமாதிரி... அவளை இரும்பு மாதிரி நினைச்சா.. என் வீட்டு மனுசங்க இரும்பு மனுசங்களா வந்து நிப்பானுக.. சொல்லிப்புட்டேன்.."

'எங்கேயாவது பெண் கேட்டு போகும் மனிதர்களை இப்படி பயமுறுத்துவார்களா..?' என்று தனக்குள் எண்ணிக் கொண்டார் மோகன்..

அவருடைய அந்தஸ்திற்கு வைஷ்ணவி சொன்னதைப் போல... ஆயிரம் பெண்கள் வரிசையில் வந்து நிற்பார்கள்.. ஆனால்.. வைஷ்ணவி என்னவோ.. கட்டினால்.. தன் அண்ணன் மகளைத்தான் கட்டி வைப்பேன் என்று ஒற்றைக் காலில் நின்று தொலைத்தாள்...

பெண்டாட்டியின் பேச்சை தட்டியறியாத மோகனும் தலையாட்டி பொம்மை போல.. தலையை ஆட்டி விட்டார்.. திருவேடகத்திற்கு வந்து.. பாரிஜாதத்தைப் பார்த்த பின்பு.. அப்படி தலையாட்டியது தவறோ என்று தீவிரமாக யோசிக்க ஆரம்பித்தார்..

"ஏன் பெரியம்மா... என் மகனுக்கு பொண்ணு கொடுக்க இத்தனை கண்டிசன் போடனுமா..?"

"இங்க பாரு மகளே.. நீ பெரியம்மா வீட்டுக்கு விருந்துக்கு வந்திருந்தியனா கதையே வேற.. உன்கிட்ட கறாராய் ஒரு வார்த்தை கூட நான் பேச மாட்டேன்.. ஆனா நீ பொண்ணு கேட்டு வந்திருக்கிற...? ஆயிரம்தான் தங்கச்சி மகளா இருந்தாலும்.. என் பேத்திக்கு நீ மாமியார்தான...? அந்தப் புத்தியைக் காட்டிட்டியினா... என்ன செய்யறது..?"

"அதுக்காக... வீட்டுக்கு வந்த மருகளை உரிமையோட ஒரு சொல்லு... சொல்லக்கூட யோசிக்கிறமாதிரி வைக்கனுமா...?"



"உரிமையோட பேசு தாயி... யாரு வேணாங்கிறது...? வில்லங்கமாய் பேசிப்புடாதேன்னுதான் சொல்லுறேன்..."

"உங்களுக்கு தெரியாததில்லை பெரியம்மா.. என் புருசனும் சரி.. மகனும் சரி.. கோடிக்கணக்கில் சம்பாதிக்கிறவங்க..."

"யாரு இல்லேன்னு சொன்னது..? பணத்தை வைச்சு நிம்மதியையும், சந்தோசத்தையும் வாங்க முடியுமா தாயி..."

இதைக் கேட்ட வைஷ்ணவியின் முகம் ஏனோ இருண்டு விட்டது.. மோகனும் கூட யோசனையில் ஆழ்ந்து விட்டார்...

"உன்கிட்ட கோடிக்கணக்கில் பணமிருக்கலாம் தாயி... எங்களுக்கு அது பெரிசில்ல.. எங்க வீட்டுப் பொண்ணு சந்தோசமா புருசன் கூட குடித்தனம் பண்ணனும்.. அதுதான் வேணும்.."

ஒருவழியாய் சுதாரித்துக் கொண்ட வைஷ்ணவி..

"ஐஸ்வர்யா எனக்கும் அண்ணன் மகள்தான் பெரியம்மா.. அவளை வேற வீட்டுப் பெண்ணா நாங்க நினைக்கவே மாட்டோம்.. நீங்க பெண்ணைக் கொடுங்க.. என் மகள்கூட இன்னொரு மகள் வந்துட்டான்னு நினைச்சு... நான் கண்ணுக்குள்ள வைச்சுப் பார்த்துக்கறேன்..."

"இது போதும் தாயி... இன்னும் ஒன்னு இருக்கு.."

'இன்னுமா..' மோகன் அரண்டு போய் மனைவியை பார்க்க.. அவள் கண் சமிக்ஞை செய்தாள்..

"என்ன பெரியம்மா?"

"நீயும்.. உன் வீட்டுக்காரரும் வந்திருக்கீங்க.. சந்தோசம்.. மாப்பிள்ளை எப்ப வந்து பொண்ணைப் பார்ப்பாரு..."

வைஷ்ணவி.. மோகனின் முகம் பார்க்க.. அவரோ வானத்தைப் பார்த்து வைத்தார்..

"அவனே வெளிநாட்டில் சுற்றிக்கிட்டு இருக்கான்..."

"அதுக்காக.. பொண்ணு பார்க்க வராம இருக்கிறதா..? நாங்கள்ளாம் சின்ன வயசில உன் மகனைப் பார்த்ததுதான்.. இப்ப எப்படி இருப்பாருன்னு தெரியாம பாக்கு வெத்தலை மாத்தினா சரிப்பட்டு வருமா தாயி?"

"எல்லாம் சரிப்பட்டு வரும் பெரியம்மா.. அவனுக்கு ஈமெயிலில் ஐஸ்வர்யாவோட போட்டோவை அனுப்பிட்டோம்... பிடிச்சிருக்குன்னு சொல்லிட்டான்..."

"ஈ மெயிலா...? அதென்னடா அன்பழகா... ஈ மெயிலு... எறும்பு மெயிலுன்னு...? உனக்கு அந்த மெயிலு ரயிலைப் பத்தி ஏதாச்சும் தெரியுமா...?"

பாரிஜாதத்தின் புத்திசாலித்தனத்தை தாங்கிக் கொள்ள முடியாமல் தவித்துப் போனார் மோகன்..



ஈமெயிலுக்கும்... எறும்புக்கும் சம்பந்தம் உண்டு பண்ண முடியும் என்பதை அன்றுதான் அவர் கண்டார்...

மெயிலுக்கும்... ரயிலுக்கும் உள்ள தொடர்பைப் பற்றி அவர் யோசித்து தலையைப் பிய்த்துக் கொண்டிருக்கையில்...

"போதும் பாரிஜாதம்.. அதுதான் வைஷ்ணவி சொல்லிருச்சே.. இனிமே ஆக வேண்டியதைப் பேசலாம்..." என்று பேச்சு வார்த்தையை தொடரும் பொறுப்பை ரங்கநாதன் எடுத்துக்கொண்டு மோகனைக் காப்பாற்றினார்..

அதற்குமேல் அந்த வீட்டு ஆண்கள் பேச ஆரம்பிக்க.. பாரிஜாதம் பார்வையாளராக மாறினாள்...

"தையில முகூர்த்தம் வைச்சிரலாம்..."

ஒருமனதாக பேசி முடிவு செய்துவிட்டு வைஷ்ணவியும்.. மோகனும் கிளம்பி விட.. அன்பழகனும்... ஆனந்தனும்.. பாரிஜாதத்தின் அறிவைப் புகழ்ந்து தள்ளினார்கள்..

"நம்ம வீட்டுக் கிழவி கில்லாடிண்ணே..."

"அதைத்தாண்டா தம்பி... நானும் நினைச்சேன்.. நம்மளுக்கு இந்த யோசனையெல்லாம் வராமல் போயிருச்சு பாரேன்.."

"இத்தனைக்கும்.. மாப்பிள்ளையைப் பெத்தவங்க இந்தக் கிழவிக்கு தங்கச்சி மக..."

"அதைக் கூட சட்டை பண்ணாம.. அரட்டி வைச்சச்சு பாரு... எனக்கு அங்கேயே.. கம்பை எடுத்து சுற்றிடணும்போல வீரம் பொங்கிருச்சுடா தம்பி..."

"வசதியையும்.. வைரத்தையும்... காரையும்.. கண்டு மயங்கலை பாரு.. என்னா தெணாவெட்டா... பேகச்சு.. சும்மா சொல்லக் கூடாதுண்ணே.. நம்ம வீட்டு கிழவியின்னா... கிழவிதான்... இதுக்கு பக்கத்தில யாரும் நிக்க முடியாது.."

"சத்தம் போட்டு சொல்லி வைக்காதேடா... சும்மாவே அதுக்கு மண்டைக்கனம் எக்கச்சக்கம்.. இதில நாமளும் புகழ்ந்தோமுன்னு வைய்யி.. அதைப் பிடிக்கவே முடியாது..."

"இதை எனக்கு நீ சொல்லனுமா அண்ணே?"

வாசல் திண்ணையில் அமர்ந்து அண்ணனும், தம்பியும் அவர்களின் பாட்டியை சிலாகித்துக் கொண் டிருக்க.. மாடியறையில் சாவித்திரி.. ஜெயப்பிரகாசிடம் சிலாகித்துக் கொண்டிருந்தாள்....

"அடேங்கப்பா... உங்க அம்மா.. என்ன போடு போட்டுச்சு..."

"நான் பேச வேண்டிய அவசியமில்லாம அம்மா செஞ்சிருச்சு சாவித்திரி..."

"இல்லேன்னாலும் நீங்க பேசிருவீங்க..."

"ஏண்டி... நான் பேச மாட்டேனா..?"



"நீங்க பேசுற லட்சணத்தை வெளியில சொல்லிரா தீங்க.. நானும் உங்களைக் கட்டிக்கிட்டு இந்த வீட்டில காலடி எடுத்து வச்ச நாள் முதலாய் உங்க அம்மாவோ வாயில அரைபடறேன்.. அது முன்னாடி நின்னு ஒரு சொல்லு சொல்லி அடக்கத் துப்பில்லை.. நீங்கள்ளாம் பஞ்சாயத்து தலைவர்..."

"விடுடி.... விடுடி... இது ஒரு பேச்சா...?"

இத்தனை பேரும் மனைவியைப் புகழும்போது ரங்கநாதன் சும்மாயிருந்தால் நன்றாயிருக்காது என்று அவருக்கே தோன்றிவிட..

"நீ பரவாயில்லைடி பாரிஜாதம்..." என்று மனைவி யிடம் சொல்லி வைத்தார்..

"பேரன்.. பேத்தி எடுத்து... பேத்திக்கும் கல்யாணம் பேசி முடிச்சாச்சு.. இப்பப் போயி... நீ பரவாயில்லைடி பாரிஜாதமுன்னு சொல்றீங்களே... நான் பரவாயில்லன்னா.. வேற எந்த ரதியைக் கட்டனும்னு நினைச்சீங்களாம்..?"

"யாருடி இவ.. காலம்போன கடைசியில.. எந்தப் பேச்சுக்கு எதைப் பேசிக்கிட்டு வாரா.."

"எல்லாம் சரியாத்தான் பேசறோம்... நான் பார்க்க பரவாயில்லைன்னு சொன்னது நீங்கதானே...? நீங்க பெரிய மம்முதராசா... ரதியைக் கட்டாம... என்னைக் கட்டிப் புட்டிங்க..."

"அடிப்பாவி... நான் சொன்ன பரவாயில்லைக்கு அர்த்தமே வேறடி.."

"இந்த ஒரு அர்த்தம் பத்தாதுன்னு.... பத்து அர்த்தம் வைச்சிருக்கீங்களா...? இருங்க உங்களை கவனிச்சுக்கறேன்..."

நொந்து போன ரங்கநாதன்... வாயை வைத்துக் கொண்டு சும்மாயிருந்திருக்கலாமே என்று காலம் கடந்து யோசித்தார்...

அப்படி நிச்சயமான ஐஸ்வர்யாவின் கல்யாணப் பேச்சை அறியாத வெள்ளைச்சாமி பெண் கேட்டு வைத்தால்.. பாரிஜாதம் சும்மாவா விடுவாள்..?

ஆடித் தீர்த்து விட்டாள்...



# 6

வைகறையில் பூங்குயில்கள்
வானத்திலே பாடிச் செல்லும்..
வைகைக் கரை யோரத்திலே...
மென்பாதம் உனைத் தேடி வரும்...

பாரிஜாதத்தின் வாயில் மாட்டிக் கொண்ட வெள்ளைச்சாமியின் குடும்பம்.. பூங்கொடியைப் பெண் பார்க்க வராமலே கிளம்பிப் போய்விட்டது...



"இந்த ஊருக்குள்ள... வேற பொண்ண எப்படிப்பா நான் கல்யாணம் கட்டுவேன்..?" என்று வெள்ளைச் சாமியின் மகன் கேட்டு வைத்தானாம்..

அது ஊரெல்லாம் பரவி... சிலநாள்கள் வரை... பரபரப்பான பேச்சாக சிறகடித்துக் கொண்டிருந்தது...

"தெரியுமாடி சேதி.."

"என்னாத்தா...?"

"நம்ம துக்கையண்ணன் மகள பொண்ணு கேட்டு வந்தவங்க.. பாதிவழியிலயே திரும்பிப் போயிட்டாங்களாம்..."

"அடி ஆத்தி.. அப்படியா சேதி... எனக்குத் தெரியாதே..."

நாற்று நட்டுக் கொண்டிருந்தவர்கள்.. நாற்றோடு சேர்த்து இந்த வம்புப் பேச்சையும் நட்டுக் கொண்டிருந்தார்கள்..

வெகுநாள்களுக்கு இந்த வடு மறையாமல் பூங்கொடியின் மனதில் படிந்திருந்தது.. அதன் பின்னால்... அவள் ஐஸ்வர்யாவைக் கிண்டல் பண்ணும் சாக்கில்.. இந்தச் சம்பவத்தை சொல்லிக்காட்டாமல் விடுவதே இல்லை...

தோழிகளிடமிருந்து பிரிந்து.. வீட்டுக்கு வந்த ஐஸ்வர்யா.. வாசல் திண்ணையில் அமர்ந்து.. வழியில் போய் கொண்டிருந்த பெண்மணியிடம்

வம்பிழுத்துக் கொண்டிருந்த பாரிஜாதத்தை முறைத்துப் பார்த்தாள்...

"என்னடி செல்லம்.. பாட்டியை இம்புட்டுப் பிரியமா பார்க்கிற.."

பாரிஜாதம் பேத்தியை கொஞ்ச ஆரம்பிக்க.. கிடைத்த வாய்ப்பை இறுகப் பற்றிக் கொண்ட அந்தப் பெண்மணி.. ஓட்டமும் நடையுமாக அந்த இடத்தை விட்டு நகர்ந்தாள்..

"உன் ஊரில இப்படிப் பார்த்தா... பிரியமா பார்க்கிறதா அர்த்தமா...?"

"ஆமாம் கண்ணு..."

"அதுசரி... அந்த பொன்னம்மாவை எதுக்குப் பிடிச்சு வச்சிருந்த? தப்பித்தேன்.. பிழைத்தேன்னு... இந்த ஓட்டம் ஓடுது..?"

"அவ பேச்சு நமக்கெதுக்கு தங்கம்...?"

"இதை நான் சொல்லனும்... அந்தம்மா பேச்சு.. எனக்குத் தேவையில்லை... உனக்கு எதுக்குங்கிறேன்..?"

"அதுதானே.. எனக்கெதுக்கு... நீ உள்ளே வா சொல்றேன்..."

"நீ ஒன்னும் என் கையைப் பிடிக்க வேணாம்.."

"ஏனாம்..?"



"அந்தப் பூங்கொடியை பெண் பார்க்க வந்த மாப்பிள்ளை வீட்டுக்காரர்களை ஏன் வீட்டுக்குள்ள விட்ட..?"

பேத்தியின் கோபத்திற்கான காரணம் புரிந்தவளாக.. சமாதானச் சிரிப்புச் சிரித்தாள் பாரிஜாதம்..

"இம்புட்டுத்தானா விசயம்? இதுக்குப் போயா பாட்டிகிட்ட கோவிச்சுக்கிட்டு முகத்தை திருப்பற? இங்க பாரு கண்ணு... அந்தாளுக உன் அம்மா வழிச் சொந்தக்காரக.. அவகளை வீட்டுக்குள்ள விடலைன்னா.. உன் அம்மா என்ன சும்மாவா விடுவா?"

"அடேங்கப்பா... நீ அம்மாவுக்கு பயந்த ஆளுதான் போ.."

"பயப்படலைன்னாலும்.. விட்டுக் கொடுக்க முடியுமா..?"

"எல்லாத்துக்கும் ஒரு பதில் வச்சிருப்பியே.."

ஐஸ்வர்யா மனத்தாங்கலுடன் வீட்டுக்குள் சென்றாள்...

"என் பேத்திக்கு பூமனசு..." பாரிஜாதம் பெருமைப்பட்டபடி பேத்தியின் பின்னால் சென்றாள்..

மாடி ஹாலில் கட்டியிருந்த ஊஞ்சலில் அமர்ந்து ஐஸ்வர்யா ஆடிக் கொண்டிருந்தாள்.. அவள் பக்கத்திலிருந்த எம்.எம் ரேடியோவிலிருந்து பாட்டு ஒலித்துக் கொண்டிருந்தது..

"நாளை இந்த வேளை பார்த்து
ஓடிவா நிலா...
இன்று எந்தன் தலைவன் இல்லை
சென்றுவா நிலா...
தென்றலே... என்தனிமை கண்டு
நின்று போய்விடு.."

பாடலுடன் சேர்ந்து பாடிக் கொண்டிருந்த ஐஸ்வர்யா.. அன்பழகனைக் கண்டதும் பாட்டுப் பாடுவதை நிறுத்தி விட்டாள்...

அதைக் கவனிக்காதவன் போல.. முகத்தை வைத்துக் கொண்டு...

"அம்மா எங்கேம்மா...?" என்று வினவினான் அன்பழகன்..

"கீழே சமையல்கட்டில இருக்குதுண்ணா..."

"அப்படியா...? மாப்பிள்ளை வீட்டில் இருந்து போட்டோ அனுப்பியிருக்காங்க.. அம்மாகிட்ட காட்டலாமுன்னு கொண்டு வந்தா.. அம்மாவைக் காணோம்.."

அவன் இயல்பாக செய்வதைப் போல... ஊஞ்சலின் மேல் போட்டோவை வைத்து விட்டு சென்று விட்டான்...

ஐஸ்வர்யாவுக்குத் தெரியும்.. அவளிடம் காட்டத் தான் அவன் போட்டோவைக் கொண்டு வந்தான் என்பது..



நேரடியாக அவளிடம் கொடுக்காமல்.. மறைமுகமாக அதை உணர்த்திவிட்டு சென்ற தமையனின் செய்கையை புரிந்து கொண்டவளாக... அவள் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு.. போட்டோவை கையில் எடுத்தாள்...

இதயம் படபடக்க.. போட்டோவைப் பார்த்தாள்... கம்பீரமாக... அழகான... அளவான.. சற்றுப் பெரிய மீசையுடன்.. ஆண்மை ததும்பிய தோற்றப் பொலிவுடன் போட்டோவில் கௌசிக் இருந்தான்..

'இவனா என் வருங்காலக் கணவன்..?'

ஐஸ்வர்யா.. தன் அலமாரியில் அந்த போட்டோவைப் பத்திரப் படுத்திக் கொண்டாள்... அவனது கம்பீரமான அழகை அவள் மனம் நினைத்த போதுதானா... அந்தப் பாட்டு ஒலிக்க வேண்டும்...?

"அத்தை மகனே... அத்தானே - உன்
அழகைக் கண்டு நான்பித்தானேன்...
தென்றலடிக்கும் தோட்டத்திலே - நான்
பூத்திருக்கும் முல்லைக் கொத்தானேன்.."

அத்தை மகனின் அழகை இன்னொரு முறை காண மனம் துடிக்க.. அவள் போட்டோவை எடுத்து ரகசியமாக பார்த்தாள்... அவனது விழிகளில் தெரிந்த காந்தத்தன்மை அவளை வசீகரித்தது...

"வசீகரா... என் நெஞ்சினிக்க...
உன் பொன் மடியில்

தூங்கினால் போதும்...
அதே கணம்.. என் கண்ணுறங்க...
முன் ஜென்மங்களின்
சாபங்கள் தீரும்.."

மெல்லிய குரலில் பாடியபடி.. அறையை விட்டு வெளியே வந்தாள்.. தங்கையின் முகத்தில் தெரிந்த சந்தோசத்தை ஜாடையாகப் பார்த்த அன்பழகன்..

"தங்கச்சிக்கு... மாப்பிள்ளய பிடிச்சிருக்குப்பா..." என்று ஜெயப்பிரகாசத்திடம் சொன்னான்...

ஜெயப்பிரகாசத்தின் மனம் நிம்மதியானது..

மார்கழி மாதம் வந்ததுமே.. வீடு பரபரப்பானது.. திருமணத்திற்கான ஏற்பாடுகளில் வீடு இறங்கியது..

"கல்யாணம் மெட்ராஸிலயாமே..." பாரிஜாதம் யோசிக்க...

"அதுதானே மாப்பிள்ளையோட ஊரு.. அங்கே கல்யாணம் நடந்தாத்தானே நல்லாயிருக்கும்.. அதுதானே முறை...?" என்று ரங்கநாதன் அவளை முறைத்தார்..

"எங்களுக்கும் அது தெரியும்..."

"தெரிஞ்சுக்கிட்டே ஏன் கேட்கிறவ..?"

"உங்க நாட்டாமையைப் பார்க்கத்தான்..."

"எதுக்குடியம்மா.. நாட்டாமை... தீர்ப்ப மாத்திச் சொல்லுன்னு சவுண்டு விடறதுக்கா...?"



"நான் சவுண்டு விட்டா நீங்க பயப்படற ஆளு தான்.. உங்க வகிசி எனக்குத் தெரியாதாக்கும்..?"

"தெரிஞ்சா நீயே வச்சிக்க.. ஏண்டா ஜெயப் பிரகாஷ்.. நகை நட்டைப்பத்தி யோசிச்சியா..?"

"நகைக்கு குறைவில்லப்பா... என்ன ஒன்னு... அத்தனையும் சொக்கத் தங்கம்..."

"அதுக்கு ஏண்டா அலுத்துக்கற..?"

"அவங்க வீட்டில வைரத்தில புரள்கிற ஆள்களாச்சேப்பா..."

"இப்படியொன்னு இருக்கா? ஏண்டி பாரிஜாதம்.. தம்பி சொல்றது காதில விழுந்துச்சா..?"

"விழுந்துச்சு.. விழுந்துச்சு.. இதுக்கு மட்டும் பாரிஜாதத்தை தேடுவீங்களே.. ஏன் நாட்டாமைக்கு தீர்ப்புச் சொல்லத் தெரியாதாக்கும்..?"

"அட... யாருடா இவ.. நேரங்கெட்ட நேரத்தில எதையாவது எகனைக்கு மொகனையாய் பேசிக்கிட்டு.. ஆகிற சோலியைப் பார்ப்பாளா... அதை விட்டுட்டு பகடி பேசிக்கிட்டு இருக்கிறா.."

பாரிஜாதம் எழுந்து வந்தாள்.. மகனையும்.. மருமகளையும் பார்த்தாள்..

"இப்ப என்னத்துக்குடா தம்பி இப்படி மருகற..? நம்ம கிட்ட இருக்கிற நகையை அப்படியேவா ஐஸ்வர்யா கழுத்தில போட முடியும்?"

"அதெப்படிம்மா.. பழைய காலத்து நகையை அழிச்சுத்தான் செய்யனும்..."

"அழிச்சுச் செய்யறவன்.. அதை என்னத்துக்கு தங்க நகையாய் செய்யனும்? வைர நகையாய் செய்ய வேண்டியதுதானே..?"

ஜெயபிரகாஷ் விழி விரிய தாயைப் பார்த்தார்..

"இது எப்படிம்மா... எனக்குத் தோணாம போச்சு..?"

"அதுக்கென்னப்பு செய்யறது...? நீ அழகில என்னக் கொண்டிருக்க... அறிவில.. உன் அப்பனையில்ல கொண் டிருக்க.."

"ஆரம்பிச்சுட்டாளா.. ஏண்டி.... வீட்டில இருக்கிற நகையைப் போட்டு வைரநகையை வாங்குறது பெரிய விசயமா..? இதை என்னைக் கேட்டா சொல்லியிருக்க மாட்டேனா.." ரங்கநாதன் சிலிர்த்துக் கொண்டார்....

"அதத்தானே நானும் கேட்கிறேன்.. நீங்க சொல்லி யிருக்கலாமே... ஏன் சொல்லலை?" பாரிஜாதம் கேட்டாள். ரங்கநாதன் அதைக் கவனிக்காதவரைப் போல வேறு பேச்சிற்கு தாவி விட்டார்..

"வைரமா மாத்தினா.. தங்க நகையில பவுனுக் கணக்கு குறையுமேம்மா.." ஜெயபிரகாசம் சந்தேகம் கேட்டார்...

"குறையட்டுமேடா.. நூறு பவுனுக்கு குறைச்சா போடப்போற?"



"அதில்லதான்..."

"அப்புறமென்ன...? ஆகிறதைப் பாரு.. பவுனு பத்தலைன்னா என்கிட்ட இருக்கிற நகைகளையும் சேர்த்து எடுத்துக்க..."

"ஏற்கெனவே... உன்கிட்ட இருக்கிறதை யெல்லாம் உன் பேத்திக்குன்னு கொடுத்துபுட்ட.. இருக்கிற நகைகளையும் பிடுங்கிக்கிட்டா... நீ கழுத்தில... கையில எதைப் போடுவ...? சும்மா யிரும்மா.."

அன்பழகனும்.. ஆனந்தனும் கலந்து பேசிவிட்டு ஜெயப்பிரகாசத்திடம் வந்தார்கள்..

"அப்பா.. தங்கச்சிக்கு.. வைர நகைகளை செய்து போடுற பொறுப்பு எங்களோடது.. நீங்க பவுனைக் குறைக்க வேணாம்.." என்றான் அன்பழகன்..

"எப்படிச் செய்வீங்கடா..?" ஜெயப்பிரகாசம் கேள்வி கேட்டார்..

"ஐம்பது லட்ச ரூபாய் சீட்டில சேர்ந்திருக் கேன்ப்பா... தங்கச்சி கல்யாணத்துக்கு நாங்க எதுவும் செய்ய வேணாமா..?"

ஜெயப்பிரகாசத்தின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் அரும்பியது..



# 7

வைகறையின் மேகங்களில்...
மழைநீரை எதிர்பார்த்தேன்...
சாரல் வந்து எனைநனைக்க...
வைகைக்கரையில் நான்பூத்தேன்...

ஜெயப்பிரகாசத்தின் வீட்டின் முன்னால் அந்தத் தெருவையே அடைத்துப் பந்தல் போடப்பட்டிருந்தது.. வீடெங்கும் உறவு ஜனங்கள் நிறைந்திருக்க.. வீட்டு மனிதர்கள் பரபரப்புடன் அங்குமிங்கும் நடந்து கொண்டிருந்தனர்...

"ஏனப்பு.." பாரிஜாதம் மகனை அழைத்தாள்...

"என்னம்மா...?" ஜெயப்பிரகாசம் நின்று கேட்டார்...

"பஸ்ஸுக்கு சொல்லிட்டயா...?"

"அதெல்லாம் பத்து நாளைக்கு முன்னாலேயே சொல்லிப்புட்டேன்ம்மா"

"ஒரு பஸ்ஸு போதுமாப்பு...?"

"அதெப்படி போதும்? ஆறு பஸ்ஸுக்கு சொல்லியிருக்கேன்ம்மா.."



"அதுதானே... நீ யாரு...? நான் பெத்த மகனாச்சே..."

பாரிஜாதம் பெருமைபட்டுக் கொள்வதை கேட்டபடி அங்கேவந்த ரங்கநாதன்..

"மக்கும்..." என்று செருமினார்...

"என்ன... செருமலெல்லாம் பலமாயிருக்கு...?" பாரிஜாதம் சந்தேகத்துடன் கணவரைப் பார்த்தாள்..

"அவன் என் புள்ளடி..."

"யாரு இப்ப இல்லேன்னது...? வாய்க்கு வாய் காலம் போன கடைசியில.. காலம் போன கடைசியிலன்னு பேசித் தள்ளிப்புட்டு... இப்பப் போயி இப்படிப் பேசி வைக்கறீங்களே... இதுநம்ம பேத்தியோட கல்யாணம்.. நினப்பிருக்கில்ல..?"

"யாருடி இவ... எதைப் பேசினாலும் அதில ஆயிரம் குத்தத்தை கண்டுபிடிக்கிறா.. உன்கிட்ட மனுசன் பேசுவானாடா..?"

ரங்கநாதன் கோபத்துடன் துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு... வாசல் பக்கம் போனார்.. அங்கே புதிதாக வாங்கியிருந்த காரின் பெருமைகளை உறவுக்காரர்களிடம் அளந்து விட்டுக்கொண்டிருந்த அன்பழகனும்.. ஆனந்தனும்.. கோபாவேசத்துடன் வந்து நின்றவரை வியப்புடன் பார்த்தார்கள்..

"என்ன தாத்தா.. இம்புட்டு கோவமா வர்றீங்க.." அன்பழகன் காரை மறந்து விட்டு அவரருகே வந்து நின்றான்..

"அதானே.. தாத்தாவுக்கு கூட கோவம் வருமா...?" ஆனந்தன் வழக்கம் போல இசைப்பாட்டு பாடினான்...

"அவளுக்கு கொழுப்பு கூடிப்போச்சுடா..." ரங்க நாதன் மூச்சிரைக்க சொல்ல..

"இவரு யாரைச் சொல்றாரு..?" அன்பழகன் புரியாமல் தம்பியை நோக்கினான்..

"வேற யாரை.. அவ.. இவன்னு சொல்லுவாரு? கட்டின ஆளத்தான சொல்ல முடியும்..." ஆனந்தன் காரின் மீது சாய்ந்து நின்றபடி கேலியாகச் சொன்னான்..

"பாட்டியையா சொல்கிறாரு..?"

"அந்தக் கிழவியைத்தான் சொல்கிறாரு.. ஏன் தாத்தா.. அதுக்கு கொழுப்பு கூடிப் போச்சுன்னு.. புதிசா கூடினதப் போல சொல்றீங்களே இது உங்க ளுக்கே நியாயமா இருக்கா...? அது பிறக்கும் போதே கொழுப்போட பிறந்த கிழவிதாத்தா.."

"அடச்சே... அவருதான் விவரம்கெட்டதனமா பேசிக்கிட்டு நிக்கிறாருன்னா.. நீயும் கூடச் சேர்ந்துகிட்டு பேசற... ஏண்டா... நாளைக்கு காலையில நம்ம தங்கச் சிக்கு கல்யாணம்... கொஞ்ச நேரத்தில பொண்ணை அழைச்சுக்கிட்டு போக ஆளுக வந்துருவாங்க... இப்பப் போயி என்ன பேச்சு பேசிக்கிட்டு நிக்கறிங்க.."

"ஏண்ணே... நானா தேடிப் போயி.. அந்தக் கிழவியப்பத்தி விவரம் சொன்னேன்? தாத்தா தானே... அந்தக் கிழவியால பாதிக்கப்பட்டு.. நம்மகிட்ட



அடைக்கலம் தேடி வந்தாரு.. அவருக்கு ஆறுதலா ரெண்டு வார்த்தை பேசினா... நீ என்னவோ.. எம் மேல தப்பு சொல்றியே..." ஆனந்தன் நியாயம் பேச..

"போதும்டா..." அன்பழகன் சிரித்து விட்டான்...

"ஏன் தாத்தா... சும்மாவே ஆடுகிற கிழவி... இன்னைக்கு கெட்டி மேளச் சத்தத்தைக் கேட்டா விட்டா வைக்கும்..? அது ஆட்டம் அதிகமாத்தான் இருக்கும்.. அதையெல்லாம் கண்டும்.. காணாம போனாத்தான் புருசன்கிற முறையில உங்க மரியாதை நிலைக்கும் இதையெல்லாம் நான் சொல்லியா தாத்தா.. நீங்க தெரிஞ்சுக்கனும்? தானா தெரிய வேணாமா..?"

ஆனந்தன் சொன்னதைக் கேட்ட அன்பழகன் ஆச்சரியத்துடன் தம்பியைப் பார்த்தான்..

"எலே... பயலே... பிய்ச்சு வாங்கறடா.. இதை யெல்லாம் எங்கே போயிடா கண்டுபிடிப்ப..?"

"பட்டணத்துக்காரனா இருந்தா... ரூம் போட்டு யோசிக்கலாம்.. பட்டிக்காட்டுல இருந்துக்கிட்டு எங்கே போயிண்ணே யோசிக்க முடியும்..? எல்லாம் வைகைக் கரையில காலார நடந்துக்கிட்டே கண்டு பிடிக்கிறது தான்..."

"கல்யாணம் பண்ணி... பேரன்.. பேத்தி எடுத்த தாத்தாவுக்கே பாடம் சொல்லுறியேடா... நீ எங்கேயோ போயிட்டடா தம்பி..."

"போண்ணே... நீ ரொம்பத்தான் பாராட்டுற.."

"ஏண்டா.. சின்னப்பயலுகளா.. உங்களுக்கு கல்யாண வீட்டில காமெடி பண்ண நாந்தேன் கிடைச்சேனா..?"

"அடடா... என்ன தாத்தா... பாட்டிகிட்ட காட்ட முடியாத கோபத்த எங்க மேல காட்டறீங்களா..."

"அதானே.. இந்த வீரத்தையெல்லாம் அந்தக் கிழவிகிட்ட காட்ட வேண்டியதுதானே.. அங்கே ஜகா வாங்கி புறமுதுகு காட்டி ஓடி வந்துட்டு.. எங்ககிட்ட அரட்டிப் பாக்கறீங்களா..?"

"டேய்.. சின்னப்பயலுக சகவாசம்ங்கிறது சரியாத் தாண்டா இருக்கு.."

"யாரைப் பாத்து சின்னப் பயலுகன்னு சொன்னீங்க..? இன்னைக்கு கல்யாணம் பண்ணினா பத்தே மாசத்தில் ஒரு புள்ளக்கி அப்பனா நிப்பேனாக்கும்.."

சந்தடி சாக்கில் மனதிலிருந்த அபிலாஷையை அன்பழகன் வெளிவிட..

"அண்ணே..." என்று வாய் பிளந்தான் ஆனந்தன்..

"பின்னிப் பெடலெடுக்கிறண்ணே... அப்ப... அடுத்த கெட்டிமேளச்சத்தம் சீக்கிரமாவே வந்திரும்ன்னு சொல்லு.."

ஆனந்தன் தமையனை கேலி பண்ண ஆரம்பிக்க..

"போடா.." என்று முகம் சிவந்தான் அன்பழகன்..



"ஹைஹ.. ஹைஹ.. வெட்கத்தைப் பாரு..."

ரங்கநாதனை அவர்கள் மறந்து விட... அவர் வாசல் பக்கமாய் சென்று அமர்ந்தார்.. வேகமாய் புல்லட்டில் வந்து இறங்கிய ஜெயப்பிரகாசம்...

"என்னப்பா... இப்படி உட்கார்ந்துட்டிங்க..." என்று கேட்டார்..

"ஏனப்பு... செத்த கால் அசர.. உட்கார்ந்தாக் கூட தப்பாப்பு? நீயும்.. உன் ஆத்தா கூடச் சேர்ந்துட்டியா...? ஆமாம்... இப்போத்தானே இங்கே நின்னு பஸ்ஸைப் பத்திப் பேசிக்கிட்டு இருந்த...? அதுக்குள்ள எங்கிட்டுப் போயிட்டு வார..?"

"இலைக்கட்டுக்கு சொல்லிட்டு வர்றேன்ப்பா..."

"ஏன்.. அதையெல்லாம் நீதான் செய்யனுமா...? நீ பெத்து வச்சிருக்கிற தண்டச் சோத்து... தடிமாட்டு... தாண்டவராயன்கள் செய்ய மாட்டானுகளா...?"

இவ்வளவு அடைமொழிகளை அடுக்குவதாக இருந்தால்... தான் பெற்றமகன்கள்.. அவரை எந்த அளவுக்கு பாதித்திருக்க வேண்டும் என்று யோசித்த ஜெயப்பிரகாசம்.. காரைத் தழுவிக் கொண்டிருந்த மகன்களின் அருகே சென்றார்..

"இங்கே என்னடா பண்ணிக்கிட்டு இருக்கீங்க..."

"காரைப் பார்த்துக்கிட்டு இருக்கோம்பா..."

"கல்யாண வீட்டுல.. ஆகிற சோலியப் பாக்காம காரைப் பாத்துக்கிட்டு நின்னா.. சோலி நடந்திருமாடா.."

"ஏம்ப்பா இவ்வளவு கோவமா பேசறீங்க...?"

"தாத்தாகிட்ட என்னடா பகடி பண்ணுணீங்க..?"

"ஓ.. கதை அப்படிப் போகுதா...? இதுக்கு நான் விளக்கம் சொல்ல மாட்டேன்.. தம்பி.. நீயே சொல் லுடா.."

"யப்போவ்... பகடி பண்ணினது நாங்க இல்ல..."

"வேற யாரு..?"

"சொன்னா மட்டும்.. சொன்ன மட்டும் ஆளை உண்டு இல்லைன்னு பண்ணிப்புடுவீங்களாக்கும்.?"

"நீ சொல்லுடா.. இந்த ஜெயப்பிரகாசத்தின் அப்பனை பகடி பேசுன ஆளை தோரணம் கட்டிட்டு அப்புறமா என் மகளோட கல்யாண சோலிகளைப் பாக்கறேன்.."

ஜெயப்பிரகாசம் மீசையை முறுக்க.. அண்ண னும்.. தம்பியும்... ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்...

"நிசமாத்தானாப்பா..?"

"நிசமாத்தாண்டா..."

"பகடி பேசின ஆள் யாருன்னு தெரிஞ்சவுடனே.. பதுங்கிக்க கூடாது... இந்த வீரம் குறையாம அப்படியே போயி எங்க தாத்தாவுக்காக நியாயம் கேட்கனும்.."

"தட்டிக் கேட்பேண்டா..."



"தட்டிக் கேட்பீங்க..."

"ஆமாம்..."

"நீங்க..?"

"அட.. ஆமாம்டா.. ஆமாம்.."

"நீ சொல்லுடா மகனே... இன்னைக்கு ரெண்டில... ஒன்னு பார்க்கறேன்.. அப்படிப் பார்க்காட்டி..."

"பொறுங்கப்பா.... உணர்ச்சி வசப்பட்டு சபதம் போட்டுராதீங்க.. உங்க நல்லதுக்குத்தான் சொல் றேன்..."

"ஏண்டா..?"

"ஏனா..? தாத்தாவை பகடி பேச... இந்த உலகத்திலேயே உங்க அம்மா கிழவியால மட்டும்தான் முடியும்.. அது தெரியாம மீசையை முறுக்கறீங்களே.."

"அம்மாவா...?"

ஜெயப்பிரகாசின் கோபம் புஸ்வானமாய் அடங்கி விட... ஆனந்தன் விசமப் பார்வை பார்த்தான்..

"இதுக்குத்தான் சொன்னேன்... சபதத்தை போட்டுராதீங்கன்னு.. இப்பப் புரியுதா...? ஏன்... நான் அப்படிச் சொன்னேன்னு.. நீங்க பாட்டுக்கு.. ஒருபக்க மீசையை எடுத்துடறேன்... என் பெயரை மாத்தி வச்சுக் கறேன்னு சொல்லி வச்சிருந்தீங்கன்னா.. இப்ப உங்க கதி என்னத்துக்கு ஆகிறது.."

"விடுங்கடா... விடுங்கடா..."

ஜெயப்பிரகாசம்.. தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு அமர்ந்திருந்த ரங்கநாதனை கவனிக்காதவரைப் போல.. வீட்டுக்குள் விரைந்தார்..

"அடேங்கப்பா... ராணி மங்கம்மாவுக்கு கூட இம்புட்டு தாட்டியம் இருக்காதுண்ணே.. நம்ம வீட்டுக் கிழவிக்கு இருக்கிற தாட்டியம் இருக்கே.. அப்பப்பா..."

"பேசாம.. அதைக் கொண்டு போயி... வைகை ஆத்தில வெள்ளத்தில விட்டுரலாமா...?"

"அதுதானே...? அது எதிர்நீச்சல் போட்டு கரைமேல ஏறி.. நாம கரையேற கை கொடுக்கும்... அது பொல்லாத கிழவியண்ணே... விட்டா... மெரினா பீச்சையே ஏலம் போட்டு வித்துப்புடும்... நம்ம வைகைக் கரை எம்மாத்திரம்...?"

அண்ணனும்.. தம்பியும் வீட்டுக்குள் பிரவேசிக்க.. "என்னடா... பேராண்டிகளா... காரைக் கட்டிப் பிடிச்சு... குடித்தனம் நடத்தி முடிச்சாச்சா..?" என்றபடி அவர்களை எதிர்கொண்டாள் பாரிஜாதம்..

"இந்தக் கிழவியைப் பார்த்தாயாண்ணே... வீட்டுக் குள்ள தேமேன்னு சுத்திக்கிட்டு இருந்த தாத்தாவை வாசலுக்கு விரட்டிப்புட்டு.. அடுத்து துரத்த நம்மளத் தேடுது.."



"அகப்பட்டுக்காம.. மாடிக்கு ஓடிப் போயிரலாம்.. வாடா..."

அவர்கள் இருவரும் இரண்டிரண்டு படிகளாய் தாவி மாடிக்குச் சென்றார்கள்.. எதிரே.. திருமணப் பெண்ணுக்கான அலங்காரத்துடன் ஐஸ்வர்யா வந்தாள்..

"அண்ணா.."

"தங்கச்சி.."

அவர்களின் கண்கள் கலங்கி விட்டன..

"ரெண்டு பேரும் நில்லுங்கண்ணா..."

"ஏண்டாம்மா...?"

"என்னை ஆசிர்வாதம் பண்ணுங்க..."

அன்பழகனிடமும், ஆனந்தனிடமும்.. தனித் தனியாக பாதம் பணிந்து எழுந்தாள் ஐஸ்வர்யா..

அவர்களின் செல்லத்தங்கை.. நாளையிலிருந்து.. இன்னொரு வீட்டிற்கு சொந்தமாகப் போகிறாள் என்ற நினைவில் அவர்களின் கண்களில் நீர் வழிந்தது..



# 8

வைகறையின் பூக்களிலே..
வஞ்சியுந்தன் முகம் பார்த்தேன்..
வைகைக்கறையின் வனப்பினிலே..
வண்ணமயிலின் அழகைப் பார்த்தேன்..

அது ஒரு நெகிழ்ச்சியான தருணம்.. அந்த வீட்டின் இளவரசியை பெண்ணழைக்க வந்து விட்டார்கள்... அவள் பெரியவர்களின் கால்களிலும்... கூடப் பிறந்தவர்களின் கால்களிலும் பணிந்து எழுகின்றாள்.. அவளுக்கு வாழ்த்துச் சொல்ல வேண்டும்.. வாயார வாழ்த்தும் போது.. கண்களில் ஏன் கண்ணீர் வர வேண்டும்..?

"தீர்க்காயுளாய்.. தீர்க்க சுமங்கலியாய் இரும்மா..." சொல்லும் போது மனம் நிறைந்து சொன்னார்கள்...

அவர்கள் முன்னால் சர்வாலங்கார பூஷிதையாய் நின்ற பெண்ணைப் பார்க்கும் போது.. 'இவள் எங்கள் வீட்டுப் பெண்' என்ற பெருமிதம் அவர்களுக்குள் எழுந்தது..

அதே நேரத்தில்.. 'நாளையிலிருந்து இவள் இன்னொரு வீட்டுப் பெண்'ணாகப் போகிறாள் என்ற



நினைவும் சேர்த்துவர அவர்கள் மனதில்.. பிரிவின் வேதனை படிந்தது..

சாவித்திரி வெளிப்படையாகவே அழுதுவிட... பாரிஜாதம் "ஏன் அழுகனும்...? எதுக்கு அழுகனும்..? நம்ம வீட்டுப் பொண்ணு பெரிய இடத்தில வாழப் போகிறா... சந்தோசமா இருக்கிறதை விட்டுட்டு.. கண்ணைக் கசக்கிக்கிட்டு நிக்கலாமா..?" என்று மருமகளை அதட்டும்போதே தானும் உடைந்த அழுதாள்..

"அம்மாடி.. என் ராசாத்தி..."

பாரிஜாதத்திற்கு கூட பேசுவதற்கு வார்த்தைகள் வராமல் போகும் என்பதை அன்றுதான்... அந்த ஊரார் கண்டனர்...

பெண்கள் கண்ணீர்விட.. ஆண்கள் கண்ணீரை மறைக்க வேலையிருப்பது போல.. வெளியே அவசரமாய் வெளிநடப்பு செய்தனர்..

சென்னையில் நடக்கும் திருமணத்திற்கு... வயதுப் பெண்களை புறக்கணித்து... வீட்டுப் பெரியவர்கள் கிளம்பிவிட... தேங்கி நின்ற தோழிகளிடம் விடை பெற்றாள் ஐஸ்வர்யா...

"இனி நீ தைரியமா இருக்கலாம் பூங்கொடி... எனக்கு கல்யாணம் ஆகப் போகுது..."

ஐஸ்வர்யா இதைக் கூறியபோது பூங்கொடி தோழியைக் கட்டிக் கொண்டு மௌனக் கண்ணீர் விட்டாள்...

காத்திருந்த காரில் ஐஸ்வர்யா ஏறிக்கொள்ள... முன் சீட்டில் ஜெயப்பிரகாசம்.. ஐஸ்வர்யாவின் அருகே சாவித்திரியும்.. பாரிஜாதமும் ஏறிக்கொண்டார்கள்..

ஆறு பஸ்களிலும் உறவினர்களை அமரவைத்து விட்டு... ஐஸ்வர்யாவின் காரை... தங்களது புதுக்காரில் ஏறி பின் தொடர்ந்தான் அன்பழகன்.. ஆனந்தனும்.. ரங்கநாதனும் அந்தக்காரில் ஏறிக்கொண்டார்கள்...

வைகைக் கரையோரம் கார் சென்றபோது.. அவசரமாக தலையை நீட்டி.. வைகையாற்றைப் பார்த்தாள் ஐஸ்வர்யா...

நுரை ததும்ப ஓடிய வைகை ஆறு... தோழிக்கு விடை கொடுக்க வந்ததைப் போல.. இரு கரைகளையும்.. அலைகளால் தொட்டுத் தொட்டுத் தளும்பிக் கொண்டிருந்தது..

'போய் வரவா...?' மானசீகமாக வைகையிடம் கேட்டாள் அவள்..

'நான் பிறந்தது உன் கரையில்தான்.. நினைவு தெரிந்த நாள் முதல்.. ஒருநாள்கூட உன்னைப் பார்க்காமல் நான் இருந்ததில்லை.. உன்னில் மூழ்கி எழுந்தால்தான்.. அன்றைய நாள்.. நாளாக.. எனக்கு இருக்கும்.. இன்றைக்கு சென்னைக்குப் போகிறேன்.. புகைப்படத்தில் முக மறிந்த.. நேரில் முகமறியாத என் ஒன்றுவிட்ட அத்தையின் மகன்.. எனக்குத் தாலியைக் கட்டப் போகிறான்... அதற்குப் பின்னால் நான் அவனுக்கு



சொந்தமாகி விடுவேன்.. அவன் எப்போது என்னைக் கூப்பிட்டுக்கொண்டு வருகிறானோ.. அப்போதுதான் நான் உன்னைப் பார்க்க வரமுடியும்.. எப்படி உன்னைப் பார்க்காமல் நான் இருக்கப் போகிறேன்..?'

நதிக்கு காது கேட்குமா? அவள் சொல்வதை அது கேட்டுக் கொண்டிருக்கிறதா..?

அதைப் பற்றியெல்லாம் அவள் நினைத்துப் பார்க்கவில்லை.. அவளுக்குத் தெரிந்ததெல்லாம்.. அவள் வைகைக் கரையை விட்டுப் பிரிந்து போகிறாள் என்பது மட்டும்தான்..

வைகைக் கரையை விட்டு விலகி.. கார் பறந்தது.. கண்களை மூடி.. அருகிலிருந்த பாரிஜாதத்தின் தோள் மேல் தலை சாய்த்தாள்.. பேத்தியை அரவணைத்துக் கொண்ட பாரிஜாதத்தின் கை மௌனமாக அவளது தலையை வருடியது..

"புகுந்த வீடு..
இனிமையான மல்லிகைப்பந்தல்...
அங்கே புதியவாழ்வைத்
தேடிப் போகும்
இவளொரு தென்றல்..
மங்கை... இவளொரு தென்றல்.."

திருமண விழாக்களைப் பற்றிய பாடல்கள் அடங்கிய கேசட்டை காரில் ஒலிபரப்ப.. அந்த இனிமை யான பாடல் ஒலித்தது..

"காற்றும்.. நீரும்...
புதியதல்ல...
இவள் போகும் வீடு
புதியது..."

புதிய வீட்டிற்கு.. புதிய வாழ்விற்குள் நுழையப் போகும் அயர்வில் ஐஸ்வர்யாவின் இதயம் படபடத்தது... சென்னைக்குள் கார் நுழைந்தபோது... அவளுக்கு பழக்கமில்லாத சந்தடிகள் நிறைந்த சூழல் அவளை வரவேற்க.. அவள் பயத்துடன் பாரிஜாதத்தின் கையை இறுகப் பற்றிக் கொண்டாள்..

"போகப் போக பழகிரும் கண்ணு..." பாரிஜாதம் தைரியம் சொன்னாள்...

"தவளைக்கு ரெண்டு இடம் கண்ணு.. ஒன்னு தண்ணி.. இன்னொன்னு தரை.. ரெண்டு இடத்திலயும் அது வாழ்ந்தாகனும்.. நம்ம ஊரு வயக் காட்டில பாரு.. நெல்லை நாத்து பாய்ச்சுவோம்.. முளைச்சு வர்ற நாத்துக்கு அப்படியேவா தண்ணி பாய்ச்சுவோம்..? நாற்றைப் பிடுங்கி வேற இடத்தில் நடுவோமா இல்லையா...? அதப் போலத்தான் ஒரு பொண்ணோட வாழ்க்கையும்.. பொறந்த வீட்டில பாதிநாள்... புருசன் வீட்டில மீதிநாள்ன்னு.. அவ.. தவளைப் போல ரெண்டு இடத்தில வாழ வேண்டியவ.. நாற்றைப் போல.. ஒரு இடத்தில் முளைத்து விட்டு.. வேறொரு இடத்தில வாழ வேண்டியவ.. உனக்கு மட்டுமா இந்தத் துன்பம் தாயி..? இந்த மண்ணில் பொண்ணாப் பிறந்த எல்லா மகராசிகளுக்கும் இந்தத் துன்பம்தானே தாயி..?"



பாரிஜாதத்தின் கேள்விக்கு ஐஸ்வர்யாவிடம் பதில் இல்லை..

"நான் கிராமத்திலே பொறந்து.. கிராமத்துல வாழ்க்கைப்பட்டேன்.. நீ கிராமத்தில் பொறந்து... பட்டினத்தில வாழ்க்கைப் படற... இதுதான் வித்தியாசம்.. நம்ம ஊரு அமைதிக்கு பழகிப் போனவளுக்கு.. இந்த ஊரின் சந்தடி புதுசாத்தான் இருக்கும்.."

பாரிஜாதம் சொல்லிக் கொண்டே போக...

'இந்த ஊர் மட்டுமா எனக்குப் புதியது..?' என்று மனதிற்குள் கேட்டுக் கொண்டாள் ஐஸ்வர்யா..

'எனக்குத் தாலிகட்டப் போகிறவனும்.. எனக்குப் புதியவன்தான்..' ஏனோ அவள்மனம் கலங்கியது.

"பழகிப் பார்த்தால்.. போகப் போக... எல்லாம் பழகிரும் கண்ணு.."

'அவனும் பழகிவிடுவானா...? என்னோடு பழக்கமாகி விடுவானா..?'

"இது யாரு வீடு..?"

'என் வீடா..?'

"உன் அத்தையின் வீடு..."

'அதிகம் தெரியாத அத்தை.. கொஞ்சம் கூடத் தெரியாத அத்தையின் வீடு..'

"உன்னைக் கட்டிக்கப் போறது யாரு..?"

'தெரியலையே பாட்டி... அவன் பெயர் கௌசிக்காம்.. அவன் முகம் போட்டோவில் மட்டுமே அறிமுகமானது.. இந்த இரண்டைத் தவிர.. வேறு எனக்குத் தெரியாதே பாட்டி..'

"உன் அத்தையின் மகன்தான் உன்னைக் கட்டிக்கப் போகிறாரு..."

'அத்தையையே சரியாத் தெரியாது.. இந்த அத்தையின் மகனைச் சுத்தமாத் தெரியாது... இந்த லட்சணத்தில் நீ இப்படி எனக்கு ஆறுதலைச் சொல்லி வைக்கனுமா..?'

"நீ தான் மருமகளா வரனும்னு உங்கத்தை ஒத்தைக் காலில் நின்னு பொண்ணு கேட்டா.."

'அந்த அத்தையின் மகன்.. ரெட்டைக்காலில் நின்னு என்னை.. ஒரோயொரு தரம்.. பொண்ணு கேட்க வரலையே...'

"உன் பேத்தியை கண்ணுக்குள்ள வைச்சு பார்த்துக்கறேன் பெரியம்மான்னு.. சொல்லி பொண்ணு கேட்டா..."

'அவங்க மகன்.. என்னை அவரோட நெஞ்சுக்குள்ள வைச்சுப் பார்த்துக்குவாரா பாட்டி...?'

"உன் பேத்தி எனக்கு இன்னொரு மகள்ன்னு சொன்னா கண்ணு.."

'அவங்க மகன் என்னை எப்படிச் சொல்வான் பாட்டி..?'

"பயப்படாதேம்மா.."



'முடியலையே..'

"நாங்க இருக்கோம்..."

'கல்யாணம் முடிஞ்சதும் நீங்க போயிடுவீங்களே..'

ஐஸ்வர்யாவின் மனம் அரற்றியதை பாரிஜாதம் உணர்ந்தாளோ.. என்னவோ.. அவள் விடாமல் பேத்தியுடன் பேசிக் கொண்டேயிருந்தாள்...

திருமண மண்டபத்தின் வளாகத்திற்குள் கார் சென்று நின்றது... வீடியோ வெளிச்ச வெள்ளம் அவர்களைச் சூழ.. காரிலிருந்து இறங்கிய ஐஸ்வர்யா.. ஆடம்பரமான அந்த மண்டபத்தை அச்சத்துடன் பார்த்தாள்..

உற்சாக முகத்துடன் ஆரத்தி எடுத்த இளம் பெண்ணை சுட்டிக்காட்டிய பாரிஜாதம்...

"இவதான் உன் நாத்தனா கண்ணு... சாதனான்னு பேரு.." என்று சொன்னாள்

"ஏன் பாட்டி... என் பெயரைக் கூட தெரிஞ்சுக்காமலா இத்தனை நாளும் அண்ணி இருந்தாங்க..?" அவள் விழியுயர்த்தினாள்..

ஐஸ்வர்யா குற்ற உணர்வுடன் அவளைப் பார்க்க.. கலகலத்துச் சிரித்தாள்...

"இதுக்குப் போயி... இப்படியொரு பார்வையா...? சரியான பயந்தாங்குளி அண்ணியா இருக்கீங்களே..."

ஐஸ்வர்யா வெட்கத்துடன் விழி தாழ்த்திக் கொள்ள.. சாவித்திரியின் மனம் நிம்மதியடைந்தது..

'யப்பாடி.. நாத்தனாக்காரி... நல்லவிதமாத்தான் பழகுறா...'

மணப்பெண்ணுக்கான அறைக்குள் அவர்கள் நுழையப் போன சமயத்தில்.. வைஷ்ணவி..

"சந்தோஷ்... டேய் சந்தோஷ்..." என்று அதட்டலாய் அழைக்க...

"என்னம்மா..?" என்றபடி அங்கே வந்தான் ஓர் இளைஞன்...

"எல்லோருக்கும் ஜூஸ் அனுப்புடா.."

வைஷ்ணவி கூறிக் கொண்டிருந்தபோது.. பாரிஜாதம் பேத்தியின் காதுகளில் கிசுகிசுத்தாள்..

"இவன்தான் உன் கொழுந்தன்.. பேரு சந்தோஷ்... உன் புருசனுக்கு நேர் இளையவன்... சாதனாதான் கடைக்குட்டி.."

'என் புருசனா..? இன்னும் அவன் என் கழுத்தில் தாலியைக் கட்டவில்லை பாட்டி.. இத்தனைக்கும் மேலாக... இன்னும் நான் அவனை நேரில் பார்க்கவில்லை...'

மனம் சிணுங்க.. விழியுயர்த்தி சந்தோஷைப் பார்த்தாள் ஐஸ்வர்யா.. அதே சமயம் அவனும் ஐஸ்வர்யாவைப் பார்க்க... இருவரின் பார்வைகளும் சந்தித்துக் கொண்டன..



அவன் தோழமையுடன் சிரித்தபடி

"ஹாய்.. அண்ணி..." என்றான்...

"இதென்னடி வைஷ்ணவி... உன் மகன் என் பேத்தியப் பார்த்து ஹை அண்ணிங்கிறான்..." பாரிஜாதம் முகவாயில் கை வைக்க..

"பாட்டி... அது 'ஹாய் அண்ணி'.. 'ஹை அண்ணி' யில்லை..." என்று விளக்கம் கொடுத்தாள் சாதனா..

தன்னையுமறியாமல் ஐஸ்வர்யா புன்னகைக்க.. சந்தோஷ் முகம் மலர்ந்தான்...

அவன் ஜூஸை அனுப்ப விரைய.. பேத்தியின் முகத்திலிருந்த கலக்கம் விலகியதைக் கண்ட நிம்மதியுடன் பாரிஜாதம் சாதனாவைப் பார்த்து சிரித்தாள்..



## 9

வைகறையின் வருடலிலே...
வளர்ந்திருந்த பூமகளே..?
வைகைக்கரை பெற்றெடுத்து..
வரம்தந்த நாமகளே..?

கண்மூடி சுழல் நாற்காலியில் சுழன்றான் கௌசிக்..

"சார்..." தயக்கமான குரல் ஒலித்தது...

கண்திறந்து பார்த்தான்.. எதிரே அவனுடைய செகரட்டரி ஷீபா நின்று கொண்டிருந்தாள்...

'என்ன..?' வென்று வினவும் பாவனையில் புருவம் உயர்த்தினான்..

"நாளைக்காலையில் உங்களுக்கு மேரேஜ்..."

"ஸோ... வாட்..?"

"இப்போது டைம் ஆறு..."

"வாட்.. ஃபார்..?"

ஒரே கேள்வியை அவன் மாற்றிக் கேட்க.. என்ன பதிலைச் சொல்வது.. என்று தெரியாமல் திருதிருத்தாள் ஷீபா...

"உங்க வொர்க்கிங் டைம் முடிந்து விட்டதா ஷீபா..?"

உன் வேலை நேரம் முடிந்துவிட்டது.. நீ கிளம்பிப் போ.. என்ற மறைமுக உத்தரவு அவன் கேள்வியில் தொனிக்க... அதற்குமேல் எதையும் பேச முடியாத இயலாமையுடன் அவள் நகர்ந்தாள்...

அறைக்குள் கௌசிக்கைச் சுற்றி தனிமை சூழ்ந்து கொண்டது.. அவன் மீண்டும் கண்மூடி.. சுழல் நாற்காலியில் சுழல ஆரம்பித்தபோது.. அறைக்கதவு திறக்கப்பட்டு.. காலடியோசை அவனை சமீபித்தது..



"கெட்.. லாஸ்ட்..." அடிக்குரலில் அவன் சீறினான்...

"கட்டாயம் நான் வெளியே போய்த்தான் ஆகணுமா கௌசிக்.." மோகனின் குரல் கேட்டதும் அவசரமாய் கண்திறந்தான்...

"ஐ ஆம் ஸாரிப்பா... நான் என் செக்ரட்டரி ஷீபா தான் வந்துட்டாளோன்னு நினைச்சு கத்திட்டேன்.."

"உன் ஆபிஸில் யாரும் இல்லை கௌசிக்.. வாசலில் இருக்கிற வாட்ச்மேன் மட்டும்தான்.. மத்தவங்க எல்லாம் இன்றைக்கு சீக்கிரமாகவே போயிட்டாங்களாம்.. ஏன் தெரியுமா...? அவங்க எம்டிக்கு விடிந்தால் கல்யாணமாம்.."

மோகனின் கூர்மையான பார்வை கௌசிக்கைத் துளைத்தது.. அவன் இறுகிப் போன முகத்துடன் அவரது பார்வையைத் தவிர்த்தான்...

"அவங்க எம்டி யாருன்னு உனக்குத் தெரியுமா கௌசிக்.?"

அவரது கேள்விக்கு பதில் சொல்லாமல் கௌசிக் மௌனிக்க..

"நீதான் கௌசிக்..." என்றார் மோகன்...

"உனக்குத்தான் விடிந்தால் கல்யாணம்.. உன் கல்யாணத்தில் கலந்துக்கணும்னுதான்.. உன்னுடைய ஸ்டாப்பெல்லாம் பெர்மிஷன் போட்டுட்டு போயிருக்

காங்க... ஆனா.. நீ மட்டும்.. இன்னும் இங்கேயே இருக்கே.."

"ம்ச்ச.."

"உனக்கு நான் பேசுவதைக் கேட்க சலிப்பாக இருக்கலாம்.. அதுக்காக.. நான் பேச வந்ததைப் பேசாமல் போக என்னால் முடியாது..."

நீ என்ன வேண்டுமானாலும் பேசிக் கொள்.. எதுவும் என் காதில் ஏறாது.. என்ற ரீதியில் கௌசிக் மௌனம் சாதிக்க.. மோகன் முகம் கடுத்தார்...

"உனக்கு என் பேச்சு எரிச்சலாகத்தான் இருக்கும்.. ஏன்... நம்ம குடும்பத்தையே உனக்கு பிடிக்காமல் தான் இருக்கும்.."

"அப்படி நான் சொன்னேனா அப்பா..?"

கௌசிக் மௌனத்தை கலைத்தான்.. மோகன் அவனை முறைத்தார்..

"வாய் விட்டுச் சொன்னாத்தானா..? உன் நடவடிக்கை அப்படித்தானே இருக்கு..?"

"ப்ளீஸ் டாட்.. என்னை அப்செட் பண்ணனும்னு வேணும்னே எதையும் பேசாதீங்க.."

"நான் உன்னை அப்செட் பண்ணுகிறேனா.. நீதான் எங்களை அப்செட் பண்ணிக்கிட்டு இருக்கிற.. நம்ம சொந்த பந்தமெல்லாம் கல்யாண மண்டபத்தில் வந்து இறங்கியிருக்கிறாங்க.. நீ இங்கே உட்கார்ந்துக்கிட்டு இருக்கிற.."

"நான் என்ன செய்யனும்னு நினைக்கிறீங்க...? எனக்கு இந்த மேரேஜில் விருப்பமில்லை... இதை கோடி முறை உங்ககிட்ட சொல்லிட்டேன்.. நீங்களும்.. அம்மாவும் காதில போட்டுக்கலை..."

"உனக்கு விருப்பமானவளை நீ கல்யாணம் பண்ணிக்க... ஆனா.. எங்களை விட்டுவிடு.. இதைத் தானே நாங்க சொன்னோம்..?"

"டாட்.. எலிஸபெத் ரொம்ப நல்லவ.."

"வி டோன்ட் கேர்.. அவளைக் கெட்டவன்னு நானும் உன் அம்மாவும் சொன்னோமா..? அவ சிகரெட் பிடிக்கட்டும்... ஜூஸ் சாப்பிடுவதைப் போல.. விஸ்கியை குடிக்கட்டும்.. யாரைப் பார்த்தாலும்... கட்டிப்பிடிச்சு... முத்தம் கொடுக்கட்டும்.. அது அவளோட நாட்டு கல்ச்சர்... எங்க குடும்பத்துக்கு இது சரிப்படாது.."

"எங்க குடும்பமா...? நம்ம குடும்பமில்லையா..?"

"அப்படி நீ நினைக்கிறவனா இருந்திருந்தா.. சென்னையில் எந்தப் பெண்ணையாவது காதலிச்சிருப்பே... அமெரிக்காப் பெண்ணைத் தேடிப்பிடிச்சு.. காதலிச்சிருக்க மாட்ட.."

"காதல் என்ன.. ஊர்... பேர்னு பார்த்தா வரும்...?"

"வந்திருச்சன்னா.... நீ அந்தப் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு அமெரிக்காவில் செட்டிலாக வேண்டியதுதானே... யாரு உன் கையைப் பிடித்து தடுத்தது..?"

"இதென்னப்பா.. இப்படியே பேசி வைக்கறீங்க...? நான் எதுக்காக... அமெரிக்காவில போய் செட்டிலாகனும்.. இது என் நாடு... என் ஊர்.. என் வீடு... உங்களையும்.. அம்மா.. தம்பி.. தங்கையையும் விட்டுவிட்டுப் போக என்னால் முடியாது.."

"கூழுக்கும் ஆசை... மீசைக்கும் ஆசையின்னா.. தோதுப்படாது கௌசிக்... நாங்க காதலுக்கு எதிரியில்லை.. ஜாதி.. மதம் பார்க்கலை.. நீ காதலின்னு சொல்லி... நம்ம பக்கத்து பெண் யாரையாவது கை நீட்டியிருந்தா கண்ணை மூடிக்கிட்டு... உனக்கு அந்தப் பெண்ணையே கல்யாணம் செய்து வைத்திருப்போம்... நீ வெள்ளைக்காரியை கை காட்டிட்டயேப்பா..."

"ஜாதி.. மதம் பார்க்காதவங்க.. நாட்டை மட்டும் பார்க்கலாமா..?"

"கூடாதுதான்.. பார்க்கக் கூடாதுதான்.. உன் அம்மா காவேரிக் கரையில பிறந்து வளர்ந்தவ.. சில பழக்க வழக்கங்கள் அவ ரத்தத்திலே ஊறிப் போயிருக்கு.. சென்னையைத் தாண்டி நீ ஒரு மும்பைக்காரப் பெண்ணையோ... இல்லை... டில்லியில் பிறந்து வளர்ந்த பெண்ணையோ.. கை நீட்டிக் காட்டியிருந்தால் கூட.. அதை ஏத்துக்க சிரமப்படுவாள்... நீ வெள்ளைக்காரப் பெண்ணைக் கொண்டு வந்து அவ முன்னாலே நிறுத்தினா அவ தாங்குவாளாடா?"



"அதுக்காக இப்படியா முரட்டு பிடிவாதமாய் எங்கேயோ ஒரு வில்லேஜில் பிறந்து வளர்ந்த பெண்ணைக் காட்டி.. இவளைத்தான் நீ மேரேஜ் பண்ணிக்கனும்னு சொல்லனும்..? என் விருப்பத்துக்கு மதிப்பில்லையா..?"

"அந்தப் பெண் யாரோ ஒருத்தியில்லை.. உன் அம்மாவின் பெரியம்மா பேத்தி.."

"இந்த உறவு முறையைச் சொல்லி வைக்காதீங்க.. எனக்கு தலையைச் சுத்துது.."

"இதுதான் எங்க கல்ச்சர் கௌசிக்..."

"டாட்.. நீங்க சொந்தம் கொண்டாடுங்க.. நான் அதைத் தடுக்கலை.. அதுக்காக என் காதலை அழிக்காதீங்க.."

"அப்படின்னா நாங்க விலகிக்கறோம்..."

கௌசிக் இமைக்காமல் தந்தையின் முகத்தையே பார்த்தான்.. மோகன் சளைக்காமல் அவன் பார்வையை எதிர்கொண்டார்... விலக்கிக் கொள்ளாத தந்தையின் பிடிவாதப் பார்வையைக் கண்ட கௌசிக் பெருமூச்சு விட்டான்...

"நீங்க எனக்கு அநியாயம் செய்கிறீங்கப்பா..."

"எங்களுக்கு இதுதான் நியாயம்ன்னு படுது கௌசிக்... நீ எங்களை மதிக்கிறதா இருந்தால்.. எங்கள் உறவு உனக்கு நினைத்தால்.. எழுந்து என்னுடன் வா.. இல்லை.. நான் இப்படித்தான் இருப்பேன்னு சொன்னா.. நீ.. உன்வழியில் போ.. நாங்க எங்க வழியில் போகிறோம்... ஆனா... அதுக்குப் பின்... எங்களுக்கு சந்தோசம்.. சாதனாவும் மட்டும்தான் பிள்ளைகள்.. நீயில்லை..."

"அப்பா..." தலையைப் பிடித்துக் கொண்டான் கௌசிக்...

"இப்படிச் சொல்லிச் சொல்லியே இந்த மேரேஜ் வரைக்கும் கொண்டு வந்து நிறுத்திட்டிங்க..."

"உன்னை இன்னும் கல்யாண மண்டபத்தில் கொண்டு போய் நிறுத்த முடியலையே..."

"உங்களுக்கு என்ன வேணும்...? நான் அந்தப் பெண்ணின் கழுத்தில் தாலியைக் கட்டணும்.. அவ்வளவுதானே.. போங்க.. சரியாய் முகூர்த்த நேரத்திற்கு தாலியைக் கட்ட அங்கே வந்து விடுவேன்..."

"அதுவரைக்கும்.. மாப்பிள்ளையைக் காணோமேன்னு கேள்வி கேட்கிறவங்களுக்கு என்ன பதிலைச் சொல்கிறது?"

"காணவில்லைன்னு விளம்பரம் கொடுக்கப் போகிறேன்னு சொல்லுங்க..."



"அப்படியெல்லாம் சொல்ல முடியாதுப்பா... எங்க மகன் எங்களை மதிக்கலை.. எங்களைப் பெரிதா நினைக்கலை... அவனுக்கு எங்களைவிட... யாரோ ஒரு அமெரிக்காக்காரிதான் முக்கியம்ன்னு வேணா சொல்லலாம்.. சொல்லவா..?"

"பிளாக் மெயிலா...?" ஒரு மாதிரியான குரலில் வினவினான் கௌசிக்..

அவன் மனதில் வன்மம் எழுந்தது... என்ன மாதிரியான வற்புறுத்தல் இது என்ற கோபம் பொங்கியது..

'நீ எங்கள் பேச்சைக் கேட்கவேண்டும்.. அப்படிக் கேட்டால்தான் நீ எங்கள் மகன்.. இல்லையென்றால்.. நீயாரோ.. நாங்க யாரோ...'

யாரோவாக விலகியிருக்க கௌசிக்கால் முடியுமா...? ஆனால்.. அப்படி விலகினால்தான் என்ன என்று கேட்டாள் எலிஸபெத்.. அது இயல்பானது என்றாள்.. அவர்கள் நாட்டிலே அதுதான் வழக்கமென்றாள்...

"யுஸீ கௌசிக்.. நான் என் ஏழுவயதில் வீட்டை விட்டு வெளியேவந்து விட்டேன்.."

"ஏன் எலிஸபெத்..?"

"என் அப்பாவும்... அம்மாவும் டைவர்ஸ் பண்ணிக்கிட்டாங்க... அப்பா வேற மேரேஜ் பண்ணிக்கிட்டார்.. என் அம்மா வேற மேரேஜ் பண்ணிக்கிட்டாங்க.."

கௌசிக்கினால் இதுபோன்ற எலிஸபெத்தின் பின்புல விவரங்களை சகித்துக் கொள்ள முடிவதில்லை...

"விடு எலிஸபெத்" என்றான்..

"அதனால்தான் விட்டு விட்டேன்.. என் ஸ்டெப் பாதருக்கும்.. எனக்கும் மிஸ் அண்டர்ஸ்டாண்டு நிறைய வந்தது.. வீட்டை விட்டு வெளியே வந்துவிட்டேன்.. யு நோ கௌசிக்... என்னைப் போல என் பிரண்ட்ஸ் நிறைய பேரு வெளியேறினவங்கதான்.."

அதற்காக.. என்னையும்.. உன்னைப் போல வெளியேறச் சொல்கிறாயா...? என்ற எரிச்சல் அவனுக்குள் மண்டியது..

'என் அப்பா என் அம்மாவைத் தவிர.. வேறு ஒரு பெண்ணை மனதாலும் நினைக்காதவர்.. என் அம்மாவுக்கு அப்பா மட்டும்தான் உலகம்.. நான் ஏன் வெளியேற வேண்டும்..?'

மனதில் நினைத்ததை எலிஸபெத்திடம் அவன் நாகரிகம் கருதிச் சொன்னதில்லை..

'ஒன்று.. என் ஒன்றுவிட்ட அண்ணனின் மகளைக் கல்யாணம் செய்து கொள்.. இல்லை.. நான் உயிரை விட்டு விடுகிறேன்...' என்று சொல்லாமல் சொல்வதைப் போல வைஷ்ணவி ஒருநாள் தூக்க மாத்திரைகளை விழுங்கி விட்டாள்...



"உங்களுக்கு எங்களைப் பார்த்தால் பிள்ளைகளைப் போலத் தெரியவில்லையா..? அண்ணன் மட்டும்தான் உங்களுக்கு பிள்ளையா..? அவன் போனால் போகட்டும்மா.. உங்களுக்கு நாங்க இருக்கிறோம்.." அபிஷேக் அன்று போட்ட சத்தத்தில் கௌசிக் தனிமைப்பட்டுப் போனான்...

'நீ குற்றவாளி..' என்று வீடே மௌனப் பார்வையுடன் குற்றம் சாட்டி அவனிடமிருந்து விலகி நிற்கவும்.. அவன் பணிந்து விட்டான்.. ஐஸ்வர்யாவுடன் அவனுக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டு விட்டது...




வைகறையின் மேகங்களில்...
வருகின்ற மழைத்துளிகள்...
வைகைக்கரை வெள்ளத்திலே..
கோலமிட்ட நீர்துளிகள்...

கௌசிக்கிற்கு பெற்றவர்களின் மீதும்.. கூடப் பிறந்தவர்களின் மீதும் பாசம் அதிகம்.. ஒரு வினாடி கூட அவர்கள் முகம் திருப்பினால் அவன்தாங்கிக் கொள்ள மாட்டான்..

அந்த அதீத பாசத்தைத்தான்

'இடியாடிக் செண்ட்டிமெண்ட்...' என்று விமரிசித்தாள் எலிஸபெத்..

"இதுதான் இன்டியன் செண்டிமெண்ட்.." என்று கோபத்துடன் சொன்னான் கௌசிக்...

"எது.. உங்கள் கல்ச்சர்...? தனிப்பட்ட மனிதர்களின் சுதந்திரத்தில் தலையிடுவதா..?" கோபப்பட்டாள் எலிஸபெத்..

"நாங்கள் தனியில்லை எலிஸபெத்.. குடும்பம்.. குடும்பமாக வாழ்பவர்கள்.." எரிச்சல் பட்டான் கௌசிக்...

"ஓ..நோ.. எப்படித்தான் அப்படி கும்பல்.. கும்பலாய் வாழ்கிறீர்களோ.."

எலிஸபெத்தின் ஆச்சரியகரமான வார்த்தைகள்.. அவளது மனப் போக்கை கௌசிக்கிற்கு அறிவுறுத்தத்தான் செய்தன...

ஆனாலும்.. அவனால்.. அவளை விட்டு விலக முடியவில்லை.. அவளது நீலக்கண்களும்.. அவர்களது அமெரிக்க மண்ணிலிருந்து வித்தியாசப்பட்ட கருமையான கூந்தலும்.. பால் போன்ற வெள்ளை நிறச் சருமமும் அவனை சுண்டியிழுத்தன..

பழகியவர்களைக் கண்டாலே.. கட்டிப் பிடித்து கன்னத்தில் முத்தமிடும் வழக்கத்தைக் கொண்ட



வர்களின் மத்தியில் வாழ்பவள் காதல் சொன்னவனிடம் தள்ளியா நிற்பாள்..?

அவள் காட்டிய நெருக்கம் தந்த மயக்கத்தில் அவன் வீட்டில் தனது காதல் விவகாரத்தை சொல்லி விட்டான்..

"என்னது..?"

அன்று வைஷ்ணவி நெஞ்சைப் பிடித்துக் கொண்டு சரிந்து விழ.. வீடே தலைகீழாக மாறிப் போனது..

ஒரு கொலைக்காரனைப் பார்ப்பதைப் போலப் பார்த்தபடி...

"யாருடா... அது..?" என்று விசாரணையை ஆரம்பித்தார் மோகன்..

"எலிஸபெத்..."

"அவளோட அப்பா.. என்ன செய்கிறார்...?"

எலிஸபெத்தின் அம்மாவை விவாகரத்து பண்ணிய அவளுடைய அப்பா... வேறொரு பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு... அவளையும் விவாகரத்து பண்ணிவிட்டு இன்னொரு பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொண்டாராம்.. இப்போது அவளுடன்தான் இருக்கிறாரா.. இல்லை... அவளையும் விவாகரத்து பண்ணிவிட்டு.. மற்றொரு பெண்ணைத் தேடிக் கொண்டாரா என்று தெரியவில்லை என்று சொல்ல முடியாமல் வானம் பார்த்தான் கௌசிக்..

"அவளுடைய அப்பாவைப் பற்றிக் கேட்டால் ஏண்டா பதில் சொல்ல முடியாமல் இந்த முழி.. முழிக்கறே..?"

"அது வந்து.. அப்பா.. அதுவந்து..."

"அவளோட அப்பாவைப் பற்றிக் கேட்டால்தான் மென்று விழுங்குவ.. அவளோட அம்மாவைப் பற்றி யாவது தெரியுமா?"

இதற்கும் பதில் சொல்ல முடியாமல் தடுமாறி னான் கௌசிக்.. அவனும்தான் என்ன பண்ணுவான்...? எலிஸபெத்தின் தந்தையை விவாகரத்து பண்ணிய அவளுடைய தாயும்... அதற்குப் பின்னால்.. மூன்று முறை விவாகரத்து செய்து கணவன்மார்களை மாற்றிவிட்டாள்...

அதைப் பற்றி கௌசிக் வாய் திறந்தால்... அப் போதுதான் ஹாஸ்பிடலில் இருந்து டிஸ்சார்ஜ் ஆகி வீட்டுக்கு வந்திருக்கும் வைஷ்ணவி.. மீண்டும் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு விழுந்து.. ஹாஸ்பிட லுக்கு திரும்பி விட மாட்டாளா...?

அதனால்.. அதற்குப் பதில் சொல்வதைத் தவிர்த்து..

"எலிஸபெத் நல்ல பெண் அப்பா..." என்றான் அவன்..

மோகன் அவனை வினோதமாக பார்த்தார்...



"ஏண்டா.. நான் என்ன கேட்கிறேன்... நீ என்ன பதில் சொல்கிறாய்..?"

"நான் அவளைக் காதலிக்கிறேன் அப்பா..."

"அவள் எங்கே இருக்கிறாள்..?"

"அமெரிக்காவில்.. தனியாய் ஒரு அபார்ட்மெண்டில் இருக்கிறாள்..."

"ஏன்..? அவளுக்கென்று குடும்பம் இல்லையா ?"

சுற்றிச்சுற்றி அவர் அதிலேயே வந்து நிற்க.. வைஷ்ணவி இருந்த அறையின் பக்கம் சங்கடத்துடன் பார்த்தான் கௌசிக்...

"சத்தமாய் பேசாதீங்கப்பா.."

"ஏண்டா...?"

"அம்மாவுக்கு கேட்டு விடும்..."

"கேட்டால்தான் என்ன..?"

"வேண்டாம்ப்பா.."

"இது என்னடா வம்பாப் போச்சு.. நீதான் அந்த வெள்ளைக்காரப் பெண்ணைக் காதலிக்கிறேன்னு சொன்ன.. அதனால்தான் அவளோட வீட்டைப் பற்றி விசாரித்தேன்.. அதைப் போயி வேண்டாம்ன்னு சொல்ற... என்ன விசயம்..?"

கௌசிக் தாழ்ந்த குரலில்...

"அவளோட அப்பாவும்.. அம்மாவும் டைவர்ஸ் பண்ணிக்கிட்டாங்களாம்.." என்று கிசுகிசுத்தான்..

மோகன் ஒரு மார்க்கமாய் மகனைப் பார்த்தபடி...

"ஓஹோ.." என்றார்...

"அவளோட அப்பா வேற கல்யாணம் பண்ணிக் கிட்டாராம்.."

"பாவம்... அவளோட அம்மா தனியா இருக்கிறாங் களாக்கும்..."

"இல்லைப்பா..."

ஊடுருவும் தந்தையின் பார்வையைத் தவிர்க்க மார்க்கமில்லாமல் தவித்தபடி பதில் சொன்னான் கௌசிக்..

"இல்லைன்னா..?" மோகன் விடாக் கண்டனாய் வினவி வைக்க.. பல்லைக் கடித்தான் கௌசிக்..

"இல்லைன்னா... இல்லைதான்.. இது என்னப்பா கேள்வி..?"

"ஏண்டா.. கேட்கிறதுக்கு பதில் சொல்ல முடியாதவன் இந்தப் பேச்சையே எடுத்திருக்க கூடாது... இப்ப நீ என்னத்தை சொல்ல முடியாம திணருகிறன்னு எனக்குத் தெரியும்... என்னன்னு நான் சொல்லவா..?"

"என்ன..?"



"அந்த லேடியும் இன்னொரு கல்யாணம் பண்ணி யிருக்கும்.. என் கணக்கு சரியா இருந்தா... இந் நேரம் அந்தம்மா... மூன்று கணவர்களையாவது மாற்றியிருக்கும்.. ஆம் ஐ கரெக்ட்..?"

'யெஸ்.. யு ஆர் கரெக்ட்...' என்று எப்படி அவனால் சொல்ல முடியும்..?

அதனால்.. 'இவர் பெரிய கணித மேதை ராமானுஜம்...' என்று மனதிற்குள் எரிச்சல் பட்டான் அவன்..

தன் தகப்பனார் இவ்வளவு சரியாக கணக்கிட்டுத் தொலைக்கக் கூடாது என்று அவனுக்கு தோன்றித் தொலைத்தது..

"என்னடா பதிலைக் காணோம்..?"

"இப்படி தூண்டித் துருவிக் கேட்டால் எப்படி பதிலைச் சொல்வது..?"

"உள்ளதைச் சொல்ல வேண்டியதுதானே..."

"எதுக்கு...? அதுதான் காரணமுன்னு என் காதலை நீங்க மறுப்பதற்கா..?"

"இல்லேன்னாலும்.. உன் காதலை ஏத்துக் கிட்டுத்தான் நாங்க வேறு வேலை பார்ப்போம்.."

"அப்பா..."

"நான் உனக்கு மட்டும் அப்பனில்லை.. அபிஷேக் கிற்கும்.. வைஷ்ணவிக்கும் நான்தான் அப்பா..."

"நீங்க என்னதான் சொல்ல வர்றீங்க..?"

"அவங்க ரெண்டு பேருக்கும் மதிப்பாய் கல்யாணம் நடக்கனும்னா நீ அந்தப் பெண்ணை விட்டு விடனும்..."

"விடலைன்னா...?"

"எங்களை விட்டு விடனும்..."

"நான் அவளைக் காதலிக்கிறேன்ப்பா.."

"எரிச்சலைக் கிளப்பாதே கௌசிக்... அப்பா வேறொரு கல்யாணம் பண்ணிக்கிட்டாராம்... அம்மா இன்னொரு கணவரைத் தேடிக்கிட்டாளாம்.. ஏழு வயதில் அந்தப் பெண்... வீட்டைவிட்டு வெளியே வந்து விட்டதாம்.."

"அவ பாவம்ப்பா.."

"முட்டாள்.. அவளே தன்னை 'ஐயோ பாவம்'ன்னு சொல்லிக்க மாட்டா... அதுதான் சுதந்திரம்ன்னு உனக்குப் பாடம் எடுப்பா..."

எப்படி அப்பா.. இதையெல்லாம் பக்கத்திலிருந்து பார்த்ததைப் போலச் சொல்கிறார்.. என்று வியந்து போனான் கௌசிக்..

அவனது பார்வையிலிருந்து அதை உணர்ந்த மோகன் தலையில் அடித்துக் கொண்டார்...

"இதைக் கண்டுபிடிக்க ஜோஸியமாடா பார்க்கனும்? அந்தப் பெண் வளர்ந்த சூழல் அப்படிடா..."



"நம்ம வீட்டுக்கு வந்தால் மாறிவிடுவாள்ப்பா..."

"முதலில் அவள் நம்ம வீட்டுக்கே வர மாட்டாள்..."

இதையும் எப்படி அவர் சரியாக கணித்தார் என்று கௌசிக் வியக்க ஆரம்பிக்கும் போதே..

"இதுக்கும் பழையபடி முழித்து வைக்காதே..." என்றார் மோகன்...

"கைப்புண்ணுக்கு கண்ணாடியாடா வேண்டும்..? சென்னை வெயிலில் ஒருநாளாவது தாக்குப் பிடிக்க அவளால் முடியுமா?"

"அதனால் என்னப்பா.. அமெரிக்காவில் அவளுடன் தனிக்குடித்தனம் நடத்துகிறேனே.."

"இப்போதே நடத்துகிறாயா..?"

"சீச்சி... அப்படியெல்லாம் இல்லைப்பா.."

"இனிமேல்தான் நடத்தப் போகிறாயா..?"

"கல்யாணத்திற்குப் பின்னால்தான்ப்பா.."

"பரவாயில்லைடா மகனே.. அந்த மட்டிலும் என் பெயரைக் காப்பாற்றினாய்.."

"இப்போதே பாதி நாள் நான் பாரினில்தான் இருக்கிறேன்.."

"இப்ப எதுக்குப்பா இதைச் சொல்கிற..?"

"கல்யாணத்திற்குப் பின்னால்தான் நான் அதிகம் நாள் பாரினில் இருக்கப் போகிறதாய் நீங்க நினைத்து விடக் கூடாதுப்பா.."

"அப்படியாப்பா..?"

"அடிக்கடி வந்து.. உங்களையும்.. அம்மாவையும்.. தம்பி.. தங்கையையும் பார்த்துவிட்டுப் போகிறேன்ப்பா.."

"அது எதுக்குப்பா...? உனக்கு வீண் சிரமம்.. நீ ஒன்று செய்..."

"என்னப்பா...?"

"அந்தப் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு... கண்காணாத தேசத்தில் செட்டிலாகி விடு.. நானும்.. உன் அம்மாவும்.. நாம் இருவர்.. நமக்கு இருவர்ன்னு உன் தம்பியையும்.. தங்கையையும் மட்டும் பிள்ளைகளா நினைச்சுக்கிட்டு மீதி வாழ்க்கையை வாழ்ந்து முடிக்கிறோம்.."

"அப்பா..."

"இனி அப்படிக் கூப்பிடாதே..."

மோகன் அவனுடன் பேசுவதைத் தவிர்த்தார்... கௌசிக் மனம் புழுங்கினான்.. விவரத்தை போனில் கேட்டறிந்த எலிஸபெத்..

"ஸோ.. வாட்..?" என்றாள்...

"நம்வாழ்க்கை நமக்கு கௌசிக்.. கிளம்பி வா.. நமக்கு அவர்கள் வேண்டாம்.."



எப்படி எளிதாக அவளால் சொல்ல முடிகிறது என்று மீண்டும் மனம் அதிர்ந்தான் கௌசிக்...

பெற்றவர்களை விலக்கி வைத்து வாழ்வதும் ஒருவாழ்வா..? அவன் மனதுக்குள் போராடிக் கொண்டிருந்தபோது... வைஷ்ணவி.. தற்கொலைக்கு முயன்று வைத்தாள்...

"என்னால் முடியலைடா.. அவளோட அப்பாம்மாவே ஏழு கல்யாணம் பண்ணிக்கிட்டவங்க... அவங்களுக்கு பிறந்த இவ எப்படியிருப்பா? நாளைக்கே உன்னை டைவர்ஸ் பண்ணிட்டு உன் கண் முன்னாலேயே வேறொருத்தனுடன் குடித்தனம் பண்ணுவா.. அப்ப நீ மறுகி வந்து நின்னா அதைப் பார்க்கும் சக்தி எனக்கு இருக்காதுடா கௌசிக்.. அதுக்குப் பதிலா.. இப்பவே செத்துப் போயிடறேன்.."



## 11

வைகறையின் வரவுக்காக...
தவமிருந்த வெண்புறாவே..!
வைகைக் கரையில் விடியல்கண்டு..
நீபாடுவதேன்.. குதூகலம் கொண்டு?

மோகனின் எச்சரிக்கைக்கு பணியாத கௌசிக்.. தாயின் பரிதவிப்பிற்கு அடிபணிந்தான்..

"எனக்கு விருப்பமில்லாத கல்யாணத்தைப் பண்ணிக்கச் சொல்கிறீங்கம்மா... அப்புறம்.. உங்க விருப்பம்..."

இந்த ஒருவார்த்தையில் உற்சாகம் பெற்றவளாய் வைஷ்ணவி வைகைக் கரையில் வாழ்ந்து வந்த தன் பெரியன்னையின் குடும்பத்தில் பெண் எடுக்க முடிவு செய்து விட்டாள்..

மோகன் மட்டும் தயங்கினார்...

"உன் பெரியம்மாவை நினைச்சாலே குலை நடுங்குது வைஷ்ணவி.. போதாக் குறைக்கு.. உன் அண்ணன்காரர் அரிவாள் மீசையோடு அலைகிறார்.. உன் அண்ணன் மகன்களோ.. பயில்வான்களைப் போல இருக்கிறாங்க..."

"அதுக்கு இப்ப என்னாங்கறிங்க...?"

"நீயும் பாஞ்சாலங்குறிச்சி முயலின் வீரத்தை காண்பித்து வைக்காதே வைஷ்ணவி.. உன் சொந்த பந்தங்களின் பேச்சை எடுத்தாலே நீகூட வீராங் கனையாய் மாறி விடுகிற பார்த்தியா?"

"இப்ப எதுக்கு இந்த பயம் பயப்படனும்..?"

"என்னடி இப்படிச் சொல்கிற...? உன் மகன் வெள்ளைக்காரியின் பின்னால் சுத்தறான்... இஷ்ட மில்லாம உன் அண்ணன் மகளின் கழுத்தில்



தாலியைக் கட்டப் போகிறான்... இது மட்டும் உன் பெரியம்மாவுக்கு தெரிஞ்சதுன்னு வைய்யி.. உன்னை உண்டு.. இல்லைன்னு பண்ணி விடுவாங்க.. உன் அண்ணனையும்.. அண்ணன் மகன்களையும் பத்தி நான் சொல்லவே வேணாம்.."

"பொறுங்க..."

"அதைத்தான் நானும் சொல்றேன்... பொறு வைஷ்ணவி..."

"நான் சொன்ன 'பொறுங்க'வே வேற... இந்தப் பேச்சை விடுங்கன்னு அதுக்கு அர்த்தம்..."

"நீ முதல்ல விடுடி..."

"தச்சு.. புரியாமல் பேசாதீங்க.. உங்க மகன் பண்ணி வைச்சிருக்கிற அழும்புக்கு... நாம வெளியே பெண் எடுத்தால் அவ்வளவுதான்..."

"அன்னியத்தில் பெண் எடுத்தால் பரவாயில்லை வைஷ்ணவி... சொந்த பந்தத்தில் பெண்ணெடுத்து உறவே முறிந்து போய்விடக்கூடாதில்லையா..?"

"உங்களுக்கு தெரிந்தது அவ்வளவுதான்..."

இதைச் சொல்லிய வைஷ்ணவி பத்தாம் வகுப் பிற்கு மேல் படிக்காதவள்.. இதைக் கேட்டுக் கொள்ளும் தலைவிதி படித்த மோகனோ எம்டெக் படித்து எம்பிஏ பட்டமும் வாங்கின மிகப் பெரிய தொழிலதிபர்..

"நான் தெரியாதவன்..?"

"ஆமாம்..."

"நீ ரொம்பவும் தெரிந்தவள்...?"

"ஆமாங்க ஆமாம்..."

"ம்ஹீம்..."

"ஒன்றுமில்லை.. இந்தத் தெரியாதவனுக்கு நீ தெரியப்படுத்து தாயே.."

"நம்ம கௌசிக்கோ.. அந்த வெள்ளைத் தோல்காரியின் மேல பித்துப் பிடித்து அலைகிறான்..."

"அவ வெள்ளைத்தோல்காரியில்லடி.. வெள்ளைக் காரி.."

"எனக்கு ரெண்டும் ஒன்னுதான்.."

"சரி.. சரி.. சொல்லித்தொலை.."

"அன்னியத்தில் பெண்ணெடுத்தா கௌசிக்கோட அனுசரித்து குடும்பம் நடத்துவாளா..? ரெண்டாம் நாளே பிடுங்கியடித்து அவ பிறந்த வீட்டுக்கு ஓடிப் போயிறமாட்டாளா..?"

இந்த வியாக்கினத்தை மட்டும் பாரிஜாதம் கேட்டுவைத்தால் தன்கதி என்னவாகும் என்று நினைத்த நினைப்பிலேயே வியர்த்துப் போனார் மோகன்..

"உனக்கு ரொம்பத்தான் தைரியம்டி.."



வைஷ்ணவி அந்த தைரியம் குறையாதவளாய்.. பாரிஜாதத்தின் வீட்டில் பெண்ணெடுக்கும் தன் ஆசையை வெளிப்படுத்தினாள்..

"ஆயிரம்தான் இருந்தாலும்.. என் அண்ணன் மகளை என் மகனுக்கு கட்டி வைப்பதைப் போல ஆகுமா..?" என்று அம்புஜத்திடம் அவள் அங்கலாய்க்க... அவள் வைத்த குறி தப்பாமல் அம்புஜம் தன் அக்காவின் மகனுக்கு மகள் இருப்பதை நினைவுபடுத்தினாள்..

அதுதான் சாக்கென்று... அதற்காகவே காத்திருந்த வைஷ்ணவி பெண் கேட்டு பாரிஜாதத்தின் வீட்டுக்கு கிளம்பிவிட... கௌசிக் கூட வர மறுத்து... வெளி நாட்டுக்கு கிளம்பி விட்டான்...

"நீங்க சொன்ன நாளில் தாலி கட்ட வருகிறேன்.. மற்றபடி என்னை ஃபோர்ஸ் பண்ணாதீங்க..."

அதையும் அழகாக வைஷ்ணவி பாரிஜாதத்தின் வீட்டில் சமாளித்த விதம் கண்டு மோகனே அசந்து போனார்...

ஆனால்.. அவளின் பணத்தையும்.. பகட்டையும்.. வைரங்களையும்.. வெளிநாட்டுக் காரையும் பார்த்து பாரிஜாதம் கொஞ்சம்கூட மயங்காமல் எச்சரிக்கை விடுத்த விதத்தைக் கண்டு மோகன் அயர்ந்து போனார்..

திரும்பி வரும் வழியில் மனைவியிடம் புலம்பிக் கொண்டே வந்தார்..

"எதுக்கும் யோசனை பண்ணு வைஷ்ணவி..."

"எதைப் பத்தி யோசிக்கச் சொல்கிறீங்க...?"

"உன் பெரியம்மா பேசின பேச்சைக் கேட்டா யில்ல..?"

"அதுக்கென்ன..?"

"சொந்த பந்தத்தின் பகையை சம்பாதிச்சுக் கனுமா?"

"எனக்கு அதெல்லாம் தெரியாது.. என் மகனுக்கு தரமான குடும்பத்தில் பெண் கட்டனும்... அவ்வளவு தான்..."

இதை எப்படி மோகனால் மறுக்க முடியும்...? அவருக்கும் அந்த ஆசைதானே பிடித்து ஆட்டுகிறது..

மௌனமாக மனைவியுடன் திருவேடகம் சென்று பெண் பார்த்து... திருமணத்திற்கு நாள் குறித்துவிட்டு வந்துவிட்டார்..

திருமண நாளும் வந்துவிட்டது.. ஆனால்.. கௌசிக் மட்டும் திருமண மண்டபத்திற்கு வராமல் ஆபிஸில் அடைகாத்தான்..

"கெட் அப் கௌசிக்.."

"நீங்க போங்கப்பா வருகிறேன்.."

கௌசிக் வாதாடிக் கொண்டிருக்கையில் அவனது செல்போன் ஒலித்தது.. போனைப் பார்த்தான்... வைஷ்ணவி அழைத்தாள்..



"என்னம்மா..?"

"இருபது போதுமா..? இல்லை... முப்பது போட னுமா..?"

"எதைக் கேட்கறீங்கம்மா..?"

"உன்னைப் பிள்ளையாய் பெற்றுவிட்டு வேறு எதைக் கேட்பேன் கௌசிக்..? தூக்க மாத்திரையைத் தான் கேட்பேன்.."

"ம்த்சு.. இப்ப நான் என்னம்மா செய்யனும்..?"

"உன் அப்பாவோடு கிளம்பி.. கல்யாண மண்டபத் திற்கு வரணும்.."

"வருகிறேன்.."

கௌசிக் கோப முகத்தோடு எழுந்தான்.. அவனைக் கவலையோடு பார்த்தார் மோகன்..

"இந்த முகத்தோடயா வரப் போகிற..?"

"காமடி பண்ணாதீங்கப்பா.. இருக்கிற முகம்தான் இருக்கும்... இந்த முகம் வேண்டாமுன்னு... வேற முகத்தை செய்தா பொருத்திக்க முடியும்...? வேணும்னா முகமூடி போட்டுக்கவா..?"

"இம்சை பண்ணாதேடா.."

"அதை நான் சொல்லனும்.."

"கொஞ்சம் சிரிச்ச மாதிரி முகத்தை வைத்துக் கடா.."

"இவ்வளவு சிரித்தால் போதுமா..?"

கௌசிக் அஷ்டகோணலாய் முகத்தை வைத்துக் கொண்டு ஒரு மார்க்கமாய் சிரித்து வைக்க... மோகன் அரண்டு போனார்..

"டேய்.. டேய்.."

"என்னப்பா..?"

"இதுக்கு நீ சிரிக்காமலே இருந்திருக்கலாம்டா.."

"வெரிகுட்.. இனிச் சிரிக்கச் சொல்லி இம்மை பண்ண மாட்டிங்களே.."

"வாயைத் திறக்கவே மாட்டேன்.."

"அஃது! அந்த பயம் இருக்கட்டும்.. வாங்க போகலாம்.."

முகத்தில் முள்ளைக் கட்டிக் கொண்டு கௌசிக் காரை ஓட்ட முயல...

"தள்ளி உட்காருடா..." என்றார் மோகன்..

"ஏன் டாட்..?"

"நீயிருக்கும் சீரே சரியில்லை.. ஒன்று கிடக்க... ஒன்றை பண்ணி வைப்பாய்.. நானே காரை ஓட்டு கிறேன்..."

கௌசிக் வாய்க்குள் முணுமுணுத்தபடி நகர்ந்து உட்கார.. மோகன் அதைப் பொருட்படுத்தாமல் காரை ஓட்ட ஆரம்பித்தார்.. திருமண மண்டபத்தின் முன்



கார் போய் நின்றதும்.. அபிஷேக் அவசரமாக ஓடி வந்தான்...

"எங்கேப்பா போயிட்டீங்க..?"

"உன் அண்ணனைப் பிடித்துக் கொண்டு வரப் போயிருந்தேன்.."

"நல்ல கல்யாணம் போங்க.."

"ஏண்டா..? என்ன ஆச்சு..?"

"அந்தப் பட்டிக்காட்டுப் பாட்டி.. படு ரகளை பண்ணிக்கிட்டு இருக்குப்பா.."

மோகன் அவசரமாய் சுற்றுமுற்றும் பார்த்தார்..

"டேய்.. வாயை மூடு.. சத்தமாய் பேசி வைக்காதே.."

"ஏன்ப்பா...?"

"அந்தப் பாட்டி விவகாரம் பிடிச்ச பாட்டி..."

"அதுதான் தெரியுதே..?"

"அவங்க காதில் மட்டும் நீ பட்டிக்காடுன்னு சொன்னது விழுந்து வைத்ததுன்னா தை கந்தலாகிவிடும்.."

அபிஷேக் கௌசிக்கை... 'எல்லாம் உன்னால்தான்' என்ற ரீதியில் முறைத்தபடி..

"ம்ஹீம்.. இவன்கூடப் பிறந்ததினால.. பாட்டிக்கெல்லாம் பயப்பட வேண்டியதாயிருக்கு.." என்றான்...

கௌசிக் அவன் பேச்சை அலட்சியப் படுத்தி விட்டு.. திருமண மண்டபத்திற்குள் சென்றான்..

"அதோ.. அண்ணனே வந்து விட்டாங்க..." நிம்மதி யுடன் கூவினாள் சாதனா..

அதுவரை மாப்பிள்ளையைக் காணோமென்று பாரிஜாதம் கேட்ட கிடுக்கிப்பிடி கேள்விகளால் கதி கலங்கிப் போயிருந்தாள் அவள்..

"நிச்சயதார்த்தம் பண்ண.. கல்யாணப் பொண்ணு மேடைக்கு வந்தாச்சு... பரிச மோதிரத்தை போட உன் அண்ணன் இன்னும் வரலையே..."

பாரிஜாதம் தூண்டிலை வீசி.. விலாங்கு மீனை இழுத்துக் கொண்டிருந்தபோது.. கௌசிக் திருமண மண்டபத்திற்குள் பிரவேசித்து சாதனாவைக் காப் பாற்றிவிட்டான்..

'இவன்தான் என் பேத்தியைக் கல்யாணம் பண்ணிக்கப் போகிறவனா..?'

போட்டோவில் இருந்ததை விட நேரில் இன்னும் அதிகமான கம்பீரத்தோடும்.. அழகோடும் இருந்தான் கௌசிக்.. பாரிஜாதத்தின் மனம் திருப்தி அடைந்தது..

"கௌசிக் இங்கே வா..."

மேடையிலிருந்த வைஷ்ணவி உரத்த குரலில் அழைத்தாள்.. தட்ட முடியாமல் மணமேடையின் மீது ஏறினான் கௌசிக்..



"இந்த நிச்சயதார்த்த மோதிரத்தை உன் பெண்டாட்டி கையில் போட்டு விடுடா.."

'பெண்டாட்டி..' என்ற அந்த வார்த்தையில் ஐஸ்வர்யா உடல் சூடாகிப் போனாள்..

மெல்ல விழியுயர்த்தி அவனைப் பார்த்தாள்.. அதே சமயம் அவனும்.. அவளைப் பார்க்க.. அவன் விழிகளில் வியப்பு வந்தது..

'இந்தப் பெண் இத்தனை அழகா..?'

அவனது பார்வையைச் சந்தித்ததும் வெட்கம் வந்துவிட.. படபடப்புடன் ஐஸ்வர்யா விழிதாழ்த்திக் கொண்டாள்...

அந்த நாணம் கௌசிக்கிற்கு புதிது.. இதுவரை அவனது பார்வையைச் சந்திக்க முடியாமல் எந்தப் பெண்ணும் தடுமாறி தலை குனிந்ததை அவன் பார்த்த தில்லை.. அவளது அந்தச் செய்கை புது அனுபவத்தை உணர்த்த.. அவன் வைரமோதிரத்தைப் போட.. அவளது கை பற்றினான்...



12

> வைகறையின் வெளிச்சத்திலே
> அலைமகளின் வரவு கண்டேன்..
> வைகைக்கரையின் ஓரத்திலே
> அமைதியுடன் நான் சென்றேன்...

ஐஸ்வர்யாவின் கரம் பற்றியவுடன் கௌசிக் அதை உணர்ந்தான்.. அவளது கைவிரல்கள் வெடவெடத்து நடுங்க ஆரம்பித்திருந்தன.. அவன் ஆச்சரியத்துடன் அவள் முகம் பார்த்தான்.. அவள் முகம் நாணிச் சிவந்திருந்தது.. உணர்வுகளைக் கட்டுப்படுத்த அவள் உதட்டைக் கடித்தபடி போராடிக் கொண்டிருந்ததை தெளிவாக உணர்ந்தான் அவன்..

அப்போதுதான் அவன் மனதில் அந்த மாற்றம் நிகழ்ந்தது.. அவள் முகத்தை நன்றாக பார்க்க வேண்டும் என்று அவனுக்குள் தோன்றியது.. இதுவரை அவன் உடலில் இதுபோன்ற மின்சாரம் பாய்ந்ததில்லை..

கௌசிக் ஐஸ்வர்யாவின் முகத்தைப் பார்த்தபடி.. அவளது தளிர் விரலில் மோதிரத்தைப் போட்டு விட்டான்.. அவளது உடலின் மென்மையை அவளது கரத்தின் மென்மை உணர்த்த...



'பூப்போல மிருதுவாக இருக்கிறாளே..' என்று நினைத்துக் கொண்டான்..

'எலிஸபெத்தின் மென்மையைவிட அதிகமான மென்மை..'

எலிஸபெத்தின் நினைவு வந்து விட.. அவனது உடலில் பொங்கிய உணர்வுகள் அடங்கி விட்டன..

சட்டென்று அவள் கையை விட்டுவிட்டு.. மேடையிலிருந்து இறங்கிவிட்டான்..

அதற்குள் பாரிஜாதம் அவனை எடைபோட்டு விட்டாள்..

'ம்ம்ம்.. வைஷ்ணவியின் மகனுக்கு என் பேத்தியை பிடிச்சிருக்கு..' அவளுக்கு இதுவே போதுமானதாக இருக்க.. முகம் மலர்ந்தாள்..

கௌசிக்கின் அருகாமையில் தடுமாறிக் கொண்டிருந்த ஐஸ்வர்யா.. அவன் விலகிச் சென்றதும்...

'அப்பாடி..' என்று நிம்மதியாக உணர்ந்தாள்...

மகன் எந்தவிதமான பிணக்கையும் காட்டாமல் சமர்த்தாக நிச்சயதார்த்த மோதிரத்தைப் போட்டு விட்டதில் வைஷ்ணவி நிம்மதியடைந்தாள்..

"நல்லவேளை.. தப்பிச்சேன்ம்மா.." வைஷ்ணவி மனதில் நினைத்ததை சாதனா வாய்விட்டுக் கூறவும் அவள் ஆச்சரியத்துடன் மகளைப் பார்த்தாள்..

"என்னம்மா.. அப்படிப் பார்க்கறீங்க..?"

"நான் நினைத்தேன்.. நீ சொல்லி விட்டாய்.."

"பின்னே.. என்னம்மா... உங்க பெரியம்மா என்னைப் பிடுங்கின பிடுங்கல் இருக்கே.. அப்பப்பா.. பொல்லாத கிழவிம்மா அது.."

"ஏய்ய்.. பெரியவங்களை மரியாதையில்லாமல் பேச.. எங்கே கத்துக்கிட்ட..?"

"இங்கேதான் கத்துக்கிட்டேன்... அதுக்கு இப்ப என்னாங்கறீங்க..?"

"என்னடி... சொர்ணாக்காவைப் போலப் பேசற..?"

"உங்க பெரியம்மாவைப் பார்த்துக்கிட்டு இருக்கேனில்லையா? அந்தக் காற்று இந்தப்பக்கம் கொஞ்சம் அடிச்சிருச்சு.."

"என் பெரியம்மாவை ஏண்டி வம்புக்கு இழுக்கற..?"

"உங்க பெரியம்மாவை வம்புக்கு இழுக்க.. இனியொரு ஆள்... பிறந்துதான் வரனும்.. அது ஊரையே வம்புக்கு இழுக்கும்.."

"உனக்கேண்டி.. அவங்க மேல இத்தனை காண்டு..?"

"உங்களுக்கு என்னம்மா தெரியும்..? மகராசி.. காரை விட்டு இறங்கி மண்டபத்துக்குள் வந்ததில இருந்து... அண்ணனைப் பற்றியே கேள்வி கேட்டு தொணத்தி எடுத்திருச்சு.."



"கேட்டால் பதில் சொல்ல வேண்டியதுதானே?"

"நல்லாயிருக்கும்மா உங்க நியாயம்...? உன் அண்ணன் எப்போ வருவாருன்னு என்னைப் பார்த்து கேள்வி கேட்டால் நான் என்ன பதிலைச் சொல்ல..?"

"வந்திருவார்ன்னு சொல்ல வேண்டியதுதானே.."

"அதை.. எந்த நம்பிக்கையில் சொல்ல..?"

"அவன்தான் வந்து விட்டானே.."

"உங்க மனதைத் தொட்டுச் சொல்லுங்கம்மா.. அண்ணன் மண்டபத்துக்குள் வருகிறவரை.. அந்த நிச்சயம் உங்களுக்கு இருந்ததா..?"

'இல்லை' என்பதை வாய் விட்டுச் சொல்ல முடியாமல் மௌனம் சாதித்தாள் வைஷ்ணவி..

"பேச முடியலையில்ல..? இதைப் போல்தான் என் வாயும் அடைத்துக் கொண்டது.. அந்தக் கிழவி அதைக் கண்டு பிடித்து விட்டதும்மா.."

"போனதை விடு சாதனா.. இப்போது தான் அண்ணன் வந்து விட்டானே.. இது கல்யாண மண்டபம்.. நடப்பது உன் அண்ணனின் கல்யாணம்.. நாம்.. அந்த வேலைகளைப் பார்ப்போம்.."

சாதனா ஒருவாறு அமைதியானாள்.. வந்திருந்த அவள் வயது உறவுப் பெண்களிடம் கலந்து பேச ஆரம்பித்தாள்.. மகள் கலகலப்பாக வளைய வர ஆரம்பித்து

விட்டதைப் பார்த்த பின்புதான் வைஷ்ணவி.. மற்றவர்களை கவனிக்க ஆரம்பித்தாள்...

"எல்லாம் வசதியாயிருக்கா பெரியம்மா..?"

"நம்ம வீட்டுக் கல்யாணத்தில வசதிக் குறை வுன்னு வாயைத் திறந்து.. ஒரு குருவி கூட சொல்லுமா வைஷ்ணவி..?"

இவளைக் கேட்டால்.. இவள் ஏன் குருவியை இழுக்கிறாள் என்று வைஷ்ணவிக்கு புரியத்தான் இல்லை..

குருவியைக்கூட இந்தப் பெரியம்மா விட்டு வைக்க மாட்டாளா.. என்ற நினைவோடு...

"அப்ப.. சாப்பிடப் போகலாமா பெரியம்மா..?" என்று கேட்டாள் வைஷ்ணவி..

"பந்திக்கு முந்த நாம என்ன கல்யாணம் விசாரிக்கவா வந்திருக்கோம்..? இது நம்ம வீட்டுக் கல்யாணம்.. நாம மத்தவங்களை சாப்பிட வைத்து.. பந்தி விசாரிக்கனும்.. அதுதான் முறை.." வக்கணையாகப் பேசினாள் பாரிஜாதம்..

'முறையைப் பற்றி நீங்க சொல்லக்கூடாது..' மனதிற்குள் எரிச்சல் பட்டாள் வைஷ்ணவி..

'இங்கே பொண்ணு வீடு யாரு.. மாப்பிள்ளை வீடு யாருண்ணே தெரியலை.. இதில.. முறையைப் பற்றிப் பேச வந்திட்டாங்க.. பொண்ணு வீட்டுக்காரங்க..



மாப்பிள்ளை வீட்டுக்காரங்களை அரட்டுகிறதை எந்தக் கல்யாணத்திலயாவது பார்த்திருக்கிறோமா.. இங்கே அதுதான் நடக்குது.. பொண்ணு வீட்டுக்காரங்க என்கிறதை மறந்துவிட்டு இந்த பெரியம்மா அலட்டுகிற அலட்டலைத் தாங்காம என் மகளே அல்லாடிப் போயிட்டா.. இதில முறையாம்.. முறை..'

"என்னம்மா..? என் தங்கச்சி மகளே? எந்தக் கோட்டையைப் புடிக்க இம்புட்டு யோசனை பண்றே.."

"எல்லாம் கல்யாணத்தைப் பற்றிய நினைவுதான் பெரியம்மா.."

"அதைப் பத்தி உனக்கெதுக்கு கவலை..? நீயென்ன அந்நியத்திலயா பொண்ண எடுக்கிற..? உன் அண்ணன் மகளை உன் மகனுக்கு கட்டி வைக்கப் போற.. அதுக்குப் போயி.. இம்புட்டுக் கவலையா..? நீ மாப்பிள்ளையைப் பெத்த மகராசி... சும்மா கால் மேல.. காலைப் போட்டுக்கிட்டு.. ராணி மாதிரி சபையில உட்காரு.. நாங்க எல்லா வேலைகளையும் பார்த்துக்கறோம்.."

பேசுவது தன் பெரியம்மாதானா? என்ற சந்தேகமே வைஷ்ணவிக்கு வந்து விட்டது..

தன் மகன் வந்து மோதிரம் போட்டு விட்டதால் ஏற்பட்ட மாற்றத்தைக் கண்டவள்.. மகனுக்கு மனதிற்குள் நன்றி சொல்லிக் கொண்டாள்..

இல்லாவிட்டால்.. யாருக்கும் அடிபணியாத பாரி ஜாதம் அவளிடம் பணிந்து இப்படிப்பட்ட வார்த்தை களைப் பேசுவாளா...?

மண்டபத்திற்குள் மெல்லிசைக் கச்சேரி நடந்து கொண்டிருந்தது.. அதை ரசித்துக் கேட்டபடி திரும்பிய சாதனா.. ஆனந்தனின் மீது மோதி விட்டாள்...

"ஐ ஆம் ஸாரி.." அவள் பதறி விலக...

"நான்தான் தெரியாம இடிச்சுட்டேன்... அத னால.. நான்தான் மன்னிப்புக் கேட்கனும்.." என்றான் ஆனந்தன்..

"இல்லையில்ல... நான் தெரியாம மோதிட்டேன்.. அதனால.. நான்தான் மன்னிப்புக் கேட்கனும்.." சாதனா விடாமல் வாதாடினாள்..

"அதெப்படி..? ஒசியில வர்ற மன்னிப்பெல்லாம் எனக்கு வேணாம்.. தெரியாம இடிச்சது நானு.. அதனால.. நான்தான் மன்னிப்புக் கேட்பேன்.." நெஞ்சை நிமிர்த்தி விடாப்பிடியாய் பேசினான் ஆனந்தன்..

"ஏண்டா பேராண்டி... எதுக்கு இப்படி பொட்டப் புள்ளகிட்டப் போயி மன்னிப்புக் கேட்கிற..? யாரை இடிச்ச..? உன் அத்தை மகளைத்தான இடிச்சே..? அதுக்குப் போயி மன்னிப்புக் கேட்கிறானாம்.. பைத்தியக் காரப் பய.."

அவர்களின் வழக்கைக் கவனித்தபடி அங்கே வந்த பாரிஜாதம் நியாயம் பேச.. வயதுப் பெண்ணின்



முன்னால் அவள் தன்னை 'பைத்தியக்காரப் பய..' என்று சொல்லி விட்டதில் கோபம் கொண்டான் ஆனந்தன்..

"ஏய்ய்.. கிழவி.. நீ உன் சோலியைப் பார்த்துக் கிட்டுப் போக மாட்டாயா..? இங்கே பஞ்சாயத்துப் பண்ண வான்னு உன்னை யாரும் வெத்தலை பாக்கு வச்சு அழைச்சாங்களா...?"

ஆனந்தன் சிடுசிடுக்க.. அதுவரை அவன் முகத்தைக்கூடச் சரியாக பார்த்திராத சாதனா வியப் படைந்தாள்..

அவள் மனதிற்குள் 'கிழவி' யென்று அழைக்கும் பாரிஜாதத்தை முகத்துக்கு நேரேயே 'கிழவி' யென்று அழைத்த ஆனந்தனின் மேல் அவளுக்கு ஆர்வம் தோன்றியது..

"வெத்தல பாக்கு வைச்சு அழச்சாத்தான் நான் உன் பஞ்சாயத்துக்கு வரனுமா..? இதைப் பஞ்சாயத்து பண்ணச் சொல்லி உன் அப்பன்கிட்டயே கேட்டிர லாமா..? டேய்.. ஜெயப்பிரகாஷ்.. இங்கே கொஞ்சம் வாடா மகனே.."

அந்த இடத்தில் இல்லாத ஜெயப்பிரகாஷை பாரிஜாதம் கூவி அழைக்க.. ஆனந்தன் கடுப்பாகிப் போனான்..

"ஏன் கிழவி.. என் அப்பா பெயரை இப்படி ஏலம் போடற..?"

"உன் அப்பனை பெத்து.. வளர்த்து.. பேரு வைச்சவ.. நானு.."

"அதுக்காக..?"

"உன் அப்பன் பேரை ஏலமும் போடுவேன்.. எப்படியும் கூப்பிடுவேன்.. அதுக்கு இப்ப என்னாங்கிற..?"

"நீ பண்ற அலம்பல் தாங்கலை கிழவி.."

"தாங்கலைன்னா என்னடா செய்யப் போற?"

"கல்யாண வீட்டில வந்து இப்படி அலம்பல் பண்றயே.. இதை மாப்பிள்ளை பார்த்தா என்ன நினைப்பாரு..?"

"என்னடா நினைப்பாரு..?"

"பாட்டியே இப்படின்னா.. பேத்தி எப்படியிருக்கும்ன்னு நினைச்சு வைப்பாரா.. மாட்டாரா..?"

விட்டால் கம்பை எடுத்து சுழற்றும் உத்தேசத்துடன் பேரனோடு மோதிக் கொண்டிருந்த பாரிஜாதம் அடங்கி விட்டாள்..

"அப்படியா நினைப்பாரு..?"

"அப்படித்தான் நினைப்பாரு.. நம்ம ஐஸ்வர்யாவை வளர்த்தது நீதான்னு புருடா விட்டு வச்சிருக்கோம்.."

"அது புருடாவாடா..? நிசம்.."



"ஓஹோ.. அப்படின்னா அடக்கி வாசி.. நீதான் பழமொழி சொல்றதில மன்னியாச்சே.. அது என்னவோ ஒன்னை அடிக்கடி சொல்லுவியே.. என்னது அது..?"

ஆனந்தன் ஒற்றை விரலில் நெற்றியில் தட்டியபடி யோசிக்க ஆரம்பிக்க.. அவனது இடக்கான பேச்சை ரசித்துப் பார்க்க ஆரம்பித்தாள் சாதனா..



## 13

வைகறையில் மனதினிலே..
மலைமகளை அழைத்து நின்றேன்..
வைகைக்கரையில் அவள்நினைவில்..
மனமுருக வேண்டி நின்றேன்..

கிராமத்து மண்ணுக்கே உரிய முரட்டுத் தனத்தோடு.. வாட்டசாட்டமாக இருந்தான் ஆனந்தன்.. அவன் முகத்தில் ஓர் கிண்டலுடன் கூடிய அலட்சியம் படிந்திருந்தது.. அது அவன் மீதான சாதனாவின் ஆர்வத்தை இன்னும் தூண்டியது.. யாருக்கும் அடங்காத பாரிஜாதத்தை.. அவன் அலட்சியமாக எதிர்கொண்ட விதத்தைக் கண்டு அவன்மேல் ஒரு அபிமானமே சாதனாவுக்கு தோன்றிவிட்டது.. அவன் பேச்சில்

தெறித்து விழுந்த கேலி கலந்த நையாண்டியை அவள் ரசித்தாள்..

அவள் சென்னையில் பிறந்து வளர்ந்த சென்னை வாசி.. அவளுடைய வட்டாரத்திலே.. யாரும் இப்படி முகத்துக்கு நேரே பேசியதில்லை..

நாகரிகம் கலந்த நாசுக்குடன் பேசப்படும் வார்த்தைகளைக் கேட்டுப் பழகியிருந்தவளுக்கு... ஆனந்தன் பேசிய விதம் மிகவும் பிடித்துப் போனது..

"ஆ.. நினைப்புக்கு வந்திருச்சு.."

"எதுடா நினைப்புக்கு வந்திருச்சு..?"

"அதுவா கிழவி.. அந்தப் பழமொழிதான் நினைப்புக்கு வந்திருச்சு.."

"நீ கூட பழமொழியச் சொல்றயாக்கும்? எல்லாம் நேரம்பா.."

"யாரோட நேரம் கிழவி..?"

"நிச்சயமா உன் நேரமில்ல.."

"பழமொழியச் சொல்லவா.. வேணாமா..?"

"சொல்லித் தொலை.."

"பாட்டிய பாண்டியாடுற இடத்தில பாத்தா.. பேத்திய வீட்டில பாக்க முடியாதுன்னு சொல்லு வாங்க.."



"அடப்பாவி.. அது அப்படியில்லடா.. தாயைத் தண்ணிக்கரையில பாத்தா.. மகள வீட்டுல பாக்க முடியா துன்னுதான சொல்லுவாங்க..?"

"அது தாய் வளர்த்த மகளுக்கு..."

"இது..?"

"பாட்டி வளர்த்த பேத்திக்கு.."

உண்மையிலேயே பாரிஜாதத்திற்கு கவலை பிடித்துக் கொண்டது.. என்னதான் தங்கையின் பேர னாக இருந்தாலும்.. பேத்தியைத் திருமணம் செய்து கொள்ளப் போகிற மாப்பிள்ளையாயிற்றே.. உண்மையி லேயே ஐஸ்வர்யாவையும் பாரிஜாதத்தைப் போல நினைத்து விட்டால் என்ன செய்வது..?

அவள் அமைதிப் பூங்காவாக வேண்டிய அவ சியத்தை உணர்ந்தவளாக வாயை மூடிக் கொண்டு அந்த இடத்தை விட்டு அகன்றாள்..

சாதனா ஆச்சரியத்துடன் 'ஆ' வென்று வாய் பிளக்காத குறையாக ஆனந்தனைப் பார்த்து பிர மிப்புடன் இமை கொட்டினாள்.. யதார்த்தமாக அவள் பக்கம் திரும்பிய ஆனந்தனுக்கு அவளது செய்கைக்கான காரணம் பிடிபடவில்லை..

'இது என்னடா.. இந்தப் பொண்ணு இப்படி காணாததைக் கண்டதைப் போல.. ஆன்னு வாயப் பிளந்துக்கிட்டு என்னைப் பார்த்து வைக்குது..'

வேறு யாராவது ஒரு பெண் இப்படி அவனைப் பார்த்து வைத்திருந்தால் கதையே வேறு மாதிரி மாறியிருந்திருக்கும்..

பதிலுக்கு ஆனந்தனும் ஒரு பார்வையை வீசி விட்டு அத்துடன் நில்லாமல் புருவத்தை உயர்த்தி கண்சிமிட்டி வைத்திருப்பான்..

இப்போது அப்படிச் செய்ய முடியாத சூழ்நிலையில் அவன் மாட்டியிருந்தான்.. அவனை 'ஆ' வென்று பார்த்துக் கொண்டிருப்பது.. அவனது தங்கையைத் திருமணம் செய்து கொள்ளப் போகும் மாப்பிள்ளையின் தங்கை..

ஆனந்தன் அதை நினைக்காமல் பதில் பார்வையை வீசி வைத்தால்.. அது அவன் தங்கையின் வாழ்க்கையைப் பாதித்து விடாதா?

ஆனானப்பட்ட பாரிஜாதமே.. பேத்தியைத் திருமணம் செய்து கொள்ளப் போகும் மாப்பிள்ளைக்கு அஞ்சி.. மகா குணசாலியாய் வாயை இறுக மூடிக் கொள்ளும்போது.. ஆனந்தன் பொறுமை காக்க வேண்டாமா..?

அதனால்... அவன் எதிரில் நின்று கொண்டிருப்பவள் அழகான இளம்பெண் என்பதை மறந்து.. ஔவையாரை விசாரிப்பதைப் போன்ற பணிவுடன்..

"என்னங்க வேண்டும்..?" என்று விசாரித்தான்..



சாதனா பதில் சொல்லாமல் சுற்று முற்றும் பார்த்தாள்.. ஏன் அவள் அப்படிப் பார்த்து வைக்கிறாள் என்று ஆனந்தனுக்குப் புரியவில்லை...

"யாரைப் பார்க்கறீங்க..?" என்று புரியாமல் கேட்டான்...

"இல்லை.. இங்கே யாராவது நூற்றுக்கிழவி நிற்கிறாங்களான்னு பார்த்தேன்.." சாதனா கிண்டலாகக் கூறினாள்..

அவளது கேலியைப் புரிந்து கொண்ட மின்னல் ஆனந்தனின் கண்களில் வந்து போனது.. அவன் மனம் 'ஜிவ்' வென்று வானில் பறக்க ஆரம்பிக்க..

'அலையாதே..' என்று மனதை அதட்டி வைத்தான் ஆனந்தன்..

"ஒரேயொரு கிழவிதான் நின்னுக்கிட்டு இருந்துச்சு.. அதையும் இப்பத்தான் துரத்தினேன்.. அதனால கிழவியத் தேடாம நீங்க காலாகாலத்தில தூங்கப் போங்க.." என்று கூறியபடி ஆனந்தன் நகரப் போனான்..

"ஹலோ.." சாதனாவின் குரல் அவனை நிறுத்தியது..

"என்னங்க.." ஆனந்தன் படுஜாக்கிரதையாக அவளைப் பார்ப்பதைத் தவிர்த்து வாசலைப் பார்த்தான்..

சும்மாவே அவனுக்கு வயதுப் பெண்களைப் பார்த்தால் விசிலடித்து வைக்கத் தோன்றும்.. அவனுடைய

ஊர் திருவிழாவில் கன்னிப் பெண்களின் கையால் அதிகமாக மஞ்சள் நீராடுவது அவன்தான்.. அந்த அளவுக்கு அவன் பெயர் வயதுப் பெண்களின் மத்தியில் பிரசித்தி பெற்றிருந்தது..

"எப்புடிடா..?"

வெள்ளைச் சட்டையில் ஒரு துளி மஞ்சள் கூட இல்லாமல் வீடு திரும்பும் அன்பழகன் தம்பியைப் பார்த்து பொறாமையுடன் வினவுவான்..

"அது அப்படித்தான்ணே.. இப்ப அவளுக பார்த் தாளுகன்னு வைய்யி.. நீ என்ன செய்வ..?"

"வேற பக்கம் பார்த்துக்கிட்டே நடயக் கட்டிடு வேன்.."

"இப்படி நல்லகுடி நாணயம்.. தூத்துக்குடி வெங்கலமாக இருந்தா இப்படித்தான் மஞ்சத் தண்ணி மேல படாம வீடு வந்து சேரனும்.. அதுவே நானா இருந்தா என்ன செய்வேன்னு தெரியுமா..?"

"என்னடா செய்வ..?"

"பதிலுக்கு பார்த்து வைக்காம வீடு வந்து சேர மாட்டேன்.."

"ஏண்டா.. நம்ம குடும்பத்துல பிறந்துட்டு இப்படி நீ செய்யலாமா..?"

"போண்ணே.. நீயும்.. உன் நியாயமும்.. வயசுப் பொண்ணு நம்மளப் பார்த்தா.. பதிலுக்கு ஒரு



பார்வையை வீசிவைக்கனும் அண்ணே.. அப்படி வீசி வைக்கலன்னா.. அந்தப் பொண்ணு மனசு என்ன பாடுபடும்..?"

இப்படி நியாயம் பேசும் ஆனந்தன்தான் சாதனாவை நேருக்கு நேர் பார்த்து பேசுவதைத் தவிர்த்துக் கொண்டிருந்தான்..

'எதுக்கு வம்பு..? இந்தப் பொண்ணுவேற.. மூக்கும்.. முழியுமா.. என்னைப் பாரு என் கண்ணைப் பாருன்னு.. அழகா இருந்து தொலைக்குது.. பழக்க தோசத்தில அதிகப்படியா நான் பார்த்து வைச்சேன்னா.. எங்க குடும்பத்து கௌரவம் என்ன ஆகிறது..?'

ஆனந்தனை ஏகத்துக்கும் கவலைப்பட வைத்துக் கொண்டிருந்த சாதனா புருவங்களை உயர்த்தினாள்..

"என்னைப் பார்த்தால் உங்களுக்கு எப்படித் தோணுது..?"

ஆனந்தனுக்கு எப்படியெப்படியோதான் தோன்றித் தொலைத்தது..

அதனால்தான் அவன் அவளைப் பார்ப்பதை தவிர்த்துக் கொண்டிருந்தான்..

ஆனால் அவளிடம் இதைப் போய் எப்படிச் சொல்வது என்று தெரியாமல் சலிப்படைந்த ஆனந்தன்..

"உங்களுக்கு இப்ப என்னங்க வேணும்..?" என்று கேட்டான்..

"எனக்கு இப்ப ஒரு உண்மை தெரிஞ்சாகனும்.."

"என்ன உண்மை தெரியனும்..?"

"நான் கிழவியா..?"

"எந்த மடையனாவது அப்படிச் சொல்வானா..?"

"நீங்க என்ன 'பப்பா'வா..?"

"எங்க ஊருக்கு வந்து கேட்டுப்பாருங்க.... தெருவில் விளையாடிக்கிட்டு இருக்கும் 'பப்பா'கூட என்னை அப்படிச் சொல்லாது.."

"உங்க ஊர் பெருமையை உங்க ஊரிலேயே விட்டு விடனும்.."

"நீங்க சொல்கிறதைச் செய்துட்டாப் போச்சு.."

"இது சென்னை.."

"எனக்கும் அது தெரியுங்க.."

"அதனால அடக்கி வாசிக்கப் பழகிக்கங்க.."

'அதைத்தானே செய்துக்கிட்டு இருக்கேன்..' என்று நினைத்துக் கொண்டான் ஆனந்தன்...

"சரிங்க.." என்று பவ்யமாய் கூறினான்..

அவனது அடாவடித்தனமான பேச்சினால் வசீகரிக்கப் பட்டிருந்த சாதனாவிற்கு.. அவனது போலிப்



பணிவைக் கண்டு சிரிப்பு வந்து விட்டது.. அதை அடக்கிக் கொண்டாள்..

"என்ன சரிங்க..?" கடுமையான குரலில் வினவினாள்...

"நீங்க சொல்வதைப் போல.. அட....க்கிக்...கி.. வாசிக்கிறேன்"

"எதை வாசிக்கப் போகிறீங்க?"

நகரப் போனவனை இழுத்துப் பிடிக்கும் கிண்டல் குரலில் கேட்டாள் சாதனா..

பொறுமையை காற்றில் பறக்க விட்ட ஆனந்தன் அவளை ஏற.. இறங்கப் பார்த்தான்..

அவன் பார்வையில் முகம் சிவந்து போனவளை ரசனையாகப் பார்த்தபடி...

"நீங்க எதை வாசிக்கச் சொன்னீங்களோ.. அதை வாசிக்கப் போகிறேன்.." என்றான்..

"அடேங்கப்பா.. ரொம்பத்தான் சிலித்துக்கறீங்க.."

"நான் மதுரைப் பக்கத்துக்காரனுங்க.. தெனாவெட்டு அதிகமாத்தான் இருக்கும்.."

"அதான் பார்த்தாலே தெரியுதே.."

"அதுக்காக ரொம்பவும் பார்த்து வைக்காதீங்க.."

"ஏனாம்..?"

"மாப்பிள்ளையோட தங்கச்சின்னு ஓரளவுதான் என்னால அடக்கி வாசிக்க முடியும்.."

"இல்லேன்னா மட்டும்.. என்ன செய்வீங்களாம்.."

இதைக் கேட்டவளை விழுங்கி விடுவதைப் போல ஆனந்தன் பார்த்து வைக்க.. சாதனாவினால் அவன் பார்வையை எதிர்கொள்ள முடியவில்லை.. வெட்கி தலை கவிழ்ந்தாள்..

"இதுக்குத்தான் சொன்னேன்.." அவன் ஆண்மை ததும்பும் குரலில் கூறினான்..

'எதற்கு..?' என்று அவள் கேட்கவில்லை... அவளுக்குத்தான் விடை தெரியுமே..

"உங்களைக் கிழவியின்னு யாராவது சொல்வாங்களா..?" அவன் சன்னக் குரலில் கேட்டான்...

'வேறு எப்படிச் சொல்வாங்க..?' என்று அவள் கேட்கவில்லை..

அவன் தொடர்ந்து பேசுவான் என்று அவள் மனதிற்குள் பட்சி ஒன்று கூவியது..

பட்சி ஜோசியம் பொய்க்கவில்லை.. அவன் அக்கம் பக்கம் பார்த்தபடி அவளருகே நெருங்கி நின்று.. இன்னும் கிசுகிசுப்பான குரலில் பேசினான்..

"அப்படியே அல்வாத் துண்டைப் போல இம்புட்டு அழகா இருக்கீங்க.. உங்களை அப்சரஸின்னு வேணும்னாச் சொல்லலாம்.."



அவள் மனம் சிறகடிக்க.. லேசாக விழியுயர்த்தி அவனைப் பார்த்தாள்.. அவன் தன் கட்டுப்பாட்டைக் கைவிட்டு.. அவளைப் பார்த்து லேசாக இமையைச் சிமிட்டினான்..

விழிவிரிய அவனை அவள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே வாசல்பக்கம் போய் விட்டான்...



## 14

வைகறையே? நீ வரும்போது....
மனதெல்லாம் சிலிர்க்குதடி....
வைகைக் கரையின் நீரினிலே
நனைவதைப்போல் குளிருதடி....

அது ஒரு இனிமையான அனுபவம்... எல்லாத் திருமண வீடுகளிலும் இது போன்ற நிகழ்வுகள் நிகழ்வதுண்டு...

திருமணத்தில் கலந்து கொள்வதற்காக நெருங்கிய சொந்தக்காரர்கள் அனைவரும்.... குடும்பத்தில் உள்ள அனைவரையும் அழைத்துக் கொண்டு வந்து விடுவார்கள்...

அவர்களில் திருமண வயதிலிருக்கும் திருமணம் செய்து கொள்ளும் முறையிலிருக்கும்....

ஆணும்... பெண்ணும்... சந்தித்துக் கொள்ளும்போது அவர்களுக்குள் இனம் புரியாத ஒரு காதல் உணர்வு மொட்டவிழ்த்து மணம் பரப்பும்... அந்தப் பூவாசத்தில் மனம் மயங்கி.... வருங்கால திருமணத் தம்பதிகளாக தங்களை கற்பனை செய்து கொண்டு..... மண மேடையை அவர்கள் வலம் வருவார்கள்.

அதைப் போன்ற ஓர் பூவாசத்தைத்தான் சாதனாவும் அன்று நுகர்ந்தாள்.... அவள் மன மொட்ட விழ்ந்து.... மலர்ந்தது....

'தூங்கப் போ...' என்று சொல்லிவிட்டு வாசல் பக்கம் போன ஆனந்தனை... தூங்கப் போகாமல் பின் தொடர்ந்தாள் சாதனா....

ஒருவகையில் ஆனந்தன் அதை எதிர்பார்த்துத் தான் இருந்தான். அன்பழகனிடம் எதையோ பேசிய படி.... மண்டபவாசலைப் பார்த்துக் கொண்டிருந்தவனின் கண்கள் மின்னின....

'வந்து விட்டாள்...'

சாதனாவின் விழிகள் அவனைத் தேடி அலைவதை திருப்தியுடன் பார்த்தான் அவன்...

'இவளுக்கு என்னைப் பிடிச்சிருக்கு...'

இந்த நினைவே அவனுக்குள் இனித்தது.... அவன் மெதுவாக அன்பழகனிடமிருந்து விலகி... அவள் பின்னால் போய் நின்றான் "யாரைத் தேடறீங்க...?"



அவள் தூக்கிவாரிப் போட.... திரும்பிப் பார்த்தாள்... அவன் கண்களில் அவளைக் கண்டு கொண்ட சிரிப்பு இருந்தது....

'கண்டு கொண்டானே...'

அகப்பட்டுக் கொண்டவள் உதடுகளைக் கடித்துக் கொண்டாள்...

"வலிக்கப் போகுது..." அவன் அக்கறையாகக் கூறினான். அவனது அந்த தைரியத்தைக் கண்டு அவளுக்கு ஆச்சரியம்.... ஆச்சரியமாக இருந்தது...

"என்ன அப்படிப் பார்க்கறீங்க...?"

"இல்லை... யாரோ... இந்தப் பூனையும் பாலைக் குடிக்குமான்னு கொஞ்ச நேரத்துக்கு முன்னால போஸ் கொடுத்தாங்களாம்..."

"அந்த யாரோ ஒருத்தனை பால் தம்ளரை கையில எடுடான்னு பிடிவாதமா அதட்டி கையில எடுக்கவைச்சது யாரு...?"

'இவன் ஜெகஜ்ஜாலக் கில்லாடி...'

அவளது இதழ்களில் ரகசியப் புன்னகை மலர்ந்தது.... அவன் முகத்தில் அதைக் கண்டு கொண்ட மகிழ்வு வந்தது.

திருமண மண்டபத்தில் பாடிக்கொண்டிருந்த மெல்லிசைப் பாடல் காற்றில் தவழ்ந்து வந்து அவன் காதினில் நுழைந்தது... அவளையே இமைக்காமல் பார்த்தான் அவன்...

"சிறகுகள் வந்தது... எங்கோ செல்ல...
இரவுகள் திறந்தது... கண்ணில் மெல்ல...
கனவுகள் பொங்குது... எதிலே அள்ள...?
வலிகளும் சேர்ந்தது... உள்ளே கிள்ள....
சுகங்களும் கூடுது உன்னைத் தேடியே...."

அன்பழகன் அதற்குள் ஆனந்தனை அழைக்க... அவன் நகர்ந்து விடுவானோ என்ற தவிப்புடன் சட்டென்று நிமிர்ந்து அவனைப் பார்த்தாள் சாதனா.

"உன்னை... உன்னைத்
தாண்டிச் செல்ல...
கொஞ்ச காலம்... கொஞ்சதூரம்
என்னால் ஆகுமோ...?"

அவளது விழிகள் அவனிடம் பாடல் வரிகளை வினவின...

'நான் போகாத போது... நீ மட்டும் ஏன் போகிறாய்' என்று அவள் கேட்காமல் கேட்பதைப் புரிந்து கொண்டவனாக அவன் நின்றுவிட்டான்.

"உன்னை... உன்னைத்
தேடித் தானே....
இந்த ஏக்கம்... இந்தப்பாதை...
இந்தப்பயணம்... இந்த வாழ்க்கை...
ஆனதோ...?

சற்று நேரத்திற்கு முன்னால் வரை அவன் அவளுக்கு வெறும் உறவினன் மட்டும்தான்...



ஆனால்... இப்போதோ... அவள் மனதில் ஒரு புரிபடாத ஏக்கம் எழுந்து அலை மோதியது... அந்த அலையில் சிக்கித் தவித்தாள் சாதனா...

"என்ன வேணும் சாதனா...?" ஆனந்தன் மென்மையாக வினவினான்...

"தெரியலை..." அவள் மனதில் உள்ளதை ஒளிக்காமல் சொன்னாள்...

அவன் மெல்ல சிரித்தான்...

"தெரியலையா... நீங்க என்னவோ பெரிய புத்திசாலிப் பெண்ணாம்.. கம்ப்யூட்டரில் என்ஜினியரிங் படிச்சுக்கிட்டு இருக்கீங்களாம்... கம்ப்யூட்டரில் கரை கண்டவங்களாம்... அப்படி இப்படின்னு உங்க வீட்டில அள்ளி விட்டாங்களே.... அதெல்லாம் பொய்யா...?"

"பொய்யில்லை..."

"அப்புறம்... இந்தச் சின்னக் கேள்விக்கு பதில் தெரியலைன்னு சொல்றீங்க...?"

"தெரியலைன்னா... தெரியலைன்னுதானே சொல்லணும்?"

"என்ன தெரியலை?"

"என்னைத் தெரியலை..."

"பெரிய பெரிய ஞானிகளே... அவங்களைத் தெரிஞ்சுக்கணும்னு குகை...குகையா சுத்திக்கிட்டு

இருக்காங்க... ஆனால் நீங்க உங்க ஆழ் மனசை ஆராய்ச்சி செய்றதை விட்டுப்புட்டு... உருப்படியா எதையாவது செய்யப் பாருங்க..."

"உங்களுக்கு என்பேச்சு கேலியாய் தெரிகிறதா...?"

"அப்படி நான் சொன்னேனா...?"

"அப்ப உங்க பேச்சுக்கு என்ன அர்த்தம்...?"

ஆனந்தன் அவளது விழிகளுக்குள் பார்த்தான்.

"உங்களுக்கு.... உங்களைத் தெரியலைதானே...?"

"ம்ம்ம்..."

"என்னைத் தெரியுமா...?"

"அதுவும் தெரியலையே...."

அவளது விழிகளில் தவிப்புத் தெரிந்தது... அவன் தீர்க்கமான பார்வையோடு கூற ஆரம்பித்தான்....

"நான் ஆனந்தன்... கொஞ்சம் அடாவடிக்காரன்..."

"கொஞ்சமா...?"

அவள் வார்த்தையில் பழைய கேலி திரும்பியிருக்க... அவன் முகத்தில் ஒளிர்வு வந்தது...

"சரி... நிறையவே அடாவடிக்காரன்.... போதுமா....?"



"போதும்... மேலே சொல்லுங்க..."

"உங்க அளவுக்கு படிச்சவனில்லை... எங்க ஊரில ஒரு சாமியார் காலேஜ் இருக்கு..."

"சாமியார் காலேஜா...?" அவள் வியப்புடன் கேட்டாள்...

"சாமியார் காலேஜ்தான்... விவேகானந்தர் காலேஜ்... துறவறம் நிறைய இருக்கும்..."

"ஓ.... ஆன்மீக சம்பந்தப்பட்ட காலேஜா? அங்கே படிக்க நீங்க கொடுத்து வச்சிருக்கணும்..."

"எல்லோரும் அப்படித்தான் சொன்னாங்க... ஆனா... என்னைப் போல ஆளுக்கு... அந்த காலேஜ் சரிப்படுமா...?"

"சரிப்படாததுதான்... அப்புறம் எதுக்கு அங்கே சேர்ந்தீங்க...?"

"முதலாவதா.... அந்த காலேஜ் எங்க ஊருக்குப் பக்கத்தில இருக்குது..."

"ஓ...." அவள் அழகாக உதடுகளைக் குவித்தாள்...

'இப்படி என்னை சோதிக்காதே...' என்று சொல்ல வேண்டும் போல அவனுக்கு இருந்தது...

ஆனால்... அவன் அதைச் சொல்லவில்லை....

"இரண்டாவது காரணம் என்னன்னா... அந்த காலேஜில் சேர்த்து விட்டாலாவது... என்

அடாவடித்தனம் கொஞ்சம் குறையாதான்னு என் அப்பா பேராசைப் பட்டார்..."

"பேராசை...?"

"ஆமாம்..."

"நிஜமாகவே அது பேராசைதான்... மேலே சொல் லுங்க..."

"ஆனா பாருங்க... என் அடாவடித்தனத்தை சகிக்க முடியாம காலேஜில தினமும் ஒருதடவயாவது என் அப்பாவைக் கூப்பிட்டுக் கெஞ்சினாங்க..."

"எதுக்கு...?"

"உங்க மகனால் மத்த பயலுகளும் கெட்டுப் போகிறாங்க... பேசாம உங்க வீரத் திருமகனை வேற ஏதாச்சும் ஒரு காலேஜில சேர்த்து படிக்க வைய்யுங் கன்னு கெஞ்சினாங்க..."

"ஆஹா... எப்பேர்பட்ட பெருமையை உங்க அப்பாவுக்கு தேடிக் கொடுத்திருக்கீங்க..."

"எங்க அப்பா முடியாதுன்னு சொல்லிட்டாரு... உள்ளூர்காரர்... பெரிய மனிதர்... பகைச்சுக்க வேணாம்ன்னு அவங்களும் என்னை சகிச்சுக்கிட்டுப் போயிட்டாங்க..."

"வெரி நைஸ்... வெரி நைஸ்...."



"ஒரு வழியாய் டிகிரியை வாங்கிட்டு வெளியே வந்துட்டேன்... அவங்களும் நிம்மதியாய் காலேஜை நடத்த ஆரம்பிச்சுட்டாங்க..."

"ரொம்ப நல்ல காரியம்தான் பண்ணினீங்க... போங்க..."

"எங்களுக்கு குடும்பத் தொழில் விவசாயம் தாங்க..."

"ம்ம்ம்..."

"அண்ணன் அதிலயே அதிகமா... சணல் தயாரிக் கிற பேர்டரி ஒன்னை நடத்துகிறான்..."

"நீங்க....?"

"சும்மாதான் ஊர் சுத்தறேன்னு சொன்னா... திரும்பிப் பார்க்க மாட்டிங்களா....?"

அவன் புருவங்களை உயர்த்திக் கேட்க... அவளது கிறங்கிப் போன பார்வையே....

'பார்ப்பேன்...' என்று சொன்னது...

"நான் கரும்பு மில் ஒன்னை நடத்தறேன்..."

"அதானே பார்த்தேன்..."

"அதைத்தானே அப்போப் பிடித்து செய்துக்கிட்டு இருக்கீங்க..."

அவனது கேலியில் அவள் முகம் சிவக்க... மெது

"இப்போச் சொல்லங்க... கம்ப்யூட்டருக்கும்... கரும்பு மில்லுக்கும் சரிப்பட்டு வருமா...?"

"ஏன் வராது...?"

"அதையும் பார்த்து விடலாம்... இப்போதைக்கு என்னைப் பற்றி இவ்வளவுதானே தெரியும்...? மீதியை யும் தெரிஞ்சுக்கணும்னா... கொஞ்ச நாளைக்கு பழகிப் பார்க்கலாம்...."

"பழகின்னா....?"

"இது உங்க ஊரு பழக்கமில்லங்க... எங்க வைகைக் கரைப் பழகிப் பார்க்கிற பழக்கம்..."

"ஏன்? எங்க ஊரு பழக்கத்துக்கு என்ன குறைச்சல்?"

"நான் இந்த வம்புக்கே வரலை... எங்க வைகை கரைப் பழகிப் பார்க்கிற பழக்கம் என்னன்னா.... காத்திருந்து... கவனிச்சுப் பார்க்கிறது..."

அவளுக்கு எதுவோ புரிவதைப் போல இருந்தது... அவன் முகத்தில் நிதானம் வந்திருந்தது...

"அத்தை மகள்... கண்ணுக்கு அழகா இருக்க நீங்க... கல்யாண மண்டபத்துல என்னயே சுத்திச் சுத்தி வர்றீங்க... கடலை போட மட்டும் இந்தப் பழக்க முன்னா சரி... நானும் கடலை போடுகிற ஆள் தான்..."



"ஆனா... நான் அப்படிப் பட்டவளில்லை..." அவ ளுக்கு சுர்ரென்று கோபம் வந்து விட்டது...

"அதுதான் எனக்கும் தெரியுமே... அதனாலதான் நான் தள்ளி நிற்கணும்ன நினைக்கிறேன்..."

"ஏன்...? பயமா...?"

"பயமா...? எனக்கா...? ஹ...! இது வேறங்க..."

"என்னவாம்..."

"நீங்க எனக்கு வெறும் அத்தை மகள் மட்டு மில்லை.. என் தங்கச்சிக்கு நாத்தனார் ஆகப் போகறீங்க... நான் மனசில ஒன்னை நினைச்சிட்டா அதை விட்டுக கொடுக்காத ரகம்... உங்களை நினைச்சிட்டேன்னு வையுங்க... நீங்களே விலகிப் போக நினைச்சாலும் விடமாட்டேன்... அது என் தங்கச்சியின் வாழ்க்கையை பாதித்து விடும்... அதனால..."

"அதனால....?"

"பொறுத்திருக்கலாம்... புதுசா என்னைப் பார்த்த தினால் உங்க மனசு அலை பாயலாம்... அதை யெல்லாம் தாண்டி... உண்மையாலேயே உங்க மனசு என்னைத் தேடிச்சுன்னா... சொல்லுங்க... அப்போ நானும் உங்களைத் தேடி வர்றேன்... அதுவரைக்கும்.... கொஞ்சம்... இப்படிப் பார்த்து வைக்காம தள்ளியே நில்லுங்க..."

அவன் அன்பழகனை நோக்கிச் சென்று விட்டான்... சாதனா ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்தபடி நின்றுவிட்டாள்.



## 15

வைகறையை எதிர்பார்த்து...
வாழ்கின்ற ஜனங்களுக்காக....
வைகறையே விடிந்துவிடு...
கைகைக் கரைக்கு வந்துவிடு...

மணப்பெண்ணுக்கு அலங்காரம் செய்து கொண்டிருந்தார்கள்... கை வளையல்களை அடுக்குவதற்காக... கைகளை நீட்டிய ஐஸ்வர்யாவின் விழிகளில் அந்த மோதிரம் பட்டது... அதைப் போட்டு விட்டவனின் ஸ்பரிசமும்... அதை அவன் அவளுக்கு போட்டு விட்ட தருணமும் நினைவுக்கு வர... அவள் மனதிற்குள் இனிமை பரவியது...

'இன்னும் கொஞ்ச நேரத்தில் அவன் என் கழுத்தில் தாலியைக் கட்டி... என் புருசனாகி விடுவான்...'

நினைத்தாலே இனிக்கும் என்பது இதுதானா...? சுகமான அந்த நினைவின் கிளர்ச்சியில் மனம் மயங்கினாள் ஐஸ்வர்யா.



"பெண்ணை வரச் சொல்லுங்கோ..."

மந்திரம் சொல்லிக் கொண்டிருந்த அய்யரின் வார்த்தைகள்... ஒவ்வொருவரின் வாய்க்கும் தாவி... மணமகள் இருந்த அறை வாசலை அடைந்தன...

"அய்யரு பெண்ணை வரச் சொல்கிறாரு..." அறைவாசலில் இருந்த பெண் கூவ....

"அவரு எதுக்குடி... என் பேத்தியை வரச் சொல்கிறாரு..." என்று சிலிர்த்து எழுந்தார் பாரிஜாதம்...

"என்னத்தை இது... நீங்க பெரிய மனுஷி... உங்களுக்கு இது தெரிய வேணாமா...? மேடையில மந்திரம் சொல்லிக்கிட்டு இருக்கிற அய்யரு... கல்யாணப் பொண்ண சீக்கிரமா மணமேடைக்கு வரச்சொல்கிறாரு... இது ஒரு குத்தமா...?" சாவித்திரி தலையில் அடித்துக் கொள்ளாத குறையாக வினவினாள்.

"அந்த அய்யரு வரச் சொன்னாரா..." பாரிஜாதம் அடங்கிப் போனவளாய் அமர்ந்தாள்...

"நீங்க வேற எந்த அய்யரைச் சொன்னீங்க...?" சாவித்திரி எரிச்சலுடன் மகளை எழுப்பினாள்...

ஐஸ்வர்யாவை மணமேடைக்கு அழைத்துச் சென்று கௌசிக்கின் அருகே அமர வைத்தார்கள்...

அய்யர் சொல்லிக் கொண்டிருந்த மந்திரங்களை கடனேயென்று சொல்லிக் கொண்டிருந்த கௌசிக்...

மறந்தும் ஐஸ்வர்யாவின் பக்கம் திரும்பிப் பார்க்க வில்லை...

இயல்பான வெட்கமும்... நாணமும்... அன்று அதிகமாய் சூழ்ந்து கொள்ள... தலை கவிழ்ந்து அமர்ந்திருந்த ஐஸ்வர்யாவும் அதை உணர வில்லை...

கெட்டி மேளம் முழங்க... தாலியை ஐஸ்வர்யாவின் கழுத்தில் கட்டியபோது ஐஸ்வர்யாவைப் பார்த்தான் கௌசிக்... இரண்டாம் முறையாக அவளது பேரழகு அவனைக் கவர்ந்தது...

அக்கினியை வலம் வர அவளது கையைப் பற்றியபோது அவளது கை விரல்கள் நடுங்குவதை உணர்ந்தவனால் அவளைப் பார்க்காமலிருக்க முடிய வில்லை...

'இவள்தான் எத்தனை மென்மையானவள்...'

மணமேடையை விட்டு இறங்கி சாப்பிட போன போது இயல்பாக ஐஸ்வர்யாவின் அருகே நெருங்கி அமர்ந்தான் கௌசிக்...

அவன் இலையிலிருந்த இனிப்பை எடுத்து உறவுக்காரப் பெண்மணி ஒருத்தி ஐஸ்வர்யாவின் இலையில் வைத்து விட... வெட்கத்துடன் ஐஸ்வர்யா அதைச் சாப்பிடுவதை ரசித்துப் பார்க்கவும் செய்தான்... கை கழுவி விட்டு வந்த போது கூட... ஐஸ்வர்யாவின் அருகேதான் அமரப் போனான்...



அந்த நேரம் பார்த்து அவனது செல்போன் ஒலித்தது... போனைப் பார்த்தவனின் மனம் அதிர்ந்தது...

எலிஸபெத் அவனை அழைத்துக் கொண்டிருந்தாள்...

அவசரமாக சற்றுத் தள்ளிச் சென்று போன் பேச ஆரம்பித்தான்... எலிஸபெத்தின் குரலில் கோப மிருந்தது...

"சொல்லு எலிஸபெத்...'

"என்ன சொல்ல...? எதைச் சொல்ல...?"

"சொல்ல வந்ததைச் சொல்லு..."

"நீ இரண்டு நாள்களாக எனக்குப் போன் பண்ணவில்லை கௌசிக்..."

"நான்தான் சொல்லியிருந்தேனே டியர்..."

"உன் இடியாடிக் மேரேஜைப் பற்றித்தானே...?"

"யெஸ்..."

"அதைத்தான் நான் மைண்ட் பண்ணிக் கொள்ளவே இல்லையே... அதற்கும்... நீ போன் பண்ணாததற்கும் என்ன லிங்க்...?"

"எலிஸபெத்...." கௌசிக் சொல்லத் தயங்கினான்...

எப்படிச் சொல்வது...? உடுத்தியிருந்த பட்டு வேட்டியும்... சட்டையும் அவனுக்கு பாறாங்கல்லாய் கனத்தது...

மாப்பிள்ளை கோலத்தில் இருப்பவன்... மனைவியை எதிரில் வைத்துக் கொண்டு... காதலிக்கு தந்நிலை விளக்கம் சொல்லியாக வேண்டிய நிர்பந்தம் அவனை பாடாய் படுத்தியது....

"சொல்லு..." அவள் ஊக்குவித்தாள்...

"இப்போது நான் கல்யாண மண்டபத்தில் இருக் கிறேன்..."

"அங்கே உனக்கென்ன வேலை...?"

"கல்யாணத்திற்காக வந்தேன்..."

"யாருக்கு மேரேஜ்....? உன் பிரண்ட் யாருக்காவது மேரேஜா...? அட்டெண்ட் பண்ணப் போயிருக்கி றாயா....?"

"இல்லை..."

"பின்னே...?"

"எனக்குத்தான் மேரேஜ்..." குற்ற உணர்வுடன் கூறினான் கௌசிக்.

மறுமுனையில் ஒரு நொடி மௌனம் நிலவியது... அந்த மௌனத்தை உடைக்க கௌசிக்கும் முயல வில்லை... அவனுக்கும் அந்த மௌனம் அப்போதைக்கு மிகவும் அத்தியாவசியமாக தேவைப்பட்டது...

சற்றுப் பொறுத்துப் பேசிய எலிஸபெத்தின் குரலில் இருந்தது வெறுமையா... வெறுப்பா... என்று கௌசிக்கினால் கண்டுபிடிக்க முடியவில்லை...



"முடிந்து விட்டதா...? இல்லை... இனிமேல் தான் முடியனுமா...?"

"முடிந்துவிட்டது..."

"ஓ... நீ இதை என்னிடம் சொல்லவேயில்லை கௌசிக்..."

"மேரேஜைப் பற்றிச் சொன்னேன்..."

"இன்றைக்கு மேரேஜ்ன்னு நீ சொல்லவில்லை..."

"சொல்ல முடியவில்லை..."

"உனக்குச் சொல்ல விருப்பமில்லைன்னு சொல்லு..."

"ஏன் இப்படிப் பேசுகிறாய் எலிஸபெத்...?"

"ம்ஹீம்... இந்தியர்கள் காதலித்தால் கைவிட மாட்டார்கள் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன்... அது பொய்யாகிவிட்டது..."

கௌசிக் மௌனத்தை கேடயமாகக் கொண்டு பேசாமல் இருந்தான். அவனது பதிலை எதிர் பார்க்காமல் எலிஸபெத்தே தொடர்ந்து பேசினாள்...

"நீயும் மற்றவர்களைப் போலத்தான் கௌசிக்... காதலிக்க அமெரிக்கப் பெண் உனக்கு வேண்டும்... அதுவே மேரேஜ் பண்ணிக் கொள்ள வேண்டுமென்றால் இந்தியப் பெண்தான் உனக்கு வேண்டும்... நீ என்னை ஏமாற்றி விட்டாய்..."

"நாம் ஏற்கனவே இதைப் பற்றி பேசியிருக்கிறோம்.. எலிஸபெத்..."

"நீ பேசினாய்... நான் கேட்டுக் கொண்டிருந்தேன்... நான் பேசவில்லை..."

"இரண்டும் ஒன்றுதானே..."

"இரண்டும் வேறு வேறு..."

"உன்னை நான் ஏமாற்றவில்லை எலிஸபெத்..."

"இப்போது நீ செய்திருப்பதற்கு பெயர் என்ன...?"

"என் முடிவை நீ ஏற்றுக் கொண்டாய்..."

"தப்பு... உன் முடிவை நான் கேட்டுக் கொண்டேன்..."

"உனக்கு என் நிலைமையைத் தெரியாது..."

"ஏன்...? உன் நிலைமைக்கு என்ன குறைச்சல்...? ஒன்றுக்கு இரண்டாய் பெண்கள் உனக்குக் கிடைத்திருக்கிறார்கள்... இந்தியர்கள் புத்திசாலிகள் என்று சும்மாவா சொன்னார்கள்...?"

"என் குடும்பத்தை மீற என்னால் முடியவில்லை எலிஸபெத்..."

"உனக்கு இது ஒரு சாக்கு... காதல் என்ற பெயரால் என்னைத் தொட்டுவிட்டாய்... இனி மனைவி என்ற உரிமையோடு அந்தப் பெண்ணையும் தொடுவாய்..."



"ஸ்டாப் திங் நான்சென்ஸ்..."

"உண்மையைத்தானே சொன்னேன்... நீ அந்தப் பெண்ணைத் தொடத்தானே போகிறாய்...?"

எலிஸபெத் கோபத்துடன் போனை துண்டித்து விட்டாள்... கௌசிக் ஐஸ்வர்யாவை மறந்து... தனிமையைத் தேடி... தன் அறையை நோக்கி நடந்தான்...

"கௌசிக்... எங்கே போகிற...?" வைஷ்ணவி அழைத்தாள்.

"ரெஸ்ட் வேணும்மா..." நிற்காமல் அவன் நடந்து விட்டான்.

இதுவரை அவன் வாயைத் திறக்காமல் இருந்ததே போதும் என்ற நினைவுடன் வைஷ்ணவியும் விட்டு விட்டாள்...

மாலையில் வரவேற்பு நடந்தது.... மெல்லிசைக் கச்சேரியின் பாடல் ஒலிக்க ஆரம்பித்தது... அருகில் நின்று கொண்டிருந்த ஐஸ்வர்யாவை மறந்து... எலிஸபெத்தின் நினைவுடன் நின்றிருந்தான் கௌசிக்.

"யாரோ... யாருக்குள் இங்கு யாரோ...
யார் நெஞ்சில் இங்கு யார் தந்தாரோ...
விடையில்லா ஒரு கேள்வி...

காதல் வரம் நான் வாங்க...
கடைக்கண் பார்வை நீ வீச...

கொக்கைப்போல் நாள்தோறும்...
ஒற்றைக் காலாலே... நின்றேன் கண்மணி..."

ஐஸ்வர்யாவின் கடைக்கண் பார்வை... கௌசிக்கை அளந்தது... திருவேடகத்தின் ராஜ குமாரியாக இருந்தவள்... அவன் பார்வைக்காக ஏங்கினாள்...

"ஊரை வெல்லும் தோகை நானே...
உன்னால் இன்று தோற்றுப் போனேன்...
கண்ணால் யுத்தமே.... செய்தாய் நித்தமே..."

அவளுடைய பார்வைக்காக பலர் தவமிருந்த போது... அவள் அவனது பார்வைக்காக தவமிருக்கும் நிலையை என்னவென்று சொல்வது...?

கௌசிக்கின் மனமோ அவனிடத்தில் இல்லை...

"நீதான் எந்தன் மின்னல்கீற்று
நித்தம் வாங்கும் மூச்சுக்காற்றாய்...
உன்னைச் சூழ்கிறேன் நான்...
உன்னைச் சூழ்கிறேன்..."

அவனத நினைவுகள் எலிஸபெத்தை சூழ்ந்தன... அவனது நினைவில் எலிஸபெத் தோன்றிப் பாடினாள்...

"காற்றில் வைத்த சூடம் போலே...
காதல் கரைந்து போகாது..."

கௌசிக்கின் மனம்... அவளுடன் கழித்த பொழுதுகளை எண்ணியது...



"உன்னையெண்ணி உஷ்ணம்காய்ந்து
என்னால் வாழ ஆகாது...
அன்பே வா..."

அருகே நின்று கொண்டிருந்த புது மனைவியை அவன் திரும்பியும் பார்க்கவில்லை... வந்திருந்த உறவினர்களையும்... நண்பர்களையும் அவளுக்கு அறிமுகப்படுத்தும் போது... அவளது முகம் பார்க்காமலே அறிமுகப் படுத்தினான்...

வைஷ்ணவியின் அடி வயிறு கலங்க ஆரம் பித்தது...

'காலையில நல்லாத்தானே இருந்தான்...?'

மகனின் மாற்றத்தை பாரிஜாதம் கவனித்து விடக் கூடாதே என்று கவலைப் பட்டுப் போனாள் அவள்...

ஊரிலிருக்கும் தெய்வங்களையெல்லாம் துணைக்கு அழைத்தபடி... அங்கும்... இங்கும்... வேலையிருப்பதைப் போல ஒரு இடத்தில் நிற்காமல் அலைந்து கொண்டிருந்தாள்.

பாரிஜாதம் அவளுடன் பேச வரும்போதெல் லாம்... அவளிடமிருந்து தப்பிக்க... இந்த யுக்தியையே வைஷ்ணவி கையாண்டாள்.

சாதனாவின் பார்வையை, சந்தித்துப் புரிந்து கொண்டிருந்த ஆனந்தனின் மனதில் இன்ப அலைகள் பரவிக் கொண்டிருந்தன.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு மனநிலையில் இருக்க... அன்றைய இரவு வந்தது...

முதன் முதலாக... தன் கணவனைத் தனியாக சந்திக்க அவனது அறைக்குள் பிரவேசித்தாள் ஐஸ்வர்யா...




வைகறையில் சேவல் கூவ...
வாசல்தெளிக்க நான் எழுந்தேன்...
வைகைக் கரையில் நீ நின்றாய்...
வாசலை மறந்து உன்னிடம் வந்தேன்...

ஐஸ்வர்யா அழகான ஒரு ஓவியம் போல கௌசிக்கின் முன்னால் நின்றாள்... தனியறையில் அவளைத் தவிர்க்க வழி தெரியாத கௌசிக்... நிமிர்ந்து அவள் முகத்தைப் பார்த்தான்... அந்த முகத்தில் தெரிந்த அழகு அவனை ஆகர்ஷித்தது...

"உட்கார்..." கட்டிலைக் காட்டினான்."

அவள் தயக்கத்துடன் உட்கார்ந்தாள்... தலை குனிந்து கை விரல்களைப் பின்னிப் பிரித்துக் கொண் டிருந்தவளின் உடலில் தென்பட்ட நடுக்கம் அவன் கவனத்தில் பட்டது...



'பயப்படுகிறாள்...' அவன் மனதில் கனிவு பொங்கியது...

"ஏன் இத்தனை பயம்?" மென்மையாக கேட்டான்...

ஐஸ்வர்யா பதில் சொல்ல வாய்திறந்தாள்... வார்த்தைகள் வரவில்லை... காற்றுத்தான் வந்தது...

அவளது தவிப்பைக் கண்டவனுக்கு சிரிப்பு வந்தது... "உன் பெயர் என்ன....?" இயல்பாக அவன் கேட்க.... அதிர்ச்சியுடன் தலை நிமிர்ந்தாள் ஐஸ்வர்யா...

'இதென்ன இவன் இப்படிக் கேட்கிறான்...? என் பெயர் இவனுக்குத் தெரியாதா...? பெயரைக் கூடத் தெரியாமலா என் கழுத்தில் தாலியைக் கட்டினான்...?'

அவள் விழிகளில் தெரிந்த அதிர்வைக் கண்டதும் தான் தன் தவறை உணர்ந்தான் கௌசிக்.

'அடடா... இவளிடம் போய் பெயரைக் கேட்டு விட்டேனே...'

எப்படி சமாளிப்பது என்று யோசித்தவனுக்கு சட்டென்று அவள் பெயரை வைஷ்ணவி சொல்லியது நினைவுக்கு வந்து விட்டது...

'ஆ... இவள் பெயர் ஐஸ்வர்யா' தப்பிக்க மார்க்கம் கிடைத்து விட்ட மகிழ்வுடன் அவள் முகம் பார்த்து லேசாகச் சிரித்தான்...

"உன்னிடம் பேசணும் ஐஸ்வர்யா... பேச்சை ஆரம்பிக்க இது ஒரு வழின்னு நினைச்சேன்... என் பெயர்கூட உங்களுக்குத் தெரியாதான்னு கேட்டு வைப்பாய்ன்னு பார்த்தால்... நீ அதுக்கும் பதில் பேசாம உட்கார்ந்து இருக்கிற..."

'அப்பாடி...' நிம்மதியாக உணர்ந்தாள் ஐஸ்வர்யா...

"என்ன படித்திருக்க...?"

"டிகிரி..."

"மேலே படிக்கலையா...?"

"வீட்டில் விடலை..."

"ஓ... இங்கே படிக்கிறாயா...?"

'இதற்குத்தான் காலையில் என் கழுத்தில் தாலியைக் கட்டினாயா...?'

ஐஸ்வர்யா விரல்களை ஆராய ஆரம்பித்தாள்... அவனையே பார்த்துக் கொண்டிருந்த கௌசிக்கிற்கு அவளது ஒவ்வொரு அசைவும் கிளர்ச்சியை ஊட்டின...

உச்சி முதல் பாதம் வரை... ஐஸ்வர்யாவின் மேல் அவனது பார்வை படிய... அவள் கன்னம் சிவந்தாள்...

அவளது விழிகளில் தெரிந்த எதிர்பார்ப்பினைக் கண்டவனுக்கு உடல் சூடேறியது...

அவள் விரலைப் பற்றினான்... அதையே தாங்க முடியாதவளாக அவள் மயங்கிப் போனாள்... அந்த



மயக்கத்திலே மயங்கிப் போன கௌசிக்... அவளை நெருங்கினான்... அவளது தோள் தொட்ட அந்த நொடியில் அவனது செல்போன் அலறியது...

ஏமாற்றத்துடன் ஐஸ்வர்யா தலை கவிழ்ந்து கொள்ள.... சலிப்புடன் போனை எடுத்த கௌசிக் திடுக்கிட்டுப் போனான்...

எலிஸபெத் அழைத்துக் கொண்டிருந்தாள்...

'இந்த நேரத்தில் ஏன் கூப்பிட்டுத் தொலைக்கிறாள்...?' மனம் முரண்டிய போது... அவனது ஆழ்மனம்...

'ஏன்... இந்த நேரத்தில் இதற்கு முன்னால் அவள் கூப்பிட்டதே இல்லையா...?' என்று கேள்வி கேட்டது...

நள்ளிரவாக இருந்தாலும் எலிஸபெத் அழைப்பதை அவன் அதற்கு முன்னால் ஆட்சேபித்ததே இல்லை...

மீண்டும் குற்ற உணர்வு அவன் மனதில் எழ... எலிஸபெத்தின் போன் காலை தவிர்க்காமல் பேசிய படி... பால்கனிக் கதவை திறந்து கொண்டு சென்று விட்டான்.

பால்கனியில் அவன் பேசியது ஐஸ்வர்யாவின் காதுகளில் விழவில்லை... இந்த நேரத்தில் பேசுவது யாராக இருக்கும்... என்ற சிந்தனையோடு... அவள் அவனுக்காக காத்திருந்தாள்...

நவம்பர் மாதத்தின் குளிர்காற்று கௌசிக்கின் உடலை ஸ்பரித்து விளையாடியது... அவனது உடல் ஐஸ்வர்யாவை ஆளத் துடித்தது... அதை அவனை விட நன்றாக உணர்ந்திருந்தவளாக கேள்வி கேட்டாள் எலிஸபெத்...

"சொல்லு எலிஸபெத்..."

"எங்கேயிருக்கிறாய்...?"

"இது என்ன கேள்வி...?"

"பதிலைச் சொல்லு..."

"என் பெட்ரூமில் இருக்கிறேன்..."

"கூட யார் இருக்கிறது...?"

இது என்ன நாகரிகமில்லாத கேள்வியென்று பல்லைக் கடித்தான் கௌசிக்...

"என் மனைவி..." அழுத்தமான குரலில் சொன்னான்."

"ஓ.... திஸ் இஸ் யுவர் பர்ஸ்ட் நைட்..." அவளது குரலில் எகத்தாளம் வழிந்தது...

"யெஸ்...." அவனுக்குள் கோபம் பொங்கியது...

"எவ்வளவு தைரியமிருந்தால் என்னிடம் இதை நீ சொல்வாய்?"

"எலிஸபெத்..."



"இங்கே உன்னை நினைத்துக் கொண்டு நான் இருக்கிறேன்... நீ இன்னொருத்தியுடன் பர்ஸ்ட் நைட் கொண்டாடப் போகிறாய்... உனக்கு மனசாட்சியே இல்லையா...?"

"அவள் எவளோ ஒருத்தி இல்லை... என் மனைவி..."

"இதையே எத்தனை முறை சொல்வாய்? உன் மனச்சாட்சியைத் தொட்டுச் சொல்லு... என்னுடனான உன் பர்ஸ்ட் நைட் இந்தச் சமயம் உனக்கு நினைவுக்கு வரவில்லையா...? உனக்கு உண்மையிலேயே இது பர்ஸ்ட் நைட்டா...?"

சாட்டையடிகளாய் எலிஸபெத்தின் கேள்விகள் அவன் மனத்தைத் தாக்கின...

உண்மைதானே... அவன் திருமணம் செய்து கொள்ளாமலேயே... திருமண வாழ்வை எலிஸபெத் துடன் வாழ்ந்தவன்தானே...

"நீ தூங்கவில்லையா எலிஸபெத்...?"

"தூக்கம் எப்படி வரும்...?"

கௌசிக் அதற்கு மேல் அவளுடைய பேச்சைக் கேட்க முடியாமல் போனை அணைத்து விட்டான்...

பால்கனிக் கதவை மூடியவன்... ஐஸ்வர்யாவை ஏறிட்டும் பார்க்காமல் கட்டிலில் கிடந்த தலையணையை உருவினான்...

"என்ன...?" ஐஸ்வர்யா புரியாமல் விழித்தாள்...

"காலையிலிருந்தே டயர்டாக இருக்கிறோம்... ரெஸ்ட் எடுத்துக்கலாமே..."

அவளது பதிலை எதிர் பார்க்காமல் சோபாவில் தலையணையை போட்டவன் படுத்து கண் மூடி விட்டான்...

"லைட்டை ஆப் பண்ணிட்டு... நீயும் தூங்கு..."

அதற்கு மேல் அவனிடமிருந்து பேச்சு வராமல் போக... ஐஸ்வர்யா விளக்கை அணைத்தாள்... கட்டிலில் சுருண்டு படுத்தாள்... விடி விளக்கின் ஒளியில் அவனது உருவம் நிழலோவியமாகத் தெரிய... அதைப் பார்த்தபடி உறங்கிப் போனாள்....

மறுநாள் காலையில் குளித்து முடித்து ஈரக் கூந்தலுடன் வந்து நின்றவளை ஆராய்ச்சியாகப் பார்த்தாள் பாரிஜாதம்...

"ஏங்கண்ணு... மாப்பிள்ளை என்ன சொல்கிறாரு...?"

"அவர் என்னென்னவோ சொல்கிறாரு... உனக்கு எதைப் பத்தி தெரியணும்? அதைச் சொல்லு முதலில்..."

ஐஸ்வர்யா தன் பாட்டியை முறைத்தாள்...

மருமகளின் சாதுர்யத்தில் வைஷ்ணவி மகிழ்ந்த போனாள்.... அதுநேரம் வரை அவளுக்குள் இருந்த



உதறல் மறைந்து போக.... விடுதலை உணர்வுடன் மருமகளைப் பார்த்தாள்...

"காபி குடிம்மா..."

ஐஸ்வர்யா காப்பியை வாங்கிக் கொள்ளும் போது மாமியாரின் பார்வையை நேருக்கு நேராகச் சந்தித்தாள்...

'இவள் ஏன் இப்படிப் பார்க்கிறா...? ராத்திரி ஒன்னுமே நடக்கலையோ...'

வைஷ்ணவியின் அடிவயிறு மீண்டும் பிசைய ஆரம்பிக்க... எந்த நேரத்தில் மூத்த மகனை பெற்றெடுத்தோமோ... என்று நொந்து போனாள் அவள்...

"கௌசிக்கிற்கு காபியைக் கொண்டு போம்மா..." மருமகளின் கையில் காபிக் கோப்பையை திணித் தாள்...

அதை மறுக்காமல் வாங்கிக் கொண்ட ஐஸ்வர்யா மாடிப்படியேறினாள்... சோபாவில் படுத்திருந்தவனை எப்படி தொட்டு எழுப்புவது... என்று அவள் தயங்கி நின்றபோது... அவனே விழித்து விட்டான்...

கண்ணுக்கு முன்னால்... காலளவு கருங்கூந்தலை விரிய விட்டு நின்றிருந்த ஐஸ்வர்யாவின் அழகைக் கண்டு பிரமித்துப் போனவனாக எழுந்து அமர்ந்தான்...

'இந்த அழகி எனக்குச் சொந்தமானவளா...?'

ஐஸ்வர்யா காபிக் கோப்பையை நீட்ட.... வாங்கிக் கொண்டு அவளைப் பார்த்தபடி பருக ஆரம்பித்தான்...

"ஐ ஆம் ஸாரி..."

காலிக் கோப்பையை நீட்டியபடி அவன் சொல்ல... ஐஸ்வர்யா உதட்டைக் கடித்தாள்...

'இதற்கு என்ன பதிலைச் சொல்வது...?'

அவள் பதில் சொல்லாமல் அறையை விட்டு வெளியேற... அவன் பெருமூச்சுடன் குளியலறைக்குள் புகுந்தான்...

"மறுவீட்டு விருந்துக்கு வாங்க மாப்பிள்ளை..." முறைப்படி அழைத்தார் ஜெயப்பிரகாசம்...

"மறுவீட்டு விருந்தா...?" புரியாமல் தாயைப் பார்த்தான் கௌசிக்....

"பெண் வீட்டுக்கு மாப்பிள்ளை விருந்துக்கு போகணும் கௌசிக்.. அதுதான் முறை..." வைஷ்ணவி எடுத்துச் சொன்னாள்...

'என்ன முறையோ...'

முதல்நாள் இரவின் நினைவில் கடுப்பானான் கௌசிக்...

"எனக்கு அதுக்கெல்லாம் நேரமில்லைம்மா..."

"என்னது... நேரமில்லையா...?"



பாரிஜாதம் நிமிர்ந்து அமர... வைஷ்ணவி கலவரமடைந்தாள்...

"பெரியம்மா... அவன் வெளிநாடுகளிலேயே சுற்றிக் கொண்டிருந்தவன்.. நம்ம ஊர் பழக்கமெல்லாம் அவனுக்கு தெரியாது..."

"இதைப் போயி நாங்க ஊரு பூரா சொல்ல முடியுமா...? நேத்து இந்நேரம் தாலி கட்டிய புது மாப்பிள்ளையை இன்னைக்கு இந்நேரம் மறுவீட்டு விருந்துக்கு கூப்பிடலைன்னா ஊரு என்ன சொல்லும்...? உலகம் என்ன சொல்லும்..."

பேசாமல் பெரியம்மாவும் தங்கை மகளும் எதையோ பேசிக் கொள்கிறார்கள்.... நமக்கென்ன வந்தது என்று கௌசிக் இருந்திருக்கலாம்...

அதை விட்டு விட்டு அவன் பாரிஜாதத்திடமே நேரடியாக "ஏன் பாட்டி... ஊருக்கும்... உலகத்துக்கும் நம் வீட்டைப் பற்றி ஏதாவது சொல்வதுதான் வேலையா...? அவங்கவங்களுக்கு ஆயிரம் வேலைகள் இருக்கும் பாட்டி..." என்று சொல்லி வைத்தான்...

பாரிஜாதத்தின் நெற்றியில் சுருக்கங்கள் அதிகமாயின... அவள் புருவ மத்தியில் பெரிதாக முடிச்சொன்று விழுந்தது.... அவளது முகத்தில் கடுமை பரவிக் கிடந்தது....



வைகறையில் உன்னிடத்தில்...
என்மனதை சொல்ல வந்தேன்...
வைகைக்கரையில் என்னிடத்தில்....
உன் மனதை தந்துவிட்டாய்...

"இது என்ன தம்பி... இப்படிச் சொல்றீங்க... ஊரு உலகத்துக்கு நம்மளக் கவனிக்கிறத விட வேறென்ன வேலையிருக்குன்னு நீங்க நினைக்கறீங்க... நாம நினைச்சுக்கிட்டு இருப்போம்... நம்மள யாரும் கவனிக்கலைன்னு... ஆனா... இந்த உலகம் பூராவும் நம்மளத்தான் உத்து உத்துப் பார்த்துக்கிட்டு இருக்கும்..."

"அவனுக்குத்தான் நம்ம ஊரு பழக்கம் தெரியாதுன்னு சொன்னேனே பெரியம்மா..."

"நம்ம ஊரு பழக்கம் தெரியாமலா உன்னை அம்மான்னும்... உன் புருசனை அப்பான்னும் கூப்பிடறாரு...?"

"இதென்ன பேச்சு பெரியம்மா... அம்மாவை அம்மான்னு கூப்பிடாம வேறெப்படி கூப்பிட முடியும்...?"



"வெளிநாட்டில அம்மாகாரியக்கூட பேரைச் சொல்லித்தான் கூப்பிடுவாங்களாம்... அதனால தான் கேட்டேன்... இது தெரியற மாப்பிள்ளைக்கு மத்த பழக்க வழக்கமும் தெரிஞ்சுதான இருக்கணும்...?"

"நீ கொஞ்சம் சும்மாயிருக்கயா பாட்டி..."

"உன் புருசன் வரவேண்டிய விருந்துக்கு கிளம்பி வந்தா நான் ஏன் ஐஸீ வாயைத் திறக்கப் போகிறேன்...? அவர்தான் வரமாட்டேன்னு அழிச்சாட்டியம் பண்றாரே..."

"அதுதான் அத்தை சொல்றாங்கல்ல... அவருக்கு நம்மநாட்டு பழக்கம் வழக்கம் தெரியாதுன்னு..."

"உனக்குத் தெரியுமில்ல...?"

பாரிஜாதம் சிரிப்பில்லாத முகத்துடன் பேத்தியைக் கேட்க... மற்றவர்கள் ஆச்சரியமடைந்தனர்...

செல்ல பேத்தியிடம் பாரிஜாதம் கடுமைகாட்டிப் பேசியதேயில்லை... அவளா ஐஸ்வர்யாவிடம் மோதுகிறாள்....?

"எனக்குத் தெரியும்தான்... அதுக்கு இப்ப என்னாங்கிற...?"

"இந்த தெனாவெட்டை என்கிட்ட காட்டாம... உன் புருசனுக்கு நம்ம நாட்டு பழக்க வழக்கத்தைப் பத்தி எடுத்துச் சொல்லு ஆத்தா... மறுவீட்டு விருந்துக்கு மாப்பிள்ளையும்.... பொண்ணும் வரலைன்னா நீ பிறந்த

ஊரில.... உன் புருசனை குத்தம் சொல்ல மாட்டாங்க.... உன்னைத்தான் குத்தம் சொல்வாங்க..."

"என்னைக் குத்தம் சொல்வாங்களா...?"

"ஆமாம்... ஐஸ்வர்யாவுக்கு அப்பன் வீட்டுக்கு மறுவீட்டு விருந்துக்கு வரப் பிடிக்கலையாம்... அவ புருசன்காரன் வீட்டு வகிசியில மயங்கிப் போயிட் டாளாம்... அப்படின்னு கதை பேசுவாங்க...."

"சும்மா புருடா விடாதே பாட்டி..."

"புருடாவெல்லாம் இல்லடி தாயி... இன்னும் கொஞ்சம் மேலே போயி... அப்பன் வீட்டுல கொடுத்த சீரு பத்தலைன்னு ஐஸ்வர்யா கோவிச்சுக் கிட்டு பிறந்த வீட்டு விருந்துக்கு வரமாட்டேன்னு சொல்லிட்டாளாம்ன்னு சொல்லுவாங்க..."

இவ்வளவு சொன்னால் போதாதா.... ஐஸ்வர்யா விற்கு கலவரம் பிடித்துக் கொண்டது... ஆயிரம்தான் பாரிஜாதம் அடாவடிக்கார பாட்டியாக இருந் தாலும்... நாட்டு நடப்பைக் கணித்து சொல்வதில் கை தேர்ந்தவள்... அவள் பிறந்த ஊரில் இப்படியெல்லாம் பேச்சு வர வாய்ப்பிருக்கத்தான் செய்தது...

"சொல்லுவாங்க... பேசுவாங்க... அப்படின்னு கூட்டம் கூட்டமாய் ஜனங்கள் கூடி நம்வீட்டுப் பேச்சை பேசுகிறதைப் போல இந்தப் பாட்டி சொல்கிறாங்களே... டோன்ட் வொர்ரி ஐஸ்வர்யா... நீ இதையெல்லாம் மைண்ட் பண்ணிக்காதே..." கௌசிக் எழுந்து சென்று விட்டான்...



பாரிஜாதத்தின் பேச்சை மதிக்காமலும்... ஜெயப்பிரகாசத்திற்கு பதில் சொல்லாமலும் அவன் சென்று விட்டது... மற்றவர்களின் கவனத்தில் பதிந்தது...

"அவசரப் பட்டுட்டேன்ம்மா..." ஜெயப்பிரகாசம் பாதிச் சாப்பாட்டில் எழுந்து கொள்ள முனைய....

"பொறுங்கப்பா..." என்றாள் ஐஸ்வர்யா...

"நான் அவரிடம் பேசி விட்டு வருகிறேன்... நீங்க சாப்பிடுங்க...."

தகப்பனாரின் பதிலை எதிர்பார்க்காமல் ஐஸ்வர்யா பரபரப்பாக மாடியேறி விட்டாள்..

என்னால் முடியாதது... மருமகளால் மட்டும் எப்படி முடியும் என்ற நினைவோடு... அடுத்து எழப்போகும் சம்பந்தி சண்டையை எப்படி எதிர்கொள்வது என்று தெரியாமல் வைஷ்ணவி தலையில் கை வைத்துக் கொண்டு அமர்ந்து விட்டாள்.

அறைக் கதவை திறந்து கொண்டு ஐஸ்வர்யா உள்ளே போனபோது.... கௌசிக் அலுவலகத்திற்கு கிளம்பிக் கொண்டிருந்தான்...

கீழே அவ்வளவு பெரிய வாக்குவாதம் நிகழ்ந்து கொண்டிருக்க.... எதுவும் நடக்காததைப் போல... எதைப் பற்றியும் கவலைப்படாமல் அவன் அலுவலகம் செல்லக் கிளம்பியதைக் கண்ட ஐஸ்வர்யாவின் மனதில் மெலிதான கோபம் எழுந்தது....

"எங்கே கிளம்பிட்டிங்க...?" என்று கேட்டாள் அவள்... கௌசிக்கின் பார்வையில் ஆச்சரியம் தெரிந்தது... அவன் முகத்தைப் பார்க்கக்கூட வெட்கித் தலை குனிந்தவள்... இப்போது முகம் பார்த்து பேசிவிட்டாளே என்று நினைத்துக் கொண்டான்...

"வொண்டர் புல்... என்னிடம் நீ பேசக்கூடச் செய்வாயா...? நேத்து நைட் வாயைத் திறந்தால் உனக்கு பேச்சு வராமல் வெறும் காத்துதான் வந்ததே... அப்படியே இருந்து விடுவியோன்னு நினைத்தேன்..."

"அப்படியிருந்தால் உங்களுக்கு வசதின்னு நினைத்திருப்பீங்க..." ஐஸ்வர்யாவின் வார்த்தைகள் 'சுளீர்' என்று வெளிப்பட கௌசிக்கின் புருவங்கள் மேலேறின...

"என்ன ஆச்சு ஐஸ்வர்யா...?"

"நான் எதையும் கேட்கப் போவதில்லை..."

"எதையும்ன்னா...?"

"எலிஸபெத் யாருன்னு கேட்கப் போவதில்லைன்னு அர்த்தம்..."

கௌசிக் அசையாமல் நின்று விட்டான்... அவன் முகம் இறுகி விட்டது...

"யார் சொன்னது...?"



கொஞ்சம் கூடத் தயக்கமில்லாமல் அவன் இதைக் கேட்டதை அவள் மனதிற்குள் குறித்துக் கொண்டாள்...

"யார் சொல்லியிருப்பாங்கன்னு நீங்க நினைக்க நீங்க?" என்று கேட்டாள்.

"அம்மா சொன்னாங்களா...?"

"அவங்க சொல்லலை..."

"அபிஷேக் சொன்னானா....?"

"அவரும் சொல்லவில்லை..."

"சாதனா சொன்னாளா....?"

"அவளும் சொல்லவில்லை..."

"வேறு யார் சொன்னது...? அப்பா இதையெல்லாம் உன்னிடம் வந்து சொல்ல மாட்டாரே... அவரா சொன்னார்...?"

அவள் இந்தக் கேள்விக்கு பதிலைச் சொல்லாமல் அவனையே உக்கிரமாகப் பார்த்தபடி அசையாமல் நின்றாள்...

"அப்பா சொன்னாரா...?"

"ஊஹீம்..."

"இத்தனை பேரும் சொல்லாம... வேற யாரு உனக்கு இதைச் சொன்னது...?"

"ஆக... உங்கள் குடும்பம் மொத்தத்திற்கும் உங்கள் காதல் லீலை தெரிந்திருக்கிறது... அதை

வெளியில் சொல்லாம அமுக்குளித்தனமா இருந்துக் கிட்டு என்னைப் பெண் கேட்டுவந்திருக்கிறாங்க... அப்படித்தானே...?" ஐஸ்வர்யா உஷ்ணமாக வினவினாள்.

இதைத்தான் வாயைக் கொடுத்து மாட்டிக் கொள்வது என்று சொல்வார்கள் போல... என்று நொந்து போனான் கௌசிக்....

"இதோ பார் ஐஸ்வர்யா... இதற்கும்.... எனக்கும் யாதொரு சம்பந்தமில்லை..." அவன் தந்நிலை விளக்கம் சொல்ல ஆரம்பிக்கும் போதே கையை உயர்த்தி அவன் பேச்சை இடைமறித்தாள் ஐஸ்வர்யா...

"எனக்கும் உங்களுக்குமாவது சம்பந்தம் இருக்கா... அதுவும் இல்லையா...?"

"நான் சொல்ல வந்ததே வேறு..."

"வேறுதான்... நான் வேறேதான்... இது தெரியாமல் நான் ஆயிரம் கனவுகளைக் கண்டு தொலைத்தேனே..."

"ஐஸ்வர்யா..."

"தெரியாமல்தான் கேட்கிறேன்... நான் யார்...? நீங்கள் யார்...? உங்களுக்கும்... எனக்கும் என்ன சம்பந்தம்...? நான் பாட்டுக்கு நானுண்டு என் வைகைக் கரையுண்டுன்னு நிம்மதியாய் வாழ்ந்துக்



கிட்டு இருந்தேனே... எதுக்காக உங்களைப் பெத்தவங்க என்னைத் தேடிவந்து பொண்ணு கேட்டாங்க...?"

"நான் அனுப்பி வைக்கலைன்னு சொன்னேனே...."

"அப்புறம் எதுக்குங்க... என் கழுத்தில் தாலியைக் கட்டினீங்க?"

"அது... அது... வந்து... என் அம்மா செத்துப் போயிடுவேன்னு மிரட்டினாங்க... வேற வழியில்லாம..."

"உங்க அம்மாவை சாகவிடாம காப்பாற்றுவதுக் காக... என்னை உயிரோடு சாகடிச்சீங்களா...?"

ஐஸ்வர்யாவின் வார்த்தைகளில் அதிர்ந்து போய் நின்று விட்டான் கௌசிக்.... பேசத் தயங்கிய ஐஸ்வர்யாவா இப்படியெல்லாம் பேசுகிறாள்? மென்மையே வடிவானவளாக தோற்றமளிக்கும் பெண்ணிடம் இவ்வளவு ஆவேசம் புதையுண்டு இருக்கிறதா...?

"ஏய்ய்.... என்ன பேச்சுப் பேசற...? என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்வது உனக்கு உயிரோடு சாவதைப் போலவா...?"

இப்படிக் கேட்டவனையே இமைக்காமல் பார்த்தாள் ஐஸ்வர்யா... புகைப்படத்தில் பார்த்தபோதே கிளர்ச்சி தந்த அவனது உருவத்தையே அசையாமல் பார்த்தாள். ராத்திரியில் வரும் ரகசியக் கனவுகளின் நாயகனான அவனைத் துயரத்துடன் பார்த்தாள்...

அவள் பார்வையிலே எதைக் கண்டானோ... கௌசிக்... மனம் தாளாதவனாக அவளருகில் ஒரு எட்டு எடுத்து வைத்தான்....

"அப்படியே நில்லுங்க...." சீறினாள் ஐஸ்வர்யா...

"ஏய்ய... நான் உன் ஹஸ்பெண்டுடி...."

"போதும்... இந்த புருசன்... பெண்டாட்டி சொந்தத்தைப் பத்தி வெளியே சொல்லிராதீங்க... நல்லாப் பிழைக்கிற நாலு பேரு காதில இது விழுந்தா... சிரிப்பா சிரிச்சுடுவாங்க..."

"என்ன பேசுகிற...?"

"த்சு... காலங்கார்த்தால போன் அடிக்குது... எடுத்துப் பார்த்தா... எலிஸபெத்துன்னு பேரு வருது... உங்களை எழுப்பி கொடுக்கலாமுன்னு பார்த்தா.... நீங்க அசந்து தூங்கறீங்க... பேசாம வைக்கத்தான் நினைச்சேன்... யதேச்சையா கால் பட்டனை அமுக்கித் தொலைச்சுட்டேன்... அவ என்னடான்னா... எனக்கு உங்க ரூமில என்ன வேலைன்னு இங்கிலீஷில் கேட்கிறா..."

"ஓ... காட்..." தலையைப் பிடித்துக் கொண்டான் கௌசிக்... அம்சமான ஐஸ்வர்யா எதற்காக காளி அவதாரம் எடுத்திருக்கிறாள் என்று அப்போதுதான் அவனுக்குப் புரிந்தது....

"கடவுளை எதுக்கு வம்புக்கு இழுக்கறீங்க...," அவனைக் கடித்து துப்ப முடியாத குறையை...



பல்லைக் கடித்து தீர்த்துக் கொண்டபடி ஐஸ்வர்யா கேட்டாள்...

"உங்களை அவருதான் இந்த கருமாந்திர வேலையைப் பண்ணச் சொன்னாரா...? காதலிச்சு... கல்யாணம் பண்ணிக்காமலே குடும்பம் நடத்தறது ஒரு வெள்ளைக்காரியோட... தாலியைக் கட்டறது... ஏமாந்த சோணங்கிரியான இந்த ஐஸ்வர்யாவோட கழுத்திலயா...?"

"உனக்கு எப்படிச் சொல்லி புரிய வைக்கிற துன்னு தான் எனக்குத் தெரியவில்லை ஐஸ்வர்யா.. ஆக்சுவலாய் நான் உனக்கு கனவில் கூட கெடுதல் பண்ண நினைத்ததில்லை...."

"இப்போ நீங்க எனக்கு பண்ணியிருக்கிற இந்த வேலைக்குப் பெயர் என்ன? இது கெடுதலில்லாம... நல்லதா...?"

கழுத்தில் கிடந்த தாலியைத் தூக்கிக் காட்டி வினவினாள் ஐஸ்வர்யா...

இப்படியொரு கேள்வியை எதிர்கொள்ள வேண்டிய நிர்பந்தம் எந்த கணவனுக்கும் ஏற்படக் கூடாது... என்று நினைத்துக் கொண்டான் கௌசிக்...

பதில் சொல்லாமல் அவளையே பார்த்தபடி... பேண்டின் இருபக்க பாக்கெட்டிலும் கைகளை நுழைத்த படி நிமிர்ந்து நின்றான்....

அவனுடைய அந்தத் தோற்றம் அவள் மனதில் நுழைந்தது... அவனுக்குப் பிடித்தமான வகையில்

இருந்து தொலைக்கும் அவன்மீது அவருக்குள் கட்டுக்குள் அடங்காத கோபம் பீறிட்டு எழுந்தது....

கம்பீரமான முகத்துடனும்... அடங்க மறுத்து... முன்நெற்றியில் வந்து விழுந்த முடியுடனும்... அலட்சியமாக கால்களை பரப்பி அவன் நின்ற தோற்றம் அவளை வசீகரித்தது...

அவன் அவளுடைய கணவன்தான்... ஆனால் அவளுக்கு எட்டாத தூரத்தில் விலகி நிற்பவன்... அவளுக்குள் துக்கம் பொங்கியது...



## 18

வைகறையில் எழும்போதே....
மனதுக்குள்ளே உன் நினைவு...
வைகையிலே குளிக்கும்போதோ...
உனைப்பார்த்துவிட்ட மனநிறைவு...

யாருக்கும் இப்படியொரு வாழ்க்கை அமையக் கூடாது என்று மனம் பொருமினாள் ஐஸ்வர்யா...

அவள் யாருக்கு என்ன கெடுதல் செய்தாள்..? திரைப்படங்களில் வரும் கதாநாயகன்களை அவளுடைய தோழிகள் ரசித்துப் பேசுவார்கள் ஐஸ்வர்யாவோ...



"ச்சீ... தூ..." என்று சொல்வாள்...

"ஏண்டி... அவன் யாரோ... எவரோ... நமக்குத் தெரியாது... அவன் மேல இந்தளவுக்கு ஜொள்ளு விடறியே... அவனைத்தான் நீ கட்டிக்கப் போகிறாயா...?" என்று கேட்பாள்."

"நான் ரெடிதான்.. அவன் ரெடியாய் வரணுமே..." என்று பெருமூச்சு விடும் தோழியிடம்

"தெரியுதில்ல... அப்புறம் எதுக்கு மனசுக்கழுதய கிடந்து அலைய விடறே..." என்று அதட்டுவாள்.

"என்னது... மனசுக்கழுதயா....? மனசை குதிரைன்னுதான சொல்லுவாங்க..." தோழி சந்தேகம் கேட்கும் போது...

"அது உருப்படியான மனசுக்கு... உன்னைப் போல... பார்க்கிற அம்புட்டுப் பேரையும் சைட் அடிக்கிற மனசுக்கில்லை..." என்று அவளது மூக்கை உடைப்பாள்.

அப்படியெல்லாம் மனக்குதிரைக்கு கடிவாள மிட்டு வாழ்ந்து வந்த ஐஸ்வர்யா... மனதால்கூட யாரையும் நினைக்காமல் தன்னடக்கம் பேண வளர்ந்து வந்த ஐஸ்வர்யா... வீட்டில் நிச்சய பண்ணின கணவனையே... காதலனாக மனதி வரித்த ஐஸ்வர்யா... இன்று அனைத்திற்கும் ஒ அர்த்தமுமில்லாமல் தோற்று நின்றாள்...

அதிகாலையில் அவளது ஊர் வழக்கப்படி அவளுக்கு விழிப்பு வந்தபோது.. இமை திறந்த அவள் கண்களின் முன்னால் தூங்கிக் கொண்டிருந்த அவனது முகம் தெரிந்தது...

அத்தனை நாளும் போட்டோவில் மட்டும் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தவனை முதன் முதலாக... ஆசைதீர நேரில் நன்றாகப் பார்க்க ஆரம்பித்தாள் ஐஸ்வர்யா...

பட்டு வேட்டி... பட்டுச் சட்டையில் அவனது கம்பீரம் முழுவதுமாக வெளிப்பட... கலைந்து கிடந்த அவனது தலைமுடியில் விரல் விட்டுக் கோத அவள் மனம் ஆசை கொண்டது...

அவன் மேலான அவளது காதல் பொங்கியெழ... அவள் மெதுவாக எழுந்து... அடிமேல்... அடியெடுத்து வைத்து அவனருகில் சென்றாள்...

சத்தமில்லாமல் அவள் கைநீட்டிய அந்த நொடியில் அவனது செல்போன் அலறியது...

தனது நெருக்கத்தை அவன் கண்டு கொண்டு விடுவானோ என்ற பதட்டத்துடன் அவள் அவசரமாக விலகி நின்றாள்...

ஆனால்... அவன் எழுந்து கொள்ளவில்லை... செல்போனின் மணியொலி கூட அவனது தூக்கத்தை கலைக்க முடியாததைக் கண்டு...



'பாவம்... உண்மையிலேயே களைச்சுப் போயிருக்கிறார்..' என்று அவன்மேல் இரக்கப் பட்டாள்...

அவனது செல்போன் விடாமல் ஒலிக்கவும்... ஒருவேளை முக்கியமான நம்பரோ... என்னவோ என்ற நினைவுடன்தான் செல்போனை பார்த்தாள்... 'எலிஸபெத் அழைக்கிறாள்' என்ற ஆங்கில வார்த்தை களைக் கேட்டதும் அவளது புருவம் உயர்ந்தது...

முதல் நாளிரவும் அவனது போனில் இதே அழைப்பு வந்தது அவளது நினைவுக்கு வந்தது... அதைத் தொடர்ந்து... அவன் பால்கனிக்குச் சென்று தனிமையில் பேசிவிட்டு வந்ததும்... அவளது முகம் பார்க்காமல் விலகி... சோபாவில் தனியாக படுத்ததும் சேர்ந்து நினைவுக்கு வர... அவளது முகம் மாறியது...

'இந்த போனைப் பேசக் சொல்லி கட்டாயம் அவரை எழுப்பிக் கொடுக்கனுமாக்கும்...'

எலிஸபெத் யாரென்று தெரிந்து கொள்ள ஐஸ்வர்யா முனையவில்லை... அவள் யாரென்று தெரியாமலேயே... செல்போனை அணைக்க அவள் முயன்றாள்... பதட்டத்தில் அவள் வேறுபட்டனை அமுத்தி விட...

"கௌசிக் டியர்..." என்ற எலிஸபெத்தின் குரல் கேட்டுவிட்டது... 'டியரா...' ஐஸ்வர்யா ஸ்தம்பித்து விட்டாள்...

'பொறு.... உன் புருசன் வெளிநாடுகளில் சுற்று கிறவன்... அவனுக்கு பெண் சிநேகிதம் இருந் திருக்கலாம்... அவர்கள் இயல்பாக 'டியர்'ன்னு அழைக்கலாம்.. பட்டிக்காட்டு பழக்க வழக்கத்தை விட்டுவிட்டு... இனிமேல் இதுபோல பேசுகிற வங்களுக்கு பதில் சொல்ல நீ பழகிக் கொள்...'

ஐஸ்வர்யாவின் மனம் அதட்டியது... அதனால் பொறுமையாக போனை காதில் வைத்து...

"ஹலோ..." என்றாள்...

மறுமுனையில் ஒரு வினாடி நிசப்தம் நிலவியது... அடுத்த வினாடியில் துச்சமான தொனியில் பெண் குரல் ஒன்று ஆங்கிலத்தில் பேசியது...

"ஹூ ஆர் யு...?"

இவ்வளவு உதாசீனமாகவும்.... பெண்ணுக்குப் பெண் பேச முடியும் என்பதை அன்றுதான் அறிந்து கொண்டாள் ஐஸ்வர்யா...

பதிலுக்கு 'நீ யாருடி...? நேரங் கெட்ட நேரத் திலே... என் புருசன்கூட உனக்கென்ன பேச்சு...' என்று கேட்க ஆக்ரோசம் அறை கூவியது...

அவள் தன்னை அடக்கிக் கொண்டு...

"அவருடைய வொய்ப்..." என்று பதில் சொன்னாள்....



"வொய்பா...? நீயா...? அப்படின்னா நான் கௌசிக்கிற்கு யார்...?" என்று கேட்டாள் அந்த எலிஸபெத்...

ஐஸ்வர்யாவின் கண் முன்னால் உலகம் தட்டா மாலை சுற்றியது... இப்படிப்பட்ட ஒரு நிகழ்வை அவள் கனவில் கூட நினைத்துப் பார்த்ததில்லை. அவளது பொறுமை காற்றில் கரைந்து போன கற்பூர மாக மாறி மறைந்து போனது...

"ஏய்.... யாருடி நீ...?" என்று அதட்டினாள்...

"யு... கன்ட்ரி புருட்... என்னையா யாருன்னு கேட்டே... நான் சொன்னால் அதைப் புரிந்து கொள்ளும் இங்கிலீஷ் நாலெட்ஜ் உனக்கு இருக்கிறதா...?" எலிஸபெத் ஆங்கிலத்தில் பொரிந் தாள்.

"எல்லாம் இருக்கு... நானும் டிகிரி படித்தவள் தான்... நீ சொல்லு... நான் புரிந்து கொள்கிறேன்..."

"கௌசிக் இஸ் மை மேன்..."

"நோ... கௌசிக் இஸ் மை ஹஸ்பெண்ட்..."

"ஹஸ்பெண்டா...? எதை வைத்த அவனை உன் ஹஸ்பெண்டுன்னு சொல்கிறாய்...? அவன் முதன் முதலில் தொட்டது என்னைத்தான் தெரியுமா...?"

எலிஸபெத்தின் குரலில் எகத்தாளம் வழிந் தோடியது... ஐஸ்வர்யாவின் காலடியில் பூமி நழுவியது...

அவள் தன்னுணர்வுடன் நிமிர்ந்து நிற்க.. பிரம்ம பிரயத்தனம் செய்து காலூன்றி நின்றாள்...

இப்படிப்பட்ட சக்களத்தி சண்டையை திருமணமான அடுத்த நாள் காலையிலேயே... விடிந்தும்... விடியாத வைகறைப் பொழுதில் எதிர் கொள்ள நேரிடும் என்று அவள் கனவா கண்டாள்...?

பாரிஜாதத்திற்கும்... அவளுடைய குடும்பத்திற்கும் இந்த விவரம் தெரிந்தால் என்ன ஆகும் என்று ஐஸ்வர்யா எண்ணிப் பார்த்தாள்...

கௌசிக்கையும்... அவன் குடும்பத்தையும் உண்டு... இல்லையென்று பண்ணி விடுவார்கள்...

அதைச் செய்ய விடாமல் அவள் மனம் தடுத்தது... "சரி... நீ சொல்வது உண்மைன்னே வைத்துக் கொள்ளலாம்.. அவர் முதன் முதலாக தொட்ட பெண் நீதான்... ஆனா... நீ முதன் முதலா தொட்ட ஆண் அவர்தானா...?"

ஐஸ்வர்யாவின் கேள்வியில் ஆழ்கடலின் அமைதி இருந்தது...

"ஹேய்ய்... இதெல்லாம் எங்களுக்கு சகஜமாக ஒன்று..."

"நான் கேட்டதுக்கு பதில் சொல்லு..."

"அமெரிக்கன் கல்ச்சர் வேறு... இன்டியன் கல்ச்சர் வேறு..."



"அப்புறம் எதுக்கு... வேலை மெனக்கெட்டு... என்னிடம் உன் புருசன் முதன் முதலாய் என்னைத்தான் தொட்டான்னு கதை படிக்கிற...?"

"நாங்க மேரேஜ் பண்ணிக்காம சேர்ந்து வாழ்கிறோம்...'

"சேர்ந்து வாழ்ந்தோம்ன்னு சொல்லு..."

"அதெப்படி சொல்ல முடியும்...? இந்த அபார்ட்மெண்ட் கௌசிக் எனக்காக வாங்கிக் கொடுத்தது... இந்த வீட்டிலிருக்கிற பர்னிச்சர்களை நாங்க இரண்டு பேரும் சேர்ந்துபோய்த்தான் செலக்ட் பண்ணினோம். இந்த வீட்டின் பெட்ரூமில் இருக்கிற கப்போர்டில் இன்னும் அவனுடைய டிரஸ்ஸெஸ் இருக்கிறது... அவனுடைய கார்... கிரெடிட் கார்டு... ஆபிஸ் ஃபைல்ஸ்... ஏன்... அவனுடைய பாரின் கன்ட்ரீஸின் அத்தனை பிஸினெஸ் டீலிங்கும் இங்கிருக்கிற லேப் டாப்பில்தான் பதிவாகியிருக்கு... இது எங்கள் வீடு..."

அவனுடைய வீட்டில்.... அவனுடைய மனைவியாக... வைஷ்ணவி ஆரத்தி எடுத்து அழைக்க... உள்ளே நுழைந்த ஐஸ்வர்யா எந்தவிதமான உரிமைகளும் அற்றவள் என்று எலிஸபெத்தால் கூறப்பட்டாள்...

அப்போதும் ஐஸ்வர்யா மனம் தளரவில்லை...

"ஓகே... நீயும் அவரும் சேர்ந்து வாழ்ந்தீர்கள்..."

"சேர்ந்து வாழ்கிறோம்..."

"என்னவோ ஒன்று... இது எத்தனை நாளாய்...?"

"இரண்டு வருடங்களாய்..."

"ஓ... அதுக்கு முன்னாலே... நீ யாருடன் சேர்ந்து வாழ்ந்தாய்...?"

ஐஸ்வர்யா மீண்டும் சரியான இடத்தில் தாக்க... அந்த எலிஸபெத் வெகுண்டாள்...

"ஆப்டர் ஆல்... ஒரு இன்டியன் வில்லேஜில் பிறந்த வளர்ந்த கன்ட்ரி வுமன் நீ... உனக்கே இவ்வளவு திமிர் இருந்தால்... எனக்கு எவ்வளவு இருக்கும்...?"

"ஆப்டல் ஆல்... ஒரு இன்டியன் வில்லேஜ் வுமன்னு சொன்ன.... உன் பல்லைக் கழட்டி விடுவேன்... இந்த வயதுக்குள் பார்க்கிற ஆள்களோடெல்லாம் குடும்பம் நடத்தி முடித்த உனக்கே இவ்வளவு திமிர் இருக்கிறப்போ.... ஒருவனே புருசன்னு வாழ்கிற எனக்கு எவ்வளவு திமிர் இருக்காது..."

"இப்ப என்ன வேண்டும் உனக்கு...? நான் இதற்கு முன் யாருடன் சேர்ந்து வாழ்ந்தேன்னுதானே தெரியனும்...? ஆமாம்... நான் பலருடன் சேர்ந்து வாழ்ந்தேன்தான்... கௌசிக்கிற்கு முன்னால்... ஜேம்ஸோடு சேர்ந்து வாழ்ந்தேன்... ஜேம்ஸிற்கு முன்னால் ராபிட்சன்... ராபிட்சனுக்கு முன்னால்..."



"வெயிட்... வெயிட்... கேட்கவே குமட்டுது... மறந்து போன பெயர்களையெல்லாம் எனக்காக கஷ்டப்பட்டு நினைத்துக்காதே... விட்டு விடு..."

"ஹேய்ய்.... யு...யு...."

"ஐ ஆம் ஐஸ்வர்யா..."

"நீ என்ன உலக அழகி ஐஸ்வர்யாவா...?"

"என் வீட்டு அழகி ஐஸ்வர்யா..."

"போதும்... ரொம்பத்தான் அலட்டிக்காதே... நான் சொன்ன ஒரு வார்த்தைக்காக உன்னுடன் கழிக்க வேண்டிய பர்ஸ்ட் நைட்டையே கேன்சல் செய்தான் உன் ஹஸ்பெண்ட்... மைண்ட் இட்..."

ஐஸ்வர்யாவின் உடலில் இருந்த அனைத்து செல்களிலும் உஷ்ணம் பரவியது...

அவளுடைய கணவன்... முதலிரவில் அவளுடன் சேரவில்லை... இதை அந்த விட்டிலிருக்கும் அவளுடைய உறவினர் யாரும் அறியவில்லை...

ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருக்கும் ஒரு வெள்ளைக்காரப் பெண் இதை தெளிவாக அறிந்து சொல்கிறாள் என்றால்... ஐஸ்வர்யா வாழ வந்த வாழ்க்கைக்கு என்ன அர்த்தம்...?

"என்ன... பேச்சையே காணோம்... இதுக்கே அயர்ந்து போய் விட்டாயே... இன்னும் உன் ஹஸ்பெண்ட் உன்னோடு மணமேடையில் நின்றபோது... நான்

சொல்லித்தான் உன்னை விட்டு விலகிப் போனான்னு தெரிந்தால் என்ன பண்ணுவாய்...?"

என்ன பண்ண முடியும்...? அறியாத பெண்ணின் கழுத்தில் ஒரு தாலியைக் கட்டி சிறை பிடித்துவிட்டு... ஆமாம்... நான் அப்படித்தான்... உன் கணவன் உன்னைத் தொட வேண்டாமென்று நான்தான் கட்டளை போட்டேன்... அவனும் உன்னைத் தொடாமல் விலகிப் படுத்து விட்டான் என்று முகமறியாத ஒரு பெண் ஏளனம் செய்தால்... அவளால் என்னதான் பண்ண முடியும்...

"உன்னை கொலை பண்ணுவேன்..." என்றாள் ஐஸ்வர்யா....

"வாட்...?" எலிஸபெத் அதிர்ச்சியுடன் கேட்க... "ஆமாண்டி... போனை வைடி..." என்று செந்தமிழில் அவளைத் திட்டி விட்டு... போனை அணைத்தாள் அவள்.



## 19

வைகறையின் குயில்கூவ...
பாட்டுச்சத்தம் கேட்கவந்தேன்...
வைகைக் கரையில் நீயிருந்தாய்...
உன்பாட்டு குயில்பாட்டா...?



ஐஸ்வர்யாவின் சிவந்த முகம்... கோபத்தில் மேலும் சிவந்திருந்தது... கௌசிக்கின் விழிகளை நேருக்கு நேர் பார்த்தாள் அவள்... அவளது பார்வையின் கனல் அவனைச் சுட்டது...

"அம்மா என்னை இப்படிப்பட்ட இக்கட்டில் மாட்டி விட்டிருக்கக் கூடாது..." அவன் எரிச்சலுடன் சொன்னான்...

அவளுடனான அவனது கல்யாணம் அவனுக்கு இக்கட்டாய் ஆகிவிட்டதா...?

ஐஸ்வர்யாவின் மனதில் வேதனை சூழ்ந்தது...

"இப்போதும் உங்களைப் பற்றித்தானே உங்க நினைப்பு...?" வெடுக்கென்று கேட்டுவிட்டாள்...

"நீ உன்னைப் பற்றி நினைக்கும்போது... நான் என்னைப்பற்றி நினைக்கக் கூடாதா...?" அவனும் பட்டென்று பதில் கொடுத்தான்.

"என்னைப் பற்றி என்ன நினைத்துவிட்டேன்...? என் மனசுக்குப் பிடிச்ச புருசனுக்கு மனசுக்குபுடிச்ச வளா நானில்லையே... எனக்குப் பதில் வேறொருத்தியை அவர் மனசுக்குப் பிடிச்சுப் போயிருக்கேன்னு நினைச்சேன்... அதுதப்பா...?"

"ஐஸ்வர்யா..."

இந்தக் கேள்விக்கு என்ன பதிலைச் சொல்வது என்று தெரியாமல் அவன் திகைத்தான்... அதே

சமயத்தில்... அவளது மனதிற்கு பிடித்தவனாக அவ விருக்கிறான் என்ற உண்மையை அவளத வாய் மொழியாலேயே கேட்டதில் ஒருவிதமான சந்தோசம் அவனது உள்ளத்தில் படர்வதை ஆச்சரியத்துடன் உணர்ந்தான்...

'இவளுக்கு என்னைப் பிடிச்சிருக்கா...?'

எதிரே கோபக் கனலுடன் நின்று கொண்டிருந் தவள் பேரழகி... வீரபாண்டிய கட்டபொம்மனைப் போல... நரைத்து விட்ட முறுக்கு மீசையை முறுக்கி விட்டுக் கொண்டு பெரிய கண்களை உருட்டி எதிராளியை பார்வையிலேயே பயமுறுத்தும் ரங்க நாதனின் பேத்தி... தகப்பனைப் போலவே பரம்பரையாய் வரும் பெரிய மீசையுடனும்... அதே உருட்டி விழிக்கும் பார்வையுடனும்... பத்துப் பேரை போகிற போக்கில் அடித்து வீழ்த்தி விடும் ஜெயப்பிரகாசத்தின் மகள்... அப்பாவையும்... தாத்தாவையும் போல பெரிய முறுக்கு மீசை இல்லாவிட்டாலும்... அடர்ந்த அளவான மீசையோடும்.... அவர்களின் புஜபராக்கிரமத்தோடும்... இளரத்தத்தின் வேகத்தோடும் விறைப்பாக முறைக்கும் அன்பழகன்... ஆனந்தனின் தங்கை...

இத்தனைக்கும் மேலாக... அந்த வீட்டின் பெருமைமிக்க வீர தீர ஆண்குலத்தின் பெருமை களையும் மீறி... சட்டம் பேசும் பெருமையுடைய பாரிஜாதத்தின் செல்ல பேத்தி...

அவள்... கௌசிக்கின் பணத்தை கண்டு மயங்கும் ரகமில்லை... அவனது குணத்தைக் கண்டு மயங்க...



அவனைப் பற்றி அவளுக்கு எதுவும் தெரியாது... அவனது அழகைக் கண்டு மயங்க.... நேரடியாய் அவனை அவள் பார்த்ததில்லை...

பின்... வேறு எதை அவனிடம் கண்டு மயங்கி னாள்...? அவள் மனதிற்கு அவனைப் பிடித்திருக் கிறதாம்... திருவேடகத்தில்... வைகைக் கரையில் வளர்ந்தவளுக்கு... சென்னையில் பிறந்து... வெளி நாடுகளில் சுற்றிக் கொண்டிருந்த அவன் மீது காதல் துளிர்த்திருக்கிறது...

அவனோ... அந்தக் காதலுக்கு அருகதை யில்லாதவனாக... வேறு ஒரு பெண்ணுடன் முறை தவறி வாழ்க்கை நடத்துகிறவனாக இருக்கிறான்...

'இதை எங்கே போய் சொல்வது...?' அவன் பெருமூச்சு விட்டான்...

"அவ கேட்கிறா... என் கௌசிக் ரூமில் உனக் கென்ன வேலைன்னு... நீ யாருன்னு கேட்கிறா... நான் தான் உங்க பெண்டாட்டின்னு அவகிட்டச் சொன் னேன்... அப்ப அவ யாருன்னு கேட்கிறா..."

"த்சு... இதையெல்லாம் எதிர்பார்த்துத்தான் நான் சொன்னேன்..."

"யார்கிட்டச் சொன்னீங்க... என்கிட்டயா...?"

ஐஸ்வர்யாவின் கேள்வியில் குத்தல் இருந்தது... அவன் அவளையே இமைக்காமல் பார்த்தான்...

பதிலுக்கு பார்வையை விலக்கிக் கொள்ளாமல் தீர்க்கமாக அவனைப் பார்த்தாள் அவள்...

"நான் என் வீட்டில் எல்லா உண்மைகளையும் சொல்லிட்டேன் ஐஸ்வர்யா..."

"என் கிட்டச் சொன்னீங்களா...?"

"என் வீட்டிலிருந்துதான் உன்னைப் பெண் கேட்டு வந்தாங்க... நான் கேட்டு வரவில்லை..."

என் மேல் குற்றமில்லை... உன்னிடம் உண்மை களைச் சொல்லாமல் மறைத்தது அவர்களின் குற்றம் என்ற ரீதியில்தான் கௌசிக் இந்த வார்த்தைகளைக் கூறினான்..

ஆனால் அந்த வார்த்தைகள் முள்ளாக ஐஸ்வர்யா வின் மனதில் சென்று தைத்தன...

அவள் வேதனை தாளாமல் கண் மூடிக் கொண் டாள்... அவளது அந்தக் கோலத்தைக் கண்டு கௌசிக் மனம் பதறிவிட்டான்...

"ஐஸ்வர்யா..."

அவளருகில் நெருங்கினான... அவள் பின்னால் நகர்ந்தாள்...

"வேண்டாம்... என்கிட்ட வராதீங்க..."

"ஐஸ்வர்யா..."

"அவ சொன்னா... நேத்து உனக்கு முதலிர வாச்சே... உன் புருசன் உன்னைத் தொட்டாரான்னு..."



"ஏய்ய்..."

"நான் சொன்ன ஒரு வார்த்தைக்காக... உன்னோடு கழிக்க வேண்டிய முதலிரவையே கேன்சல் செய்தார் என் புருசன்னு சொன்னா..."

"த்சு..."

"உன்னோடு மணமேடையில் நின்னபோது... நான் சொல்லித்தான் உன் புருசன் உன்னை விட்டு விலகிப் போனார்ன்னு சொன்னா..."

"இந்தப் பேச்சை விட்டுவிடேன்..."

"நீங்க அவளுடைய ஆம்பளைன்னு சொன்னா..."

"விட்டுவிடுன்னு சொல்கிறேனில்லையா...?"

"உன் புருசன் என்னோடதான் வாழ்கிறாருன்னு சொல்கிறா... உனக்கு முன்னாலேயே என்னைத் தொட்டாருன்னு சொல்கிறா..."

"இந்தப் பேச்சு வேண்டாம் ஐஸ்வர்யா..."

"எனக்குத் தெரியாமப் போச்சேங்க... என் அப்பாவோட சின்னம்மா மக பொண்ணு கேட்டு வந் திருக்காங்கன்னு நினைச்சேனே... சொந்தம் விட்டுப் போகக் கூடாதுன்னு திருவேடகத்துக்கு என்னைத் தேடி வந்திருக்கிறாங்கன்னு நினைச்சேன்... அவங்க சென்னையை விட்டுப் புட்டு அந்த வைகைக் கரைக்கு பொண்ணு கேட்டு வந்ததுக்குப் பின்னால... இத்தனை சூட்சுமம் இருக்கும்ன்னு எனக்குத் தெரியாமப் போச்சே..."

"நான் உன்னை நேரே பார்க்க வந்திருக்கணும்..."

"வந்திருந்தா... இந்தக் கல்யாணம் நின்னு போயிருக்கும்... இல்லையா...? அது நடக்காமப் போனதில உங்களுக்கு எம்புட்டு வருத்தம்... இதுவும் எனக்குத் தெரியாம போச்சே..."

"ஏய்... நீ படற வேதனையை என்னால தாங்கிக்க முடியலைடி... அதனால்தான் சொன்னேன்... மத்தபடி நீ நினைக்கிறதைப் போல அர்த்தம் வைத்துச் சொல்லவில்லை ஐஸ்வர்யா..."

"யாரு வார்த்தையில என்ன அர்த்தமிருக்குன்னு எனக்கு எப்படிங்க தெரியும்...? நான் சூதுவாதில்லாம வளர்ந்தவ... மனுச மனசுக்குள்ளே இத்தனை விசமிருக்கும்ன்னு எனக்குத் தெரியாமப் போச்சே..."

"அம்மாகிட்ட படித்துப் படித்துச் சொன்னேன் ஐஸ்வர்யா..."

"என்னன்னு சொன்னீங்க... என்பெண்டாட்டி எலிஸபெத்துதான். புதுசா ஒரு பொண்டாட்டியை எனக்குக் கட்டி வைக்காதீங்கன்னு சொன்னீங்களா...?"

"அவளை நான் கல்யாணம் பண்ணிக் கொள்ளவில்லை..."

"கல்யாணம் பண்ணிக்காமலேயே... அவ என்னைப் பார்த்து நீ யாருன்னு கேட்டுட்டான்னா... எப்படிப்பட்ட



வாழ்க்கைய நீங்க அவகூட வாழ்ந்திருக்கணும்?... இல்ல... வாழ்ந்துக்கிட்டு இருக்கணும்...?"

ஐஸ்வர்யா புயலாக நின்றாள்... அவன் எதைச் சொன்னாலும் ஒரு எதிர் கேள்வியைக் கேட்டாள்... அவளுடைய கேள்விகளுக்கான பதில்களைச் சொல்ல கௌசிக்கினால் முடியவில்லை... அதேசமயத்தில் அவளது கேள்விகளைப் புறக்கணிக்கவும் அவனால் இயலவில்லை...



## 19

வைகறையின் குளிர்காற்றில்...
மனதுக்குள்ளே உல்லாசம்...
வைகைக்கரையில் காத்திருக்கும்...
மாங்குயிலே! உன் நேசம்...

அவன் வேறு ஒரு பெண்ணின் தேகத்தைத் தொட்டவன்தான். அவளோடு அனைத்து எல்லைகளையும் கடந்து... கூடிக் குழாவி உறவின் உச்சத்தைத் தொட்டவன்தான்...

ஆனாலும்... எதிரே நிற்பவளின் வார்த்தைகளை உதாசினம் செய்து விலகிப் போக அவனால் முடியவில்லை....

'நான் உன்னை மனசார விரும்பினேனே...' என்ற அவளின் பரிதவிப்பை அவனால் கண் கொண்டு பார்க்க இயலவில்லை.

அவள் கற்பின் கனலாக நின்றாள்... உன்னைத் தானே என் மனதில் நினைத்தேன்? என்ற கேள்வியினை அவன் முன் வைத்து நின்றாள்... உன்னைத் தவிர... வேறு ஒருத்தனை மனதாலும் நினைக்கவில்லையே என்று நியாயம் கேட்டு நின்றாள்...

பெற்றவர்களின் முன்னால் குற்றவாளியாய் தலை குனியாதவன் அவள் முன்னால் குற்றவாளியாய் உணர்ந்து... தலை குனிந்தான்...

அவளுக்கு அதுவும் பொறுக்கவில்லை... அவனது கம்பீரம் குலைவதைக் காணவும் அவளுக்கு சகிக்கவில்லை... தந்நிலை விளக்கம் சொல்ல முடியாமல் அவன் தடுமாறுவதைக் காண அவளுக்கு முடியவில்லை...

எனவே... கேள்வி கேட்பதை உடனடியாக நிறுத்தினாள்... பேச்சின் திசையை மாற்றினாள்...

"கிழே... அப்பா காத்திருக்கார்..."

"எதுக்கு...?"

"என் பதிலுக்காக..."

"என்ன பதில்...?"



"மறு வீட்டு விருந்துக்கு நாம் வருவோமா... இல்லையான்னு தெரிஞ்சுக்கனுமில்லையா... அந்த பதிலுக்காக..."

"கட்டாயம் போகனுமா...?"

"ம்ம்ம்..."

"எத்தனைநாள் அங்கேயிருக்கனும்..."

"ஒருவாரம்..."

"ஆறு நாள்கள் இருக்கலாமே..."

"ம்ம்ம்..."

"ஆபீஸ் போய் அர்ஜன்ட் வொர்க் ஒன்றை முடித்து விட்டு.... நான் இல்லாதபோது எப்படி ஆபீஸை ஹேன்ட் பண்ணனும்கிற கைட்னெஸ்ஸை குடுத்து விட்டு ஒரு மணி நேரத்துக்குள்ள வந்து விடுகிறேன்... நீ கிளம்பி ரெடியாய் இரு..."

"சரி..."

"அப்புறம்...?"

"அவ்வளவுதான்..."

ஐஸ்வர்யா அறைக்கதவை திறந்து கொண்டு வெளியேறினாள்... கௌசிக் அவளைப் பின் தொடர்ந்தான்...

கோபாவேசத்துடன் சாப்பிட்டு முடித்த ஜெயப்பிரகாஷ்.... ஹால் சோபாவில் அமர்ந்து யாருடனும்

பேசாமல் மௌனமாக இருந்தாள்.... மகளும்... மருமகனும்... சேர்ந்து இறங்குவதைக் கண்ட அவரின் மனம் நிறைய... கோபமும் குறைந்தது...

கௌசிக் மரியாதையுடன் அவரைப் பார்த்து....

"ஒன் அவரில் வந்து விடுகிறேன்.... எல்லோரும் கிம்பி ரெடியாய் இருங்க..." என்று சொல்லிவிட்டுப் போய் விட்டான்...

மோகனுக்கும்... வைஷ்ணவிக்கும் ஆச்சரியம் பொங்கி எழுந்தது... "என்னங்க இது... இவனைக் கல்யாணத்திற்கு சம்மதிக்க வைக்க... நான் தூக்க மாத்திரைகளை முழுங்க வேண்டியதா இருந்தது... இப்ப என்னடான்னா... பெண்டாட்டி ஒருவார்த்தை சொன்னதும் உடனே சரின்னு சொல்லிட்டான்..." வைஷ்ணவியின் குரலில் சன்னமான பொறாமை தொனித்தது...

"சரி... சரி... மாமியார் புத்தியை காட்டி விடாதே... நமக்கு இதுதானே வேண்டும்...?"

"நீங்க சொல்வதும் சரிதான்... தாய் பேச்சைக் கேட்காதவன்... பெண்டாட்டி பேச்சையாவது கேட்கிறானே... என்ன ஒன்னு நேத்து இந்நேரம் தாலி கட்டியவனை... ஒரே நாளில் மயக்கி கைக்குள்ள வச்சுக்கிட்டாளே என் மருமக..."

"நீ ஒரு மணி நேரத்துலயே என்னை உன் கண்ட்ரோலில் கொண்டு வந்துட்டதா எனக்கு ஞாபகம்... பழசெல்லாம் மறந்து போச்சா...?"



மோகன் கண்சிமிட்ட... அந்த வயதிலும் வெட்கி தலை குனிந்தாள் வைஷ்ணவி...



## 20

'வைகறைக்காக காத்திருக்கும்
இரவுக்கும் விடியல் வரும்...
வைகைக்கரையில் பூத்திருக்கும்...
பூவுக்கும் வாழ்வு வரும்...

தார் ரோட்டிலிருந்து பிரிந்து சென்ற பாதையில் காரைத் திருப்பினான் கௌசிக். அவனுக்கு முன்னால் சென்ற புதுக்காரை அன்பழகன் ஓட்டிக் கொண்டிருந்தான்...

"என் யோசனை எப்படிப்பா...?"

"எதைடா சொல்கிற...?"

பின்சீட்டில் மனைவியின் அருகே அமர்ந்திருந்த ரங்கநாதன் வினவினார்...

"காரை வாங்கச் சொன்ன யோசனையைத்தான் சொல்றேன்..."

"ஆமாண்ணே... நீ சொன்னது சரிதான்..."

அவனருகே அமர்ந்திருந்த ஆனந்தன் ஆமோதித்தான்... பின்னால் வந்து கொண்டிருந்த கௌசிக்கின் காரில் சாதனாவும் கூட வருகிறாள்.... அவள் பார்வைக்கு முன்னால் அவன் குடும்பத்திற்கும் சொந்தக் கார் இருக்கிறது என்று காட்டிக் கொண்ட பெருமை அவனுக்கு...

"சரியாத்தாண்டா மகனே செஞ்சிருக்க... காசு பணத்தை பொட்டிக்குள்ள பூட்டி வச்சு என்னத்தைக் கண்டோம்...? பொண்ணு கொடுத்த வீட்டுக்கு முன்னால நாமளும் எதிலும் குறைஞ்சவனில்லன்னு காட்டறதுதானே பெருமை... என்னம்மா நான் சொல்றது...?"

அவர் தாயின் பதிலை எதிர்பார்த்து பாரிஜாதத்தைப் பார்க்க.. சாவித்திரி அவரைப் பார்வையிலேயே சுட்டெரித்தாள்.

'இந்த மனுசனுக்கு பக்கத்தில உட்கார்ந்திருக்கிற என்னைக் கண்ணுக்குத் தெரியாது. என்னையும் தாண்டி... ஆத்தாக்காரி கிட்டத்தான் ஆலோசனை கேட்கத்தோணும்...'

மருமகளின் பொறுமலை உணர்ந்து கொள்ள முடியாத அப்பாவியா பாரிஜாதம்...? அவள்தான் கற்ற வித்தைகளைக் கைக்குள்ளே வைத்திருக்கிற மகராசியாச்சே...

அதனால்... 'உனக்கெல்லாம் ஒரு கணக்கா...?' என்பத போன்ற பார்வையை மருமகளின் மீது வீசிக் கொண்டே...



"அதச் சொல்லுடா ராசா" ஆயிரம் தான் வைஷ்ணவி எனக்குத் தங்கச்சி மகளா இருந்தாலும்... அவபுருசன் நமக்கு அன்னியம்தானேடா.. அவக பவிசுக்கு நம்ம பவிசு ஒன்னும் குறைஞ்சதில்லன்னு காட்டலைன்னா எப்படி...?" என்று பதில் கொடுத்தாள்...

மாமியாரின் பார்வையை சாவித்திரியினால் சகித்துக் கொள்ள முடியவில்லை... உடனடியான மறைமுகத் தாக்குதல் ஒன்றை மாமியாரின் மீது வீச வேண்டிய கட்டாயத்துக்கு ஆளானாள் அவள்...

"உங்களுக்கெல்லாம் இதுல பெருமை... எனக்கு வேற ஒன்னுலதான் பெருமை..." என்றாள் சாவித்திரி...

பாரிஜாதத்தின் புருவங்கள் உயர்ந்தன....

'என் பாட்டுக்கு இசைப்பாட்டு ஒன்னு இருக்கா...?' என்ற ரீதியில் மருமகளைப் பார்த்து வைத்தாள் அவள்.

"என்னடி சொல்ற...?"

ஒருவழியாய் தாயின் முன்னால் மனைவிடமும் ஒரு கேள்வியைக் கேட்டுவிட்டார் ஜெயப்பிரகாசம்...

அதைக் கேட்க வைத்துவிட்ட மருமகளை எரிக்கும் பார்வையினால் சுட்ட பாரிஜாதம்...

'வித்தாரக்கள்ளி...' என்று மகா அன்புடன் மருமகளை மனதிற்குள் விளித்தாள்...

அதை அறியாதவளா சாவித்திரி...? மாமியாரை அந்த அளவுக்கு கோபப்படுத்திப் பார்க்க வேண்டும் என்பதுதானே அவள் நோக்கம்...

அதனால்... இந்தப் பேச்சு போதுமா... இன்னும் கொஞ்சம் வேணுமா... என்று கேட்டும் பதில் பார்வையை மாமியாரின் மீது செருத்தியபடி கணவனைப் பார்த்துப் பேசினாள்...

"நம்மகிட்ட மறுவீட்டு விருந்துக்கு வர முடியாதுன்னு சொன்ன மாப்பிள்ளை... ஐஸ்வர்யா போய் பேசினதும்... மறுபேச்சு பேசாம மறுவீட்டு விருந்துக்கு கிளம்பி வந்திட்டாரு... அதைக் கவனிச் சீங்களா...?"

"ஆமாண்டி சாவித்திரி... நீ சொல்றதும் சரிதான்..."

"அவங்க அம்மா சொன்னப்பக் கூட அவரு அதைக் காதில போட்டுக்கலையே... நம்ம ஐஸ்வர்யா சொன்னதும் தலையை ஆட்டிட்டாரே...."

"நிசம்தாண்டி சாவித்திரி... மாப்பிள்ளைக்கு ஐஸ்வர்யாமேல அம்புட்டுப் பிரியம்..."

"கல்யாணமான ஒரே நாளில பெண்டாட்டி பேச்சை மதிக்க வைச்சிட்டா என் மக... எனக்கு அதிலதான் பெருமை..."

'அடித்தாளே ஒரு நெத்தியடி...' ஜெயப்பிரகாஷ் மனதிற்குள் மனைவியின் பேச்சை பாராட்டி ரசித்தார்.






வைகறையில் வந்துவிட
மனதில்தான் நினைத்திருந்தேன்
வைகைக்கரையில் நீ காத்திருந்தும்...
வந்துசேர முடியவில்லை...

பாரிஜாதத்தின் முகம் கடுகடுவென்று மாறி விட்டதை காரின் முன் பக்க கண்ணாடியில் பார்த்து ரசித்தான் ஆனந்தன்...

"அடேங்கப்பா.. கிழவி வாயைத் திறக்க முடியாம ஒரு போடு போட்டு வச்சிருச்சே நம்ம அம்மா... கில்லாடிண்ணே...."

ரகசியக் குரலில் தமையனிடம் பேசிச் சிரித்தான் அவன். தம்பியின் பேச்சை ஆமோதிக்கும் வகையில் தலையை ஆட்டிய அன்பழகன் பின்பக்கம் திரும்பி பாரிஜாதத்தைப் பார்த்தான்.

"என்ன பாட்டி... பேச்சைக் காணோம்..."

"என்னத்தடா பேசச் சொல்ற...?"

"அம்மா சொல்றதும் சரிதானே..."

இல்லையென்று எப்படிச் சொல்வாள் பாரிஜாதம்... பேசப்படுவது அவளது செல்லப் பேத்தியின் பெருமையல்லவா...?

அதேசமயம்... அதை ஒப்புக் கொள்ளவும் அவளால் முடியவில்லை... சாவித்திரியின் பேச்சை பாரிஜாதம் ஒப்புக் கொள்வதா....? எனவே,

"ரோட்டைப் பார்த்து வண்டியை ஓட்டுடா..." என்று பேரனை கண்டித்தாள்...

"ஏன் கிழவி... அண்ணனை எப்படி வண்டியை ஓட்டச் சொல்கிற... நீ தாத்தாவ... அந்தக் காரில் வான்னு ஓட்டி விட்டயே... அப்படி காரை ஓட்டச் சொல்கிறயா...?" ஆனந்தன் பாரிஜாதத்தை வம்புக்கு இழுத்தான்...

"போடா... புத்தி கெட்டவனே..."

"யாரு...? நானு...? புத்திகெட்டவன்...?"

"ஆமாண்டா... இப்ப அதுக்கு என்னாங்கிற...?"

"எங்கேயோ போற மாரியாத்தா... எம்மேல கொஞ்சம் ஏறாத்தான்னு... யார் மேலயோ காட்ட வேண்டிய காண்டை எம்மேல காட்ட வர்ற... நடத்து...."

"அட அறிவு கெட்டவனே..."

"ஏய்ய் கிழவி... கொஞ்சம் அடைமொழியை நிறுத்திவிட்டு... பேச்சுக்கு வந்து சேரு..."



"அர்த்தம் புரியாத மடப்பயலுக்கு இப்படிச் சொன்னாத்தான் எடுபடும்... ஏண்டா... அந்தக் காரில என் பேத்தி வர்றா..."

"ஆமா... அதுக்கென்ன..."

"நம்மாளுகன்னு யாராவது ஒருத்தரு கூட இருக்கனுமுன்னுதான அந்தக் காரில நானு ஏறப் போனேன்...?"

"அப்பாதான் வேண்டாமுன்னு சொல்லிட்டாரே..."

"உன் அப்பன்காரனுக்குத்தான் அறிவே இல்லையே..."

பெண்டாட்டியை என்னவென்று ஒரு கேள்வியைக் கேட்காமல் கண்களில் பாராட்டைத் தெரிவித்த மகனைத் திட்ட இதை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டாள் பாரிஜாதம்...

"அவருக்கு அறிவு நிறைய இருக்கிறதால தான் உன்னை அந்தக் காருக்கு அனுப்பலை கிழவி... உனக்குத்தான் இதைப் புரிஞ்சுக்க அறிவு பத்தலை..."

"உனக்கு ஏத்தம்டா..."

"எனக்கு ஏத்தமுமில்ல... இறக்கமுமில்ல... உன் வாய் எப்படின்னுதான் இந்த உலகத்துக்கே தெரியுமே... தங்க ஊசிங்கிறதுக்காக... அதைக் கண்ணில குத்திக்க முடியுமா...?"

"இப்ப எதுக்குடா... இந்தச் சொலவடையைச் சொல்ற...?"

"நீ பெத்த தாயிங்கிறதுக்காக... எங்கப்பா... பெத்த மக வாழ்க்கய பாதிக்கிற வேலையச் செய்ய முடியுமா...? நீ அந்தக் காரில வந்தா... வாயை வச்சுக்கிட்டு சும்மா இருக்காம வம்பைக் கட்டி இருப்ப.. ஐஸ்வர்யாவோட புருசன்... மறுவீட்டு விருந்துக்கே வராம காரைத் திருப்பிக்கிட்டு போயிட்டா என்ன செய்யறதுன்னு அப்பா யோசிச்சிருப்பார்..."

உண்மை அதுதான் என்பதால்... ஜெயப் பிரகாசம்... 'பே...' என்று விழிக்க... சாவித்திரி சிரிப்பை அடக்கிக் கொள்ள... வாயைப் பொத்திக் கொண்டாள்...

'நேரம்டி... மருமகளே... உனக்கு ஒரு நா... இருக்குடி...' சாவித்திரியை விழிகளால் பாரிஜாதம் எச்சரிக்க... அவள்... 'இதைப் போல எம்புட்டைப் பார்த்திருப்பேன்...' என்று பதிலுக்கு பார்வையால் சொல்லியபடி மகத்தை திருப்பிக் கொண்டாள்...

"போதும்டா பேராண்டி... வாயை மூடிக்க..."

"அதை நீ எனக்குச் சொல்கிறாயா...?"

"ஆமாண்டா... அந்தக்காரில் என்ன நடக்குதுன்னு வேவு பார்க்கத்தான்... உன் தாத்தாவை அந்தக் காருக்கு ஓட்டினேன்..."

"நல்ல ஆளை வேவுபார்க்க அனுப்பின போ.... அவராவது... வேவு பார்ப்பதாவது... அதெல்லாம் உனக்குத்தான் வரும்... அவருக்கு வராது..." ஆனந்தனின் கணிப்பு சரியானது என்று பாரிஜாதத்திற்கும் தெரியும்...





# 22

வைகறையில் குயில் கூவ....
மனதெல்லாம் சிலிர்த்தடி...
வைகைக்கரைக்கு வந்தவுடன்...
மனது உன்னைத் தேடுதடி...

ஆனந்தனின் கணிப்பு மிகச் சரியானதாக இருந்தது... பின் பக்க சீட்டில் சாதனாவின் அருகே அமர்ந்திருந்த ரங்கநாதன். கார் கதவோரம் சாய்ந்து தூங்கிப் போயிருந்தார்...

"எப்படி நிச்சிந்தையாய் தூங்குகிறார்...?" சாதனா ஆச்சரியப்பட்டாள்...

ஐஸ்வர்யா அவளைத் திரும்பிப் பார்த்தாள்... பழக்கமில்லாத அவளிடம் என்ன பேசுவது என்று புரியாமல் மெலிதாகப் புன்னகைத்தாள்.

"உனக்குப் போரடிக்குதில்ல... அதனாலதான் நான் உன் பக்கத்தில் உட்கார்ந்துக்கிறேன்னு சொன்னேன்.. நீ கேட்கலை..."

"அதெப்படி அண்ணி... நீங்க என் பக்கத்தில் உட்கார்ந்துக்கிட்டு வர... அண்ணன் பக்கத்தில் தாத்தா

உட்கார்ந்துக்கிட்டு வருவதா...? குட்ஜோக்... புதிதாய் கல்யாணம் ஆகியிருப்பது உங்களுக்கும்... அண்ண னுக்கும்தான்..."

'அப்படியா... உன் அண்ணனுக்கு... மனைவி யென்பவள் புதிதானவளா... இதுதான் குட்ஜோக் சாதனா... உன் அண்ணன் வேணும்னா எனக்குப் புதிதானவரா இருக்கலாம்... ஆனா... ஒரு பெண்ணுடன் வாழ்வது உன் அண்ணனுக்குப் புதிதில்லை...'

ஐஸ்வர்யா மௌனமாகி விட... அவளது எண்ண வோட்டத்தை புரிந்து கொண்டவனாக... கௌசிக் பேச்சை மாற்றினான்.

"உன் பிரண்ட்ஸோடு சிம்லா டூருக்கு போவதாக இருந்தாயே சாதனா... அதைக் கேன்சல் பண்ணி விட்டு எங்களோடு வரணும்னு உனக்கு எப்படித் தோன்றியது...?"

'எப்படித் தோன்றியது...'

சாதனாவின் மனக்கண்ணில் ஆனந்தன் தோன்றி... மெலிதாக கண்ணடித்தான்... அவள் முகம் குங்கும மானது...

எனக்கு இந்த வைகைக் கரையில் வாழும் ஒருவனைப் பிடித்திருக்கிறது... அவனுக்காகத் தான் நான் சிம்லா டூரில் கலந்து கொள்ளாமல் வைகைக் கரையை தேடி வந்திருக்கிறேன்...' என்று எப்படி அவளால் சொல்ல முடியும்...?



அதனால் வேறு வகையாகப் பேசி சமாளித்தாள்...

"எனக்கு அண்ணியை ரொம்பவும் பிடித்திருக்கிருக் குண்ணா... அதனால் அவங்க ஊரைப் பார்க்க கிளம்பி வந்துட்டேன்..."

'உனக்குப் பிடித்து என்ன செய்ய...? உன் அண்ணனுக்குத்தான் என்னைப் பிடிக்கலையே...' ஐஸ்வர்யா உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

அவள் படும் மௌன வேதனையை கௌசிக்கால் புரிந்து கொள்ள முடிந்தது... அவளைத் தேற்றும் வகையறியாமல்... அவளை அடிக்கடித் திரும்பிப் பார்த்தபடி காரை ஓட்டினான்...

அவள் கழுத்தில் கிடந்த நகைகளை விட அதிகமாக... அவன் கட்டிய புதிதான மஞ்சள் சரடு... ஒளிர்ந்து கொண்டிருந்தது...

புதுமணப் பெண்ணுக்கே உரிய நாணம் கலந்த அழகு அவள் முகத்தின் சோர்வை மீறித் தெரிந்தது...

அவள் கைவிரல்களில் கோலம்... கோலமாகப் போடப்பட்டிருந்த மருதாணி... சிவந்திருந்த அவளது கையில் அழகாக இருந்தது...

பெண்மையும்.... நாணமும்.... அழகும்... ஒன்று சேர்ந்த அட்சர சுத்தமான ஒரு தமிழ்பெண்ணின் கழுத்தில் தாலியைக் கட்டியும் அவளைத் தொட்டு ஆள முடியவில்லையே என்ற ஏக்கம் அவன் மனதில் சன்னமாக எழுந்தது...

அன்று காலையில் அவனை நிற்க வைத்து கேள்வி கேட்டவள் அதற்குப் பின் அதைப் பற்றிப் பேசவேயில்லை...

அவன் அலுவலகத்திலிருந்து திரும்பி வந்த போது.... அவனது பெட்டியில் உடைகள் அடுக்கப்பட்டு தயாராக இருந்தன....

'இதெல்லாம் எப்படி இவளுக்குத் தெரியும்...?' அவன் மனதில் வியப்பு சூழ்ந்தது...

அவனுடைய தேவைகளை அவள் இயல்பாக கவனித்தாள்.... களைத்து வந்தவனின் கையில் காபியைக் கொடுத்தாள்.... அவனுடைய சோப் முதற்கொண்டு தேவைப்படும் பொருள்களை.... தனிப்பையில் எடுத்து வைத்தாள்.... அவளது பணிவிடைகள் அவனுக்கு இதமாக இருந்தன.... அத்தனை காலமாக.... இல்லாத ஓர் அழகும்... ஒளிர்வும் அவளது நடமாட்டத்தால்.... அவனது அறைக்குள் வந்ததைப் போல.... அவன் உணர்ந்தான்...



## 23

வைகறையில் விழித்த போது....
உன்முகத்தை மனம் தேட....
வைகைக்கரைக்கு ஓடி வந்தேன்....
என் முகத்தை பாராமல் சென்றாய்...



"பொண்ணும்.... மாப்பிள்ளையும்... சேர்ந்து நில்லுங்க..." பாரிஜாதம் தன் பெருத்த குரலில் சத்தமாய் சொன்னாள்... கௌசிக் ஐஸ்வர்யாவின் அருகே நெருங்கி நின்றான். அவளது தோளோடு... அவனது உடல் உராய... அவள் சட்டென்று விலகி நின்றாள்...

சுருங்கியது கௌசிக்கின் முகம் மட்டுமல்ல... பாரிஜாதத்தின் முகமும்தான்...

'புதுசாக் கல்யாணமானவ.... புருசன்காரன் மேல பட்டா... சட்டுன்னு தள்ளி நிக்கிறாளே.... என்னவா இருக்கும்...?'

பாரிஜாதம்.... ஓடுகிற ஆற்றில் கூட ஒன்பது நெளிவு சுளிவுகளைக் கண்டுபிடித்து விடுவாள்... அவளது கண்பார்வையில் ஐஸ்வர்யாவின் ஒதுக்கம் பட்டுவிட்டது.... அவள் விழிகள் இடுங்க.... பேத்தியையும்.... அவளது கணவனையும் ஆராய ஆரம்பித்து விட்டாள்...

ஜெயப்பிரகாசத்தின் ஒன்றுவிட்ட தம்பியின் மகள் ஆரத்தி எடுத்து விட்டு...

"ம்ம்... தட்டில் பணம் போடுங்க மாமா..." என்று கௌசிக்கிடம் கொஞ்சுதலாக கேட்டாள்...

'சீமைச் சிலுப்பட்டை... என் பேத்தி புருசன்கிட்ட கொஞ்சிப் பார்க்கிறதைப் பாரேன்...'

கொழுந்தனின் பேத்தியை வெத்தலை பாக்காய் மடித்துப் போட்டு மென்று துப்ப... பாரிஜாதத்தின் வாய் பரபரத்தது... ஆனால்...

"கிழவி.... தங்கச்சியும்... மாப்பிள்ளையும்... மறு வீட்டு விருந்துக்கு இருந்துட்டுப் போறவரைக்கும் உன் வாயை நீ திறக்கவே கூடாது.... அப்படி மீறித் திறந்தேன்னு வைய்யு... உன் வாய்க்கு பயந்து மாப்பிள்ளை தங்கச்சியை இங்கேயே விட்டுப் புட்டு.... மெட்ராஸீக்கு ஓடிப்போயிடுவார்... அதனால உன் திருவாயைக் கொஞ்சம் அடக்கி வாசி..." என்று ஆனந்தன் அவளை எச்சரித்திருந்தது நினைவில் வந்து தொலைக்க... பேத்தியின் வாழ்வை நினைத்து... தன் கொதிப்பை அடக்கிக் கொண்டாள்...

"பணமா...? எதுக்கு பணம் போடனும்...?" கௌசிக் புரியாமல் ஐஸ்வர்யாவைப் பார்த்து புருவங் களை உயர்த்தினான்...

"இது எங்க பக்கத்து பழக்கம்... புதுசாக் கல்யாண மானவங்க வீட்டுக்குள்ள வரும்போது ஆரத்தி எடுத்தா.... மாப்பிள்ளை.... தட்டில் பணம் போட னும்...." ஐஸ்வர்யா விளக்கம் சொன்னாள்.

"நைஸ்..." கௌசிக் தோளைக் குலுக்கிச் சிரித்த விதம் அழகாக இருக்க... ஐஸ்வர்யா முகத்தை திருப்பிக் கொண்டாள்...



அவள் முகம் மாறிவிட்டது... கைக்கு முன்னால் மனதுககுப் பிடித்தவன் நின்றிருக்கிறான்... அவன் கட்டிய தாலி அவள் கழுத்தில் இருக்கிறது... ஆனாலும் அவனை மனதாரப் பார்க்கக்கூட அவளுக்கு உரிமை யில்லாததைப் போன்ற ஏக்கம்... அவள் முகத்தில் சூழ்ந்தது...

பேத்தியின் முகத்தில் சூழ்ந்த ஏக்கம்... பாரிஜாதத்தின் மனதில் மீண்டும் கேள்விகளை எழுப்பியது...

'ஏன் இவ... கைப்பொருள் பறிபோனதப் போல... இந்த முழி முழிக்கிறா...'

கௌசிக் தன் சட்டைப் பையிலிருந்து... ஆயிரம் ரூபாய் நோட்டை எடுத்து தட்டில் போட... கூடியிருந்த ஊரார்... நாடியில் கைவைத்து அதிசயித்தனர்..

ஆனால்... ஐஸ்வர்யாவின் சித்தப்பா மகளுக்கு அந்த ஆயிரம் ரூபாய் திருப்தியை அளிக்கவில்லை...

"ஏன் மாமா... உங்க பவிசுக்கு ஒத்தை ஆயிரம் ரூபாயைத்தான் போடுவீங்களா...? ரூபாய் கட்டைப் போட மாட்டிங்களா...?" அவள் வழிவிடாமல் வழக் கடித்தாள்...

அதற்கு மேல் பொறுமை காக்க பாரிஜாதத்தால் முடியவில்லை... "விட்டா எங்க வீட்டு மாப்பிள்ளை கிட்ட சொத்தையே எழுதி வாங்கிடுவ போல இருக்கு... எல்லாம் போட்ட வரைக்கும் போதும் வழியை

விடு..." என்று முகத்தில் முள்ளைக் கட்டிக் கொண்டு பொரிந்தாள்...

'ஆளும்... முகரையும்... தாவணிய ஒழுங்காப் போடாம... போஸ் கொடுக்கிறதைப் பாரு...'

ஆனந்தன் பாரிஜாதத்தை முறைக்க... கௌசிக் சிரித்தபடி... நூறு ரூபாய் கட்டு ஒன்றை எடுத்து ஆரத்தி தட்டில் போட்டான்... கூட்டம் 'ஆ'வென்று வாயைப் பிளந்தது...



## 24

வைகறையில் எழுந்தபோது
வானமெல்லாம் கார்மேகம்...
வைகைக்கரையில் காற்றடிக்க...
மேகம் பொழிந்த மழையின் சாரல்...

ஆற்றங்கரையோரமாக நடந்த கௌசிக்.... அதன் அழகில் மயங்கிப் போனான்...

"வொண்டர்புல்.... பியுட்டிபுல்..." என்று மெய் மறந்து கூறினான்...

"என்னண்ணே.... நம்ம வீட்டு மாப்பிள்ளை... எல்லாத்தையும்... ஃபுல்... ஃபுல்லாச் சொல்கிறாரு....



ஆஃப்.... குவார்ட்டரெல்லாம் இவருக்கு நினைப்புக்கே வராதா..." ஆனந்தன்... அன்பழகனிடம் கிசுகிசுத்தான்...

"சும்மாயிருடா... அவருகாதில விழுந்து வைக்கப் போகுது..." அன்பழகன் என்னவோ... மிலிடிரி பரேடு போகிறவனைப் போல... விறைப்பாக கௌசிக்கை பின்பற்றியபடி கூறினான்...

"இதிலே குளிப்பீங்களா...?" கௌசிக் திரும்பிப் பார்த்துக் கேட்டான்... "நல்லாக் கேட்டிங்க போங்க... எங்களுக்கு அதுதானே வேலை...? அதிலயும் ஐஸ்வர்யாவுக்கு தினம் ஒரு மணிநேரமாவது.. இந்த ஆத்துத் தண்ணியில நீச்சலடிச்சக் குளிச்சாகனும்..." அன்பழகன் பெருமையாக பதில் சொன்னான்....

"ஈஸிட்.... ஐஸ்வர்யா தினமும் இங்கே வந்து ஸ்விம்மிங் பண்ணுவாளா...?"

கௌசிக்கின் மனக்கண்ணில் ஈரக்கூந்தலுடனும்.... நனைந்த சேலையுடனும்... மோகினி போல ஐஸ்வர்யா... நீரிலிருந்து எழுந்து நின்றாள்...

'நீராடும் அழகெல்லாம்...
நீமட்டும் பார்க்கலாம்...
நீர்தொட்ட மேனியை...
நீ தொட்டுப் பார்க்கலாம்... வா...'

என்று பாட வேறு செய்தாள்... கௌசிக்கிற்கு உடனே அவளைப் பார்க்க வேண்டும் போல இருந்தது...

மாலைநேர உலாவலுக்கு ஆற்றங்கரைப் பக்கம் போக விருப்பம் தெரிவித்து வந்தவன் உடனடியாக வீட்டுக்குத் திரும்ப விருப்பம் கொண்டான்...

"போகலாமா..." அவன் திரும்பி காருக்கு நடக்கவும்...

'அதற்குள்ளாகவே...?' என்ற நினைவுடன் அண்ணனும்... தம்பியும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்...

ஆனாலும் மறுத்துப பேசாமல்...

"போகலாமே..." என்று அவனைப் பின் தொடர்ந்தனர்...

வீட்டுக்குள் அவர்கள் நுழைந்த போது... சாதனா எதிரே வந்தாள்...

"எங்கேண்ணா போயிருந்தீங்க..." என்று கௌசிக்கிடம் கேட்டபடி ஆனந்தனைப் பார்த்தாள்... அவனும் பதிலுக்கு பார்த்து வைத்தான்...

அதைப் பார்த்த அன்பழகனின் புருவங்கள் சுருங்க... அவசரமாக பார்வையை விலக்கிக் கொண் டான் ஆனந்தன்...

'ஓ... கதை அப்படிப் போகுதா...' அன்பழகன் தம்பியை ஒரு மார்க்கமாக பார்த்தான்...

"இல்லேண்ணே... அப்படி.... இல்லே..." என்று விளம்பர பாணியில் உளறிக் கொட்டினான் ஆனந்தன்...



"எதை இல்லேன்னு சொல்கிறார்...?" கௌசிக் அன்பழகனிடம் கேட்க...

"சொல்லுடா... மாப்பிள்ளை கேட்கிறாரில்லை..." என்று தம்பியை மாட்டி விட்டான் அன்பழகன்.

"அது.... வந்து... ஒன்றுமில்லை மாப்பிள்ளை..." ஆனந்தன் மென்று விழுங்க...

"களுக்..." என்று வாய் பொத்திச் சிரித்தாள் சாதனா...

'இவள் வேற நேரம் காலம் தெரியாம சிரித்து வைக்கிறாளே...'

ஆனந்தன் கைகளைப் பிசைய ஆரம்பித்த போது... அவனைக் காப்பாற்றவென்று பாரிஜாதம் வந்து சேர்ந்தாள்...

"என்னடா பேராண்டி... இப்படி நம்பியாரு போல கையைப் பிசையற...? எந்தங்கச்சி பேத்திக்கு வேற சிரிப்பாணி பொத்துக்கிட்டு வருது... நம்ம ஊரு பொண்ணுக முன்னாடி... தேசிங்கு ராசன் போல திரிஞ்சுட்டு.... பட்டணத்துப் பொண்ணு முன்னால பபூன் போல வேசம் கட்டறியே... உனக்கே இது நல்லா இருக்கா... அடச்சீ... கையைப் பிசையாதே."

ஸ்விட்சைப் போட்டதைப் போல... சாதனாவின் சிரிப்பு நின்றது... ஆனந்தனு;ம கையைப் பிசைவதை நிறுத்தினான்... ஐஸ்வர்யா மாலை பலகாரம் காபியோடு வந்து சேர... அவர்கள் வேறு பேச்சிற்கு தாவினார்கள்...

அன்றைய இரவில்... மொட்டைமாடியில் கௌசிக் நடைபழகிக் கொண்டிருந்தபோது எலிஸபெத்திடமிருந்து போன் வந்தது...



## 25

வைகறையில் உனைத் தேடி...
வைகைக்கரைப் பக்கம் வந்தேன்...
உன் நினைவுகளை மட்டும் விட்டு...
நீயெங்கோ சென்று விட்டாய்...

'எலிஸபெத் அழைக்கிறாள்...' என்று ஒளிர்ந்தது போன்... கௌசிக் அவசரமாக சுற்று முற்றும் பார்த்தான்... ஐஸ்வர்யா பால் செம்பை எடுத்துக் கொண்டு போனாளா என்று விசாரிக்க மாடிக்கு வந்த பாரிஜாதத்தின் கண்களில் அவனது செய்கை பட்டுவிட்டது...

'எதுக்கு மாப்பிள்ளை... திருடனைப் போல சுத்து முத்தும் பார்க்கிறாரு...' அவள் மறைவாக நின்று விட்டாள்...

"என்ன விசயம்...?" போனை காதில் வைத்த கௌசிக் எரிச்சலுடன் வினவினான்...



"இது என்ன புதுப்பழக்கம்?" எலிஸபெத் மறுமுனையில் வினவினாள்..

"த்சு... விசயத்துக்கு வா..."

"நான் தினமும் உன்னிடம் போனில் பேசுகிறவள்தானே... புதிதாக யாரிடமோ பேசுவதைப் போலப் பேசுகிறாயே..."

"நான் இப்போது சென்னையில் இல்லை..."

"வேறு எங்கே இருக்கிறாய்...?"

"ஐஸ்வர்யாவின் ஊரில் இருக்கிறேன்..."

"அங்கே உனக்கென்னே வேலை...?"

எலிஸபெத்தின் குரலில் கோபம் தென்பட... அதைவிட அதிகமான கோபம் கௌசிக்கின் மனதில் துளிர்த்தது...

காலையிலிருந்து சோர்ந்து தெரிந்த ஐஸ்வர்யாவின் முகம் நினைவுக்கு வர... அவனது கோபம் அதிகமானது...

"இட்ஸ் நன் ஆப் யுவர் பிஸினெஸ் எலிஸபெத்..."

"கௌசிக்..."

"யெஸ்.... திங் இஸ் யுவர் லிமிட்..."

"லிமிட்டைப் பற்றி நீ பேசுகிறாயா...? லிமிட்டைத் தாண்டி என்னுடன் வாழ்ந்தவன் நீ...."

"ச்ச.... உன்னுடன் வாழ்ந்த எல்லோரையும் நீ இப்படித்தான் டார்ச்சர் பண்ணுகிறாயா எலிஸபெத்...?"

"கௌசிக்..."

"இல்லை... உன்னுடன் வாழ்ந்தவன்களில் எவனாவது ஒருவன்... என்னைப் போல உன்னைக் கல்யாணம் பண்ணிக்கொள்ள நினைத்தானா...?"

"சொல்லிக் காட்டுகிறாயா...?"

"இல்லை... நினைவுபடுத்துகிறேன்..."

"நீதான் என் வொய்புன்னு என்னைப் பார்த்து நீ சொன்னாயே கௌசிக்... அதெல்லாம் பொய்யா...?"

"உன்னிடம் நான் சொன்னது வெறும் சொல் தான்... ஐஸ்வர்யாவைக் கல்யாணம் பண்ணிக் கொண்டிருப்பது செயல்... சொல்லை மாற்றலாம்... செயலை மாற்ற முடியாது... அது நடந்தது... நடந்தது தான்..."

"நோ.... நான் இதை ஏற்றுக்கொள்ள மாட்டேன்..."

"அது உன் பிராப்ளம்.... பட்... இனியும் என்னை போனில் தொந்தரவு செய்யாதே..."

"கௌசிக்..."

"உனக்கும்... எனக்குமான உறவு முடிந்து விட்டது எலிஸபெத்... புரிந்துகொள்... இனி உனக்கென்று ஒருவாழ்க்கையை அமைத்துக் கொள்..."



"என்னைவிட... அந்த கிராமத்துப் பெண் உனக்கு உயர்த்தியாக போய் விட்டளா...?"

"திஸ் இஸ் தி சிவியர் வார்னிங் எலிஸபெத்.... ஐஸ்வர்யாவை குறைவாகப் பேசாதே..."

"அவளுக்காக பரிந்து கொண்டு என்னைத் திட்டுகிறாயா...?"

"யெஸ்... காலையில் அவளிடம் என்ன சொன்னாய்...?"

"உண்மையைச் சொன்னேன்..."

"எந்த உண்மை எலிஸபெத்...? எனக்கு மேரேஜ் நடக்கப் போகிறது என்று உன்னிடம் முன்பே சொல்லி விட்டேன்... மறைக்கவில்லையே... இது உனக்கும் தெரிந்த விசயம்தானே... அப்புறமும் எதற்காக அவளிடம் நம்மைப் பற்றிப் பேசினாய்...?"

"ஓ.... நோ... நீ என்னுடையவன் கௌசிக்..."

"நோ... நான் ஐஸ்வர்யாவின் ஹஸ்பெண்ட்..."

"என்னால் உன்னை விட முடியாது..."

"ஏன் விடமுடியாது...? எனக்கு முன்னால் ஜேம்ஸை நீ விடவில்லையா? அவனுக்கு முன்னால் ராபிட்சனை நீ விடவில்லையா...? ராபிட்சனுக்கு முன்னால் வேறு ஒருவனை நீ விடவில்லையா...?"

எலிஸபெத்தினால் பதில் சொல்ல முடியவில்லை... மறுமுனை அமைதியாகி விட... கௌசிக் செல்போனை அணைக்கப் போனானன்...

"நீ என் வாழ்க்கை முறையை கேலி செய்கிறாய்..." எலிஸ்பெத் கடினமான குரலில் பேசினாள்...

"இல்லை... உன் வாழ்க்கை முறையை நினைவு படுத்தினேன்..."

"ஸோ... நீ அந்த ஐஸ்வர்யாவை விட மாட்டாய்...?"

"மாட்டேன்... அவள்தான் என் வாழ்க்கை..."

கௌசிக் செல் போனை அணைத்து விட்டான்...



## 26

> வைகறையில் உழவரெல்லாம்....
> வயலைத்தேடி சென்றிடுவார்...
> வைகைக்கரையில் இருந்த நானோ...
> உன்னைத்தேடி நின்றுவிட்டேன்...

கௌசிக் மீண்டும் சுற்று முற்றும் பார்த்துவிட்டு அறைக்குள் சென்றுவிட.... பாரிஜாதம் மறைவிலிருந்து வெளிப்பட்டாள்...

அவளுக்கு ஆங்கிலம் தெரியாது... கௌசிக் ஆங்கிலத்தில் பேசியதால் என்ன விவரமென்று முழுதாக அவளால் அறிய முடியவில்லை... ஆனால்...



ஏதோ விவரம் இருக்கிறது.... என்பதை மட்டும் அவளது கூரிய அறிவு கண்டு கொண்டது.

அவள் யோசனையுடன் படியிறங்கிய போது... கையில் பால் தம்ளருடன் ஐஸ்வர்யா எதிரே வந்தாள்...

"என்னதாயி... இம்புட்டு நேரமா பால் கொண்டு வர...?"

"த்சு... நேரமானா... ஆகட்டும் பாட்டி..." ஐஸ்வர்யா சலிப்புடன் சொல்லியபடி அவளைக் கடந்து சென்று விட்டாள்...

முதல்நாள் காலையில் திருமணமான புது மணப்பெண் அவள்... இது அவளுக்கு இரண்டாவது இரவு... கணவன் அறையில் காத்திருக்கிறான்... அவளோ காலம் தாழ்த்தி அவனைக் காணச் செல் கிறாள்... அதை ஏனென்று கேட்ட பாரிஜாதத்திடம் சலிப்பாக பதில் சொல்லி வைக்கிறாள்.

'எதுவோ சரியில்லை....' பாரிஜாதத்தின் தலையில் அலாரம் அடித்தது...

அது எதுவாக இருந்தாலும்... அதைப்பற்றிப் பேச இது நேரமில்லை என்பதால் பாரிஜாதம் கீழே இறங்கி விட்டாள்...

அறைக்கதவை மூடித் தாழிட்ட ஐஸ்வர்யாவை திரும்பிப் பார்த்தான் கௌசிக்... இளஞ்சிவப்பு வண்ணத்தில் புடவை அணிந்திருந்தாள்... தலை முடியை நீண்ட பின்னல் போட்டு... மல்லிகைப் பூவை

இரு தோள்களிலும் வழியுமாறு வைத்திருந்தாள்... அவளது நடைக்கேற்றபடி பின்னல் அசைந்தாடியதைக் கண்ட கௌசிக்கின் மனமும் அசைந்தது...

பால் தம்ளரை நீட்டியவளின் கையையும் சேர்த்துப் பிடித்தான் கௌசிக்... சட்டென்று கையை உருவிக் கொண்டு... ஜன்னலருகே சென்று நின்று கொண்டாள் ஐஸ்வர்யா...

காலி பால் தம்ளரை அருகிலிருந்த ஸ்டூலின் மீது வைத்தவன் எழுந்து அவளருகே சென்றான்...

"ஐஸ்வர்யா..."

"ம்ம்ம்..."

'நீ எவ்வளவு அழகாக இருக்கிறாய் தெரியுமா...?"

அவள் தோள் தொட முயன்றான்... ஐஸ்வர்யா விலகி நின்று கொண்டாள்... கௌசிக்கிற்கு சினம் துளிர்த்தது...

"ஏன்...?" அவன் விழிகள் அவளை உறுத்துப் பார்த்தன...

"பிடிக்கலை..." அவள் விட்டேற்றியாய் பதில் சொன்னாள்.

"என்னைப் பிடிக்கலையா...?"

"...."

அவள் பதில் சொல்லாமல் நின்றதும் அவன் மனதில் தென்றலடித்தது...



"என்னைப் பார்..."

அவள் பார்க்கவில்லை... கௌசிக் அவளை நெருங்கி... விலகிவிடாமல் முரட்டுத்தனமாய் அணைத்து... அவள் முகத்தை தன் பக்கமாய் திருப்பினான்... அவனது தொடுகையில் அவளது உடல் பாகாய் உருகி அவனுடன் கலக்கத் துடிப்பதை அதிர்ச்சியுடன் உணர்ந்தாள் அவள்...

"ஏண்டி... என்னை பார்க்கப் பிடிக்கலையா...?"

"விடுங்க..."

"முடியாது..."

"சொன்னதைக் கேளுங்க..."

"காலையிலிருந்து நீ சொன்னதையெல்லாம் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறேன்... இப்போது நான் சொல்வதை நீ கேளு..."

அவன் அவளைத் தழுவிக் கொண்டான்... அவளது தோளைத் தொட்டுத் தடவி அவனது கரம்... அவளது முதுகில் பரவ... அவள் உடல் சிலிர்த்து நடுங்கியது... நிற்க முடியாமல் தொய்தவளை... தன்னுடன் சேர்த்து இறுக்கி கட்டிலில் தூக்கிப் போட்டான் கௌசிக்... அவளது உதடுகள் துடித்தன... துடித்த உதடுகளைத் தேடி அவன் குனிய.. அவள் தாள முடியாமல் கண் மூடிக் கொண்டாள்...

'ஹோ...' என்று ஒரு பிரவாகம் அவளுள் பொங்கி எழுந்தது... அதன் ஆச்கிரமிப்பில் அடங்கிப் போனாள் ஐஸ்வர்யா.

அவளுக்குள் புதைந்து அவன் தேடுதலை தொடங்கிய அந்த நேரத்தில்... மிக அருகாமையில் தெரிந்த அவன் முகத்தை மயக்கத்துடன் பார்த்தாள் ஐஸ்வர்யா... திடீரென்று அவள் காதில் அந்தக் குரல் ஒலித்தது... அது... எலிஸபெத்தின் குரல்...

'ஹி இஸ் மை மேன்...'

அவள் சட்டென்று மேலே பரவியிருந்தவனைத் தள்ளிவிட்டு எழுந்து அமர்ந்தாள்...

"என்ன ஆச்சு ஐஸ்வர்யா..."

தொட வந்தவனின் கைகளைத் தட்டிவிட்டாள் ஐஸ்வர்யா... அவனது புருவங்களின் மத்தியில் முடிச்சு விழுந்தது... கண்கள் இடுங்க அவளையே முறைத்துப் பார்த்தான் அவன்...

"என்னடி...?" அவன் குரலில் கடினம் தென் பட்டது..

"என்னைப் பிடிக்கலைன்னு பொய் சொல்லாதே... என்னைப் பிடிக்காமலிருந்திருந்தால்... இத்தனை தூரத் திற்கு வந்திருக்க மாட்டாய்... இவ்வளவு நேரமும் உனக்கு என்னைப் பிடித்திருந்ததுதானே... இப்போது மட்டும் என்ன வந்தது...?"



"வேண்டாம்..."

"என்ன வேண்டாம்..."

"நீங்க... எனக்கு வேண்டாம்..."

"ஐஸ்வர்யா... நான் உன் ஹஸ்பெண்டுடி..."

"நீங்க எலிஸபெத்தின் ஆம்பள..."

கௌசிக்கிற்கு புரிந்து விட்டது... அவன் தொட்டதும் குழைந்தவள்... அவன் அவள்மேல் பரவிப் படர்ந்த போது... கண்மூடிக் கிறங்கியவள்... அவனது நெருக்கத்தை விரும்பி இசைந்து கொடுத்தவள்... ஏன் விலகி எழுந்தாள் என்பதற்கான காரணம் அவனுக்கு பிடிபட்டு விட்டது...

"ஆம்பள...! அது என்னடி லாங்வேஜ்...?" அவன் பேச்சை மாற்ற முயற்சித்தான்...

"எனக்கு இப்படித்தான் பேசத் தெரியும்... நான் பட்டிக்காடுதான்... அமெரிக்காகாரி இல்லை..."

அவள் மறைமுகமாக எலிஸபெத்தை நினைவு படுத்தினாள்... கௌசிக் அதைக் கண்டு கொள்வேனா என்று பேச்சை வளர்த்தான்...

"எனக்கு அமெரிக்காக்காரி வேண்டாம்... இந்தப் பட்டிக்காடுதான் வேண்டும்..."

"அவளோடு குடும்பம் நடத்திவிட்டு... புதிதாக என்னத்துக்கு வாய்பந்தல் போடுகிறீங்க..."

"எல்லாம் உன்னைப் பிடிக்கத்தான்..."

"பிடித்து...?"

"கூடிக் குழாவப் போகிறேன்..."

"அப்புறம்..."

"அதை கன்டினியூ பண்ணுவேன்..."

"அதுக்கப்புறம்...?"

"அதை நீயே சொல்லு..." அவன் சரஸமாக நகைத்தான்...

"அந்த அமெரிக்காக்காரியைத் தேடி ஓடி விடுவீங்க..." ஐஸ்வர்யாவின் குரலில் நிச்சயம் தெரிந்தது...

"அடச்சீ... அந்தப் பேச்சை விடு..."

"முடியாது... அவள் சொன்னாளே..."

"என்ன சொன்னாள்...?"

"நானும் கௌசிக்கும் சேர்ந்து வாழ்கிறோமுன்னு சொன்னாளே.... அமெரிக்காவில உங்களுக்கு சொந்தமா வீடிருக்காம்... அதிலதான் அவ இருக்காளாம். உங்க வியாபார சம்பந்தமான எல்லா கச்சாத்தும் அங்கேதான் கிடக்குதாம்..."

"கச்சாத்தா....?"

"அதுதான் ஃபைலஸ்..."

"ஓ... அதையெல்லாம் எடுத்து விடுகிறேன் கண்ணம்மா..."



"ப்ளீஸ்... என்னைக் கொஞ்சாதீங்க..."

"உன்னைக் கொஞ்சாமல் யாரைக் கொஞ்ச...?"

"அந்த அமெரிக்காக்காரியைக் கொஞ்சுங்க..."

"அவ என் வொய்பில்லையே... நீதானே என் வொய்ப்..."

"அப்ப எப்படி... இத்தன நாளாய் அவ கூட குடித்தனம் பண்ணினீங்க...?"

திரும்பத்திரும்ப... ஐஸ்வர்யா ஒரே கேள்வியையே மாற்றி மாற்றிக் கேட்கவும் கௌசிக் எரிச்சலடைந்தான்.

"சரிடி... நீ சொன்னேன்னு உன் வீட்டைக் கூப்பிட்டு விசயத்தை சொல்லிட்டு... அவ கூட குடும்பம் நடத்துவதற்காக நான் அமெரிக்காவுக்கு பறக்கிறேன்... நீ கதவைத்திற..."

அவனது தடாலடியான பேச்சில் ஐஸ்வர்யா கலவரமடைந்தாள்...

"எதுக்கு கதவைத் திறக்கச் சொல்கிறீங்க...."

"நான் பாட்டுக்கு உன்னை இங்கே விட்டுவிட்டு அமெரிக்காவுக்கு ஓட முடியுமா...? விவரத்தை சொல்லாமல் விட்டுவிட்டுப் போனால் உன் வீட்டு 'ஆம்பளைகள்...! சும்மா இருப்பாங்களா... என்னைத் தேடி வந்து வெட்ட மாட்டாங்களா...?"

"கடவுளே..."

"அவரை டிஸ்டர்ப் பண்ணாமல் கதவைத்திற..."

"மாட்டேன்..."

"அப்போ... கிட்டே வா..."

"மாட்டேன்..."

"நீ வரவில்லைன்னா என்ன... நான் கிட்ட வருகிறேன்...." அவன் அவளை நெருங்கி விட்டான்.




வைகறையில் தொட்டவளை
வைகைக்கரையில் பட்டவளை...
தேடிச் சென்று சிறையெடுத்தேன்...
அவள் விருப்பத்துடன் சிறைப்பட்டாள்...

காலையில் கண்விழித்த ஐஸ்வர்யாவின் பார்வை... அவளை வளைத்துப் பிடித்திருந்த கௌசிக்கின் கையின் மீது பட்டது... முதல் நாள் இரவு நினைவுக்கு வர... அவளது கன்னம் சூடானது... கூடவே கண்களில் நீரும் திரண்டது...



'தோற்று விட்டேன்...' அவள் தனக்குள் சொல்லிக் கொண்டாள்... அந்தத் தோல்வி ஏன் இத்தனை இனிப்பாக இருக்கிறது என்பதை நினைக்கும்போது அவளுக்கு அவமானமாக இருந்தது...

எவளோ ஒருத்தியின் பேச்சிற்கு கட்டுப்பட்டு... முதல்நாளிரவு விலகிப் படுத்து... முதலிரவை புறக்கணித்தவ... இன்று அவளைத் தொட்டுத் தழுவுகிறான்... அவளும் பதிலுக்கு வெட்கம் கெட்டுப் போய் இசைந்து கொடுக்கிறாள்...

இதை எங்கே போய் சொல்லி முட்டிக் கொள்ள...?

"இன்றைக்கு எலிஸபெத்து போன் பண்ணலியா..." அவள் விடுபடப் போராடியபடி கேட்டாள்...

"போன் பண்ணினாள்..." அவன் அவளை சிறைபிடித்தபடி பதில் சொன்னான்...

"இன்றைக்கு அனுமதி கொடுத்து விட்டாளா...?"

"எதற்கு...?"

"இதுக்குத்தான்..." அவள் லஜ்ஜையுடன் சொல்லிய விதத்தில் அவன் முகத்தில் புன்னகை மலர்ந்தது...

"அவளென்ன அனுமதி கொடுக்கிறது...? நீ என் பெண்டாட்டிடீ..."

"அவ முதல் பெண்டாட்டியா...?"

"நானே அவளுக்கு முதல் ஆணில்லை..."

இதுதான் அவளுக்குத் தெரியுமே... இருந்தும் அவள் மனம் குளிரவில்லை...

"அதனால நீங்க செய்தது நியாயமாகிடுமா...?"

"இதோ பார்.... நியாய... அநியாயத்தைப் பேசுகிற நேரம் இது இல்லை..."

"இது ஒன்றும் நேற்று ராத்திரியை விட முக்கிய மான ராத்திரி இல்லை..."

"நீயேண்டி... அதையே பிடிச்சுக்கிட்டுத் தொங்கிக்கிட்டு இருக்கிற..."

"பின்னே.... என்னை வேற என்ன செய்யச் சொல்கிறீங்க...? அவதான் சொன்னாளே..."

"என்ன சொன்னா...?"

"ம்ம்... சுரைக்காய்க்கு உப்பில்லைன்னு சொன்னா..."

"அப்படியா...?"

"எரிச்சலைக் கிளப்பறீங்க... அவ சொன்னதால் தான் நீங்க நேத்து ராத்திரி தனியாப் படுத்தீங்க..."

"இன்னைக்கும்தான் அவசொன்னா... நான் விலகியா படுக்கிறேன்...?" இந்தக் கேள்வி ஏதோ ஒருவகையில் அவளை திருப்தி படுத்துவதை ஐஸ்வர்யாவால் உணர்ந்து கொள்ள முடிந்தது...



கட்டிய கணவன்... ஏற்கனவே ஒரு பெண்ணுடன் முறைதவறிக் குடும்பம் நடத்திக் கொண்டிருந்தவன் என்பதில் அவளுக்கு மனத்தாங்கல் இல்லையாம்... அவள் பேச்சைக் கேட்டு ஐஸ்வர்யாவைத் தொடாமல் இருந்ததுதான் அவளுக்கு மனத்தாங்கலாம்... இன்னும் அவள் பேச்சை கேட்காமல் ஐஸ்வர்யாவைத் தொட்டதில் அவள் மனம் குளிர்ந்து விட்டதாம்...

உன்னை என்ன செய்தால் தேவலாம் என்று ஐஸ்வர்யா ஆவேசப்பட்டாள்...

'அடி ரோசம் கெட்டவளே... இவன் உன்னைப் போல ஒன்றில் நிற்கவில்லை... வேறொருத்தி யுடன்... கும்மாளம் போட்டுவிட்டு... உன்னுடன் குடும்பம் நடத்த வந்திருக்கிறான்... நீ விட்டுக் கொடுத்து விடாதே...' அவள் மனம் திட்டியது...

அவள் காதில் அது ஏறுமுன் அவன் அவளை ஆக்ரமித்து அடைந்து விட்டான்... அவன் திருப்தியுடன் அவள் நெற்றியில் முத்தமிட்டு விலகியபோது... அவள் கண்களில் கண்ணீர் வழிய ஆரம்பித்திருந்தது...

இப்போதும் அதே கண்ணீர் வழிய... ஐஸ்வர்யா அதைத் துடைத்துக் கொண்டு... கட்டிலை விட்டு இறங்கி... குளியலறைக்குள் புகுந்தாள்... சற்று நேரத் தில்.... குளித்து முடித்து... மாற்றுடை அணிந்து... ஈரத்துணிகளை உலர்த்துவதற்காக அவள் மொட்டை மாடிக்குச் சென்றபோது... அங்கே பாரிஜாதம் நின்று கொண்டிருந்தாள்...

ஈரத்தலையுடன் வந்த ஐஸ்வர்யாவின் கோலம் அவளுக்கு நிறைவைத் தந்த அதே நேரத்தில் அவள் முகத்தில் மலர்ச்சி இல்லாதது பாரிஜாதத்தின் கவனத்தில் பட்டது.



# 28

> வைகறையை காண வேண்டி...
> இருள் இரவில் காத்திருந்தேன்...
> வைகைக்கரையில் வெளிச்சம் பரவ...
> உன் முகத்தை பார்த்திருந்தேன்...

"ஐஸீ...."

"சொல்லு பாட்டி..."

"ஏங்கண்ணு... என்னவோ போல இருக்கே..."

"நான்... நல்லாத்தானே இருக்கேன்...?"

"இதுதான் நல்லாயிருக்கிற லட்சணமா...?"

"ஏன்... என் லட்சணத்திற்கு என்ன குறைச்சல்...?"

"அது குறைச்சல்ன்னு யாராவது சொல்லுவாங்களா தாயி..."



"அப்ப எதுக்கு என் வாயைப் புடுங்கற...?"

"இல்லடி ஆத்தா... இந்த எலி... செத்தா... பெத்து... அப்படின்னா என்னாடி அர்த்தம்...?"

"எலி... செத்தா... பெத்தா...? தெரியலையே..."

"தெரியலையா...?"

"தெரியலை பாட்டி..."

"உனக்கு தெரியாத ஆளுகிட்டயா... உன் பேரைச் சொல்லிச் சொல்லி... இங்கிலீஷில் பிளந்து கட்டினாரு மாப்பிள்ளை...?"

"யாரைச் சொல்கிற...?"

"அட... உன் புருசனைத்தான் சொல்றேன் கண்ணு... நேத்து ராத்திரி நீ கீழேயிருக்கிறது தெரியாம உன்னத்தேடி நான் மாடிக்கு வந்தேனா... அப்போ... உன் புருசன் மொட்டை மாடியில யாரு கூடவோ இங்கிலிஷில் பேசிக்கிட்டு இருந்தார்... உன் பேரைச் சொல்லி... அவ என் வைப்பு... அவ என் வைப்புன்னு சொல்லிக்கிட்டு இருந்தாரா..."

"வைப்பா...? கோபத்தை கிளப்பாதே பாட்டி... வொய்புன்னு சொல்லியிருப்பார்.. நீ சொல்றதுக்கான அர்த்தமே வேற..."

"நீ சொல்றதைப் போலத்தான் சொல்லிக்கிட்டு இருந்தார்..." கௌசிக் ஐஸ்வர்யாவை தன் மனைவியென்று சொல்லியிருக்கிறான்...

அதுதான் உண்மையென்ற போதும்... ஐஸ்வர்யா வின் மனம் இதைக் கேட்டதும் தேனாக இனித்தது...

"அப்படியா பாட்டி சொன்னாரு...?"

"ஆமாம்..."

"நீ உன் காதால கேட்டயா...?"

"யாருடி இவ... நான் என் காதாலதான கேக்க முடியும்? அதை விட்டுப்புட்டு... உன் காதாலயா கேக்க முடியும்...? ஆமா யாரு அந்த எலி செத்தா கேஸீ...?"

"அது எலிஸபெத்தா இருக்கும் பாட்டி..."

"அட... இப்படித்தான் மாப்பிள்ளை சொன்னாரு..."

"அவ பெயரை எங்கிட்ட சொல்லாதே..."

"உனக்கு அவளைத் தெரியுமா...?"

"நேத்து காலைல வரைக்கும் தெரியாது..."

"ஒரு நா பழக்கத்துலயா.... உன் புருசன்கிட்ட உன் பேச்சைப் பேசறா...?"

"எனக்குத்தான் ஒருநாள் பழக்கம்... அவர் கூடப் பழநாள் பழக்கம்..."

ஐஸ்வர்யா தன்னையறியாமல் சொல்லிவிட... பாரிஜாதத்தின் முகத்தில் சிந்தனை படர்ந்தது...

இரவு நேரத்தில் ஒரு ஆணுடன் போனில் பேசு கிறவள்...என்ன மாதிரியான பழக்கத்தைப் பழகி யிருப்பாள்...?



இதுகூடத் தெரியாத முட்டாளா பாரிஜாதம்....? மற்றவர்கள் எல்லாம் ஒன்றும்... ஒன்றும்... இரண்டு என்று கணக்குப் போட்டால்... அவள் மட்டும் ஒன்றும்... ஒன்றும் மூன்று என்று கணக்கிட்டுச் சொல்லும் வல்லமை படைத்தவள்...

"என்னடி ஐஸீ இப்படிச் சொல்றவ... யாருடி அந்த எலிசெத்தான் கேஸீ? எத்தன நாளா உன் புருசன்கூடப் பழகிக்கிட்ட இருக்கிறா... அந்த எடு பட்ட சிறுக்கி...? ஆத்துல போற தண்ணிய அள்ளிக் குடிச்சாலே இந்த பாரிஜாதம் சும்மா விட மாட்டா... இவ சொந்தக் கிணத்து தண்ணி மேல கை வைக்க வந்தா... விட்டா வைப்பா...?"

"அடங்கு பாட்டி... சும்மா சவுண்டு விடாதே..."

"என்னை நீ அடக்கறதெல்லாம் அப்புறமும்டி ஆத்தா... முதல்ல உன் புருசனை அடக்கற வழியப் பாரு..."

"அவரைப் பத்தி நீ பேசாதே..."

"இந்த ரோசத்துக்கொன்னும் குறைச்சலில்ல.. இரு... இரு... என் தங்கச்சி மக... அந்த வைஷ்ணவி இருக்காளில்ல... அவளுக்கு ஒரு போனைப் போட்டு சொல்லி வைக்கிறேன்..."

"நீயொன்னும் புதுசா எதையும் சொல்ல வேணாம்..."

"அப்படின்னா...?"

"ஏன் பாட்டி... நீ வேற... இந்தக் கருமாந்திரத்தப் பத்தி அந்தக் குடும்பத்துக்கே தெரியும் போல இருக்கு..."

ஐஸ்வர்யா இரண்டாம் முறையாக வாய் விட்டு விட்டாள்... பாரிஜாதத்தின் கண்களில் சிவப்பு படர்ந்தது...

"குடும்பத்துக்கே தெரியுமா...? அப்ப ... இங்க ஒரு குட்டிப்பிசாசு உன் கூட ஒட்டுவாரொட்டியப் போல ஒட்டிக்கிட்டு வந்திருக்கே அதுக்கும் தெரியுமா...?"

"தெரியுமாம்..."

"அப்படின்னா ஏதோ விசயமிருக்குன்னு சொல்லு..."

உன் போக்கில் தொடுவானை வெறித்தபடி... ஈரத் துணிகளை உலரவைத்த கொண்டிருந்த ஐஸ்வர்யாவிற்கு தூக்கி வாரிப் போட்டது...

அவளையறியாமல் வாய்விட்டு விட்டதை உணர்ந்து கொண்டவள் அக்கினிப் பறவையாய் பாரிஜாதத்தை முறைத்தாள்...

"இங்க பாரு பாட்டி... இந்த விசயத்தைத் தேடுகிற வேலையையெல்லாம் வீட்டுக்கு வெளியில வைச்சுக்க... அத விட்டுட்டு... வீட்டுக்குள்ள வந்து என் வாயைக் கிண்டி கிழங்கெடுக்கனும்னு பார்த்தே... உன்கூட... ஜென்மத்துக்கும் பேசமாட்டேன்..."

"அடியாத்தி... என்கூட நீ பேசலைன்னா... என் கட்டை வேகுமாடி ஆத்தா...?"



"தெரியுதில்ல... அதனால வாயை மூடிக்கிட்டு... இந்த சின்னக்கவுண்டர் வேலையையெல்லாம் மூட்டயக் கட்டி... வைகையாத்தில போட்டுட்டு... வேற வேலைக் கழுதய கவனி... நான் நம்ம வீட்டுல சீராட வந்திருக்கிறது வெறும் ஆறேநாள்தான்... அதில் ஒரு நாளு... நேத்தே கழிஞ்சு போச்சு... மிஞ்சியிருக்கிற ஐஞ்சு நாளிலயாவது என்னை நிம்மதியா இருக்க விடு பாட்டி... உனக்கு புண்ணியமா போகும்..."

'நிம்மதியாய் இருக்க விடு...'

இந்த வார்த்தைகளை யார் சொல்வது...? பாரிஜாதத்தின் பேத்தி நிம்மதியைத் தேடி அழலாமா...? அதைக் கேட்டுக் கொண்டு அந்தக் கிழவி உயிரை வைத்துக் கொண்டிருப்பதா...?

பிறந்ததிலிருந்து இப்படியொரு வார்த்தையை ஐஸ்வர்யா சொல்லியதே இல்லை... அவள் அந்த வீட்டின் இளவரசி... அந்த சுற்றுப்புற ஊர்களில் யார் வீட்டிலும் இல்லாத அழகுடன் மிளிரும் தேவதைப் பெண்... எறும்புக்கும் தீங்கு நினைக்காதவள்... எவர் மனமும் நோகும்படி பேசியறியாதவள்...

அவளா மனம் நொந்து இப்படிப் பேசுகிறாள்...? அதுவும் திருமணமான மூன்றாம் நாள் காலையிலேயே பேசுகிறாள் என்றால்... வினையெல்லாம் அவள் கழுத்தில் விழுந்த தாலி கொடுத்தது என்றுதானே அர்த்தமாகிறது...

போகட்டும்... எதுவாக இருந்தாலும் பேத்தியின் மனம் நோகக் கூடாது... விவரம் என்ன என்பதை ஐஸ்வர்யாவுக்குத் தெரியாமல் கண்டுபிடித்து வேரறுக்க வேண்டும் என்று முடிவு கட்டிக் கொண்ட பாரிஜாதம் பேச்சை மாற்றினாள்...

"ஏன் ஆத்தா... உன் புருசன் உன்னை எப்படிச் சொல்வாரு?"

"வொய்புன்னு சொல்வாரு..."

"அப்ப வைப்புன்னா என்ன அர்த்தம்...?"

'ம்ம்.. அந்தக் காலத்தில தாத்தா... ஒரு பொம்பள வீட்டுக்கு வண்டியக் கட்டிக்கிட்டு போவாருன்னு சொல்லுவியே... அந்தம்மாவுக்குத்தான் இந்தப் பேருன்னு அர்த்தம்..."

"அடியாத்தி... அந்தக் கொரகத்தையா என் வாயால சொன்னேன்...?"

"ஆமாம்... இப்பவாவது ஆள விடறியா..."

"கீழே போயி என்னத்தை செய்யப் போகிறவ...?"

"பல்லில பச்சைத் தண்ணி படாம நின்று உங் கூட பழமையை வளர்த்துக்கிட்டு இருக்கேன்... போய் கொஞ்சம் காபித் தண்ணிய தொண்டையில ஊத்திக் கிட்டு.... என் புருசனுக்கும் ஒத்தைகிளாஸ்ல ஊத்திக் கொடுத்துட்டு வர்றேன்..."



"இதென்னடியாத்தா இப்படிச் சொல்லிப்புட்ட...? நம்ம வீட்டு மாட்டுத்தொழுவத்தில எப்பவும் ஆறேழு கறவைப் பசு... பாலைக் கறந்துக்கிட்டே இருக்குமே... ஊரே நம்ம வீட்டில ஓசிப்பாலு வாங்கிட்டுப் போகும்... நீயென்னண்ணா... நம்ம வீட்டு கள்ளிச் சொட்டுக் காப்பியப் போயி... காபித் தண்ணின்னு சொல்ற..."

"ஆமாம்... இதுலதான் குறைஞ்சு போச்சு... வழிய விடு பாட்டி... காலங்கார்த்தால உனக்கு வம்பிழுக்க வேற ஆளு அகப்படலியா...?"

"ஆமாங்கண்ணு... அத எப்படி கண்டுபிடிச்ச...?"

"நான் வேணும்னா போயி... சின்ன அண்ணனை அனுப்பி வைக்கவா...?"

ஐஸ்வர்யா என்னவோ கிண்டலாகத்தான் கேட்டாள்... ஆனந்தனைக் கண்டாலே பாரிஜாதம் மனதுக்குள் அலறுகிற விவரம் அவளுக்குத் தெரியும்... அவளுக்கு சரிக்கு சரியாய் வாயடிக்கிற ஒரே ஆள்... இந்த உலகத்திலேயே... ஆனந்தன் ஒருவன் மட்டும் தான் என்பது அனைவருக்குமே தெரிந்த சமாச்சாரம்தான்...

அதனால்... 'ஐயையோ.... வேண்டாம் கண்ணு...' என்று அலறி பாரிஜாதம் பின்வாங்குவாள் என்று ஐஸ்வர்யா எதிர்பார்த்தால் "அதை முதலில் செய்யு கண்ணு..." என்றாள் பாரிஜாதம்... "நிஜமாகவா பாட்டி...?" ஐஸ்வர்யா விழி விரித்தாள்...

"அடி நிசமாத்தான் கண்ணு... நீ போயி உங்க சின்ன அண்ணனை அனுப்பறியா... இல்லை... நானே கீழே போயி அவனத்தேடி கண்டுபிடிக்கட்டுமா...?" என்று பாரிஜாதம் சொல்லிக் கொண்டிருக்கும் போதே ஆனந்தன் மாடியேறி வந்துவிட்டான்...




வைகறையில் விடியல் வந்தால்...
இருள்திரையே விலகிவிடும்...
வைகைக்கரையில் நடந்து வந்தால்...
சஞ்சலமும் பறந்து விடும்...

"இந்தா... அண்ணனே வந்துருச்சு..." ஐஸ்வர்யா ஆனந்தனைத் திரும்பிப் பார்த்துச் சொன்னாள்...

"என்னம்மா... எதுக்கு என்னைத் தேடின...?" பிரியத்துடன் தங்கையைப் பார்த்தபடி கேட்டான் ஆனந்தன்...

"நான் உன்னைத் தேடலண்ணே... இந்தப் பாட்டிதான் தேடுச்சு..."

ஐஸ்வர்யாவின் பதிலைக் கேட்டதும்... ஆனந்தனின் புருவங்கள் உயர்ந்தன... பாரிஜாதம் அவனைத் தேடுகிறாளா...?



எதற்கும் கிழக்கே உதிக்கும் சூரியன்... மேற்கில் உதித்திருக்கிறதா என்று பார்த்தக கொள்ளலாம் என்ற நினைவுடன் கிழக்கே பார்த்தான் ஆனந்தன்...

'சூரியன் கிழக்கேதான் இருக்கு...' உறுதிபடுத்திக் கொண்ட பின்பு பாரிஜாதத்தை சந்தேகமாக பார்த்தான் அவன்..

"யாரு தேடினது... இந்தக் கிழவியா...? என்னயா தேடுச்சு...?"

"ஆமாண்ணே... ஆமாம்..."

"எதுக்காம்...? எந்த தூண்டிலைப் போட்டு... எந்த விலாங்கை இழுக்கப் போகிறதாம்....?"

"அத என்னக் கேட்டா... எனக்கென்னண்ணே தெரியும்... பாட்டியைத்தான் கேட்கணும்..."

"இந்தக் கிழவிகிட்டப் போயி... விட்ட விடியற் காலம் மனுசன் பேசுவானா...? எனக்கெதுக்கும்மா அந்த வம்பு? நான் உன்னைப் பார்க்கத்தான் வந்தேன் காபி குடிச்சியா...?"

"இன்னும் இல்லேண்ணே..."

"மாப்பிள்ளைக்காவது காபி கொடுத்தியா...?"

"அதுவும் இல்லேண்ணே..."

"எம்மா... இதையெல்லாம் செய்யாம... இங்கே எதுக்கு நிற்கிற...?"

"நானா ஆசைப்பட்டு நிற்கலண்ணே... இந்தப் பாட்டிதான் என்கூட வாயை வளர்த்துக்கிட்டு போக விடுவேனான்னு பிடிச்சு வைச்சிருக்கு..."

"நீ கீழ போம்மா.... இந்தக் கிழவிய நான் பார்த்துக்கறேன்..."

ஐஸ்வர்யா பொங்கி வந்த சிரிப்பை அடக்க முடியாதவளாக சிரித்துக் கொண்டே படிகளில் இறங்க... மூன்று நாள்களாக அவள் முகத்தில் தொலைந்து போயிருந்த சிரிப்பை மீண்டும் கண்டதில் பாரிஜாதம் மனம் நெகிழ்ந்தாள்...

"ஏங்கிழவி... உனக்கு அறிவுங்கிறதே சுத்தமா கிடையாதா...?"

"உங்கிட்ட இருந்தா... கொஞ்சம் கடனாக் கொடு..."

"உனக்கு இந்த உலகமெல்லாம் அறிவைக் கடனாக் கொடுத்தாலும் பத்தாது கிழவி.... தங்கச்சியே புதுசாக் கல்யாணமாகி... புருசன்கூட மறுவீட்டு விருந்துக்கு வந்திருக்கிறா.... அவளப் போயி பிடிச்சு வச்சிருக்கியே... கொஞ்சமாவது பெரிய மனுஷிக்கு இந்த நினைப்பு வேணாமா...?"

ஆனந்தன் கோபத்துடன் பொரிந்து தள்ள... பாரிஜாதம் கவலை தோய்ந்த முகத்துடன் பேரனை ஏறிட்டாள்... பாரிஜாதத்திடம் கவலைப் பார்வையைக் கண்டிராத ஆனந்தனின் பேச்சு நின்று விட்டது...



"என்ன கிழவி...? என்ன ஆச்சு...?"

"அதுதான் தெரிய மாட்டேங்குதுடா பேராண்டி... அத தெரிஞ்சுக்கத்தான் உன்னைக் கூப்பிட்டேன்..."

"இங்கப் பாரு... விளங்கச் சொல்லாம கடுப் படிச்சேன்னு வைய்யு... எங்க அப்பனைப் பெத்த கிழவின்னுகூடப் பார்க்க மாட்டேன்... தூக்கிக் கொண்டு போய் வைகையாத்தில போட்டுட்டு... கையைத் தட்டிட்டு வந்துருவேன்... பார்த்து சூதானமா இருந்துக்க...."

"யாருடா இவன்... விவரம் புரியாம வீராப்பு பேசிக்கிட்டு..."

"அந்த விவரத்தை சொல்லித் தொலை..."

"ஆனந்தா..."

அதுவரை... பொடியப்பயல்... 'சின்னப்பயல்..' என்று பல்வேறு இட்டுக்கட்டிய புனைபெயர்களாலேயே சின்னப் பேரனை அழைத்து வந்த பாரிஜாதம்... முதன் முதலாக அவனுடைய பெயரை உச்சரிக்கவும்... ஆனந்தன் கதி கலங்கிப் போனான்...

"ஏய்ய்... கிழவி... என்னதான் ஆகிப்போச்சு...?"

"உந்தங்கச்சி வாழ்க்கையில எதுவோ சரி யில்லைடா.... பேராண்டி..."

ஆனந்தன் அதிர்ந்து விட்டான்... அவன் கண்கள் சிவக்க... ரௌத்ரத்துடன் பாரிஜாதத்தின் தோளைக் குலுக்கினான்...

"என்ன சொல்ற கிழவி... நேத்து இந்நேரம்தான் அவ கழுத்தில தாலி ஏறியிருக்கு... அதுக்குள்ள அவ வாழ்க்கையில பிரச்னைன்னா.. அது கல்யாணத்துக்கு முந்தின பிரச்னையாகத்தான் இருக்கும்..."

எப்போதும் போல... இப்போதும்... தனது சின்னப் பேரனின் புத்திசாலித்தனத்தை மனதிற்குள் மெச்சிக் கொண்டாள் பாரிஜாதம்...

அந்த வீட்டிலேயே அதிகமான புத்திசாலித் தனமும்... வேகமும் கொண்டவன் ஆனந்தன்தான்... அதனாலேயே சின்னப் பேரனிடம் விவரத்தை பகிர்ந்து கொள்ள நினைத்தாள் பாரிஜாதம்... அவளது கணிப்பை ஒரு நொடியில் உண்மையாக்கி விட்ட பேரனை பெருமையுடன் பார்த்துக் கொண்டாள் அவள்.



# 30

வைகறையில் குளிப்பதற்கு...
வைகைக்கரையைத் தேடிவந்தேன்...
வண்ணமயில் நீயிருந்தாய்...
வாழ்வினிலே திருப்புமுனையைக் கண்டேன்...



"ஆமாண்டா ஆனந்தா... நீ சொல்றது சரிதான்..."

"என்னத்தை சரிதான் போடற? உங்தங்கச்சி மகதானே பொண்ணு கேட்டு வந்தாப்புல...? அவங்க குடும்பம் எப்படின்னு நீ விசாரிச்சு வைக்கலியா...? பெரிசா வாய் கிழியப் பேசி எட்டு ஊருக்கு பந்தலைப் போடற.... இத மட்டும் எப்படி கோட்டை விட்ட...?"

"எனக்குத் தெரிஞ்ச வரைக்கும்... அவ குடும்பத்தில குறை சொல்ல எதுவுமில்லாமத்தான இருந்துச்சு..."

"இப்ப எப்படி வினை வந்திருக்கு...? இறக்கை முளைச்சு பறந்து வந்திருக்கா...?"

"இல்லைடா பேராண்டி... செல்லு போனு வழியா வந்திருக்கு..."

"செல்போனில் வந்துச்சா...? விளங்கச் சொல்லு..."

பாரிஜாதம் விளக்கமாகச் சொன்னாள்... புருவங்கள் முடிச்சிட ஆனந்தன் அதைக் கேட்டுக் கொண்டான்...

"முத ராத்திரி முடிஞ்சு வந்தப்பவே... உன் தங்கச்சி முகம் சரியில்லடா.... நேத்து ராத்திரியில பாத்தா... எலிசெத்தான்பெத்தவன்னு எவளோ ஒருத்திக்கிட்ட மணிக்கணக்கா நம்ம வீட்டு மாப்பிள்ளை பேசறாரு... அதுவும் எப்படிங்கிற... பேயடிச்சதைப் போல அரண்டு போச்சு... அவசரமா சுத்து முத்தும் பார்த்துட்டு.... இப்ப... நாம ரகசியமாப் பேச... இந்தக்

கோடிக்கு வந்திருக்கோமில்ல... இதைப் போல... வந்து நின்னுக்கிட்டாரு... மடியில கனமில்லன்னா... வழியில எப்படி பயம் வரும்ணேன்..."

"நீ சொல்றதும் சரிதான் கிழவி..."

"பேசறப்போ... அவகிட்ட... ஐஸ்வர்யா என் வொய்பு... ஐஸ்வர்யா என் வொய்புன்னு கோபமா பேசறாரு..."

"அப்பறும்...?"

"ஒரு வழியாய் பேச்சை முடிச்சுக்கிட்டு ரூமுக்குள்ளே போயிட்டாரு... நான் கீழே இறங்கிப் போனேன்... உந்தங்கச்சி எதிரே வந்தா... ஏந்தாயி... இம்புட்டு நேரம்ணேன்.. அதுக்கு உந்தங்கச்சி ஒரு பெருமூச்சை விட்டு... நேரமானா இப்ப என்னாங்கிறா..."

"என்னா கிழவி இப்படிச் சொல்கிற...?"

"உனக்குப் புரியுதாடா பேராண்டி..."

"புரியாமப் போகுமா...?"

"இந்தக் கதையை எங்கிட்டாச்சும் கேட்டிருக்கோமா...?"

"ஆளைப் பார்த்தா அம்சமாத்தான இருக்காரு...?"

"ஆளப் பார்த்தால் அழகு... ஆராய்ஞ்சு பார்த்தால் சொலகுங்கிற கதையாய் இவருகதை இருக்கும் போல இருக்கு..."



"நீ தங்கச்சிகிட்ட இதமா... பதமா... விசாரிச்சியா...?"

"ராத்திரியில் கேட்கலை..."

"சரியான காரியம்தான் செய்திருக்க..."

"காலையில் வந்தப்போ கேட்டேன்..."

"என்ன சொன்னா...?"

"அந்த எலிசெத்தான்பெத்தவளைப் பத்தி நேத்து காலையிலிருந்துதான் இவளுக்குத் தெரியுமாம்.. ஆனா இவ புருசனுக்கு பல நாளாத் தெரியுமாம்..."

இதைக் கேட்ட ஆனந்தனின் முகம் கோபத்திற்கு மாறியத...

"கூப்பிடு கிழவி... உன் தங்கச்சி மகளை... மகனோட வகிசியைப் பத்திச் சொல்லி வைப்போம்..."

"நானும் அப்படித்தாண்டா தம்பி சொன்னேன்... ஆனா... மாப்பிள்ளையோட குடும்பத்துக்கே இந்த சங்கதி தெரியுமாமில்ல..."

"அடகருமாந்திரமே..."

"எல்லாம் தெரிஞ்சுக்கிட்டே அவங்க நம்ம வீட்டுப் பொண்ண அவங்க மகனுக்கு கட்டி வச்சிருக்காங்கடா..."

"இதை சும்மா விடக்கூடாது கிழவி..."

"அதுக்கு முதல்ல... ஆதியோட அந்தமா... அந்த எலிசெத்தான்பெத்தைப் பத்தி நமக்குத் தெரியனும்..."

"எப்படித் தெரிஞ்சுக்கிறது...? ஐஸ்வர்யாகிட்ட கேட்கலாமா...?"

"வேற வினையே வேணாம்... உனக்கு நம்ம ஊருப் பொண்ணுகளப் பத்தித் தெரியாதாடா பேராண்டி.... புருசன் செய்கிற தப்பை மனதில் போட்டு மறுகிச் சாவாங்களே தவிர... மத்தவங்ககிட்ட புருசனைப் பத்தி விட்டுக் கொடுக்க மாட்டாங்க... அவன் செய்கிற தப்பை இழுத்து மூடத்தான் பார்ப்பாங்க... நம்ம ஐஸ்வர்யாவும் இதுக்கு விதி விலக்கில்லை..."

"வேற எப்படித் தெரிஞ்சுக்கிறது...?"

ஆனந்தன் நெற்றிப் பொட்டை ஒற்றை விரலால் தட்ட ஆரம்பிக்க...

"அதுக்கு சுளுவா ஒரு வழி இருக்குடா பேராண்டி..." என்றாள் பாரிஜாதம்...

"என்ன வழி கிழவி...?"

"நம்ம ஐஸ்வர்யாவோட நாத்தனா இருக்கா ளில்ல..."

"ஆமாம்... சாதனாவும் வந்திருக்கிறாளே..."

"அவளுக்கும் இந்த கருமாந்திரத்தைப் பத்தித் தெரியுமாம்..."

"நிஜமாகவா சொல்கிற...?"



ஆனந்தனின் முகம் ரௌத்ரமானது... அவனது முகம் போன போக்கை அவதானித்தபடி பாரிஜாதம் பேசாமல் நின்றாள்...

"இன்னைக்கு அவளை ரெண்டில ஒன்னு கேட்டுடறேன் கிழவி..." ஆனந்தன் ஆவேசப் பட்டான்...

"பொறுடா... இது நாம பொறுமையா போக வேண்டிய நேரம்..."

"எந்தங்கச்சி வாழ்க்கையே கொள்ளை போயி ருக்கு... இதுல என்ன பொறும காக்க சொல்றியா..."

"அடேய்... சேலையில் முள்ளுபட்டாலும்... முள்ளு மேல சேலை பட்டாலும்... சேதம் சேலைக்குத் தானேடா...?"

"இதையேன் கிழவி... இப்பப் போயி சொல்ற...?"

"உங்தங்கச்சி இப்ப... அவ புருசனுக்கு பொண் டாட்டியாகிட்டா... அவ வாழ்க்கையில தோத்து நிற்காம காப்பாத்த பாக்கறதுதான் புத்திசாலித்தனம்... அத விட்டுப்புட்டு கோபப்பட்டோமுன்னா... பாதிக்கப் படப் போறது நம்ம புள்ளயின் வாழ்க்கைதான்டா..."

"நீ சொல்றதும் சரியாத்தான் தெரியுது... இப்ப என்னதான் செய்யலாம்கிற...?"

"அந்தக் குட்டிக்கு உன்மேல ஒரு கண்ணிருக்கு..."

"எந்தக் குட்டிக்கு கிழவி...?"

"அதாண்டா... அந்த சாதனாக் குட்டி..."

சாதனா தன்னைப் பார்வையிடுவதை பாட்டியம்மாள் எப்படிக் கண்டு பிடித்தாள் என்று ஆச்சரியப்பட்டுப் போனான் ஆனந்தன்...

'கிழவிக்கு உடம்பெல்லாம் கண்ணு...'

"இங்கே பாரு கிழவி... யதார்த்தமா பார்க்கிறதுக்கெல்லாம் நீயா ஒரு அர்த்தத்த கண்டு பிடிக்கக் கூடாது..."

"இங்கே பாருடா பேராண்டி... யதார்த்தமா பார்க்கிறதுக்கும்.. பதார்த்தமா பார்க்கிறதுக்கும்... வித்தியாசம் தெரியாமலா... நான கிழவியாகி நிக்கிறேன்...? நானும் உன் வயசைக் கடந்து வந்தவதாண்டா... அந்தக் குட்டி வடக்கத்திப் பக்கம் போகிற ரூரை விட்டுப்புட்டு... ஏன் நம்ம வைகைக்கரைப் பக்கம்... அவ அண்ணனுக்கு வால் பிடிச்சுக்கிட்டு வந்தான்னு எனக்கா தெரியாது? எல்லாம் உன் பின்னாலே சுத்தலாமுன்னுதானே... எங்கே இதை இல்லேன்னு சொல்லு பாப்போம்..."

"விடு கிழவி.."

"விட்டுட்டேன்... நீ அந்தக் குட்டியை லேசில விடாம... உந்தங்கச்சி வாழ்க்கையை சரிபண்ணப் பாரு..."

"கோடு போட்டுக் கொடுத்திட்டல்ல... இனி நான் ரோடு போட்டுக்கறேன்... கவலையே படாதே..."



காலை பலகாரத்திற்குப் பின்... சாதனா... அவர்கள் வீட்டின் முன் பக்கம் விஸ்தீரமாக கட்டப்பட்டிருந்த பெரிய போர்டிகோ போன்ற அமைப்பில் தொங்கிக் கொண்டிருந்த ஊஞ்சலில் அமர்ந்து ஆடிக் கொண்டிருந்தாள்...

ஆனந்தன் வீட்டுக்குள்ளிருந்து வெளிப்பட்டு சாதனாவை நோக்கி வந்தான்... அவள் மனம் படபடத்தது...

"ஆத்துக்கு போகலாமா...?" ஆனந்தன் அவள் விழிகளுக்குள் உற்றுப் பார்த்துக் கேட்டான்...

"ஓ... போகலாமே..." அவனோடு தனியாகப் போகும் மகிழ்வில் அவள் ஊஞ்சலில் இருந்து குதித்து இறங்கினாள்...

"மெதுவா... அடிபட்டு விடப் போகுது..."

"ரொம்பத்தான் கரிசனம்... அடி எனக்குத்தானே படும்?"

"உனக்கு அடிபட்டால்... எனக்குத்தானே வலிக்கும்..."

"தோடா... இப்படி ரொமான்ஸ் பேசக்கூட உங்களுக்கு வருமா...?"

"எனக்கு வராதது எதுவும் இல்லை... வேணும்னா... சிலம்பம் சுத்திக் காண்பிக்கட்டுமா...?"

"போதும்... போதும்... நீங்க பெரிய வீரன்னு எஸ்டாபிளஷ் பண்ணிக்க வேண்டாம்..."

அவர்கள் பேசிக் கொண்டே ஆற்றங்கரையை அடைந்து விட்டனர்... சுழித்தோடும் வைகையாற்றைப் பார்த்த சாதனா குதூகலித்தாள்...

"ஹை.... எத்தனை அழகான ஆறு...! எனக்கு இங்கேயே இருந்து விடனும் போல இருக்கு..."

அவள் அங்கேயே இருந்து விட வேண்டுமென்று நினைப்பதற்கான காரணம்... ஆறு மட்டுமில்லை... ஆனந்தனும்தான் என்பதை அறியாதவனா அவன்...?

அவளையே இமைக்காமல் பார்த்தவனின் புருவச் சுறிப்பில் காதல் இல்லாமல் கடுமை இருக்கவும் சாதனா தடுமாறிப் போனாள்...

"ஆனந்த்...?"

"சொல்லு சாதனா... என்னைக் காதலிக்கிறாயே... நான் வேறு ஒருத்திகூட தொடர்பு வச்சுக்கிட்டு உன்னை ஏமாத்தி உன் கழுத்தில தாலியைக் கட்டிவிட்டா... உன் மனசு... என்ன பாடுபடும்...?"

சாதனாவின் முகம் இருண்டு விட்டது...





# 31

வைகறையில் பேசவந்தேன்...
எனைப்பாராமல் நீ சென்றாய்...
கைகைக்கரையில் நின்றிருந்தேன்...
பேசாமல் பேச வந்தாய்...

"அவள் பெயர் எலிஸபெத்...."

"ம்ம்..."

"அண்ணன் அமெரிக்காவில் தங்கியிருந்தபோது... அவள்கூடப் பழகிவிட்டார்..."

"ம்ம்ம்..."

"அவங்க சேர்ந்து வாழ ஆரம்பித்தாங்க..."

இப்போது ஆனந்தன் 'ம்ம்ம்' போடாமல் அவளையே உறுத்துப் பார்த்தான்... சாதனா குற்ற உணர்வுடன் தலை குனிந்தாள்...

"எவ்வளவு ஈஸியா சொல்கிற...? இது உனக்கு நடந்து.. உன் அண்ணன் இந்தக் கதையை கேட்க வேண்டியிருந்தா... அவரோட ரத்தம் கொதிக்குமா... கொதிக்காதா...? நீயே சொல்லு..."

"ஐ ஆம் இன்னொஸென்ட் ஆனந்த்..."

"இந்த விசயத்தில் நீ சம்பந்தப் பட்டிருக்கிறாயா... இல்லையா... என்பது இப்போது கேள்வியில்லை... இது உனக்குத் தெரிந்து நடந்திருக்கிறது... நீ வாய் திறக்காமல் இருந்திருக்கிறாய்... இதைத்தான் என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை... ஐஸ்வர்யாவும் உன்னைப் போல ஒரு பெண்தானே... உன் கணவன் ஏற்கனவே ஒருத்தியுடன் குடும்பம் நடத்திக் கொண்டிருந்தால் உன்னால் அதைத் தாங்கிக் கொள்ள முடியுமா...?"

"நீங்க கேட்கிற கேள்வியெல்லாம் நியாயம்தான்... பட்... இது எனக்கு ஏனோ தோன்றாமல் போய்விட்டது... அண்ணன் வெள்ளைக்காரியுடன் குடும்பம் நடத்திக் கொண்டிருக்கிறார்... அவளைத்தான் கல்யாணம் பண்ணிக்கொள்வேன்னு அடம் பிடிக்கிறார்... அம்மா அதைத் தாங்கிக் கொள்ள முடியாமல் தற்கொலைக்கு முயற்சி செய்கிறாங்க... அவங்களைக் காப்பாற்ற வேறு வழியில்லாமல் அண்ணன்... வீட்டில் பார்க்கிற பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள சம்மதிக்கிறார்... அம்மா அவங்களோட பெரியம்மா பேத்தியை அண்ணனுக்கு கல்யாணம் பண்ணி வைக்கிறாங்க... இதுதான் என் வீட்டில் நடந்தது... இதில் நான் எங்கே வந்தேன்னு சொல்லுங்க... இதில் நான் என்ன பண்ணியிருக்க முடியும்ன்னும் சொல்லுங்க..."

"த்சு..."



"வெறுப்பு வேண்டாம் ஆனந்த்..."

"வெறுக்காமல் எப்படியிருக்க முடியும்...? ஐஸ்வர்யா என் தங்கை. அவள்மேல் அதிகமான பாசம் வைத்திருக்கிறேன்... உன் அண்ணன் அவளுக்கு துரோகம் செய்கிறார்... நீ அவருடைய தங்கை... உன்னைக் காதலிக்க என்னால் முடியாது சாதனா..."

"ஆனந்த்..."

"நீ மட்டும் உன் மனதுக்குப் பிடித்தவனோடு எந்தவித சிக்கலும் இல்லாத வாழ்க்கையை வாழனும்... என் தங்கை மட்டும்... உன் அண்ணனின் துரோகத்தை நினைத்து... தினம் தினம் வெம்பனுமா...?"

"யார் செய்த குற்றத்திற்கு.... யாருக்கு தண்டனை கொடுக்கறீங்க...?"

"என்னம்மா செய்வது? என் தங்கைக்கு உன் அண்ணன் புருசனா போய் விட்டாரே... அவரைத் தண்டித்தால்... அந்தத் தண்டனை என் தங்கையைப் பாதிக்குமே..."

"இதை சரி செய்ய முடியாதா...?"

"ஏன் முடியாது? நீ மனது வைத்தால் முடியும்..."

"நானா மனது வைக்கமாட்டேன்...? நீங்க என்ன சொன்னாலும் செய்கிறேன்... ஐ லவ் யு ஆனந்த்..."

"முதலில் உன அண்ணன்காரனின் பழைய காதலியை ஓட்டி விடுகிற வழியைப் பார்ப்போம்... உன் காதலைக் கேட்கவெல்லாம் எனக்கு நேர மில்லை... உனக்கு அமெரிக்காவில தெரிந்தவங்க யாராவது இருக்காங்களா...?"

"என் பிரண்ட் இருக்கிறா..."

"அவ உனக்கு உதவி செய்வாளா...?"

"ஷ்யூர்..."

ஆனந்தன் திட்டம் வகுத்துக் கொடுத்தான்... சாதனா கையிலிருந்த லேப்டாப்பை உயிர்ப்பித்து... வலைதளத்திற்குள் இறங்கினாள்...

"மெஸேஜ் அனுப்பிட்டேன்..."

"நாம் சொன்னதைச் செய்திருவாளில்ல...?"

"கட்டாயம் செய்வாள்..."

சாதனா... ஆனந்தனின் கடைக் கண் பார்வைக்காக ஏக்கமாக நோக்க... அதை கண்டு கொள்ளாமல் முகம் இறுக... வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தான் ஆனந்தன்...

பேரனை ஆற்றங்கரைக்கு அனுப்பிவிட்டு... பேத்தியைத் தேடிச் சென்றாள் பாரிஜாதம்... மாடியின் பால்கனியில் சிந்தனையோடு அமர்ந்திருந்தாள் ஐஸ்வர்யா...



"ஏங்கண்ணு... தனியா வந்து உட்கார்ந்திருக்கிற...?"

"தனியாத்தானே வந்தோம் பாட்டி... தனியா உட்கார்ந்தா என்ன?" விரக்தி என்பது சிலந்தி வலை... அதனுள் மாட்டிக் கொள்ளும் மனித ஜீவன் வெளியே வருவது மிகவும் கஷ்டம்... அதில் ஐஸ்வர்யா மாட்டிக் கொண்டாள்...



## 32

வைகறையில் பறவையெல்லாம்
கூட்டைவிட்டு வெளியேறும்...
வைகைகரைத் தோப்போரம்...
இரைதேடி சிறகடிக்கும்...

விரக்தி எனும் சிலந்தி வலையிலிருந்து பேத்தியை மீட்க வேண்டிய அவசியத்தை உணர்ந்தாள் பாரிஜாதம்... மெல்ல... பேத்திக்கு வாழ வேண்டிய வழிமுறைகளை எடுத்துச் சொல்ல ஆரம்பித்தாள்...

"ஏங்கண்ணு... நாம பட்டிப் போட்ட நிலத்தில... வேறொருத்தன் பயிரு செய்ய வந்தா... நாம பட்டிய பார்த்துக்கிட்டா இருப்போம்...?"

"விரட்டி விட்டு... நாம பயிர் செய்வோம் பாட்டி..."

"சரி... பயிரு செஞ்ச நிலத்தில களை வளர்ந்தா என்ன பண்ணுவோம்?"

"களைகளைப் பிடுங்கி எறிவோம்..."

"ஆடு... கன்று... மாடுன்னு மேய வந்தா...?"

"தடியெடுத்து விரட்டி விடுவோம்..."

"கொக்கு... குருவின்னு பயிரைத் தின்ன வந்தா...?"

"வண்டி வில்லில் கல்லை வைச்சு அடிப்போம்..."

"ஆறுமாதம் விளையற பயிருக்கே இத்தனை காபந்து பண்றப்போ... வாழ்க்கை முழுசும் சேர்ந்து வாழப் போகிற கல்யாண வாழ்க்கையை காப்பாத்த எத்தனை காபந்து பண்ணணும் கண்ணு...?"

"பாட்டி...!"

"ஆம்பளைக்கு அலைகிற புத்தியிருக்கும்... பொம்பளைக்குத்தான் வசியம் பண்ணத் தெரியணும்... உங்க தாத்தன் அந்தக் காலத்திலே ஆடாத ஆட்டமா...? அவரையே அடக்கி.... ஒடுக்கி... என் கைக்குள்ள நானு வச்சிக்கலையா...?"

அது என்ன தேவைக்கு பாட்டி... அப்படி என் புருசனை நான் கைக்குள்ள போட்டுக்கணும்கிற அவசியம்தான் என்ன...?"



"அவசியமில்லைன்னு உன் தாலியை அவுத்து உன் புருசன் கையில கொடுத்து விட முடியுமா...? இன்னொருத்தனைத்தான் கல்யாணம் பண்ணிக்க உன்னால முடியுமா...?"

"அசிங்கமாய் பேசாதே..."

"உன் வாழ்க்கை அவரோடதானே...?"

"ஆமாம்... ஆமாம்..."

"அப்ப நீ அவரை உன் கைக்குள்ள வச்சுத்தான் ஆகணும்..."

"என்னால அது முடியாது..."

"அப்ப... நீ உன் புருசன்கூட ஊருக்குப் போகாதே..."

"போகாம...?"

"இங்கேயே இருந்துரு..."

"வாழா வெட்டியாய் இருக்கச் சொல்கிறயா...?"

"உன் புருசன் கூட வாழப் பிடிக்காம அவரு கூட நீ இருக்கிறதுக்கு... வாழா வெட்டியாய்... உன் அப்பன் வீட்டில இருக்கிறதே மேல்..."

"எரிச்சலைக் கிளப்பாதே.... என்னால் அப்படி யெல்லாம் இருக்க முடியாது..."

"ஏன் முடியாது...? உனக்கு உன் புருசனைத்தான் பிடிக்கலையே..."

"அப்படி நானு உன்கிட்ட வந்து சொன்னேனா...?"

"சொன்னாத்தானா...? எனக்கே அது தெரியுமே..."

"ஆமா... நீ ரொம்பத்தான் கண்டே...."

"காணாமத்தான் பேசறேனா... உன் புருசனுக்கும் உன் கூட குடும்பம் நடத்த பிடித்தமில்ல..."

"பிடிக்காமல்தான்... நேத்து ராத்திரி... என்னை மிரட்டி சம்மதிக்க வைத்தாரா...?"

பாரிஜாதம்... வென்று விட்டாள்... ஐஸ்வர்யாவின் வாயிலிருந்து அவளுக்கு தேவைப்பட்ட வார்த்தை களை வரவைத்து விட்டாள்...

"அடி என் தங்கமே... உன் புருசனுக்கு உன் மேல ஆசையில்லாமலா... உன்கூட குடும்பம் நடத்தி னாரு...?"

"ஆனா பாட்டி... அந்த எலிஸபெத்.... அவ பேச்சு..."

"மற.... உன் புருசனையும் மறக்க வை... நீ உன் புருசனை மட்டும் நினை... அவரையும்...உன்னை மட்டுமே நினைக்க வை..."

பாரிஜாதம் உபதேசம் செய்தாள்... பேத்திக்கு வாழ்வியலின் அத்தனை கூறுகளையும் எடுத் துரைத்தாள்... குருவிடம் பாடம் கேட்கும் சீடனைப் போல... அனைத்தையும் கேட்டுக் கொண்டாள் ஐஸ்வர்யா...



"நானு எல்லாப் பொம்பளைகளுக்கும் சொல் கிறதைத்தான் உன்கிட்டயும் சொல்றேன் கண்ணு... பொம்பளைக தோத்துக்கிட்டே ஜெயிக்கிறவங்க... உன் புருசனுக்கு உன் மேல மயக்கமிருக்கு... உன்னால உன் புருசனை விட்டுப்புட்டு வாழ முடியாது... அப்புறம் எதுக்கு வீராப்பு...? அவருகூட மல்லுக்கு நிற்கிறதை விட்டுப்புட்டு.... அவரு மனசுப்பிரகாரம் நடந்துதான் பாரேன்.... உன் வாழ்க்கையில ஜெயிச்சுருவ..."

ஐஸ்வர்யாவை அழைத்தபடி.... கௌசிக் அங்கே வரவும்

"ஹை.... மாப்பிள்ளை...." என்றாள் பாரிஜாதம்...

"ஹாய்.... பாட்டி...." என்றான் அவன்...

"அவுஸ் அவரு வுல்லஜீ...." என்றாள் பாரிஜாதம்...

அவள் என்ன சொல்கிறாள் என்று புரியாதவ னாக ஐஸ்வர்யாவை கௌசிக் பார்க்க.. அவள் சிரிப்பை அடக்கிக் கொண்டு...

"ஹௌ இஸ் அவர் வில்லேஜ்ன்னு கேட்குது பாட்டி..." என்று சொன்னாள்...

"ஏன் பாட்டி இங்கிலீஷைக் கடிச்சுத் துப்பறீங்க...? எனக்குத்தான் தமிழ் தெரியுமே... தமிழில் பேச வேண்டியதுதானே..." கௌசிக் கேலியாய் கூறினான்...

"அதுக்கென்ன மாப்பிள்ளை... பேசிட்டாப் போச்சு..." என்றபடி பாரிஜாதம் போய்விட்டாள்...

கௌசிக் ஐஸ்வர்யாவை... முதல் நாளிரவின் மோக நினைவுடன் பார்க்க... அவள் முகம் சிவந்தாள்... அவன் அவளருகில் நெருங்கினான்... அவள் பின்வாங்காமல்.... அவன் கைகளில் சிக்குண்டாள்...

"இங்கே என்னடி செய்கிற...?" அவள் காதோரம் கிசுகிசுத்தான் கௌசிக்...

"பாட்டிகூடப் பேசிக்கிட்டு இருந்தேன்..." அவள் முணுமுணுத்தாள்...

"உனக்கு நான் புருசனா...? இல்லை...." அவனை முடிக்கவிடாமல் அவன் வாய் பொத்தித் தடுத்தாள் ஐஸ்வர்யா...

"ரூமுக்குள் வா..."

"எதுக்கு...?"

"உனக்குத் தெரியாதா...?"

"அம்மா தேடுவாங்க..."

"இப்ப... நான் உன்னைத் தேடிக்கிட்டிருக்கேன்..."

"நான் குளிச்சாச்சு..."

"நானும்தான் குளிச்சாச்சு..."

"விடுங்களேன்..."

அவள் விலகாமல் கொஞ்ச... அவள் என்ன நடக்கிறத என்றுஅனுமானிக்கும் முன்னரே... அவளது இடுப்பில் கை கொடுத்து அலேக்காக தூக்கினான் கௌசிக்...



"யாராவது பார்த்துடப் போறாங்க..." அவளது கை... அவனது கழுத்தினில் மாலையானது...

கௌசிக் அவளுடன் அறைக்குள் நுழைந்து.... கதவைத் தாழிட்டான்... பாரிஜாதத்தின் உபதேசத்தில் தெளிவு பெற்றிருந்த ஐஸ்வர்யா கண்களில் மயக்கத்துடன் அவனைப் பார்த்தாள்... அவளது பார்வையில் தெரிந்த அழைப்பில் கிறங்கிப் போனவனாக கௌசிக் அவள் மேல் சரிந்தான்... பரவி படர்ந்தான்...

முதல் நாளிரவில் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டதைப் போல இல்லாமல்... சிலிர்ப்பை முகத்தில் காட்டினாள் ஐஸ்வர்யா... அவனது தொடுகையை விரும்பி... இசைந்து கொடுத்தாள்... அவனது தேடுதல் களில் கிளர்ச்சியுற்றாள்... அவனது முகம் முழுவதும் முத்தங்களைத் தந்தாள்...

கௌசிக் ஆவேசத்துடன் அவளை ஆட்கொண்டான்... அன்று மதியமும் அந்தக் கதையைத் தொடர்ந்தான்... அன்றைய இரவை தூங்காமல் கழிக்க வைத்தான்...

ஒரே நாளில்... அவனது உடலையும்... மனதையும் தன் வசப்படுத்திக் கொண்டாள் ஐஸ்வர்யா... அதை உறுதிப்படுத்திக் கொண்ட பாரிஜாதம்... ஆனந்தனுக்கு அதைத் தெரியப்படுத்தினாள்...

அமெரிக்காவில் எலிஸபெத் கோபத்தில் இருந்தாள்... அவளது போன் அழைப்புகளுக்கு கௌசிக்கிடமிருந்து பதில் கிடைக்கவில்லை... ஈமெயில் அனுப்பினாள்... அதற்கும் பதிலில்லை... எப்படி அவனை கைவசப்படுத்துவது என்ற யோசனையுடன் சாலையில் நடந்து கொண்டிருந்தவளின் அருகே வந்து நின்றது அந்தக் கார்...

"லிப்ட் வேண்டுமா...?" நீலக் கண்களுடன் இருந்த அந்த அமெரிக்க வாலிபன் கேட்டான்...

"தேங்க்ஸ்..." எலிஸபெத் காருக்குள் ஏறிக் கொண்டாள்...

"ஐ ஆம் வில்லியம்..." அவனது முடி... கருமையாக இருந்தது...

"ஐ ஆம் எலிஸபெத்..." அவனைப் பார்க்க எலிஸபெத்திற்கு பிடித்திருந்தது...

"எங்கே தங்கியிருக்கிறாய்...?" அவனது பார்வையில் அழைப்பு இருந்தது...

எலிஸபெத் முகவரியைச் சொன்னாள். அவள் இறங்கிக் கொண்ட போது... அவனும் கூட இறங்கினான்...

"நானும் உன்னுடன் உன் வீட்டிற்கு வரலாமா...?" அவனது உயரமான தோற்றம் அவளை வசீகரித்தது...



"ஓ... யெஸ்..." அவள் அவனுடன் இணைந்து நடந்தாள்... அன்றைய இரவை வில்லியமுடன் கழித்தாள் எலிஸபெத்... காலையில் விடைபெறும் போது...

"என்னுடன் வந்து விடுகிறாயா...?" என்று கேட்டான் வில்லியம்...

எலிஸபெத் யோசித்தாள்... கௌசிக்கின் பணம் இனிமேல் கிடைக்கப்போவதில்லை... அவனுடைய பணத்திற்காகத்தான் அவனைத் திருமணம் செய்து கொள்ள அவள் உத்தேசித்திருந்தாள்... திருமணத்திற்குப் பின் ஒரே மாதத்தில் டைவர்ஸ் செய்தாலும் ஒரு பெருந்தொகை அவளுக்கு கிடைக்கும் என்ற நினைவும்... கணக்கீடும்... அவளுக்கு இருந்தன... இப்போது அதுவும் முடியாது என்று ஆகிவிட்டது... அந்த அபார்ட்மெண்ட்டும்... அவள் பெயரில் இல்லை...

'இனியும் எதற்காக... இந்த வீட்டில் இருக்க வேண்டும்?'

எலிஸபெத் வில்லியமுடன் போய் விட்டாள்... சாதனாவிற்கு அவளது தோழியிடமிருந்து செய்தி கிடைத்தது...

"வில்லியத்திற்கும் எலிஸபெத்தை பிடித்திருக்கிறதாம்... ஒருவேளை அவங்க இரண்டு பேரும் கல்யாணம் பண்ணிக் கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லையாம்... லிஸி சொன்னாள்..."

ஆனந்தனிடம் இதை சாதனா சொல்லி முடித்த அடுத்தக்கணம் அவனது அணைப்பில் இருந்தாள்.




வைகறையில் பாடியதை...
வைகைக்கரையில் தேடியதை...
உன்னிடத்தில் நான சொன்னேன்...
மற்றவரிடம் நீ சொல்லு....

ஜெயப்பிரகாசத்தின் வீட்டின் முன்னால் தெருவை அடைத்து பந்தல் போடப்பட்டிருந்தது... உறவினர் கூட்டம் வீட்டை நிறைந்திருந்தது..

"ஏன் ஆத்தா... மூத்த பேரனோட கல்யாணத்த மண்டபத்துல வைக்காம வீட்டில வச்சிட்டயே..." ஒரு உறவினர் வினவினார்...

"எங்க வீடே மண்டபம் மாதிரி இருக்கறப்போ... எங்களுக்கு எதுக்கப்பு... வேற மண்டபம்..." பாரிஜாதம் கெத்தாகப் பதில் சொன்னாள்...

மணமேடையில் அமர்ந்திருந்த அன்பழகன்... சற்று வற்றியிருந்தான்.... குண்டாக இருந்த தோற்றம் மாறி... பூசினார் போலிருந்தது... அவனருகில்



அமர்ந்திருந்த பவளக் கொடியை கடைக்கண்ணால் பார்த்துக் கொண்டிருந்தான்..

"உன் அண்ணன் அடிக்கிற சைட்டைப் பார்த்தியா..." முன்வரிசை நாற்காலியில் அமர்ந்திருந்த கௌசிக்... அருகில் அமர்ந்திருந்த ஐஸ்வர்யாவின் காதோரமாக கூறினான்...

"நீங்க அடிக்காத சைட்டையா என் அண்ணன் அடிச்சிட்டார்...? என்ன ஒன்னு... எங்க அண்ணன் கட்டிக்கப் போகிறவளைத்தான் சைட் அடிக்கிறார்... ஆனா நீங்க... கட்டிக்கிட்டவளை சைட் அடிக்கறதுக்கு முன்னாலேயே... வெள்ளைக்காரியை சைட் அடித்தவ ராச்சே..."

"அந்தப் பேச்சை நீ விடவே மாட்டியா...? ஏண்டி... உன் கூட குடும்பம் நடத்தி... மூன்று வயதில் நமக்குப் பையனும் வந்தாச்சு... இன்னும் அவ பேச்சைப் பேசனுமா...? முதலில் உன் மடியிலிருக்கிற என் பிள்ளையைக் கவனிடி..."

"ஏன்...? இந்த அப்பனைப் போலவே... அடங்காத பிள்ளையை நான்தான் கவனிக்கணுமா...? நீங்க கவனிக்க மாட்டிங்களா...?"

"ஏன் கவனிக்க மாட்டேன்...? அதுக்குத்தானே காத்திருக்கிறேன்... இங்கே குடுடி..."

மூன்றுவயது பிரசாத்தை வாங்கி மடியில் வைத்துக் கொண்ட கௌசிக்... மகனைக் கொஞ்ச

ஆரம்பித்தான்... அதைப் பெருமையுடன் ஐஸ்வர்யா ரசித்துக் கொண்டிருந்ததை சற்றுத் தள்ளி நின்று கவனித்த பாரிஜாதத்தின் மனம் நிறைந்தது...

'என் பேத்தி வாழ்க்கையை வாழக் கத்துக்கிட்டா..'

மணமேடைக்கு அருகே... திருமண வீட்டின் வேலைகளில் சுற்றிக் கொண்டிருந்த ஆனந்தனின் மேல்... ஏதோ வேலையிருப்பதைப் போல வந்து அடிக்கடி மோதினாள் சாதனா... ஒரு கட்டத்தில் அவளது கையைப் பிடித்து இழுத்து... மாடிப்படிகளின் அடியில் மறைவாக பதுங்கிய ஆனந்தன்...

"என்னடி... திமிரா...?" என்று கேட்டான்...

"ஆமாம்... அதுக்கு இப்ப என்னாங்கறீங்க...?" சாதனா அவன் சட்டையைக் கொத்தாகப் பிடித்தாள்...

"எப்ப இருந்துடி இப்படியொரு பொம்பளை ரவுடியா மாறின...?"

"எல்லாம்... உங்க பாட்டி தலைமையில் உங்க குடும்பம் வந்து உங்களுக்காக என்னை நிச்சயம் பண்ணின பின்னாலதான்..."

"அடேங்கப்பா... பரிசம் போட்டா... பொண்ணுக அடக்க ஒடுக்கமா இருக்கனும்டி..."

"அதெல்லாம்... பாரிஜாதத்தின் பேரன் போட்ட பரிசத்துக்கு சரிப்பட்டு வராது... இங்கேயெல்லாம் இப்படித்தான்..."



"அலையாதேடி..."

"யார் பின்னால அலைகிறேன்...? அடுத்த முகூர்த்தத்தில என் கழுத்தில் தாலியைக் கட்டப் போகிற என் ஆளின் பின்னால்தானே அலைகிறேன்...?"

அவளது கேள்வியில் கிளர்ந்த ஆனந்தன் அவளை இறுக்கி வாசம் பிடித்தான்... முகூர்த்த நேரம் நெருங்கிக் கொண்டிருக்க... அனைவரது கவனமும் மணமேடையில் இருந்தது... கெட்டி மேளம் முழங்கிய போது... அங்கே அன்பழகன் பவளக் கொடியின் கழுத்தில் தாலியைக் கட்டினான்... இங்கே சாதனா வின் கன்னத்தில் ஆனந்தன் முத்தம் கொடுத்தான்...

"கல்யாணத்துக்கு முன்னாலேயே... கட்டிக்க போறவனின் மனக்கவலையை துடைத்துவிட்டவடி நீ..."

"நானென்ன பெரிதாய் செய்தேன்...? லிஸியிடம் விசயத்தைச் சொன்னேன்... அவள் கூட வேலை பார்த்த வில்லியமிற்கு எலிஸபெத்தைக் காட்டினாள்.. அமெரிக்கப் பெண்... ஒரு இந்தியனிடம் ஏமாந்து நிற்பதா என்ற கோபம் அவனுக்கு... உடனடியாக அவனுடைய நாட்டுப் பெண்ணுக்கு வாழ்க்கை கொடுத்து விட்டான்..."

"மலையை வெட்டி எடுத்துட்டு... ஒன்னுமே யில்லைன்னு சொல்றியேடி..."

"எனக்கு அதெல்லாம் சாதனையில்லை ஆனந்த்... உங்க மனதை ஜெயித்தேனே... அதுதான் சாதனை..."

ஆனந்தனின் கரம் அவளை அன்புடன் அர வணைத்துக் கொண்டது.

இரவின் இருள் நம்மை பயமுறுத்தத்தான் செய் யும்... பொறுமையாக வருவதை எதிர் கொண்டால்... நிச்சயம் வைகறைவரும்... வைகறையில் விடியலும் வரும்... இந்த வைகைக் கரையில்... விடியல் வந்ததைப் போல....

ஐஸ்வர்யாவும் அப்படித்தான்...

எதுவுமே மனதில் இல்லாமல் நிச்சலனமான மனத் துடன் கௌசிக்கை கரம் பிடித்தவள் அவள்...

கைப்பற்றியவனின் மேலேயே காதலும் கொண்டவள். அவனைத்தவிர வேறு முகம் அவள் மனதில் இல்லை.

ஆனால்... அவன் மனதில் வேறு முகம் இருந்தது. அந்த முகத்திற்கான முகவரி சரியான பாதையில் வரவில்லை என்பதை புரிந்துகொண்ட ஐஸ்வர்யா... அந்த முகத்தின் முகவரியை அழித்தாள்... தன் முகத்தை அவன் மனதில் பதிய வைத்தாள்...

இருள் சூழ்ந்த வாழ்க்கையிலே... இருளை விரட்டி... வைகறையை அவள் வரவைத்துக் காட்டினாள். வாழ்க்கையை... வாழ்க்கையாய்... வாழ்ந்து காண்பித்தாள்.

சாதனாவும் ஐஸ்வர்யாவைப் போலத்தான்... ஆனந்தனை நேசித்தாள்... அவன் மேல் காதல்



வயப்பட்டாள். அவனோ... அவனுடைய தங்கையின் வாழ்க்கையில் உண்டான நெருக்கடிக்கு அவள் மேல் குற்றம் சொன்னான்.

காதலனின் குற்றச்சாட்டிற்கு விளக்கம் சொன்னவள்... அவனுடைய தங்கையின் வாழ்வில் வந்த நெருக்கடி விலகவும் வழிவகுத்தாள்... அதன் மூலம் அவன் மனதில் இடம் பிடித்தாள்...

தன் காதலை மீட்டுக்கொண்டாள்... அவள் வாழ்வில் சூழ வந்த இருள் போர்வை விலகி வைகறையின் விடியல்... அவள் வாழ்விலும் வந்துவிட்டது.

பாரிஜாதம் அடாவடிக்கார பாட்டிதான். ஆனால்... அவள் வாழ்வின் சூட்சுமங்களை அறிந்தவள்.

எதிர் வந்த இருளை விரட்ட பேத்திக்கு சொல்லிக் கொடுத்தாள்...

அந்த இருளின் மூலத்தை விரட்ட பேரனுக்கு கட்டளையிட்டாள்...

வைகறையின் விடியல் கூறும் வாழ்வியல் நீதி களைப் புரிந்து கொண்டால்... நம் வாழ்விலும் இருள் விலகி வைகறை வரும்...

அந்த வைகறையை வரவழைக்க நம் பெண் களுக்குத் தெரியும்.

ஒவ்வொரு பெண்ணும் மணமேடையில் ஏறும் போது மனம் நிறையக் கனவுகளுடன்தான் ஏறுகிறாள்.

அந்தக் கனவுகள் நூறு சதவிகிதம் நனவாவ தில்லை... என்பதை எதிர்கொள்ளும்போது மனம் உடைந்துவிடாமல் வாழ்க்கையை மாற்றியமைக்கத் தெரிந்தால்... கட்டாயம் அவர்களின் கனவு நனவாகும்...

வைகறையும்...

அவர்கள் வாழ்வில் வந்துவிடும்.

முடிந்தது